மெஞ்ஞான மேதை

# பீர் முகம்மது சாகிப்

ஒலியுல்லாஹ்

அவர்களின்

# திருப்பாடல் தொகுப்பு

(விளக்க உரைகளுடன்)

-- புதிய பதிப்பு --

வெளியிட்டாளர் :

ஹாஜி O. S. ஷாஹுல் ஹமீது

சிங்கப்பூர்-0814.

## பொருளடக்கம்


1 ஞானப்பால் 1

2 ஞானப்பூட்டு 1

3 ஞானப் புகழ்ச்சி } 2

4 ஞான முச்சுடர் பதிகம்
(மூலமும் உரையும்)

5 மகான் பீர் முகம்மது சாகிப் ஒலியுல்லாஹ் அவர்களின் சரித்திரம் } 4

6 ஞான மணிமாலை — 3
(மூலமும் உரையும்)

7 ஞான ரத்தினக் குறவஞ்சி — 4
(மூலமும் உரையும்)

8 ஞான ஆநந்தக் களிப்பு — 4
(மூலமும் உரையும்)

9 மஃரிபத்து மாலை — 3
(மூலமும் உரையும்)

10 மெய்ஞ்ஞான ரத்தினலங்காரக் கீர்த்தனம் — 1

11 பிஸ்மில் குறம் — 1


காதிரிய்யா மெய்ஞ்ஞான சபை அடைக்கலம்.

# பதிப்புரை

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய
அல்லாஹ்வின் திருநாமத்தால் துவங்குகிறேன்.

எல்லாப் புகழும் ஏக நாயனும் அல்லாஹ்வுக்கே! ஸலவாத்தும் ஸலாமும் சற்குண நபி நாயகம் (ஸல்) அவர்கள் மீதும் அவர்களின் குடும்பத்தார் மற்றும் தோழர்கள், துயர்ந்தோர் அனைவர்மீதும் உண்டாவதாக!

என் இனிய இஸ்லாமிய சகோதரர்களே! மெய்ஞ் ஞான மாமேதை-தென்காசியில் பிறந்து தெற்கெல்லைத் திருநகராம் தக்கலையில் உறைந்து வாழும் மகான்-தமிழ கத்தின் ரூமியெனத் தக்கோர் புகழும் தவத்துறைவேந்தர் ஹஸ்ரத் ஷெய்கு பீர் முகம்மது சாகிப் வலியுல்லாஹ் (ரலி) அவர்கள் திருவாய் மலர்தருளிய பாடல் நூல்களின் உரையுடன் கூடிய இத்தொகுப்பை மீண்டும் பதிப்பித்து வெளியிடும் பாக்கியமளித்த வல்ல இறைவனுக்கே வழுத்துகின்ற புகழெல்லாம் உரியது.

மாமேதை மகான் பீரப்பா (ரலி) அவர்களின் மீது அலாதியான பற்றும் பெருமதிப்பும் அவர்களின் ஞானப் பாடல்களில் ஈடுபாடும் எனக்குண்டு! இந்நிலையில்,

1944ம் ஆண்டு ஒருநாள் எனது மச்சான் [redacted] அல்ஹாஜ் K N. சுலைமான் சாகிப் அவர்களிடம் இத் தொகுப்பின் மூலப் பிரதிகள் அடங்கிய பைண்ட் செய்யப் பட்ட புத்தகம் ஒன்றிருக்கக் கண்டு பேரானந்தம் அடைந் தேன். எனது அவாவை-ஆனந்தத்தை அறிந்த ஹாஜி K. N. சுலைமான் சாகிப் ([redacted]) அவர்கள் அப் புத்தகத் தொகுப்பை எனக்கு இலவசமாகவே தந்து விட்டார்கள்.

அன்றிலிருந்து ஒவ்வொரு நாளும் அதை எடுத்துப் படிப்பதை நான் வழமையாகக் கொண்டிருந்தேன். அதில் எனக்கு ஒரு அலாதியான ஆத்ம திருப்தி கிடைத்தது. அந்த இன்பம் வார்த்தையால் சொல்லி முடியாதது.

அந்தத் தொகுப்பு மிகப்பழமையானது என்பதுடன் எங்கும் கிடைக்காத அரியதாக இருப்பதறிந்து யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்னுமாப்போல் இதை மற்றவர்களும் படித்துப் பயன் பெற வேண்டும் என்னும் நோக்குடனும் இது காலமெல்லாம் நின்று நிலைக்க நாமும் துணை நின்றதாகட்டும் என்ற கருத்துடனும் இப்புத்தகத்தை மீண்டும் பதிப்பித்து வெளியிட முன் வந்தேன். மாறாக, வியாபார நோக்கத்தில் நான் இதை வெளியிடவில்லை. அத்தகைய எண்ணமும் அவசியமும் எனக்கில்லை என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே,

இதைப் படித்து பலன்பெறும் அன்பர்களும் பெரியோர்களும் இப்புதிய பதிப்பின் மூலத் தொகுப்பை வெளியிட்ட நன்மக்களுக்காக துஆ செய்வதுடன் எனக்காகவும் எனக்கு இத்தொகுப்பின் மூலத்தை தந்துதவிய எனது மச்சான் [redacted] ஹாஜி K N சுலைமான் சாகிப் அவர்களுக்காகவும் பிரார்த்திக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இந்நூலைப் படித்துப் பலன்பெறும் சகோதரர்களுக்கு வல்ல இறைவனின் வான் கருணையும் காமில் வலி ஆரிபு பில்லாஹ் பீர் முகம்மது சாகிபு ஒலியுல்லாஹ் அவர்களின் நல்லாசியும் என்றும் வாய்க்குமாக! ஆமீன்.

நன்றி வஸ்ஸலாம்.


இன்னணம்
ஹாஜி O. S. ஷாகுல் ஹமீது

Apt Bloek-96
MARGARET DRIVE
SINGAPORE-0314.


பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்

இஃது

தர்கலை

மெய்ஞ்ஞான சொரூபமாகிய காமிலொலி ஆரிபு பில்லாஹ்

**பீர் முகம்மது சாஹிபு ஒலியுல்லா அவர்கள்**

திருவாய்மலர்ந்தருளிய

# ஞானப்பால்

ஹாமீம்.

பிஸ்மில்லாஹி.

# ஞானப்பால்

## காப்பு.

நேரிசை வெண்பா.

முப்பொருளு மொன்றாய் முடிந்திருக்கும் வேதாந்தச்
சொற்பொருளான் மாலைதனைச் சூட்டவே — விற்புருவ
மையமே காப்பா மறைநாலு மேகாப்பாம்
பையனெளி யேனுரைத்த பால்,

## நூல்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பாலது வெள்ளை யெங்கும் பரந்தநம் மிறசூல்பாதம்
நாலது மவுத்துக் கப்பால் நடுவில்நின் றிலங்குஞ் சோதி
காலது மூச்சி னூடாய்க் கலந்ததைக் காண நம்மிற்
கோலது அலிபாம் பீடங் குதறத்தைப் பொருந்து வோர்க. (1)

அலிபென்ன வாதி யென்ன வதினுடைக் கலிமா வென்ன
மெலிவென்ன அலிபி னாலே விண்ணதி லாட்ட மென்னத்
தெளிவென்னக் கனிதா னென்னத் திருக்கொலு வான தென்ன
முழுதென்ன முக்கா லென்ன முறைமறை யோர்கள் சொல்லும். (2)

வெண்பா.

சொல்லெங்கே நம்மிறசூல் தோற்றந் தலமெங்கே
வில்லெங்கே நாணின் விசையெங்கே — வெல்லரிய
அம்பெங்கே வன்னியுரு வானதெங்கே வேதமுடி
யும்பொனிலை யெங்கே யுரை. (3)

பிறப்பெங்கே வானிற் புகுதலெங்கே தானொடுங்கி
இறப்பெங்கே நின்றநிலை யெங்கே — வரப்பிரமந்
தந்ததெங்கே யாருயத் தாய்ப்பால் குடித்ததெங்கே
விந்தைமறை யோரேவின் வீர். (4)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

இல்லல்லா நாலி லொன்றை யிருத்தியே யெட்டின் மீதே
சொல்லெலா மிரண்டுங் கூட்டிச் சுருதியோர் வழியி னின்று
கல்லெலா முருகச் சாடுங் கனிந்தவோர் கனியை யுண்டால்
வெல்லலா மனத்தை யெல்லாம் விண்ணொளி காணலாமே. (5)

விண்ணொளி காண வேண்டின் மெய்யிறை யருளி னாலே
கண்ணொளி யுருகச் சேர்த்துக் கருத்தொளி நடுவில் நோக்கிப்
பொன்னொளி மேவும் வாலைப் பொருள்ரச மருந்தி மேலாந்
தன்னொளி கண்டு ஞானத் தானவ னாக லாமே. (6)

கலித்துறை.

இருட்டுமிருட்டு மிருட்டினிற் கூடி யிருட்டதனில்
இருட்டுப் பிறந்த வகையேது சொல்லவ் விருட்டதுசென்
றிருட்டு பவள மரகதம் வெள்ளை யிலங்குமொளி
இருட்டினிற் காண வெளிதோன்றி நின்றங் கிலங்கியதே. (7)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

ஆதியோ டனாதி யாகி யறிவதற் சொருப மாகிச்
சோதியாய் மதியு மாகிச் சொல்லொணாப் பொருளு மாகி
நீதியாய்ச் சாதி யெல்லா நிறைந்ததோர் ஹக்கு மாகி
ஓதிய கலிமாத் தன்னி லுதிப்புநம் மிறசூ லாமே. (8)

வெண்பா

தண்ணடி யாவனியுந் தானடி நின்றவொரு
விண்ணடி யைக்காண மேவுதே — கண்ணடிக்
கண்டு தொழுதாற் கலிதீரு மல்லாமல்
விண்டிடுவ தாலென்ன மெய். (9)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

நாலினை யிரண்டொன் றாக்கி நடுவினிற் கலிமா நாட்டி
மேலினின் முறைகண் மூன்றில் விதமதாய் விண்ணி லோடுங்
காலினின் மறைய நாலுங் கதிரவ னொளிமேற் சென்றாற்
பாலினை யுண்டு ஞானப் பதியினிற் சேர லாமே. (10)

வெண்பா.

கலிமா கிடைக்கிற்காட் சிக்கெண் குறையா
சலியாத வன்றேகந் தங்கம் — அலிபாலே
காண்பார் பொருளைக் கதிர்மதியின் மையவட்டத்
தேன் பாலை யுண்பார் தினம். (11)



அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்,

தினமுமே யொன்றாய் நின்ற திருவொளி காண வேதான்
மனமதும் வாக்கு மொன்றாய் மறைபொருள் வெளிய தாகித்
தனமது அறுஷின் மேலே தண்ணொளி கண்ட பேர்க்குச்
சென்னமு மரணம் நீங்கித் திருப்பதஞ் சேர லாமே, (12)

எச்சில் தான் சொல்லக் கேளு மிருட்டினிற் றந்தை தாயும்
உச்சித மாகக் கூடி யோடியே குருவி னாலே
மெச்சதோர் சிவப்பைக் கட்டி விளைந்ததோர் திங்கள் பத்திற்
பச்சமா மெச்சில் தன்னிற் பாண்டமுஞ் சமைந்த வாறே. (13)

அஞ்சுமேல் மூன்றுமாகி யதனுடன் நாலு மாகி
மிஞ்சியே நாலு மொன்றாய் விண்ணதில் நிறைந்த சோதி
கொஞ்சியே யொன்றாய்க் கூடிக் குலாவியே சரசஞ் செய்தாற்
பஞ்சங்க ளில்லை தேனும் பாலுமே யருந்த லாமே (14)

பாலினை யருந்த வேண்டிப் பவளக்கா லூடே சென்று
நாலினை யடக்கிக் கொண்டு நடுவதில் விஞ்சை யூன்றிக்
காலினைப் பிடித்துத் தூங்கக் கதிர்மதி யெட்டொன் றானால்
ஆலங்க ளனைத்து மொன்று யாளலாம் பிறப்பே யில்லை. (15)

பிறப்புட னிறப்பு மில்லை பிசகது தானு மில்லை
நிறப்புக ழனைத்து மொன்றாய் நின்றது நிறைந்த சோதி
சிறப்புள வமுத மூட்டித் திருப்பதஞ் சேர்க்கும் ஞானத்
துறப்புக ளறிந்த பேர்க்குத் துறவுகோல் குருவதாமே. (16)

கலித்துறை

ஐயாறு மாறு மதிலாறு மொன்றி லடங்கியபின்
மெய்யாறும வந்து வெளிப்பட்ட தேயுயர் விண்ணுலகிற்
கையாறும் வாங்கிக் கருவங் ககத்திற் கலந்திருக்கப்
பொய்யாறு தள்ளிப் பொருளாறு வந்ததிற் புத்தியிதே. (17)

அறுசீர்க்கழி நெடிலடியாசிரியவிருத்தம்

புத்திதான் பெரியோர் சொன்ன பொருளதைக் காதில் வாங்கி
முத்தியா மிதனிற் கூட்டி மூண்டெழுங் காலி னூடே
சித்தியாம் நாலும் வாங்கிச் சேர்த்தெல்லா மொன்ற தாகப்
பத்தியாய்ப் பணிந்த பேர்க்குப் பரவெளி காணலாமே. (18)

சித்தியா மெழுத்துத் தன்னிற் றியென்ற வெழுத்தை யோட்டி
முத்தியா முக்கோ ணுள்ளே முறையுட னாலும் வாங்கிப்

பத்தியாய் விழிகளிரண்டும் பரமதி லொடுங்கி னுக்கால்
வெற்றியா மிறசூல் வந்து விளப்புவா ரமுதந் தானே. (19)

### வெண்பா.

ஓங்குங் கொடிமாத்தி னுச்சிக் கலிமாவால்
வாங்கிக் கொடிக்கட்டி வைத்திடுங்கள் — தூங்கியெழு
ஞானக் கொடிபறக்கும் நன்மைமிகுத் திட்டகொடி
தாளத்தி லுற்றவர்க்குத் தான். (20)

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

உறுதியா யாறைக் கொன்ரு லுன்னுடைத் தேகம் பொன்னுந்
திகிர்திதா னில்லா வண்ணஞ் செல்லுவாய் மெள்ள நாலுந்
மிகுதிதா னியே யெட்டாத் தலமதை யறிந்தா யானல்
தகுதிதா னிதுவே மெய்யில் விளங்குமே தீபந் தானே. (21)

தானென்ற தீபந் தானுந் தனித்தது வானில் நிற்கும்
நானென்ற தந்தை தாயும் நாடிய சமையந் தன்னில்
ஊனென்ற குருதா னேடி யுறைந்தவோர் சிலப்பி னூடாய்க்
கானென்ற பூத மைந்தின் காரணஞ் சமைத்த வாறே. (22)

காரண பூதந் தானுங் கலந்துவே ருகா வண்ணம்
பூரண குருமெய்ஞ் ஞானப் புதுமையை யறிய வேண்டும்
ஆரண ஷறகி னலு மடங்கிடா வாதி தன்னை
தேரெனப் பணிவோர்க் கெல்லாம் நித்தங்கண் காண லாமே (23)

காணலாங் காட்சி மெத்தக் கருவுற்ற வெழுத்தை யுன்னிப்
பூணலா மிறைவன் பாதம் பொருந்தலாம் பிறப்பே யில்லை
ஆணைப் பெண்ணு மொண்ணு தடங்கிய குருவின் பாதந்
தோணலாம் ஆல மெங்குஞ் சொல்லுண்மை யறிந்த பேர்க்கே (24)

அறிந்தது நிசமுண் டானு லவனியை யாள லாகுஞ்
செறிந்தவோர் மனமும் நேராய்ச் சித்தினை யறிய வேண்டும்
பிரிந்துவே ருகா வண்ணம் பெலத்திடுங் கனியை யுண்டால்
திருந்துமே அறுஷில் வாழுஞ் சலத்தினை யருந்தலாமே (25)

சலத்திலோ கீழோ மேலோ சார்ந்திடு நடுவோ முன்னே
நிலத்திலோ பின்னே வுள்ளோ நீங்கிடும் புறமோ வாக்கோ
குலத்திலோ வானே பெண்ணே கூறிட விரண்டோ வொன்ரே
நிலைத்ததெவ் விடமோ வுன்றன் நேர்மையை யறிந்திலேன் (26)



### கலிச்சந்தவிருத்தம்.

அஞ்செழுத்து மஞ்சுமுக மானவோர் சபையிற்
பிஞ்செழுத்தை யோட்டியதிற் பேரெழுத்தினூடாய்
நெஞ்செழுத்ததைத் தானெழுப்பி நிலைநிறுத்திப் பார்க்கில்
அஞ்செழுத்து மோரெழுத்து மாறெழுத்து மாமே. (27)

ஆறெழுத்தி லேபிறந்த வருளெழுத்தை நீயும்
ஈரெழுத்தி லேயுணர்ந்து மிருதயத்தி னூடாய்
நேரெழுத்தி லேமடித்து நின்றதனில் நோக்கப்
பேரெழுத்தி லீசன்வந்து பேசுவது மெய்யே. (28)

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பேசுவா னுதி நம்மிற் பிதற்றுமா மவனைச் சேர
வீசுவா ரீமா னுள்ளே வெறியென்ற காலன் நீங்கி
நாசி வாய் காது கண்ணு நடுவில்வின் ணிடையிற் சேர்ந்தால்
ஊசிவா வென்று வட்டத் துட்கருச் சமைந்த தன்றே, (29)

வட்டமோ வொளிவோ தேனே மறையதி லுதித்த வானே
இட்டமோ ஈமான் ருனே விரவுமேல் வெளியுள் ளானே
திட்டமோ ஆதம் தானே திருக்குரு தந்தை தானே
ஒட்டனே வோடில் லானே வுரைக்கயா னறிந்தி லேனே (30)

அறிந்தது மொருவன் ருனே யவனுட னம்மைக் கூட்டி
மறிந்தெழு மஃரி பத்தின் வழிதனை யுணரும் போது
திருந்தவே யானும் பெண்ணுஞ் சேர்ந்தவ ரொன்ற தாக
வருந்தவே யென்னை யீன்று வளர்த்தவர்கள் மகிழ்ந்தவாறே. (31)

மகிழ்ந்தது மவனே நாமோ வளர்த்திடு மாதந்தானே
புகழ்ந்தது வேறு மேலோன் பொருந்தின காலந் தன்னில்
உகந்தது மவனே தன்னி லொளியதில் வளைந்த தாலே
தொகைந்தது மவனே யன்றிச் சொல்லவே றில்லை தானே. (32)

### வெண்பா.

வேலையிது வானல் விளையாட்டுக் கென்னகுறை
சோலைவானம் புவனஞ் சூட்சமன்றே — சீலமுடன்
என்பீர்மு ஹம்ம திருபாத மேதுணையாந்
தன்பீர் கதியெனக்குத் தான்.

ஞானப்பால் முற்றுப்பெற்றது

ஹாமீம்.

பிஸ்மில்லாஹி.

# ஞானப்பூட்டு

கலிநிலைத்துறை.

அந்த நாளையி லஹ்மதைத் துதிக்குமுன் னிறையோன்
விந்தை யாகிய லாமலி பானதை விரும்பிச்
சிந்தை யுற்றெழு மஹ்மூதைப் படைத்தனன் செல்வம்
வந்தவா றதைக்கண் டேஞானப் பூட்டினில் வகுப்பாம். (1)

வேறு.

காரிருள் விலகிய ஹபீபிற சூல்திருத்தோளர்
சீர்பெறு மபூபக்க ருமறுது மானலி செல்வர்
நேரொளி வாகும்ஹ சனுசைனை நினைவினில் நினைத்துச்
சீர்புகழ் முகியித்தீன் சிந்தையில் வைத்துள்ளே புகழ்வாம் (2)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அந்த நாளு தித்த வேக வாதி சோதி நீதியே
உன்ற னேடி ரந்து கேட்பே னுண்மை ஞான வல்லபம்
சிந்தை யுட்டெ ளிந்த ஞானச் சிறும லுக்கர் செல்வன்யான்
வந்து ஞானப் பூட்டதின் வலிமை தாவென் வல்லவா. (3)

சந்தவிருத்தம்.

அருளும்படி பொருள்தந்தெனை யாளும்மிறை யோனே
அறுளும்படி யுனைத்தேடியே யழுதேன் சில காலம்
அருள்தந்தெனை யாளும்படி யாடுங்குழி கண்டேன்
பொருள்தந்தெனை யாளும்மிறை போதக்தரு வாயே. (4)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பூவினில் வாசம் பொருந்திய தலங்கள்
புகழொடு துதித்தெழும் பூட்டில்
நாவினின் மேலே யுதித்திடுங் குழியை
நவின்றிட வுலகினி லிறையோன்
மாவினி லுதித்த குழவியின் குகையில்
மருவிய குழியைம்பத் தஞ்சில்
தாவிய பிருதிக் குழியெனக் கிறையோன்
றலமது வறிந்திட வுரைத்தான், (5)



அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

ஏகமா மதிபோல் நின்றேயெழுந்திடும் வாசி தன்னைப்
போகமாங் குழியில் நின்று பொருந்திய பிருதி யப்பு
ஆகமே யமுத வாசற் குழியைம்பத் தஞ்சுங்காண
ஏகநா யகனு ரைத்தா னெழுத்தினை யருளாற் சொல்வேன் (6)

வேற்றொலிவெண்டுறை

வழியான பிரிவஞ்சு வடிவஞ்சு வகையஞ்சு வாயுவானதில்
தெளிவான சுற்றஞ்சு கழியஞ்சு தேயுவானதிற் றிறமதாய்

வெளியாக நின்றுடு மொளிவே யெனக்கன்று
வெகுஞான வெளிகண்டபின்
தெளிவான குழியைம்பத் தஞ்சினிற் பூரணந்
திரமாயெடுத்துரை செய்தார் (7)

அறுசீர்க்கழிநெடியாசிரியவிருத்தம்

கூசிய வாயு தன்னைக் குழி நூற்றி யைம்பத் தஞ்சும்
பேசிடும் ஞானங் கல்வி பிரித்திடும் வேத சாத்ரம்
நேசியாம் நன்னூல் நிகண்டக ராதி ஞானம்
வாசிமே லுறைந்து வாங்கும் வருமிறை யறிவு தானே (8)

மூலமாங் குழியில் நின்ற ருளைசுழி யறிய வேண்டிச்
சாலமாம் யோகம் ஞானஞ் சார்கலைக் கியானம் பாரில்
ஏலவே அலிபில் நின்று மெழுந்திடும் லாமை நோக்கி
ஆலமே படைத்த துய்யோ னரும்பொரு ளெனக்கீந் தானே (9)

ஆசிரியவிருத்தம்

ஈந்தவுப தேசங்கண் டறைமொழி யுரைத்தபின்
னெழுந்திடுங் குழிய தனிலே
ஈந்தலிபு லாமுடனே மீமுமிக நூனுடனே
யிரைந்துவரு மக்கு ழியிலே
ஈந்தமஹ் மூதரொளி யிலங்குமக் குழியில்நின்
றிலாமலி பிரண்டு மிடையே
ஈந்தவிறை மீமென்ன வேயிருதயத்தடைத்து
மிருவாசற் பூட்டுரை செய்தான் (10)

கட்டளைக்கலித்துறை

பூட்டொன்று வாசற் புகழ்தரு வாயிறை பூரணத்தில்
நாட்டு மனக்கம்ப மாடிப்பின் னேநடு வீதிதன்னைக்

கூட்டுங் குழியஞ்சு பூட்டொன்று பூட்டக் குறிதருவாய்
ஏட்டி லடங்காப் பொருளே யெனதிரு கண்மணியே (11)

காரண மான குழியஞ்சு காபொரு லாமுடனே
பூரண வாசற் குழியொரு மீமிற் புகழ்தருவாய்
பூரநற் ரேள ருபதேசந் தந்தருள் புண்ணியத்தால்
காரண மாகிய பூட்டுரைப் பாயிறை கண்மணியே (12)

சீராய்க் குழியிற்சென் றேறிடும் வாசியைச் சிந்தைதன்னில்
நேரான தாக நிறுத்திவைத் தாயிறை நிச்சயமாய்
வாருன வாசி யமுதக் குழியொரு வாவுகொண்டே
காரான வக்குழி பூட்டிவிட் டேனிறை கண்மணியே (13)

அஞ்சான வாச லமுதக் குழிகண் டடைத்துவிட்டேன்
எண்சா ணுடலுக்கு ளேகிய வாசியை யென்னிறையே
அஞ்சாமல் நின்றருள் பூரண மேயெற் கருள்புரிவாய்
எண்சாணுக் குள்நின் றருள்வா யெனதிரு கண்மணியே (14)

அஞ்சான பஞ்சமா பூதங்க ளஞ்சு மணியணியே
எண்சா ணுடலுக்குள் தூணக்கி விட்டது மென்னிறையோன்
தஞ்சா யிருந்த வினையை யகற்றவும் நாடிவந்தேன்
அஞ்சான பூரணங் கண்டடைத் திட்டனென் கண்மணியே (15)

விந்தைய தான குழியைம்பத் தஞ்சும் விளக்கொளிபோல்
என்றன் மனதி லெழுந்திடு வாசிகண் டேயருளால்
சொந்தம தான வடிமையென் றேனெனைச் சூழ்ந்திருக்கும்
என்றன் மனக்கண் திறந்தருள் வாயென்றன் கண்மணியே (16)

முந்த வமுதக் குழியச் சாத்துக்கு முன்னின்றெழுத்
தெந்தமக் கீந்தரு ளெம்மிறை யேயின் றெழுத்தறித்தறிந்தால்
முந்த அறுஷு குறுசு சுவனமிம் மூன்றெழுத்தும்
உன்றன்முன் னின்றுறை வாய்ச்சமை வசகுமெங் கண்மணியே (17)

அக்குழி வாச மறிந்தே னிறையா லனுதினமும்
ஒக்கு மெனமலர்ந் தேன்வாச மானதி லோதிடுவோர்
சிக்கு மெனச்சில பேரறி வார்மனச் சிந்தையுளே
ஹக்கனே நீயெனக் கீந்தருள் வாயென்றன் கண்மணியே (18)



அஞ்சாமல் நின்றுள மைப்பூத மஞ்சு மறையினின்றே
ஒஞ்சாம லோடிய வாசிலயக் கண்டுள முட்கலந்து
மிஞ்சாமல் நின்றவோர் மெய்வழி கண்டபின் மேலவன்றன்
எண்சாணுக் குள்ஹூன் றெனைக்காத் தருளுமென் கண்மணியே. (19)

விருத்தம்.

தருணமிது கண்டு கருணையருள் கொண்டு
தயைகூர்ந்து விரைவாகவே
அருணவிழி கண்டு மருள்மனதி லுண்டு
மருவிற்றெளிந்த பொருளே
சரணமதுகண்டு சமையமிது வென்று
சற்குருவெனக் கருளுவாய்
கருணைமன மாகவெனைக் காக்குமிறை யேயுனைக்
கண்டுமனந்தேறி யிருந்தேன். (20)

பிறிவது மெழுந்தேயரு ளொளிவது திரண்டுவரு
பேசுமொளி வானகுழியில்
அறிவது மெழுந்தேயுரை தெளிவது முறைந்துநிறை
வருட்கமலமீதி லொளிவாய்க்
குறியுடனெழுந்துவருங் குவையுடனடைத்தகுழி
குணமது வறிந்துவரவே
அறிவது மெழுந்தமுத மடியனுக்கீந்தருளெ
ஞதியிறையேஎனேமனதில். (21)

பிரிவான குழிமூன்று பேரஞ்சு மூரஞ்சும்
பேசுமொழி யானகுழியில்
வரியான றூஹஞ்சு வழியஞ்சு ரூபஞ்சு
வகையான திற்றெளிந்து
தெளிவான மூமின்கள் திருமறை கண்டோதுவார்
திருஞானம் பெற்றோர்களே
அறிவான குழியோக மலிபுலா மீமென்று
மறிந்தோர்கள் சொல்லிவிடுவார் (22)

அருளொளிவே யுன்றன் திருளொளிவே தந்து
திருவருளெ ழுந்தபதியில்
இருளதை யறுத்து மனப்பொருள் புரிந்து
மருள்பூரண மானவிறையே

கருவதுமுதித்த மொழியுரு வெழுந்தவகை
காரணம தானகுழியில்
பருவலய தானவயல்தேடிவரு வேன்மனது
கூடியெனையாளென்னிறையே. (23)

அண்டபகி ரண்டமுத லாகாச மெய்ப்மூல
மணிநடு மேருகுறியுங்
கண்டவழி யோகமும் ஞானமுங் கல்வியும்
கருவிலுரு வானவழியும்
ஒன்ருன பிரிதிவிக் குழிவாச மானது
மூச்சிமலர் பச்சியெனவே
நன்ருன பிரிதிவிக் குழிவந்து நின்றென்னை
நாட்டம்வைத்தருளுமிறையே. (24)

நீநின்னிட மொளிதான் நின்னிடமருளே
கோனின்னிடமறியவே
வானின்னிட மிறையே தானின்னிட மலர்க
ளேநின்னிட மறியவே
யானின்னிடம் பிரிதே வின்னிடம் வாசி
தானின்னிடம் மறியவே
தேனின்னிடம் வாயு தானின்னிட மறியக்
கோனென்றனக் கருளுவாயே. (25)

திட்டமுடன் வாயுதனி லெட்டுநான் கொன்றையுந்
திறளுக வென்றருளுவாய்
வட்டமுடன் மூவேழு மூன்றுசுழி யானதும்
வழிகண்டு மோடிவருவாய்
திட்டமுட னுன்மனமு மென்மனமு மொன்ருய்த்
திறளு கநின்றருளுவாய்
கட்டாண்மை செய்யாம லெட்டுநான் கொன்றையுங்
காட்டியருள் பூட்டியருளே. (26)

சுழிகண் டெழுந்தகுழி யொளிகண்டு மனந்தேறு
முன்மையருள் பெற்றவிறையே
தெளிவாக வுனைக்காண வழிகண்டு தேடுறேன்
திருவருளுதித்த வெளிவே



களிமதஞ் செய்குவாய் கீழ்மேலுந் தெரியாமல்
கம்பீர மானவகையோ
தெளிவான குழி நூற்றி யைம்பத்தி யைந்துந்
திட்டமாய்ச் செப்புமிறையே (27)

கலிவெண்பா

உன்னை யறியாம லுன்மன துங் காணுமல்
பின்னை மகிழ்வார் பெரியோனே—வன்மைதால்
தன்னைப் புகழ்வார் தலைவனென்றும் பேரறியார்
முன்னே யுதித்த முனைசுழியால்—மன்னவனே
உன்னைப் புகழ்ந்தேத்தி யுருக்கமுடன் றேடாமல்
பின்னைப் புகழ்ந்தேத்தும் பேர்கண்டாய் – என்னையே
இவ்வுலகி லேபடைத்தா யேகா வுனைப்புகழ்வேன்
தவ்வைபிதா வில்லாத தானவனே—முன்னம்
அறுஷாங் குறுசு மமைக்குமுன்னே நீபடைத்த
பிரியமுடன் மாராயந் தந்தருள்வாய்—உன்னைத்
துதித்தேன் சிலகாலந் துன்மாயை நீக்கி
இருக்க உதவிதந்தா யென்னிறையே—பதுக்கமுடன்
உண்மைப் புறுக்காளை யோதினே மென்றுசொல்லி
நன்மையுள்ள வல்லபத்தை நாடார்கள்—செப்பமை
உருக்கமுட னுன்னை யுகந்தறியா மூடர்
சிறுக்கு நரகமதி சேர்வார்—மறுக்கமாய்
உருக்கமுடன் றேடி யுகந்துநின்று கேட்போர்
பெருக்குஞ் சுழிமுனையைப் பேசுவார்—நெறியுடனே
பேசுங்குழி நூற்றியைம்பத் தஞ்சும் நொடி தவறுர்
வாசமெனச் சொல்வார் வகையறிந்தே—ஆசையால்
பெண்மாதரோடுதான் பேசியிருக் கும்போது
கண்ணு லமுதக் குழியொன்று—பின்னுலே
ஆசையுட னப்பா லமுதக் குழிகடந்தே
ஆஷிக் கெனுங்குழியுண் டானதுவே—பாசமறப்
பரிவாக நின்றகுழி பகரார்க ளிவ்வுலகில்
உருவாக நின்று மொளிவிறங்கும்— அறிவாக
வாசி யெழுந்து வலமாகச் சுற்றிவந்தே
ஓசை யிடதுபுற முட்புகுந்து—பேசுமென
ஓசைக் குழியி லொளிவிறங்கிச் சுற்றிவந்தே

ஓசைக் குழிகண் டதிலிருக்கும்—வாசமாய்
ஓசையாய் நின்றே யுணவான விக்குழியும்
பாசமற நின்றிலங்கும் பார்வையால்—நேசமுடன்
மூளாக் குழியில் மூடுகியுட் சென்றுநின்றும்
ஏழாங் குழிகண்டே னென்னிறையே—தாளாமல்
அக்குழிக் கோர்மலக் கணியணியாய் நின்றுருவாய்
தர்க்கமிலாக் கெற்பமதிற் ருன்வளர்த்தா—ிருக்குமென
ஏகா வுனைப்புகழ்வே னிவ்வுலகி லேபடைத்த
வாகான பூட்டருள்வாய் வல்லவனே—நோகாமல்
தந்தா யெனக்குத் தலைமுறைகள் கேளாமல
என்ற னிடத்தி லிருப்பவனே—சொந்தமுடன்
முந்த வொளிவு முதலோன் முஹியித்தீனும்
என்ற னிடத்திருக்க மென்னிறையே—சந்தமருள்
இந்தக் குழியிறையோன் லாமுமீம் தால்றேயும்
வந்தமத் ஷத்ஹம் சேமூமேழ்மலக்கால்—உன்றனல்
வெள்ளிதிங்கள் செவ்வாய் வேந்தன் புதனுகும்
வள்ளல்முன் னுதித்தெழுந்த நான்மலக்கு—முடருகையிற்
போந்தநாள் சிந்தைசனி ஞாயிறுவி யாழனென்றுந்
தான்றுதித்துச் சொன்ன நாள் தான். (28)

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

விளைத்திடுங் குழியே முாலே விபரம் நூற் றைம்பத் தஞ்சும்
உளைந்திடு முள்ளம் நோக்கி யுன்னையான் றேடும் போதில்
அளைந்தவக் குழியை நோக்கி யமுதுன்னைத் தேடி வாடி
வளைந்திடும் வாவை நோக்கி வந்துயா னுன்னைக் கண்டேன் (29)

கண்டபின் னிறையே யென்றன் கவலைக ளெல்லாந் தீர்ந்தேன்
விண்டனன் ஞான யோகம் வெளிப்பொருள் நோக்கிக் கண்டேன்
தொண்டனைக் காக்கும் வல்லத் துறவுகோல் ஞானப் பூட்டும்
என்றனக் கீந்தி ரத்சித் திரங்கென தரசர் கோவே (30)

ஆதியே யமுத வாச மறிந்திட வுரைத்த போது
சோதியாம் பன்னீர் வாசஞ் சுழிமுனை தன்னிற் காணும்
நீதியா யாஷிக் கென்றும் நின்றெழுங் குழியின் வாசம்
ஓதிடு மிறையே சீனி யுந்துமவ் வாசந் தானே (31)



அந்தநற் பிரிதி வியப்பு முறுங்குழி வாசஞ் சொல்வோம்
சிந்தையி லெழுந்த வாசி சிறந்திடும் பாலுந் தேனும்
விந்தையாய் வாயுந் தேயும் விரும்பிய குழியில் நின்றே
எந்தமக் கெழுந்த வாச மெருக்கலம் பூவாம் பிச்சி, (32)

ஆதிமுன் னிருந்த வாச மணுகிய குழியின் வாசம்
சோதியா மம்பர் வாசஞ் சுழிமுனை தன்னை நோக்கி
வேதியர்க் கதிபரான விரும்பிய மஹ்மூ தாலும்
ஓதியே யுரைத்த வாச முறுங்குழி யேழுங் கண்டேன். (33)

எழுசீர்க்கழி நெடிலடியாசிரியவிருத்தம்.

வரியாக நின்று குறியான வழியே பரியோ டடங்கி வருவாய்
நெறியாக வுன்னை யறிவாக வெண்ணிச் சரியாக நின்று புகழ்வேன்
அறிவாக வுன்றன் மனமீதி லுள்ள வறிவைப் புகட்ட வருவாய்
விரிவாசி மீதிற் பரியேறி வந்து சிறியேனைக் காக்குமிறையே. (34)

வேறு.

பிணையுன்னிடந் துணையேபிறை பிணையாகி வருவோர்கள்
அணையென்றுமே ஞானக்குழி யறிவுக்கிளி யேநான்
இணையொன்றி லடங்காத விறையோனே யெனைக்காத்துப்
பிணையேன் பிழைபொறுத்துப் பெலன்றருவா யிறையோனே. (35)

வேறு.

எந்தாயிறை யோனேயுந்தித் தலமா னதைவிள்வாய்
எந்தங்குகை யுள்ளேயிருந் தெழுந்த துதியறிய
முந்தவொளி வானமஹ் மூதரா னவெழுத்தாம்
அந்தத்தொனி யாயிரைய அலிபா னதுலாமாம். (36)

அல்லும்பக லாக வகமகிழ்ந்தே னுனைத்துதித்தேன்
சொல்லுமறை யோர்ஞானச் சுருதி யறியாமல்
வெல்லுமிபு லீசைக்கண்டு வெருட்டார் மனப்பொருட்டால்
நல்குமிறை யோனேயுனை நாடிப் புகழ்ந்தேனே. (37)

புகழ்ந்தேனிறை போய்ஞானப் பூட்டா லுனைத்துதித்தேன்
நிகழ்ந்தசில பேர்களுனை நினையாம லேபுகழ்ந்தோர்
இகழ்ந்தே யுணர்வழிந்தே யிறையேநின் பதிகாணர்
புகழ்ந்தேயறி ஞானக்குழி பூட்ட வருள்தந்தாய். (38)

### கீர்த்தனை.

இராகம் - உசேனி, தாளம் - ரூபகம்.

#### பல்லவி.

இருபொழுது மொருநினைவா மிருக்குதேயென் யாது
ஏழையடி யேன்முகம்பார்த்திரங்கிடுமிப் போது.

#### அநுபல்லவி.

கருமுகினிழல் கவிநபியிறசூல் மரபில்வரும்
ஹக்கனருன்சேருமப்துல் காதிறு முஹியித்தீனே. (இருபொ)

#### சரணங்கள்.

சரியையொடு கிரியைவழி தானறிந்து சேரத்
தாண்டுபனி ரண்டுபரி தன்னிடமே சாரத்
துரியதுரி யாதீத யோகமதிற் கூடச்
சுடரொளிவு மெய்ஞ்ஞான கருவறிந்துள் ளாடப்
பருவமுட னொருநாளும் செயலறிந் தெந்நாளும்
பசுபதியுங் கடந்து துசுமவினை யுந்தீரவேதான் (இருபொ)

கண்ணிணொளி வதுபோல கண்டுமனம் பூணக்
கமலமுக வடிவழகுக் குறுதிநினை வூண
விண்ணிலொளிதோணவொரு சுடரொளிவைக்காண
விருப்பமுடன் வேதாந்தச் சுருதியடி காண
நுண்மையதா யுள்ளறையின் றிண்ண மதுதெரிய
நுகுதாவின் செயலறியப் பகுதாது முஹியித்தீனே. (இருபொ)

மண்டலமூன் றுந்தவிர்ந்து மாய்கைதவிர்ந் தோட
வான்பொருளைக் கண்டிறைஞ்சி வல்லபத்தை நாட
அண்டர்பயில் முயன்றவழி யகமதிற்கை கூட
ஆலமதெல் லாப்நிறைந்த வருளறிந்துள் ளாட
வண்டணுகாத தாமரையி னின்ற விடமறிய
மைக்கடலுக் குள்ளறையின் ஹக்கன் றிருவுரைப்பேன். (இரு)

ஞானப்பூட்டு
முற்றுப்பெற்றது.

பிஸ்மில்லாஹி

# மெய்ஞ்ஞான ரத்தினலங்காரக்
# கீர்த்தனம்.

காயற்பட்டணமடுத்த குருவித்துறை
பட்டாணி முகம்மது லெப்பையவர்கள்
குமாரர்
முகம்மது ஹம்சா லெப்பை
அவர்களியற்றியது.

பிஸ்மில்லாஹி,

இஃது

# முச்சுடரின் துதி

இரட்டை யாசிரிய விருத்தம்.

அஹமதுஹகு வாஹிதா யடிமுடியு நடுவுமல்
லாறகு லாதமாகி
யருட்பால் பொருட்பால் காமப்பா லானதேர்
டலிபுலா மீமுமாகி
நகையுந்தி யிருதயத் தோடுமுண் டககமல
நாட்டம் பொருத்தமமையல்
நற்ககன் புவியில்தாய் தந்தைநா மென்றபெயர்
யாஹூம் மெனுந் திக்குறுமாகிச்
சுகமான கலிமாவி லுயிரெழுத் தானமுச்
சுடர்மூன்று ஹறபு மாகிச்
சொல்லுமக மொத்துநின் றெளிருமிரு தத்துவத்
துட்பொரு ளினைப் பணிகுவாம்
அகமதனே யோட்டியருள் மழைமாரி சொரியுமெம்
மகுமதரு முன்னிற்கவே
அபுருப மானகுண மென்னுமூ ராளுகண்
மணியே முகியித்தீனே.

முச்சுடர்ப் பிரகாச மச்சுமா ளிகையா
        சனத்திலுறு மோன பொருளே
அச்சுட ரெலுங்கட லடங்கிடா வான்பொருளே
        அஹதுநிலை யான பொருளே
மெய்ச்சுடர்ப் பொருளையோர் தச்சுமா ளிகைக்குளே
        விளங்கவந் துற்பொருளே
பச்சைமுத் தொடுவெள்ளை யானநற் பொருளைமா
        பகலிரவ தர்னபொருளே
உச்சியின்கீழ்நின் றிலங்குபொரு ளைச்சொலு
        மூலகெலா நிறைந்த பொருளே
இச்சைகொண் டென்னுயிர்க் குயிராகி வந்தபொரு
        ளிறையொரு வளைப்பணிகு வரம்
அச்சமதை யோட்டியருள் மழைமாரி சொரியுமெல்
        வருமதரு முன்னிற்கவே
அபுரூப மானகுண மென்னுமு ராஞகண்
        மணியே முகியித் தீனே.

முற்றிற்று.



பிஸ்மில்லாஹி.

# மெய்ஞ்ஞான ரத்தினலங்காரக் கீர்த்தனம்.

காப்பு - வெண்பா.

தானாய்த் தனியவனாய்த் தன்மயமாய்த் தற்சொரூபாய்த்
தானாய்த் தனிநிலைவாய்த் தானானாய் — தானேநீ
சல்லல்லா வானநபி சாதாத் தவரொளியிற்
குல்லும் படைத்தனையே கூர்ந்து.

இரட்டை யாசிரிய விருத்தம்.

உஜூதுடன் சொல்லும் கிதபக்கா வானதோர்
        முஹலாபத்து லிக்ஹ வாதி
யுடையோன் கியாமுஹூ பிநபுசிகி யுவப்பான
        வஹுதாநிய் யத்த தனுடன்
நிசமாம் ஹயாத்தோடு மில்மும் இருதத்து
        நேத்திருத றத்து ஸம்கு
நிகழ்த்துபஸ றுன்கலாம் ஹையினொடு ஆலிமுன்
        முரீ துன்கா திறுன்ஸ மீவுன்
ஒசியா பஸீறுன் மூத்தக்கல்லி முன்னிவைக
        ளொன்ரு யெழுந்த பொருளே
யுலகிலுள தப்துமார் செய்பிழையு மென்பிழையு
        மொக்கவே நீபொ றுத்தே
துஜநிகரு மெய்ஞ்ஞான ரத்தின வலங்கார
        கீர்த்தனத் தொடர்பா டவே
சொல்லுதவி நல்லுதவி செய்தருளு வாய்வேத
        சுத்தனே காப்பு நீயே

---

## ஹக்குத்த ஆலாவின் வன்னிப்பு

1-வது பதம் - இராசம் - ஆனந்தபைரவி - ரூபகதாளம்.

பல்லவி.

அகூது பில்லாகி மினஷ்ஷைத்தா னிற்றஜீம் வபிநஸ்தகீன்
பிஸ்மில்லா கிற்றகுமா னிற்றகீம்

### அநுபல்லவி.

ஷாகூதினில் ஞானச் சுடர் விரிந்தோனே
சூட்சம் அல்லாகு லத்தீபுன்மஜி தானேனே
தருதி சுபுஹா னல்மலிக்குல் குத்தூசென் போனே
தனிவவ ஹையுல் கையூமானவேனமுன்னே அசு

### சரணங்கள்.

1. ஹன்னானும் மன்னனுயா தையான் - ஹக்குல் முபீனெனும்
காதிறுல் முக்கதிறு யாபுர்ஹான்
கன்னசைநீக்கும் கனியுல் அலீமெனும் - அஸீஸால் ஜப்பாறெ
கருணை தங்கிய கபூறுற்ற கீமெனும் [னும்
என்னளும் ஏகறப்பில் ஆல மீனெனும்
இலங்கும் ஜல்லஜலாலுகு நீயெனும்
முன்னு லொருறூக்கத் தாகிய கோகனனும்
முமீனு முஹைமினுல் முஹில்மு மீத்தெனும். அசு

2. அல்லாமுல் குயூபான நாதனே அஹதுஹதுவா ஹிதாய்
அகன்ற சத்தாறுல் குயூபெனும் வேதனே
எல்லாம் கபூறும் ஷாக்கூறு மானேனே - எங்கெங்கும் சுபஹா
இறந்த தப்பியல் அகுலாவா னேனே [னேனும்
அல்லாகு அக்குப றென்றும் பெரியோனே
ஆரும்புகழ் மஸிக்தும் மக்ஸ தானேனே
எல்லாம் ஜஸீமுன் மதீனுன சிறந்தோனே
யேகனே காலிக்குற் ருஸிக்கு மானேனே. அசு

3. ஹையுன் ஆலிமுன் முக்துன் காதிறுன் - ஸமீவுன் பஸீறுன்
கனத்ததோர் முத்தக்கல்லி முன்னெனும்
மெய்யுன்வந்திடும் கபூறுற்றகீமெனும் - மலிக்குன்னஸீறெனும்
செய்யும் அற்றகு மானுத் தையானெலும்
சேரும் றப்புல் அறுஷில் அலீமெனும்

4. ஆஷாக்கு மகுஷூக்கு மானேனே - அவ்வல் ஆகிர்வல்பாத்தி
அருமை அல்லாமுல் குபூபெனும் பெரியோனே [னுய்
தோஷிகள் பிழைபொறுக்கும் ராஜனே தொண்டன் ஹப்சா
துணையொடு மணவறைபி லான்வோனே [வைக்காத்துத்



பாஷைகள் பலவாக நிறைந்தோனே
பத்தா குல்அலீ மாகிய நீதனே
கோஜமு மெமதைக் குருவாய் வகுத்தோனோ
குன்னென்ற சொல்லைக் கொண்டெல்லாம் படைத்தோனே.

## இன்ஸானுண்டான வியல்பு.

2-வது பத - ராகம் - காபி - ஆதிதாளம்.

### பல்லவி

பிஸ்மில்லா கிற்றகு மானிற்ற கீமெனும்
பெரியவன் திருநாம மோதிடுவோம் ஆதி
பெரியவன் திருநாம மோதிடுவோம்.

### அநுபல்லவி

அஸ்மா அல்ஹம்தா யனைத்தையும் படைத்தே
அடிமுடி நடுமுதல் நிறைந்தோனோ
இஸ்மே அல்லாகு எங்குப் வல்லபமாய்
இலங்கும் பொருள் றப்பில ஆலமீனே பிஸ்மி

### சரணங்கள்

அறிவீர்க ளின்சான் படையுண்ட கோலம்
ஆனதோ ரெழுநான் கட்சாத்தால்
நெறியாய்க் அலிபுஜன் நடுவாக நீட்டியே
நேசமுடன் பேதேயால் புதவம் வைத்தான். பிஸ்

காணுந்தே நெற்றியாய்க் கனத்தஜீம் தலையாய்த்
தோணும் ஹே ஹோண்டும் தோட்புயமாய்ப்
பூணு தால்கானும் புகழ்வலா திடதுகால
பொருத்தினுன் றேலேயும் விலாக்குடையாய். பிஸ்

ஓதிடுப் சீன்ஷீ முன்நெஞ்சு மார்பாய்
உணரும் ஸாதுலாத் வலதிடது காதாய்
நீதியுடன் தேலேயும் கால்மூனி ரணடுமாய்
நினைத்துக்கொள் ஐன்கொய்னுக் கொடுங்கையென்லறு. பிஸ்

கண்டிடும் பேய்நம்மன் கைவிர லாகிக்
கனத்த காபுடது கைவிரலாகி
விண்டிடும் காவதே முதுகந் தண்டாகி
வீறுடன் லாம்ரண்டு முழுங்கலாய். பிஸ்

5. உண்மைமீது மூனே யுயிர்மக்காம் நூருய்
உந்தியே வாவுகல்பு உவத்தஹேயாய்
செம்மைலாமலிபு சேரும்கல் பழிவில்லேச்
செப்பினுர் எறுஹெறன்று செம்மல் றசூல். பிஸ்

6. எழுதான்கட் சரத்தைக் கொண்டிருத்திஞன் ஜடத்தை
யிணக்கிக் கலிமாலசவல் கால்பூட்டிப்
பழுதில்லா மூலம் இலாகா இல்லாவுடல்
பகாந்தேன் அட்சாம் ஆல்லாமுக மறிவீர். பிஸ்

7. சொல்லுங் கலிமா இலாகஇல் லல்லாவுடன்
சூட்ச ஹறுபிருபத் தொன்பதுமாய
நல்லான் மூகம்மதுற்ற சூலுல்லா தனிசேர்த்து
நாட்டிஞன் ஹம்சாவிதிற் காட்டினதே ஆதி. பிஸ்

3-வது பதம்-இராகம்-ஸஹாஞ-ரூபகதாளம்.

## பல்லவி

பீண்டமட் டின்பம் பொங்குப் புகழ் தெனகலிமா
ஏன்தமட்டிலு மிறையை மனமே நீதுதி பூண்ட

## அநுபல்லவி

ஆண்டவனருள் தோண்று முகம்மதர்
அஹதத்தினி லுஹதாகியே லஹதத்தெனும் துவைப்பூ

## சரணங்கள்

1. பாரும்நாசூத்து மலக்கூத்து ஜபறூத்துப்
பகரும் லாகூத்து ஹாஹூத்து பாகூந்திலும்
பாசமஜெம் கூத்தில் நேசந்தரு மென்மனமே
பங்கமிலே யங்கமொரு தங்கம் அங்குமிங்கும்.

2. ஆதிக்கு மூன்னுதியாய் நின்றவனே
அஞ் செழித்திலும் பிஞ்செழு தானவனே
யாஜிபுல்லுஜூதாகிய நாதனே
வகைமும் கினுமூம் தனிலும் ஜெகம்புகழ் ஆரிபிலும்

3. ஷம்செனும் வடிவமான பிரகாசரேநல்
றமசெனும் பொருட் சூட்சதமாய் நின்ருேரே
தாத்துக்குள்ளுருத் தோத்திர மேஞேரே
சற்குருவே மெய்க்குருவே தற்குருவே ஹக்கனருள்.



ஆதம் சிரசில்நின் றைம்பத்தோர் தலேமுறையின்
அப்துல்லா ஈன்ற அண்ணல் முகம்மதரே
தாசன் ஹம்சாலப்பை தோஷ மகற்றிடுவீர்
தருவேயுயர் குருவேதிரு மருவேநபி மகுமூதரே. (பூண்)

---

4-வது - பதம் - இராகம் - நாதநாமக்கிரியை - ஆதிதாளம்.

## பல்லவி.

சேர்க்கு நாளேச் சென்னப் பதியி லெங்களேச்
கிசய்யி தரும தென்றன் பிரேயாறசூலே. (சேர்க்)

## அநுபல்லவி.

மார்க்க முறைசேர் மதினைநன் னகரில்வாழ்
மண்டலஞ் சென்றறஷில்மொழி விண்டோரே
பிண்டம தென்றுமல் ஹர்தாய் நிறைந்தோரே. (சேர்க்)

## சரணங்கள்.

1. ஆதியொளி யிற்பிரிந் தனேகரூப மாயெழுந்தீர்
அறுகியிலுந் நீரொளித் துறைந்தீர்
சூதிறகு லாய்ப்பிறந்தீர் துணேசேர் நால்யார்களுடன்
தூண்டாமணி விளக்கொளி யாயிருந்தீர்

ஆதமா நூதல மைந்த நீதரே
வேதமேமுழங்கு மக்க ராஜரே
பாதமே தருவீரெனக் காதரவு நீர்தானேயா
பட்சமோ டிச்சைதந் தச்சமில் லாநபி
யுச்சித மாமகு மூதுமு கம்மதே (சேர்க்)

2. இல்முல் எக்கி ஞனதுடன் ஐனுல் எக்கீன் றனேயறிந்து
ஹக்குல் எக்கீனென்றதி லேதெளிந்து
கமாலுல் எக்கீன்றனிற் சேர்ந்து காட்சிகளே யானருந்தக்
காட்டும் யாஹபீபே யருள்புரிந்து

குல்லும் றசூவே நும்மொளியாலே
யெல்லுயிர்க்கும் றப்பானவன் றூதரே நற்
கல்லுமா னுடம்பும் பேசும் காத்திமுல்லன்பி யாவஞேரே
கற்பக தருவே சொற்பிர காசரே
நற்புகழ்யாமகு மூதுமு கம்மதே (சேர்க்)

3. அன்றுருக்கத் தோரலிபாய் ஆனதிரு வெண்மணியே
யென்றைக்குமைக் காண்பேனோ வென்கண்ணில்
இன்றுமனந் தேடிவாடி யிருந்தேனினி யென்செய்வேன்
எங்கள்யா ஹபீபே யுமையெண்ணிக்
கண்டுசக்ர்கரை தேனிலுமினிதாய்
நன்றுசெய்யும் யாறசூலென்மீதே
தொண்டனும் ஹம்சாக்குமது வென்றிதரு வீரென்னுளும்
வந்தரு சலுமென் னந்தி வி ளேதரே
சுந்தர ராஜரே செம்மல்மு கம்மதே. (சேர்க்)

---

5-வது - பதம் - இராகம் - அபுருபகம் - ஆதிதாளம்.

பல்லவி.

சாதாத் சாதாத் சாதாத் செய்யிதஸ் (சாதாத்)

அநுபல்லவி.

சரஜாதாத் திறையருள் வேதா குறைஷியர்
நாதா நபிகளின் முதாசெய்யிதஸ். (சாதாத்)

சரணங்கள்.

1. அலிபொடு லாமொடு ஹேயொடு மீமொடு
அழகொளிர் தாலொடு மேவிய நாதரே
கலியொடு மாவொடு கருணை துலங்கிய
ஹாமி தகுமதுமுகம்மதே தசய்யிதஸ் (சாதாத்)

2. ஸீனொடு நூனொடு நாலொடு ஹேயொடு
மீமொடு தேயோடும் சுனன் ஹிம்மத் தானதே
சுந்தரமேவிய ஐந்தரு வாகிய
சிங்கமே மணிமுடி தங்கிய செய்யிதஸ். (சாதாத்)

3. மீமொடு ஹேயொடு மாவொடு தாலொடு
கூடிய மானுடர் கோல முகம்மத்
மண்ணொடு நீரொடு நாற்றொடு தீயொடு
விண்ணொடு கூடிய அண்ணலே செய்யிதஸ் (சாதாத்)

4. ஹாவொடு ஹீயொடு கூவொடு கும்மொடு
தம்மொடு தம்மொடு கமல மிலங்கிய
ஹம்சொடு றப்சொடு ஷம்சு துலங்கிய
ஹாமீமு கம்மதே ஹம்சாக் கருள்புரியும். (சாதாத்)



6-வது-பதம்-இராகம்-ஷேமச-அடதாளசாப்பு.

## பல்லவி

ஹஸிவெள் ரேதிய வளப்புர்க குள்ளே
குன்கு தாத்தொளிவே யருந் தெளிவே
அருள் விழியே தெளிவாய்
குன்னென் றே குன்னென் றோர்
சத்தம் மன்னவ ளேசையுமே. (ஹ-ஸி)

## அநுபல்லவி

அறியும் நாசூத்து மலக்கூத்து ஜபறூத்து
அடுத்தலா கூத்திலும் உயர்ஹா ஹஸித்திலும்
பாகூத் ஜெப்கூத்திலும் தமகூத்திலும்
நெறியுடன் நெறியுடன் நெறிவுடன்
தின் றிலங்கிடு மெய்ப்பொருளே. (ஹ-ஸி)

## சரணங்கள்

1. எழுதமுன் னெழுத் தான பழம்பொருள்
எங்கும் நிறைந்தவனே மறைந்தவனே
உறைந்தளனே சிறந்திட்ட
பழுதில்லாப் பழுதில்லாப் பழுதில்லா
றப்பில் ஆலமீனனே (ஹ-ஸி)

2. கல்பெனுங் கடல்தன்னி லிலங்கிய
காரணமதியே அருள் நிதியே வரும் கெதியே துதியே
சுல்பிலே சுல்பிலே சுல்பில் நின்றொளிர்
சூட்சம தானேனே (ஹ-ஸி)

3. ஷம்ஷு தாத்தொளி வானதி லாடிடுங்
சாந்தசட்சுடரே அருட்சுடரே யென்மெய்ச்சுடரே
றம்ஸெனும் றம்ஸெனும் றம்ஸெனும் பொரு
ளொன்றாகி நின்றோனே (ஹ-ஸி)

4. வைய மீதினிற் பையலுனைத்தேடி
வாடினேன் விதியோஎன்றன் மதியோ இதுசதியோ வருளாய்
மெய்யனே மெய்யனே மெய்யனே ரெங்கும்
துய்யநா யகனே (ஹ-ஸி)

5. தாசனு மிந்தஹம்சா லெப்பைக்கொரு
தம்பம் நீ வரமே யருள் தாவே துய ரறவே யுதவிசெய்

வாசனே வாசனே வாசனே மக
ராசனே நேசனே. (ஹ௵)

---

7-வது-பதம்-இராகம்-ஆனந்தபைரவி-ஆதிதாளம்.

பல்லவி

யாமுர்ஷிதத் தாலிபீன்
எங்கு மிலங்கும்வல் வாஸிலீன்
யா ஹாஜஜத்தல்-ஆஷிக்கீன்-யாஷெய்கே
யா சபுவத்தல் ஆபிதீன் (யாமுர்)

அநுபல்லவி

யரீ புர்ஹானல் ஹகீக்கத் யாக் காஷிபல மஹாரிபா
அவ்வல் ஆகிர் லாகிர் பாத்தின்
அருமத் ஹாமித் அன்பர்க் கிரீட
யாதௌலத்தின் பேரரே யா ஷெய்கே
யா முஸ்தபா பேரரே (யாமுர்)

சரணங்கள்

1. சத்தம் குன்குன் கிண்கிண் ஜெண்ஜெண் மன்மன்
மகுபூல் ஆலமீன் யா அமீறல் ஆரிபீன் யா ஷெய்கே
நித்தம் கம்கம் கம்மம் குப்கும் பப்பம் தப்தும்
ஷர்சொளி றாதல் குதுசியின் திருவாசரே-யாஷெய்கே
யாக் குத்வத்தல் லுகபர யாமல்ஜ அல் குறபா
யா ஹன்னுன் மன்னுன் தையா னருள்
ஆசை வலம்புரி யோசையின் சிற்றே
யா கிபுலத்தில் ஆரிபிக் யாஷெய்கே (யாமுர்)

2. யா ஆலியல் ஹமமியா நமூசல் லுமமி
யாவாசி ஆல கறமி-யா ஷெய்தே
யா முக்ஜீலல் மதரியா முஹஸினல் பஷிரி
எங்கள் யா அப்துல் காதிரி யா குத்பே
யா பாரிஜல் குறபி யா ஹாதியல் மௌலானு
யாஹபீப் யா ஷரீப் யாசு
கிய்யு யர் ஸித்திக்கு யா மஃஷூக்
யா குத்வத்தல் முஹய்ய தீன் யா கௌதே (யாமுர்)

3. யா சுல்தானல் மாசிவீன் யா காமூஸல் வாகிலீஸ்
யா மக்ஸூதஸ் ஸாலிகீன்-யாஷெய்கே
யா ஸாலிஹல் அஹ்வால் யா ஸாதிக்கல் அக்வால்
யா ஸைபல் லாகில் மஸ்லூல யாகுத்பே



யா ஸாகிபல் குதறத்தி யெளியேன் ஹம்ஸாக் குமதருள் முத்தி
யா ஹாஷிம் யாஹிம் யாஜூ வென்றதற்கப்பால்
செப்பிய மெய்ப்பொருள் தாரும்
யா சுல்தான் முயித்தீன் - யா ஷெய்கே. (யாமுர்)

---

8-வது - பதம் - இராகம் - செஞ்சுருட்டி - அடதானசாப்பு.

பல்லவி.

பஞ்ச பூதங்க ளஞ்சதின் பங்கைப்
பாங்குடன் சொல்லக் கேட்பீரே (பஞ்ச)

அநுபல்லவி.

நெஞ்சில் வாழ்ந்திடும் நேசமாயதில்
மோசமே யறிவீர்களே (பஞ்ச)

சரணங்கள்.

1. வஞ்ச னிபுலிசின் வாது சூதுகள்
வாயிற் பேசிடு மாந்தரே
செஞ்ச நமனுயிர் பிடிக்குமுன் னுன்னுள்
அஞ்சி லொன்றை நீ ரறிகுவீர் (பஞ்ச)

2. நரம்புடன் தசை தொலி யெலும்பொடு
நாவிலும் ரோம மண்ணென்றறி
வருமேமுளேயோ டுமிழ் நீர் வேர்வையும்
சிறுநீர விந்தொடு ஜலமதாம் (பஞ்ச)

3. சோமப லஷ்துடன் செமித்த லுறக்கமும்
பசியுந் தர்க்கமும் நெறிப்பறி
துளுப்பலுடனே கொட்டாவி னடுக்கமும்
சொறியும் அசைவொடு காற்றதாம் (பஞ்ச)

4. ஆசை பகிலொடு கோபங் கிருபையும்
பயமும் ஆகாய மிவையெல்லாம்
தாசனுமிந்த ஹப்சா சொன்னசொற்
றரணி மாந்தர்கா ளறிவீரே. (பஞ்ச)

---

9-வது - பதம் - இராகம் - ரூபகதாளம்.

பல்லவி.

அஞ்சந்திந் துங்கவிமா வந்தென் சிரசினி லன்புற
வுந்தம் பதமே தந்தெனை யாள்வாய் - இன்னம்
வரேவரக் காணேனினி நானேமயலானேன் சகி
மானே யருள்றேனெ யெளியேனே நானென் செய்குவேன்

அநுபல்லவி

முந்தத்திரு அறுதானத்தில் வந்துற்றிடும்! அலிபானது
பீந்தத்தானொளி வாகியே தெளிவாய் — எங்கும்
மணியாய் மரகதமாய்மயில் வடிவால்கிந் தீலாயதின்
ஒளியாயுறும் தெளிவாய்ப்பின் வெளியாய்வரும் குருநக்கபி
மீமானோர் தறைசேர்ஹா• மீமானோர்
மணிமுடி ராஜர் மகராஜர் மணவாசர்
மறைசேர் விசுவாசர் மயில்வேஷர் - உடர்
ஹாஷீம்குல காசிம்நபி (அந்தஞ்)

சரணங்கள்.

1. ஒளிவான வுஜூதே விழியா மெங்கும் நிரப்பியதின்
தெளிவேயுல கெங்குப்பிர காசம் - வரும்
ஆகம்முறை நாதம்மறை வேதப்நிறை போதமுஐம்
பூதம்பல கீதங்கமழ் காதம்நபி பாதத்தா
வருவீரே நிதமருள் தருவீரே - அருள்
தங்கும்மிருள் மங்குபநறை பொங்கும் சாகி
பிங்குவர வெங்குங்குருவாய்ச் சங்கைசேர்
மங்கும் குடையிடும் நந்தபி (அந்தஞ்)

2. மண்விண்ணொடு தண்ணீரும்காற் றெற்றதீ - யாகரசம்
மங்கெங்கிடா வாழ்வைநதந்தி ஞலிர் - அதில்
உருவாகவே கருவாகவே மருவாகவே குருவாகவே
அருளாயுல கெங்குமொரு பொருளாகவே வருமாநபி
தூதானோர் அருள்மகு முதானோர் - எங்கள்
கத்தன்னருள் நித்தம்பரி நித்தம்பரி சுத்தம்நபி
வித்தம்முயர் சித்தந்தனில் முத்தந்தரும்
மெத்தப் பலனூர் நந்நபி (அந்தஞ்)

3. முத்தோடுறை பச்சைப்பவ ளமதாய்வரு
முச்சுடரின் மெய்சுடரா யெங்கும்பிர காசம் - அதைக்
கண்டே யமுதுண்டே மனம்விண் டோர்முனம்
சென்றேறியே யொன்றேயறி யானந்தத் தொண்டே
னெணோக்காத் தருள்புரி தேசநபி
மக்கப் பதியானோர் இறையருள் சொர்க்கப் பதியானோர் நிதம்
நாடும்பயல் வாடுந்துய ரோடுப்படி தேடும்தத
டாடும்பயல் ஹமஸாக்கருள். (அந்தஞ்)



10-வது பதம்-இராகம்-தேசிகதோடி-ரூபகதாளம்

பல்லவி

ஈமானொளி தாராய் ஈமானொளி தாராய்

அநுபல்லவி

ஜாமிஅல் இஸ்ம சகலதத் துவமாய்ச்
சார்ந்தமுச் சுடரே (ஈமான்)

சரணங்கள்

1. காமில்முகம்மலெனும் நபி
காட்சியை நேராய்க்
கருதுவாங் கமலத்திற்
கண்டிட நூறாய் (ஈமான்)

2. முந்தவுமக் கூரிருளதில்
முங்கிநின்றோனே
பிந்தவுமே நபியாய்வந்து
பிரிந்தே னீதானே (ஈமான்)

3. பூரணத்தி னடிமுடியாய்ப்
பொங்கிநின் றோனே
காரணத்தின் காரணனே
கண்ணே கண்மணியே (ஈமான்)

4. பார்க்குமிடம் படைப்புமுதற்
பர்ந்தெழூர் தோனே
காக்கும் லப்பே கருவில்யார்க்கும்
ஹக்கே மெய்ப்பொருதே (ஈமான்)

5. எவ்வுயிர்க்கும் விளக்கொளியாய்
எரிந்த மெச்சுடரே
அவ்வுயிரில் யானொருவ
ஞதரித தருள்வாய் (ஈமான்)

6. வேதமெல்லா மோரெழுத்தாய்
விளக்கிநின் றோனே இந்த
வேதியனா ஹப்ஸாக் குன்னருள்
வேந்தனே தாராய் (ஈமான்)

11-வது-பதம் இராகம்-நீலாம்புரி-திரிசிரகதிதாளம்.

### பல்லவி

குன்னென்றசொற் குணமறிந்து
ஹூவென்றதை யோது (குன்)

### அநுபல்லவி

மன்றைய நபுசகு பகத் அறபறப்பகு
அன் அஹ மஹஹவையும்
அறிந்துளத்திற் றேடு. (குன்)

### சரணங்கள்

1. கதிரொளி வீசியிலங்கும் காபகௌ ஸைனினடுவிற்
கதிராடிப் பாடிவரும் சற்குருவைத் தேடு (குன்)

2. ஆமிரத்தெட் டிதழ்விரியும் அமரர்புகழ் ஐன்கலீகா
காமிலாநற் கனியாங் கருவெழுத்தைத் தேடு (குன்)

3. முச்சுடரு மோரலிபாய் முங்கிநின்ற தாத்ததனில்
அச்சுடரி லொன்றுய்வரும் அறவிநபி யைத்தேடு (குன்)

4. ஆலமறு வாகுமிதால் அஜிஸாமின்ஸா ஞனவர்
வாலகுரு நம்பிரசூல் வருவார்நிதாதேடு (குன்)

5. கொண்டகோலம் இன்ஸானென்பார் குருவறிந்தேன்காமி
தொண்டன் ஹம்சா லெப்பை யென்போன்
மொடுத்தே னிதைப்பாரும்.

---

12-வது-பதம்-இராகம்-ஆனந்தபைரவி-சாப்புதாளம்.

### பல்லவி

தன்னை யறிவது பறுலடி பானே தன்
தலைவனை யறிவது சுன்னத்தா மடி தேனே. (தன்)

### அநுபல்லவி

பின்னை யறிவதில் நா முன்னே யறிவ தென்ஹ
தாசிகே அபுல் காசீம் நந்நபி
தங்கள் மறைப்படி எங்கு வோதினர். (தன்னை)



### சரணங்கள்.

1. மன்னறப நபுசகு என்னடிமானே - இதின்
மஹஹ வறியார்க் கென்னசொல்வே னடிதேனே
பின்னேவரும் பகத் அறப நப்பகு என்றும்
பேசினர் பெரியோன் முகம்மதே
பெருமை யுடனிதை யறிய வெவர்க்குமே. (தன்னை)

2. கண்ணி னிடையி லென்னடி மானே - அங்கே
காண்பதற் கொன்றுமில்லை காட்சிகாடி தேனே - கண்
தன்னை முன் னறிந்தலலவோ தனதுபொரு ளறிவது
கடிய ரிவைகளை யடியர் கொடியவர்
நொடியி லெமன்கையிற் பிடிரி மாவர்கள். (தன்னை)

3. முன்னே மூனைமூனை யடிமானே - நின்று
மூனைத்து மானேகஜென்மம் வெளியானேமடி தேனே
அன்ன எதற்குமுன் னனேககால மெங்கிருந்தோம்
அந்த ரகசிய மறிந்த ஷெய்கிடம்
அடுத்தே யவர்மொழி தொடுத்தே நடந்துகொள்(தன்னை)

4. அற்ப ஜலத்தி லென்னை யமைத்தோன் - எனக்
கன்று நிஸ்குக்குங் கொடுத் தாதா வுடன் வளர்த்தோன்
கெற்பக் குவளறையிற் கிடத்தி யமு தூட்டினவன்
அப்பஹ யுல காளும் றப்பவன்
அஹதுநிலை சமதான பெரியவன் (தன்னை)

5. இன்பந் தருமதி ஞநகர் வாழும் - எங்க
ளிறசூல் நன்னபி நாயகம் மெடுத்தோதினர் தாஹும்
அன்புகொண் டதன்படி யறைந்தோன் நீன்வர்க்கெல்லாம்
வம்பஹமிந்த ஹம்சாவென்போன்சொல்
நபுவீ ரசு ளென்பி ரான்தாகும் (தன்னை)

---

13-வது - பதம் - இராகம் - ஸாஸாங்கி - ஆதிதாளம்

### பல்லவி.

ஹூவதற் கப்பால் என்னடி - குருவறியாப்
பாவிகட் கென்ன கெதியடி (ஹூவே)

### அனுபல்லவி

மாமாய் மணியதாய் மௌனமுச்சுடரதாய்
மறைந்த சுன்சுல மகுபியா னிறைந்தவான் பொருளெனும் (ஹூ)

சரணங்கள்.

1. அலிபாயெழுந்த தென்னடி - அதற்கு முன்னே
ஆதியிருளு மென்னடி.
கலிமாவில் பளு வென்னடி பகரவுமென்ன
கலிமாவில் ஹயாத் தென்னடி - அழகொளிதருமொரு
வலியோ ளருள்தரும் வடிவுதாத் திஸ்மதே
வந்த மௌனமணி மந்திர மோசை
நந்தி றாகுல்கு தூசேதும் தானவுர்
தான் தான் தனிநினை வெனமன மினவனைச் சொனதௌ
தினியகண் மணியுன தருள்வரச்
சங்கை தங்குமக ராஜ ராஜர்நபி
திங்க ளானவடி. வெங்கள் கம்மதுவாம். (மாவாய்)

2. தீனில் மஹறு வென்னடி - தீனென்றதென்ன
தீனி னடப்பு மென்னடி
தௌஹீதின் மஹறு வென்னடி - தனித்த ஈமானிஸ்லாம்
தனக்கும் வகையு மென்னடி - திடமுடனருள்தரும்
தானோன் றிருத்தூதர் தயவார் மறைமொழியைத்
தீனே ரானவரெல் லோரு மேயறியத்
தீர்க்க மோடுரைத் தார்க்கும்பல னேற்தரத் (தான்)

3. ஈமான் தலைதா வென்னடி — இதின் கண்செவியென்ன
ஈமான் வாய்தானு மென்னடி
ஈமான் கைகால்தா தென்னடி - இதில் கல்புமென்ன
ஈமான் வயிறு மென்னடி - இறையருள் தருமொரு
கோமர் னந்நபிக்கிறை குறு ஆன் ஷரிபிற் சொன்னான்
குருவாம் நன்னபியுந் திருவா யால்மொழிந்தார்
கூறுனர்க ளிமாம் பாரில் கித்தாபுகளில் (தான்)

4 கலிமாக் கெத்தனை பறுவடிஃஷெறுத் தெத்தனை
கலிமாப் பிறந்த தெங்கடி
கலிமாச் சொன்ன தாரடி - அது நமக்குக்
கனத்த பறுலான தென்னடி - சுருவி லுருவாய்வரும்
அலிமா துலரிதனை யறைந்தா ரதன்படியே
ஆரி பீன்களொளி மார்களுமே சொன்னார்
பாரிஹல்ஸா சொன்னேன் படைத்தநம்மிறைசொன்னான்

———



14-வது-பதம்-இராகம்-சங்கராபரணம்-சாப்புதாளம்.

## பல்லவி

எழுந்தோடு முக்கோணச் சூட்சமெங்கே யிருந்து
ஏறி யிறங்குது சொல்வீர்.

## அனுபல்லவி

கொழுந்துவிட்டெரிகின்ற குகைக்குள் குன்னென்றோர் சத்தம்
பிறந்தவகை தானென்ன பீரே யெனக்குச் சொல்லும்
அன்ப ரிம்ப ரும்ப ரென்பரும்
நம்பி யடிதொழும் என்பிரா னிறை
வந்த வதிரய மித்த வுலகினில்
அந்த முடன்சொல் வென்தன்நாவு போதா (தெழு)

## சரணங்கள்

1 அல்ஹம் தென்றுரைத்த சொல்லைந் தாய்ப்பிரிந்து
ஐயைர் திருபத்தைந் தான தென்னகாண்
கல்பென் துரைப்ப தென்ன கமலபொற் பாதமென்ன
கலிமா நிலையு மென்னகாண்
கல்யில் நின்றொளிரும் மெய்ஞ்ஞானச்
சூட்சம் பொருளென்ன
சுல்தானன் னஸிருவென் றுரைத்த
தெதுகாண் சொல்லும்,

2 ஆலம் அறு வாஹென்ன ஆலமிதா லஜிஸாம்
ஆலம் இன்ஸானு மென்ன காண்
மூலப் பதியுமென்ன முடிவற்ற பொருளென்ன
முஃஜி சாத்தான தென்ன காண்.
மேலத்தெருவில் வாலக்குருவின்
வடிவதுமென்ன
மெய்யுள் வந்திலங்கும் ஐம்புலன்கள்
செய்குண மென்னகாண். (எழுந்)

3 ஐம்பத்தோ ரடசகம் அடங்கியொள் ளுனதென்ன
அழியாப் பொருளு மென்ன காண்.
இன்பந் தருங்கலிமா அஷஹறு அள்ளாஇ லாகாவில்
எத்தைக்கண்டு ஷாட்சிசொன் னீர்காண்.

அம்பா புகழுமெங்க ளருமது
நபிக் கடிமை
வம்பன் ஹம்சா ரொல்லிதற் கெல்லால்
ஜவாபு சொல்லும் (எழுந்)

15-வது-பதம்-இராகம்-இந்துஸ்தானி-காபி-சாப்புதாளம்.

பல்லவி

மௌன மொன ஞான தியானம் செய்மனமே
முஸ்தபா நபியின்மேல்-முர்த்தலா நபியின்மேல்
முஸ்தபா நபியின்மேல் மோன,

அனுபல்லவி

தேனொழுகும் தீன்கலிமாத் தீபமுச்சுட ராய்வந்தோர்.
மானேடுரை பேசும் யாறசூல்-மறைநபி நாயகமேல்
நறநபி நாயகமேல்-இறைநபி நாயகமேல். (மோன)

சரணங்கள்

1. அஃயான் தாபிதா வுடனே- அஃயான் காரிஜா வறிந்து
ஆதிநுதைத் தேடுநீ மனமே-அல்லாகு மகியு மறிந்து
அல்லாகு நாலி றுன்னறிந்து-அல்லாகு ஷாஹீ தியறிந்து

2 ஹைபுல்கையூமாகநின்றேன்-கஃஹாரர்ஜப்பாருய் நிறைந்தோ
மெய்யுள் வந்துறைந்தோன்றூதிறசூல்மக்கமகு மூதறின்மேல்
சொர்க்கமகு மூதரின்மேல் ஹக்கன்மகு மூகரின்மேல் (மோ)

3. குல்ல யவ்மின்ஹுவ பிஷவுன்குதாயின வேதத்தின்படியே
அல்லும் பகலும் ஹம்சா சொன்னேன், அரசர்நபிநாயகமேல்
முறுசல்நபி நாயகமேல், குறைஷநபி நாயகமேல். (மோன)

16-வது-பதம்-இராகம்-சுருட்டி-ஏகதாளம்.

பல்லவி

சுழிமுனை யறிந்தே சுகம்பெற நாடு
சுல்தான் தஸ்தகீர் கௌதால் லகுல்த்தை தேடு-ஏ (ஏ)



அநுபல்லவி

வழிபா டறிந்துகொண் டேபடியேறு
வாசியுடன் கலிமா நினைப்புடன் கூற
தெளிவான முச்சுடர் தன்னிலே சேரு
திங்கள் முகம்மது நபிவறு வார்கள் பாரு. (சுழி)

சரணங்கள்

1. ஆலமெல் லாம்படைத் தாள்கின்ற நகுமான்
அவனன்றி வேறொரு கெதியுண்டு மோகான்
மூலமாயெங்கும் முளைத்த சித்தவன்தான் (சுழி)
மூச்சினோ டுணங்கிநின் ருடிய பொருள்தான்

2. நானெக் கிருப்பது நாமறியோமே
நாயன்சொற் கட்டளை போனடப் போமே
முனையுருகுமப்போ தார்துணை யாமே
முறுசல்க் காசர்வந்தால் ஜெயம்பெற லாமே. (சுழி)

3. அடிமுடியில்லா அஹதெனும் பொருள்தான்
அறிந்தவர் திறந்திறந் திறந்திறந் திறந்தான்
படிமீதி லிதையெடுத் தோதும் ஹமஸாதான்
பகர்ந்தேன் அறிவாளர்க ளறிந்திடில் நலந்தான்

17-வது-பதம்-இராகம்-சுருட்டி ஏக தாளம்.

பல்லவி

அஞ்செழுத் தானதிற் பிஞ்செழுத் தென்னடி

அநுபல்லவி

நெஞ்சி லிருந்த பஞ்சபூத- அதிற்
கொஞ்சிங் குயில்மொழி யோர்நிதம்
வஞ்சமகற்றியெனக் கின்யொக் தருந்தரும்
வள்ளல் நந்நபியெனும் நாயகந் தான்சொன்ன (அஞ்)

சரணங்கள்

1. அல்ஹம் தெனுப்புதய லான தறிந்தவர்
ஆவென் றதின்வபாருளெயு மறிவார் கவி
மாவென் றதின்பொருளெயு மறிவார்
கூவா யிலங்கிடும் ரகாஜா முகம்மது
கோமானந் நபியெனும் நாயகந்தாம் சொன்ன. (அஞ்)

2. இஸ்முல் லகுலமை யறியாதாள் ஜாகிலாய்
இறையை யவனறி யாளென் றேதினர்-ஆதி
மறையையு மவனன்றி யாளென் றேதினர்
நறையே கமழும் பூங்காவனமக் கனினில்வாழ்
கந்திநந் நபியெனும் நாயகந்தாம் சொன்ன (அஞ்)

3. ஐம்பத்தோ ரட்சரம் நம்பிப் பிடித்திடார்க்
கின்ப மொருபொழுது மில்லையாம்-அவர்
துன்ப வினைகளுக்கோ ரெல்லையாம்
அன்போ டறைந்தே அடிமை ஹம்சாவே யார்க்கும்
ஆலநந்நபியெனும் நாயகத்தின் சொற்போல். (அஞ்)

---

18-வது-பதம்-இராகம்-சங்கராபாணம்-ரூபகதாளம்.

## பல்லவி

அஹதானவன் வேத மதன் படியன்னமே அஞ்சுமாறு மறிந்திட
மகுமுத ரெனுமன்னர் சொன்ன ரெடி முன்னயே. (அஹ)

## அநுபல்லவி

ஜெகமீதினி லுள்ள முஸ்லிம்கள்
ஜென்னப் பதிசேர் அண்ணல் முகம்மதே. (அஹ)

## சரணங்கள்

1. ஈமான்தனிலே சொன்னார்கேளும் ஆறுகாரியமே
யிறையோன் சொன்ன கட்டளை
ஆமந்துபில் லாகி யுடனதைப் பாருமே
மூமின் தனமுள்ள முசிலிம்கள்
முஸ்தபா நபிசொற்போல் நித்தியமும் நடப்பார்கள் (அ)

2. கலிமாத் தொழுகை நோன்புடன் ஸக்காத ஹஜ்ஜுமாய்க்
காட்டினார் குறு ஆனிலே
சலியாம லதன்படி நடக்கவே யச்சமாய்
வலியோன் றூதர் வள்ளர் முகம்மதே
வாசமுடன் மறைப் பாஷைகொண்டோதினார். (அஹ)



3. இறையோன் றனக்கிமான் கொண்டவர்கள்யாருமே
யிதைக்கேட்டு நன்றாகவே
முறையான கலிமாவை மூச்சுடனோதுமே
குறையா மதிபோல்வளர் நந்நபி
கூறினார் யாவர்க்கும் பாரிலஹம் சாசோன்னேன் (அஹ)

---

19-வது - பதம் - இராகம் - பியாக - ஹிந்துஸ்தானி - சௌதாதாளம்

## பல்லவி.

கலியுடன் மாவான தென்ன காமிலென் ஷெய்கே
ஹா ஹீ ஹூ கும்.

## அநுபல்லவி

கலிமாவே கதியே காட்டும் அருள் துதியே
காட்சி தரும்தம் கூத்து நிதியே (கலி)

## சரணங்கள்.

1. ஈன்ற மாதாபிதா எடுத்துரைத்த மந்திரமோ
இறையருள் தருங்குரு மந்திரமோ
இல்லல்லா வென்ற மந்திரமோ
கூலாஇ லாக வதுவோ ஹ ஹீ ஹூ கும் (கலி)

2. பன்னிரண் டெழுத்திற் பதிந்த மூன்றெழுத்தோ
பகருங் கலிமாவி லுயிரெழுத்தோ
உன்னும் யாகூவென்னுந் தீக்குறே
வுறுதி அல்ஹம்தமிவோ ஹா ஹீ ஹூ கும் (கலி)

3. ஆசையோ நினைவோ அழகு வெண் மணியோ
ஆடுங் கருவோ சூடோ வுயிரோ
ஓசை தரும்நல் லொளியோ
வுடையோன் அலிபு நிலையோ ஹா ஹீ ஹூ கும் (கலி)

4. உடலோ ஹயாத்தோ வுவப்போ வுதிரமோ
வுணர்வோ குளிர்மையோ என்குருவே
அடிமைஹம் சாக்குறைப்பீர்
அருள்ஞானக் கண்திறப்பீர் ஹா ஹீ ஹூ கும் (கலி)

20-வது - பதம் - இராகம் - லாவணி ஏக தாளம்.

பல்லவி.

வாவாவாடி கூவுக்கப்பாலே தேடி - அருள்
முப்பாலை நாடி யொன்றை குப்பாகப்பாடி (வா)

அனுபல்லவி.

பூவிலுறை வாசம்போற் பொருந்தியெங்கும் நின்றதையே
பாவியென்போ லானவர்கள் பார்ப்பாரோ பட்சமுடன்
ஆவியொடுங்குமுன்னே அஞ்சிலொன்றை நாடி - மனங்
கெஞ்சி நித்தம்வாடி - யிறை தஞ்சமெனப்பாடி. (வா)

சரணங்கள்.

1. முத்துவழி யறியாமல் முறுஷிதின் கோலங்களென்றே
புத்தியுடன் சொல்லுகிறாய் போதமுண்டோ பேதைநெஞ்சே
குத்து நுக்கத் திட்டகுரு வட்டமென்ன பேசடி - யதை
விட்டுமிங்கே வாடி யொன்றைத் திட்டமுடன் பாடி (வா)

2. பார்க்கப் பலவிதமாய்ப் பஞ்சவர்ண மஞ்சதுவாய்
மார்க்கந்தனில் விரிவாய் மறைந்ததுவா மென்மனமே
ஆர்க்குந் தெரிந்த அவ்வக்கலி மாவைத்தேடிக்
கருவெழுத்தை நாடி யுருவெழுத்தைப்பாடி (வா)

3. பாட்டைப் படித்ததனின் பலனறி யாயோ மனமே
காட்டினேன் ஹம்சாவுங் கண்டறிவா யென்மனமே
நாட்டினா ரொன்றதி னலமறியார்காபிர்
ஐப்புல னறியார் காபிர் வந்த வழியறியார் காபிர் (வா)

21-வது - பதம் - இராகம் - முஹாரி - ஆதிதாளம்.

பல்லவி.

ஹாவிவதற் கப்பாற் குருவே நீர் சொல்லும்
குணங்குடி யிதுதானே - வீணில்
மாவென்றும், மணியென்றும் நுக்கத்தென்றும். ஐனென்றும்
மருட்டா தென்னிடந் தானே (ஹாவி)



அநுபல்லவி

மாவென்றும் ஐனென்றும் மதிப்புடன் சொல்வார்
மனுடர்கள்சிலர் தானேசொல்ல
நாவிலுமடங்கான் நாதத்திலுறையான்
நம்பிக்கொள் ளிதைத்தானே. ஹாவி

சரணங்கள்

1. கூறும்வலம்புரிச் சங்கத்தினோசையாம்
நூறுமு கம்மதியா யதை
வேறுகண்டவர்கள் நாறினில்விழுந்து
வெந்திடுவார் நரகாம். ஹாவி

2. தௌசின்மேலிருந்த தலைவனையறியாத்
தடியர்கள் கெடுத்தானே முன்னர்
கபுசுடனறுஷேறும் ஹாமீமுகம்மதர்
காட்டினார் ரிதைத்தானே. ஹாவி

3. உணவதைவெறுத்து முயிர்நிலையறிந்து
முணர்ந்துகொள் திடந்தானே காசு
பணமெனவெண்ணி ஹக்கனைத்துதியாக்
கல்பது மருள்தானே.

ஈமான் இசுலாத்தைப் பற்றியது

22-வது இ-ம்-நாதநாமக்கிரியை-ஏகதாளம்

பல்லவி

அறிந்துகொள்ளுங்கள் முஸ்லிம்களே அறிந்

அநுபல்லவி

அறைகிறேனயீமா னிஸ்லாமைந்து
மறையினிறையவன் தானோதினன்
மன்னர்முகம்மது நபியுஞ்சொன்னார். அறிந்

சரணங்கள்

1. அறிவீர் ஆமந்து பில்லாகியாம்
அல்லாவொருவனென் றறிகிறது
நெறியாய்வமலாயிக் கத்தியென்றால்
நேசமலக்குக ளுண்டென்பதும்

குறியாய்வகுத்பிகி யென்பதே
குதாயின் வேதங்க ளுண்மையென் றும்
தெரிந்துகல்பினி லறிந்தவர்கள்
தீனேராவரென் றிறசூல்சொன்ஞர். அறிந்

2 இன்னங்கேளும் வறுஸ்லிகியாம்
ஏகன் றாதர்க ளுண்மையென் றும்
சொன்னேன்வலயமில் ஆகிரியாம்
சூழும்கியாமநாட் கடைசியென் றும்,
பின்னேவரு நன்மை தின்மையிரண்டும்
பெரியோமரமனென் றும் அறிவீரின்னம்
முன்னேன்ஸிபாத்துகள் நாற்பதுடன்
முடிகியறியுங்காள் மூஸ்லிம்களே. அறிந்

3. காக்கும் இஸ்லாத்தின் முதலாவது
கலிமாஷஹாதத்து அஷ்ஹதென்ருல்
தீர்க்கமுடனேயான் கண்டுசாட்சி
திடமாய்சசொல்லுவே னென்ருேநல்
சேர்க்கும் அன்தா இலாப்பொருளே
ஜெகத்தில் வணங்கவே தகுமானவன்
பார்க்கும் இல்லல்லா அல்லாவென் றும்
பகர்ந்தேனிவைகளை யறிவீர்களே. அறிந்

4. கேளும்பின்னமோர் அஷ்ஹதுவாம்
கண்டுசாட்சியான் சொன்னேனென் றும்
நாளும் அன்னமு கம்மதுற்றசூ
லுல்லாகியின்பொருளைப் பாரும்
வாழும் நம்மிறை தூதர்நபி
வரிசைமுகம்மதென் றறிந்துளத்தில்
நாளும் நாயகனைத் தொழுதோர்கட்கு
நபியின்ஷபா அத்தெத்றறிவீர்களே. அறிந்

5 வருமேவயிகபமுஸ்ஸலாத்தி
வணங்குந்தொழுகையைத் தொழுதிடவும்
தருமேவயித்தா இஸ்ஸக்காத்தி
தருமமெனும் ஸக்காத் தெடுத்தளித்தல்



சுருமாநபிசௌமி றமலானியாம்
சொன்ஞர் முப்பதுநாள் நோன்பென் றும்
கருவர்ம்ஹஜ்ஜென்ப தைந்தாவதாம்
காட்டினேன் ஹப்ஸா பாட்டிலேதான் அறிந்

## ஷறஹின் பேணுதலைப் பற்றியது

23-வது - பதம் - இராகம் - சங்கராபரணம் - ரூபகதாளம்

பல்லவி

ஷறஹதைப் பேணும் ஜனனைப்
பதிசேர லாகாணுறசூல்

அநுபல்லவி

மாணங்கள் வந்திடுமதிமோசமாகிடும்
மாநிலத்துள்ளோரே — அந்தத்
தருணங்களுமக்கொன் றும் செய்யவுங்கூடாது
தனியோனைத் தொழுதுகொள்வீர். றசூல்-ஷ

சரணங்கள்

1. எண்சாணுடம்பிலே திருக்கும்பொழுதே
இறையோனைத் தொழுதுகொள்வீர்—கெட்ட
கஞ்சாவுடன் கள்ளாக்குமஸ்தெவையும்
ஹறுமென்று தள்ளிடுவீர். றசூல்-ஷ

2. ஆவியொடுங்குமுன் அஞ்சிலொன்ருனதை
யறிந்துவணங்கிக் கொள்வீர்—மஞ்சட்
காவிவஸ்திரங்கட்டிக் காடெல்லாந்திரிந்தாலும்
ஹக்கனைத் தொழுதுகொள்வீர். றசூல்-ஷ

3 தொழுகையைவிட்டிடுந் துட்டர்தங்களுக்குச்செய்
துன்ப மதுதனைக்கேள்—பாவி
அழுகைநரகத்தில் மெழுகுபோலுருகுவார்
அனியாயமென்ன சொல்வேன், றசூல்-ஷ

4 கள்ளுச்சாராயங் கலந்துகுடிக்கும்
கசடர்கள் தங்களுக்கு— அவர்கள்
முள்ளெல்லாம்வெந்து முழுதுமேசாப்பலாய்
மோசத்தி லாவாரே. றசூல்-ஷ

5. பஞ்சபூதங்கள் அஞ்சின் குணங்களைப்
பாரி லறியார்க்கு—நாளைத்
துஞ்சவதைத்து நமனுயிர்வாங்குவான்
தோஷியரே கேளும் றசூல்-ஷ

6. பாவிகட்காயிரம் புத்திசொன்னாலும்
படைத்தோனை வணங்கார்கள்—எமன்
நோவினைசெய்யும் பொழுதல்லோ நினைப்பார்கள்
நீசர்கட்கென்ன சொல்வேன். றசூல்-ஷ

7. சொல்லச்சொல்லக்கனை வராதுகாண்
சுன்னத்ஜமா அத்துக்கல்லாது—மற்ற
வெல்லாமெழுபத்திரண்டு கூட்டமிப்படி
யாவார்கள் கால்சறுகி. றசூல்-ஷ

8. முத்திலுதித்திடு முஸ்தபா நந்நபி
முறையான மார்க்கந்தன்னைச்—சொன்னேன்
பத்தியொடுமுகம்மது ஹம்ஸாலெப்பை
புத்தியென்றறிந்து கொள்வீர். றசூல்-ஷ

— — — —

24-வது பதப்-இராகப்-ஸஹானு-ஆதிதாளம்,

பல்லவி

கந்தங்காதங்கமழ்வீசும் பரிபூரணகாசீமே
கா-ஹா-யா-ஐன் சாதெனும்நபியே
கருணைபுரிந்தருள் ஹாமீமே.

அநுபல்லவி

முந்ததூக்கத்திருளாம் அலிபாயவரும்
முத்தொடுபச்சை பவளமதாய்ப்
விந்தமயில்வடிவாக எக்கீன்மரம்
பொங்கிய முழுமணி மகுமூதாம். கந்தம்

சரணங்கள்

1. முச்சுடர்வட்டமே சங்கரமாகியே
மூலக்கொலுச்சிங் காசனத்தில்
அச்சுடர்வட்டத் திருந்தவனைத்தொழ
யாறறிவாரிந்தப் பாருலகில்



உச்சியின் கீழே யுலாவி வருமொரு
லூசி முனைத்திரு வாசலிலே
வச்ச பொருளை வகைதெரிந்தோதிட
வருவீர் குணங்குடி யருள் நாதா கந்தம்

2. வட்ட வடிவினில் வளைந்ததும் வெள்ளை
வடிவு துலங்கும் விரிவாக
மட்டிலடங்கா வொளிவு மக்காமன்
மகுமூ தாகிய கண்ணாடி
விட்ட நிறம் சுறு மாவது தீலம்
விளங்கிய வேதப் பொருளாதி
திட்ட மிகுந்த அரூப சுரூப
தியான மதைத்தின மறவாதே கந்தம்

3. குத்து நுக்கத்தொடு குருவருள் சுக்கூன்
குமரியின் வட்டக் குருவடியைச்
சித்தந்தினி லேற்றித் தனையே நித்தம்
சேவித் தாலுமுட் பொரு ளறியான்
கத்திக் கத்திக் கமல மீதிடைநடுக்
கண்டேன் முறுஷிதன் கோலமென்றே
முத்திப் பொருளறி யார்கன விலுமவர்
முன் லிங்களை ஹம்சா சொன்னேன் கந்தம்

— — —

25-வது பதம்-இராகம்-கமாஸ்-ரூபகதாளம்.

பல்லவி

அஞ்சினி லொன்றை யருள்வாய்
அஹதான வா அஹதானவா சமதானவா வுன் அ

அநுபல்லவி

அஞ்சினி லொன்றருள் நெஞ்சில்தியா னஞ்செய
அருமைத்தவ மொருமைப்பொருள்
குருமெய்த்திடும் பிரகாசநல்

சரணங்கள்

1. அவ்வவில் அஹதாய் நின்றோனே அகுமது முகம்மதாய்
இவ்வுல கெல்லாம் நிறைந்தோனே

கௌவு நற்கலிமா வானேனே கருவாக வுயிரங்கும்
துவ்வு மைம்பொறிக ளானேனே

பௌவஞ்சூழல கெல்லாம் படைத்தவா
பார்வை கேள்விபேச் சேழுசி பத்துடன்
செவ்வை அல்ஹம்து வில்லாகி யென்றவா
செறியுத் திருமறைநான் கினிரையும்பொருளிறையுன்னருள்

2. தந்தையுந் தாயு மானேனே தன்னந் தனிப்பொருளதாய்
முந்தவு மிருளாய் நின்றேனே
சிந்தையுட் சிறந்த வாசனே சுரரோர் நரரோருப்புகழ்
உந்தியி லுதித்த ராஜனே

வந்த அம்மாரு லௌவாமா முல்கிமா
வளருமுத் மாவும் ருலியா மறுவியா
விந்தை காமிலா தன்னில் நிரப்பமாய்
வருவா யருள் புரிவாய் நிதம் குருவாரிற சூல்சொலிகலி அ

3. ஜென்னத்திற் சிறப்புமீந் தோனே ஷஹாதத்துக் கலிமாவில்
அன்னுக்குள் அறிவாம் நின்றேனே
என்னுக்கு ளிளங்கும் நேசனே எங்கு நிறைந்த வஸ்துவாய்க்
குன்னுக்கு ஐனு மானேனே

தன்னுக்குட்டன தாகவுரைந்திடுந்
தற்பர மெய்ப்பர நற்பற னைவா
கண்ணுக் குள்மணியாகிய முன்னவா
ககனேர்புக முகமேமகிழ் தகுமாநபி மகுமூதர்சொல் அ

4. ஆவியின் கருவாய் நிறைந்தோனே அண்டபிண்ட முழுதெங்
கூவிலும் நிரப்பம தானேனே [கெங்குமே
பாவியென் பிழையைப் பொறுப்போனே படிமீனிலுனைப்புகழ்
நாவிலு மடங்கா நாதனே

கூவி யைம்புலனும் பொறியு மொன்றாய்க்
குருவறிந்திலாப் பாவியா னைதாய்
நோவினை யடராமல் ஹம்ஸாவிக் குன்றன்
நேசங்கலி வாசம்மருள் ஈசனித்தத் தாசன்கன அ

———



26-வது-பதம்-இராகம்-செஞ்சுருட்டி-ஏகதாளம்.

பல்லவி

அறிவீர் முகம்மது நபிக்குப் பதினைந்
தடையாளம் பாரில் அறிவீர்

அநுபல்லவி

நெறியார் முகம்மதர்க் கடியுந் தோயாது
நிழலில் சாய்கை யில்லை அறிவீர்

சரணங்கள்

1. ''திவாம் நபிமுடி அறஷின்மேற்
பாதந் தகைந்த ருவின்கீழ்
கெதியாக முன்கண்ட பார்வையதுபோற்
பின்னுமே காணும் அறிவீர்

2. மகுமூதர் நபியை மண்பூச செவையும்
மணர்ந்திடா நாதராம்
தருமானநல் மேகங் குடைகவிழ்த்திடுந்
தாஹாநன் னபிக்கே. அறிவீர்

3. பெரியோர் நபிதிருப் பாதம் ரண்டையும்
புவியிற் கண்டோ ரில்லை
சரியாக மேற்சிர மேனுரண்டடையுங்
கண்டுவிண் டோரில்லை அறிவீர்

4. புவிமீதினில் மலஜலங்கள் மனுடர்
கண்டது மில்லைத்
துயிலாண்ட தன்னை யொருபொழுதிலுங்
கலைந்தது மில்லை அறிவீர்

5. ஜெகமீதினில் நகரோமம் நபிக்கி
வளர்ந்தது மில்லை
அகமானதிற்போத மொருநாளும் நபி
மறைந்தது மில்லை அறிவீர்

6. காதவழிகஸ்தூரி யெண்டிசை
கமழும் ராஜராமிந்த
வேதியன் ஹப்ஸாக் கவர்திருப்
பாதநன் மலராம் அறிவீர்

———

27-வது-பதம்-இராகம்-தன்னியாசி-ஆதிதாளம்

பல்லவி

தூக்கந் தெளிந்திடுவாய்—உன்னித்திரை
நோக்ரமறிந்திடுவாய்

அநுபல்லவி

ஆர்க்குங் கருவமைத்துக் காக்கும் ஹக்கை துதித்துப்
பார்க்கவே மனநினைத்து அனுதினமும் தூக்

சரணங்கள்

1. காணும் ஷரி அத்துடன் கனத்த தரீக்கதையும்
பூணும் ஹகீக்கத் மஹரிபா இதையறிந்து தூக்

2. பாரும் பறுல் வாஜிபு பகரும் கன்னத் முஸ்தஹப்
ஆருமறிந்து நடந்தே அனுதினமும் உன்கண்ணில்

3. அல்லும் பகலுமற்ற எல்லை யறிந்துசற்றே
தில்லைந்திறந்து நித்தமும் உன்னுக்குள் நீயே யுண் கண்ணில்

4. கத்தன் முஷாகிதாவும் கனத்த முருக்கபாவும்
நித்தங்கலி மாப்பொருளும் அறிந்துமுன்னுள் தூக்

5. ஊனைக் குறைத்து முன்றன் னுட்ளை வெளிய வைத்து
ஆணிக்கலி மாப்பிடித்தே யனுதினமு முன்கண்ணில்வருந்

6. நுதி யருள் கிடைக்தும் ஓதியுணர்ந்தவர்க்கு
வேதியன் ஹம்சா சொன்னசொல் இதையறிந்து தூக்

———

28-வது-பதம்-இராகம்-பியாக்கு-ஆதிதாளம்.

பல்லவி

பாருமென்றன் கோலந் தஞ்சம்
கன்சுல் மகுபியா பார் பார்

அநுபல்லவி

சேரும்சுஜூதிலே ஷெய்கே உஜூதிலே
நூறுமு கம்மதிய்யா பார் பார் பாரும்

சரணங்கள்

1. ஆடும்சு வாசமே யோடும்பிரகாசமே
வேடிக்கை யாசனத்தில் பார் பார் பாரும்

2. ஐவேட ராடுஞர் ஆனந்தம்பாடுகிருர்
மெய்வேட ரானவரைப் பார் பார் பாரும்

3. ஆருதாத்தில் பாராய் சரத்துளே
வேராதி மூலத்திலே பார் பார் பாரும்

4. எங்கு மிருப்பவன் என்னுக்குளானவன்
இங்கும் ஹப்ஸா சொன்னவன் பார் பார் பாரும்

———



29-வது பதம் - இராகம் முஹாரி - ஆதிதாளம்.

பல்லவி

ஐம்பத்தொ ரட்சரத்தினுள்ளே
அடங்கும் வட்டச்சுட்சமோ ரலிபுநூனுக்குள்ளே ஐம்

அநுபல்லவி

நம்பிறேனக்கின்பஞான போதம் - தரும்
நவின்றமுச்சு ரில்வந்த தீபமைந்துபூதம் ஐம்

சரணங்கள்.

1. லாஇலாக இல்லல்லா வென்றேது - நம்பி
லாமவுஜூத இல்லல்லாவை நாட்டமுடன்றேடு
ஒய்வில்லாமல்உந்தியின் றீழ்நாடு - நின்றே
யுதித்தெழுந்தசுழி முனை யுவந்துநித்தநிகூடு ஐம்

2. ஏழுவாசலேழுவீடுறைந்து - சென்றே
இருக்குமப்புறத்திலே யிலங்குமேதெளிந்து
வாழு வசால்மூலமே யிருந்துவந்த
வடிவுசங்கினேசை கமலருபசாதா - வந்து ஐம்

3. குன்னெழுந்தஹூப்புதாத்து மானேன் - எங்கும்
குதித்தெழும்பும்டின்பயக் கூனென்றமொழியானேன்
தன்னுளியிற்றுன்றரித்த தானேன் - எங்கும்
தானேதானேதானேறப்பில் ஆலமீனுமானேன் ஐம்

4. அலிபவேநுக்கத்து மூன்றுமாகி - யந்த
அட்சரஞ்சுழித்து லாமலிபுமூலமேவி
மெலிவில்லாதா லுமீமு மாகி - யார்க்கு
மெய்யுள்வந்துறைந்த தம்மென்றட்சரமுமாகி ஐம்

5. மூலமாயெப்படைப்பு மானேன் - வந்த
முத்துபச்சைரத்னமோடு முப்பொருள் தானேன்
கோலமெவ்வுயிர்க்கு றப்புமானே - னிந்தப்
பாலன் ஹம்ஸாலெப்பை பிழையும்பொறுப்போன். ஐம்

30-வது பதம் - இராகம் - சங்கராபரணம்.

பல்லவி

தன்னையறிவதில் முன்னேயறியதைத்
தயவாயென்முன் சொல்வாய் - உன் தன்

அநுபல்லவி

அன்னை வயிற்றினி லாதரித்தேயென்னை
யாறுதலைசொல்லித் தோற்றினேன் - அவன்
றன்னைமறக்கவும் என்னைமதியோட
தானேதானேதானேயெங்குந் தானுகிநின்றவன் தன்

சரணங்கள்.

1. ஆதியனுதியும் வேதமகிமையும்
ஆறிவரிந்தப் பாரிலே - வரும்
சோதியாரெங்கும் சுருபமதாகியே
சூட்சசூட்சமெங்கும் சூட்சப்பொருளாகின்ற தன்

2. அவிபொடுலாமும் அஹதுஹேநீசையும்
ஆனதோர்தாலில் அழகாக்கினேன் - எங்கும்
கலியுடன்மாவுங் கலதுயிர்சீவனுய்க்
கருவாய்க்குருவாயெங்குமுருவாயொன்ருய்நின்றவன் தன்

3. ஓசையுடனேர் நுக்கத் தெழுநான்கட்சரமாய்
உருச்செய்தென்னைவெளி யாக்கினேன் - இந்தத்
தாசன்ஹம்ஸாக்குனதருள் தாராய்முகம்பாராயோ
தஞ்சம்தஞ்சமுன்றன் தஞ்சமெனைரட்சித்தருள். தன்

31-வது பதம் - இராகம் - கமாஸ் - ரூபகதாளம்.

பல்லவி

மார்க்கப்படியைந்தொகுத்துந்தொழுவாய் எங்கள்
மன்னர்யாறதுல் சொன்ன மார்க்



அநுபல்லவி

ஆரக்குமறைப்தார்நபி பார்க்கக்குறுஆன்ஷரீபில்
தீர்க்கமுடனறிந்து தினமுனமிறைவனே மார்க்

சரணங்கள்

1. அஞ்சொகுத்தும்ஸணங்கார் நெஞ்சினிலிநளாம்
அகபுடன்ஷ றஹதை யெடுத்தவர்க்கருளாம்
பிஞ்செழுத்ததே அல்ஹம் தானதின்பொருளாம்
பெரியவன் திருமுகம்மதேயார்க் தருவாம் மார்க்

2. நோவினைபடுபொழு தாரையுங்காணுமோ
நொடிக்குள்ளெமனுயிரைப் பிடிக்கவுந்தோணுமோ
தீவினைபலதுய்வந் தேயும்மைச்சூழுமே
திசையெல்லாமொருகுடை யாண்டாளுப்காண்நம்மன் மார்க்

3. ஆசைகொண்டவர் நம்மை யலைந்திடச்செய்கிருர்
காசுபணமென்றே கலலைவிளைத்திடுவார்
நீசவெமன்வப் துயிர்மோசப்படுத்துவார்
தாசன்ஹம்ஸாவேசொன்னேன் தனியோனைவணங்குவீர். மார்க்

---

32-வது இராகம்-கமாஸ்-ஆதிதாளம்

வந்தவழி யறிவாய்யெல்லாம்
பொய் பொய் பொய் பொய்நீ வந்த

அநுபல்லவி

ஐந்தருத்தாங்கிய மாமதினுநகர்
அப்துல்லாபுத்திரர் ரகுமதர்சொல்
சிந்தையிலோதுந் தியானமொன்ருய்நீ
செய் செய் செய் செய்நீ வந்த

சரணங்கள்

1. குன்னெழிந்தநள் கூவுங்குயின்மொழி
கூறும்வலபுரி யட்சரமே

கூவுக்கப்பாலே தெளிந்தவர்க்கேயருள்
மெய்மெய் மெய்மெய்நீ வந்த

2. கற்பநிலையறிந் தெண்ணினவர்க்கென்ன
கஞ்சாவுங்கள்ளு மரக்குங்காண்
சொற்பிரட்டால்வெகு ஜாலங்கள்செய்வோரைத்
தள் தள் தள் தள் நீ வந்த

3. புந்திடனொரு நந்திதீனை நீ
நினைந்தனுதினமவ னடிதொழவே
அந்தரமேற் பிறங்கிவந்தோர்சொன்ன
சொல் சொல் சொல் சொல் நீ வந்த

4. அண்டமுப்பிண்டமு மடிமுடிநடுவிலும்
ஆனதோரகுமதென் றட்சரமே
தொண்டனும்ஹம்ஸாவென் போனிதைவிண்டனன்
பார் பார் பார் பார் நீ வந்த

---

33-வது பதம்-இராகம்-கமாஸ்-அட தாள-சாப்பு

பல்லவி

தந்தம்ஜடலமதிற் றரித்தபதங்களைத்
தரணிமாந்தர்கா ளறிவீரே தந்தம்

அநுபல்லவி

அந்தமுடனேதாய் பங்கைக்கேள்நம்முனி
அழகுதசைரோமம் உதிரந்தோல் தந்தம்

சரணங்கள்

1. தந்தைபங்கதுநரம் பென்புசௌவு
தரித்தமூளையுமென் றேநியறி தந்தம்

2. மலக்கின்பங்கைக்கேள் நெருப்புமண்தண்ணீர்
மகிமைகாற்றுத்தீயா காசம் தந்தம்

3. அறிவுடநினைவு வுணர்வுபுத்தியும்
அறைந்தேன் றூஹானிபங் கென்றே தந்தம்



4. பார்வைகேகல்வியுப்பேச்சு மூச்சுடன்
பகரும்நா றூதின்பங் கதாவே தந்தம்

5. காணுறா குடன்றா ஹானிரண்டும்
கத்தன்பங் காரும்ஹம் ஸாசொன்னேன் தந்தம்

---

34-வது பதம்-இராகம்-செஞ்சுருட்டி-அட தாளசாப்பு

பல்லவி

பாருந் தொகையின் ஸிற்றைப்
பாங்குட னுரைக்கிறேன்.

அநுபல்லவி

ஆருங்கண் டதன்படியே
அமல்கள்செய் யவுங் கடனே
சேரும் சுஜூ தானதிலே
செப்பினேன் மாளிடரே பாருந்

சரணங்கள்

1 சுயஹதி விறமும் வெள்ளிச்
சூட்சம் ஷரீஅத் முகம்மத்
அபுவக மபூபக்கா லுகறு
ஆன செகப்புத் தரீக்கத பாருந்

2. அறிவாம் அஸர் நிறமும் பச்சை
அருள் ஹக்கீக்கத் துமறுகத்தாப்
செறிவா மகரிபு கறுப்பாம்
செய்யிதினு வுதுமா னென்றறி பாருந்

3. நிகரில்லா இஷா வினனிறம்
நீலம் சூபியத் தலியார்
சகயிர்களு மேறியச்
சாற்றிடனன் ஹம்ஸா வானேனே பாருந்

35-வது-பதம்-இராகம்-முஹாரி-ரூபகதாளம்

பல்லவி

சொன்ன னிறையவன் சுஜூதுசெய்
தெனவணங்கார் காபிரென்று

அநுபல்லவி

முன்னவன் றன்னரு ளானமுகம்மது
முறுசல்களுக் கருள் சிரசாகிய குறைஷிறசூல் வேதத்திற்

சரணங்கள்

1. ஹாமீ முகம்மதர் கந்த மலர்ப்பதம்
கண்டோரமுதுண்டோரென நன்குகவே முன்ருன் மறை சொ

2. முத்துமு கம்மத்தின் சித்ததனையறிய
முப்பதுஜூசு மெப்பொழுதுந் தப்பாமலேஹாப்பாயோத

3. பூமியிற் கற்புடெ யாமினர் தாய்பெற்ற
புண்ணியரென் கண்மணியாம் வெண்மகுமூதின் மறையிற் சொ

4. தாசன் ஹாம்சா விண்டேன் நேசமுடனே யார்க்கும்
தரைமீதில்ற்குறைவொன்றிலா னிறைநந்நபிமறையின்படி

36-வது-பதம்-இராகம்-தேசிகதோடி-ஹிந்துஸ்தானி-சௌதாளம்

பல்லவி

தொழுகை யின்பே ரகுமதுவாம
தோழர்களேகேளீர் தொழு

அநுபல்லவி

எழுத்தோ ரலிபுடன் ஹேமீம் தால்
இலங்கும் அருமதான கோலம் தொழு

சரணங்கள்

1. நிலையில் நின்றகலி பெண்றறி
நீண்ட தரத்தின் வணக்கமதே



யுயாறுக்கூகு ஹேயென்றறி
புரைத்தேன் மிகம் வணங்க மென்றேன் தொழு

2. உகந்த சுஜூதுமீ மென்றறி
யூரவணத்தின் வணக்கமதே
தருந்ததா லத்தஹிய் யாத்தாம்
தானேன் மலேயின் வணக்கமென்றேன் தொழு

3. ஆதம் நபிதாம் தொழுதார்
அவ்வல் சுபு ஹானதிலே
வேதமி புருஹீம் நன்னபி
வெற்றி லுகத்திற் றொழுதார் தொழு

4. கத்தன் யூனுசு நன்னபி
கருணை யசலலே தொழுதார்
நித்தம்ஈ சாநபி தொழுதார்
நிகரில்லா ஊமக ரிபிலே தொழு

5. எங்கள் மூசாநபி தொழுதார்
இறைவனை இஷாவ குத்தில்
சங்கைதீனவர்க்கெல்லாம்
சாற்றினே னேயறிவீர் தொழு

6. ஆதிநா யனைத் தொழவே
யைந்தொகுத்தும் பறுலானதால்-இந்த
வேதியன ஹம்ஸா சொன்னதை
விருப்ப முடனே கேட்பீர் தொழு

———

37-வது-பதம்-இராகம்-நீலாம்புரி-அடதாளசாப்பு

பல்லவி

அன்னமே யெம்மு கம்மதத்தேடி
ஆசையானேனே யடி அ

அநுபல்லவி

முன்னவனெளி தன்னிலே வரு மூஸ்தபாநபி-அவர்
இன்னமும் வாராதென்ன தாமிதம் ஏழைமீதிலே யடி அ

சரணங்கள்

1. நாதமாமணி வேதராம்நபி யெனக்
காதரவுதந் தாளும் தூதராம் போதராம நபி யடி. அ

2. அம்பி யாக்களில் முன்புதித்திடும் அருமதானவா-வந்தே
யன்பு செய்திடத் தம்பமென்னுநா னம்பினேன்கெதி யடி அ

3. மக்கமாநகரொாக்கவே புகழும் சொர்க்க ராஜரைக் காண
இக்கவியைப் படிக்கும் ஹம்ஸா லெப்பைக் கென்செய்வாயே. அ

38-வது பதம்-இராகம்-சங்கராபரணம் சாப்புதாளம்

பல்லவி

அன்னமே அஷ்-ஹதுவடி வதின் பொருளை
யறிந்தே யீமான்கோள் அ

அநுபல்லவி

முன்னே யருளி லிருந்து முச்சுடா தனிற்றெளிந்து
பின்னே ரிருவா யெழுந்தோர் பேசினர் ஷஹாதத்தினில் அ

சரணங்கள்

1. கலிமாத் தொழுதை நோன்புடன் ஸக்காத்து ஹஜ்ஜும்
கண்ட தின்டதின்படி நடக்கவும்
ஒலிமா ருலமாக்கள் சொன்னதும் அறிந்துகல்பில்
உறுதிகொண் டீமான் கொள்ளவும்
புலிமானுடும் பொட்டைகள் பேசுந்துரை ராஜரெங்கள்
அலிமா துலர்மொழிந்தார் ஆருமறிந்தேநடக்க

2. அங்கமே கலிமாவானதும் அதற்கு
ஐம்புனல் களும்பொறிகளானதும்
எங்களுக் குள்வந் துறைந்ததும் எழுநாள் கொன்றில்
எங்குமே நிரப்ப மானதும்
திங்கள்வடி வானநபி தீன்பயிர் விளைத்தநபி
சங்கைமகு முதுநபி சாற்றினா ரறிந்து கொள்வாய் அ

---



3. முழுக்குவிதிக்குமுன் முழுக்கையறுத்திடவும்
மூச்சுடன்கலிமா வோதவும்
புழுக்கைக்குணமக்க றிடவும் - கல்பைக்கழுகி
யழுக்கைத்துடைத்துக் கொள்ளவும்
பழுக்கக்கலிமாவூதிப்பாயுங் கலையைக்குறைத்துச்
சுழிமுனையறியநபிசொன்னார்ஹுப் ஸாவுஞ்சொன்னேன்

---

39-வது பதம் இராகம் சங்கராபரணம் சாப்புதாளம்.

பல்லவி

சொல்லுநீ கலிமா — பறுலறிந்து
அல்லும் பகலுமாய்ச் சொல்

அநுபல்லவி

அல்லாவொருவனென அஞ்சிப்பயந்தேநெஞ்சில்
சல்லல்லாவானநபி சாதாத்திறசூல்பேரிற் சொல்

சரணங்கள்.

1. ஷம்சின்பிரகாசராய்ச் சர்வராய்ஆலம்ற
சூல்மு கம்மதராய்
வம்ஷம் குறைஷியராய் - வருமுன்னபி
வாகன மயில்வேஷராய்
ஹம்சுறம்கடன்மத்துசத்து சுக்கூனுக்கத்தாய்
குமுசுகூடினமுஸ்த பாமுர்த்தலாநபிமேற் சொல்

2. கலிமாவின் பொருளாம் - காமிலைத்தேடிக்
கண்டுகொள் திறமாம்
அலியின் மாதுலராம் - அறைந்தார்முன்னே
ஆர்க்குந்தெரிந்திடலாம்
ஒலிமார்குதுபுகளுக் குயர்ந்தோர்தஸ்தகீர்களதுல்
லகுலம்பேரரால நபிமகராஜரின்மேற் சொல்

3. எல்லைகண் டிடுவீர் - யாறசூல்சொன்ன
சொல்லை நம்பிடுவீர்

நல்லோரை நாடுவீர் - நபிகள்சிரோ
மணியைநீர் தேடுவீர்
எல்லோர்க்குபகாரரா மிலங்குறகுமுதரைப்
புல்லன் ஹம்சம் நித்யம் புகழுமுகங்மதர்மேற் சொல்

40-வது பதம் - இராகம் - தோடி - ஆதிதாளம்.

பல்லவி

நந்தியானந்தத்தை நாடு — றசூல்
நளினப்பொற்பாதந் தேடுமனதே நந்தி

அநுபல்லவி

சிந்தையிலெண்ணிப்பார் ஜென்மமிக்கூடு
செத்தவுடனுன்னைப் புதைப்பதுபேய்க்காடு நந்தி

சரணங்கள்.

1. கெட்டியுடன்லாஇலாக தனைப்பாரு
கேளும்இல்லல்லா வென்றசொல்லினிற்றேறு
கட்டிகட்காயிரஞ் சொன்னாலும்வேறு
மார்க்கப்படிவாரா மை நதொகுத்தினிற்சேரு நந்தி

2. இனமானதாய்தந்தை பிள்ளையுடன்சொத்தும்
இருந்தாலுமென்னெடா வுனக்கதிலெத்தும்
ஜெனங்களெல்லாங்காசு பணத்துக்காய்ச்சுற்றும்
செத்தவுடனேநாய் நரிக்கிரைமுற்றும் நந்தி

3. முத்திதரும்பேசாத மந்திரந்தேடு
மூச்சுடன்கலிமா நினைவுகொண்டுருப்போடு
வெற்றியுடையுமுன்ற னிருதயக்கூடு - பார் - பார்
வீணராமிதையறி யார்க்கெல்லாங்கேடு நந்தி

4. ஐம்புலன்களைநீ யடக்கியரசாளு
ஆதிதனைத்தொழு தேதுஆக்கேளு



இன்பமுடனேஹம்சா சொன்னதைப்பாரு - நித்தியம்
எடுத்ததன்படிநடந் தோர்க்கருள்சேரும் நந்தி

41-வது பதம் - இராகம் - செஞ்சுருட்டி - ரூபகதாளம்

பல்லவி

பாவிநபுசேபாவிநபுசேபாவிநபுசே
பாதகம்செய்வாயோதீ பாவி

அநுபல்லவி

பாவிகளினேகம் யாதவிப்பார்மகுஷநிலே
நோவினைதனக்கஞ்சி நிதமுமென்னபுசே பாவி

சரணங்கள்.

1. நூறுமுகம்மதென்ற கேசலமேநீயானதால்
வேறுபடுத்திநாறினிற் போடுவான்நபுசே பாவி

2. அல்லவைபிற்றி னிலுன்னை யவமத்திரணங்கொடுத்தோன்
சொன்னபடிமாறுமற் சஹுதுசெய்நபுசே பாவி

3. வாசங்கமழும்வள்ள லிறசூல்மார்க்கப்படியே
நேசமுடன்ஹம்சா சொன்னேனிதமுந்தொழுதுகொள் பாவி

42-வது பதம் - இராகம் - முகாரி - ஆதிதாளம்

பல்லவி

குருவாமடி யனமே - குதாயின் றசூ
லானோ ரடிதினமே.

அநுபல்லவி

குருவாமுகம்மதார்க்குங் குல்லுமவரொளிவாமது
மருவாகவந்தோர் தாமடிநம்மிறசூல் குருவா

சரணங்கள்.

1. நூறுமுகம்மதென்ற நாமமுகம்மதடி
நாறினில்நம்மைக் காப்போரடி - நம்மிறசூல் குருவா

2. வாலசொருபமதாய் வந்தோர்முகம்மதடி
மூலச்சுடகுமடி நம்மிறசூல் குருவா

3 ஜாதிகுறைஷிகுலச் சங்கைமுகம்மதடி
வேதியரபுபக்க ருமறடிநம்மிறசூல் குருவா

4. ஹாஷிம்கிளையுதித்த யாசீன்முகம்மதடி
நேசந்தருவார்ஹும் சாவுக்கடிநம்மிறசூல் குருவா

---

43-வது பதம் - இராகம் முகாரி - ஆதிதாளம்

பல்லவி

காரணக்கடலானோர் கௌதுல்குலமாமடி
காஜா முகியித்தீனெனது சற்குருவிமாமடி காா

அநுபல்லவி

கண்டகண்டவர்கட்கமு துண்டிடச்செய்நாதரெங்கள்
மண்டலங்காபக்கௌசனி நின்றுவிளையாடுஞ்சொந்த காா

சரணங்கள்.

1. தாத்துக்கள்திரண்டமுத்தாய் வந்தோராமடி - யருள்
தோத்திரம்பல்லுங்காட்டுந் தஸ்தகீரடி
தம்பமெனநம்பினவர்க் கன்புசெய்யுமின்பரெங்கள்
முன்புதித்தமுஸ்தபாதம் முத்திரைப்பேராய்வந்த காா

2 தாயைக்கொல்லவந்தஜின்னை கெற்பமீதிருந்தவர்கள்
பாயவேயதிரண்டு துண்டாகினதடி - பின்னும்
தாங்கள்முன்னிருந்தகெற்பந் தன்னிலேதான்போய்நுழைந்து
எங்கும்புகழ்கீர்த்திபெற்ற சங்கைமுகியித்தீனடி. காா

3. பிடிபிலுண்டபிள்ளைசன்னியாசிகுடலி லிருந்தே - வெளியிற்
பிறிவரவழைத்த பெருங்காரணராமடி
கடலிற்கவிந்தவங்கந் தனையுமழைத்தோரடி
அடிமைஹம்சாவுக்கே வந்தபிடுமையகற்றுவாரடி காா

---



44-வது பதம்-இராகம்-தோடி-ரூபகதாளம்.

பல்லவி

வான் தங்குமிகு ரூஜிலே கை ராஜர் நந்நபி-இறைவனோடுளற
மகிழ்ந்து பேசினர் புகழ்ந்தவ் விரவிலேரகசியம்
மகிழ்ந்து பேசினர் புகழ்ந்தவ் விரவிலே-துரைராஜா நந்நபி
மகிழ்ந்து பேசினர் புகழ்ந்தவ் விரவிலே

அநுபல்லவி

தேன்பொங்குந்திரு மதின் மாநகர்
தேசமேலுயர் தீன்பயிர் விளைத்த
திங்களாம் வருந்-தங்களா மருள்
மங்களாகரச்-சங்கைமுகம்மதர்

சரணங்கள்

1. அமரர்நபி தங்களை யழைக்க
ஆண்டவனன் கட்டளையின்படி
குமரர்நபி முன்வந்து ஜிபுரீல்
கோமான் சலாம்சொன்னு னெனச்சொல்லச்
சமரர்நபி சபாமறு வாவெனுந்
தலத்திலிருந் தேவுங்கட்டளை
சத்திரன்பணி, யித்திரர்புகள்
சுந்தரங்செறி, விந்தைமுகம்மதர் வான்

2. வல்லோனருள்மீக் காயீ லாணவர்
வடிவாமயில் வேஷநபி தங்களை
நல்லான்புருக் கானதின் முதுகில்
நபியையெடுத் தேந்தியே வைக்கவும்
சொல்லும்ஜிபு ரீலவர் கையினற்
சூழுங்கருபா வாசலேஉ பூட்டினுற்
துங்கராமஜெப, சிங்காரமணி
யங்சமாமுடி தங்குமுகம்மதர் வான்

3. பூட்டினுருட னேபுருக் கானது
புகழுமிறை வல்சமு கம்மேகச்

காட்டிபைத் துல்மு கத்திசுப் பள்ளியிற்
கத்தனைத்தொழு தார்களெல் லோருமே
மேட்டிலேயடங் காதநபிகளும்
எண்ணிவும்மாரி தான மலக்குடன்
வந்திட்டா யங்கு, சென்றிட்டா ரருள்
தந்திட்டார் பெய்க, மகிழ்ந்திட்டார்முகப் மதர் வான்

4. ஆதியொருவனைத்தொழுத பின்னர்
அண்ணல்நபிக் குச்சிபு ரீல்சொன்னர்
வேதரேயேணிப் படியேறு மென
விண்டனர் நபிசென் றன ரறுஷிக்
போதமாய்ப்பலபல ரகசியங்கள் பேசிப்
பூவினில்லந்த புண்ணியர் ஹம்சா
ஞதாரம் நவ நீதராமிறை
தூதராமகி, மூதுமு கம்மதர் வான்

---

45-வது பதம்-இராகம்-ஆனந்தபைரவி-ஆதிதாளம்

பல்லவி

இந்தநேரமே வருவீரையா—பையல்மீதிற்
கிந்தை யிரங்கிக்கா ரையா—பையல்மீதிற்

அநுபல்லவி

கந்தமே செறிந்தமக்கா சுந்தர மதீனம் வாழுங்
ககன்புவி ராஜர் மணவாசர் மறை
நேசர் விசு வாசர்
ஹாமீம் அகுமதெனு மூமின்மு கம்மதுவே
அங்கமே, தங்கமே, பொங்குமே, குங்குமச்
சங்கமே, யெங்குமு, முங்கும லங்கிர்த
நநெகமழ்ந் துறைநபி குறைஷியி னவர்வரு
கறெயகல் தரவரு ளிறையவன் றூதரே
ஹாஷீம் கிளையுதித்த காசீ முகம்மதரே இந்த



சரணங்கள்.

1. ஆலம் அறு வாஹிருந்து ஆலமிதா லாகிவந்து
தாலம்அஜி சாமில்நின்று கேலமின்சா ஞயுலகில்
வருமறை வேதம் நிறைபோதும் நவநீதம்
கமழ்காதம் வாலகுருவாய்ஞான வோமுழங்கும் பீரே
வப்பன்யான் தம்பமாய் நப்பின ஸின்பிற
அம்பெறு மிம்பரு மும்பரு மெய்தொழும்
வருபொரு பிறைபொழு தவையினும் வடிவுறும்
அருவ வுருவ சுருபான அகுமதுவே
ஆதி யனுப்புந்திரு த் தூதேமு கம்மதுவே இந்த

2. முத்தொளி ஜெபறூத்தில்நி றுத்தமலக்கூத்துலாகூத்
வெற்றிசேர் ஹாகூதஜெய்கூத்ஜத்தெனுஞ்செய்தாவேதா
கதமருள் கெதியேயதி பதியே முடி
பதியே கதிர் மதியே
ஆசைக்கருக் குள்ளுறைந்த - வோசைகிந்தில் வடியே
அந்தமே கந்தமி குந்த நள்விந்தமே
தொந்தமே சுந்தர சந்தச வுந்தர
அதிஜய நறைகமழ் கதிஜத்தை மணம்பிரி
அதின மதினநகர் அஹதுஹது வாஹிது
ஆலம் கபூருய்வரு கோல முகப்மதுவே இந்த

3 தேன்கமழ் பூப்பொழில்சூழும் நீங்கிலா மதினவாழும்
வேங்கையப் துல்லாவின் பால தீன்கனியா ஞரேசொர்க்க
வண்டினம் பாடுமயி லாடும்
புகழ்தேடும் அமுதோடும்
வாசம் பொருந்துமக்காத் தேசமிருந்து வாழும்
ஆசிமே காசிமே தாசிமே யாசினே
நேசமே வீசுமே ஹாஷீம் குலக்கொழுந்தே
அறுஷு குறுசுலவ்கு கலமொடே வையம்புகழ்
பிரிச குறைஷியுயர் முறுசலி அரசரே
தாசன் ஹம் சாக்கருள் தேசமுநேசமு கம்மதுவே இந்த

### 46-பதம் - இராகம் - நீலாம்புரி - ரூபகதாளம்

பல்லவி

பைய லாகினேன் மகுமூதரே மகராஜமர மறை நேசரே
மகிப்படி வருவீரருள் தருவீர்குரு நபியே மை

அநுபல்லவி

வையம் புகழும் செய்தே வரிசை முஸ்தபா நபியே
பையலுமை நம்பிப்பதம் பசடினேனருள் புரிவீர் மை

சரணங்கள்.

1. ஏகாந்தகமய்ப்பொருளா யெழுந்தெதிருங்கதிரொளிவீசிய
சாகாதகால் வேகாத்தலே சார்ந்துன்பதமறியேன்
தாகப்மகு ஷறிற் றீர்த்திடத் தங்களல்லால் வேரு நன் றிம்
மோகந்தவிர்ந் தாகந்துதி யேகன் திருநபியே மை

2. இளமையை தானுலுநா னினிமேல்மறப் பேனேவுனமத்
தொழவுந்தெரி யாதானெற்குத் துணைசெய் தருள்வீரே
பிழையாண்செய்தவெல்லாம் பொறுத்திளையா மகுஷறிலே
குழையாதெனை நிலை நிறுத்துங் குருவேஹாஷிம் நபியேமை

3. எல்லாந்தயிர்ந்திறையொன்றெ னவெடுத்தோதிடும்ஷெய்கான
கல்லாறகு மத்துச்செய்வா னறிந்தே னூலநபியே [வர்க்
சொல்லப்பொருளெஃதேவதுன் சூட்சந்தனைக் காணுருடல்
நில்லாதெனச் சொன்னீர்நானென் செய்வேன் சங்கைநபியே

4 மதிறுநகர்க்கரசாய்வரு மதியேமணி யொளியே
கதிநாளுமே தருவீரிறைஹபிபே முஸ்தபாவே
துதிசெய்திடும் ஹம்சாலெப்பைக் கருள்செய்யுமுகம்மதே
நீதியேயுயர் பதியேனல நேசந்தா வருவீர் மை



### 47-வது பதம் - இராகம் - ஹிந்துஸ்தானி - காபி - ரூபகதாளம்

பல்லவி

காதங்கமழ் றசூல்நீரே - எங்கள்
காத்திமுதல்லன்பியா வானரே காதங்

அநுபல்லவி

நாதமிலங்கு நவினப்ரகாசரே
நன்ருயோரிரவில் மிகுருஜேறிகநேசரே
நாதாநவநீதாவிறை தூதாமறைவேதாவுயர்
தறைதங்கிடு மருள்பொங்கிடும்
இருள்மங்கிடுந் துறையெங்களின் காதங்

சரணங்கள்.

1 நம்பினபேர்க்குமெய்ஞ் ஞானம் - இநை
தம்பாதபேர்க்கெல்லா மீனம்
துன்பமகற்றிடு மெய்மகுமூதரே
துல்துல்விதங்கள் மாதுலராஜரே
தஞ்சம்பெறவஞ்சன் மிகக்கொஞ்சும்பயலின் சொல்சொல்
தாசீமுயர்யாசீனபுல் காசீமயிலார்சீர்நபி காதங்

2. ஆதப்நுத லமைந்தோரே - எங்க
ளப்துல்லாபுத்திரர் நீரே
வேதங்களெல்லாந் தெளிந்தவென்
வெற்றிலரவும்ஹம் துக்கொடியோரே
வீசும்மருள்நேசம்விசு வாசந்தாத்தாசன்னிடம்
வருவீரருள்புரிவீரிருள் தடிவீருயர்குருவீர்நபி காதங்

3. கருவுக்குள்ளேநினை வானேரே - யெங்கள்
ஹாயீமுசம்மது நீரே - கரு
வறுவுக்குள்ளேவந்தறி வாகவும்நின்றுரே
ஆசைவலம்புரி யோசைநீரே - யும

தழகாகுயபததாளுதந் தினையாதெனையேகாத்தருள்
ஆர்க்குமருள்சேர்க்குந்துயர் தீர்க்கும்ஹமுசாக்குநபி காத

———

48-வது பதம் - இராகம் - அபுருபகம் - ஆதிதாளம்

பல்லவி

ராஜராஜமக ராஜதுறைராஜரே
தாஜுல்லன்பியாவெனும் கோஜாமுகம்மதென்றுயகமே
தாசீம்யாசீன் அபுல்காசிமே யென்னையாள்விரேநித்தயம்

அநுபல்லவி

வாசரேயெங்கும்ப்ர காசவுல்லாசரே
தேசரேமுன்மயில் வேஷரேயழபிய
வண்டினங்கண்டமு துண்டிடுமாமக்க
வென்றிவிடனுத முகம்மதுவேநிதப்
வானோர்தீனோர்புகழ்வோரே - என்னை
யாள்வீரே நித்தியம் ராஜ

சரணங்கள்.

1. ஆதியின்தூதரே யருள்மறைவேதரேய
னுதியிலும்மறை வானவரேயும்
தங்கமேநறைநனி பொங்கிடுபோதரே
அண்ணலேயெம்முஸ்த பாநபியேநான்
தேடிவாடிப்பதம் பாடினேன்வந்
தான்வீரே நித்யம் ராஜ

2. சந்திரன்வந்தடி யேதொழுமண்ணலே
சர்வரேயாலம்ற சூல்நபியேயுயர்
கந்தரங்குடையிட சுந்தரமிலகிட
வந்தரேயருள் தந்திடுவீருமைக்
காணநானே மையலரனே - னென்னை
யாள்வீரே நித்யம் ராஜ

3. அண்டமும்பிண்டமு மெண்டிசைநிறைந்தோரே
ஆசையிருளொளி வாளவரேயிந்தத்



தொண்டன்ஹம்சாக்கரு ளின்றுசெய்வீரே
துய்யிறசூல்முகம் மதுவேயான்
பாவிபாவலாப்த் தாவினேனென்னைவந்
தாள்குவீர் நித்யம் ராஜ

———

49-வது பதம்-இராகம்-செஞ்சுருட்டி ஏகதாளம்

பல்லவி

எப்போதேன்றன்றாக்கந்தான் தெளிவனோவென்
றெண்ணியெண்ணியிடைந்தேன் மனமஃதுடைந்தேன்

அநுபல்லவி

றப்பாயிலங்குப்ரகாசன் மொய்ப்பாய்த்துலங்குநேசன்
றன்னிலுறைபவன் யென்னுள்மறைபவன்
அன்னைபிதாவானவன் முன்னோனவனை நினைந்

சரணங்கள்

1 அவ்வலதாக நின்றதும் அதன்பின்னுகிர்
அருமதாகவந்த புதுமையும்
எவ்வும்வாகிதாய் நிறைந்ததும் - எங்கெங்குமுயிர்க்
குயிர் தானமாய சூழ்ச்சமும்
திவ்வியமுன் னுகத்தலிபாய்த்
திரண்டமூன்று மொன்றதாகி
அவ்வலாகிறும் அஹதுவாகிதாய்
அகண்டமெய்ப்பொரு ளவனைமனநினைத் தெப்

2. தந்தைக்குமுன்னிருந்ததும் தாய்க்குள்ளேசித்தத்
தனித்துவெண்டரள மானதும்
பிறத்தருபமாய்ச் சமைந்ததும் பெரியோர்பக்கல்
பிறந்தேயாதம் நாமேயானதும்
சிந்ததஜெம்கூத் தானவெண்மைச்
சிறக்குந்தம்கூத் ததனிலுண்மை
யந்தவழகொளி சிந்துமொருதுளி
எந்தமிருவிழி வந்தவுனை நினைத் தெப்

3. படமிலா தநாகமே ழானதும் அதுவிரிந்து
படமெடுத்தைந்தலே யாடினதும்
உலகெல்லாமுயிராய் நின்றதும்-உள்ளொளியதாகி
யுவந்தேஜது மீழமானதும்
திடமுன்ஜலால் ஜமாலாய்த்
திரண்டாண்டு ரொமன்றதாகின
தீர்க்கமேதர வாக்குங்கருவினிற்
காக்குமிறைவனே நோக்கிமன நினைந் தெப்

4. ஹையுல்கையுமாகி நின்றதும் கமலமீதில்
ஹாவுடன்ஹீஹூவாய்ப் பூத்ததும்
தையிபில்முச்சுடரி மானதும் தனக்குட்டாளுய்த்
தனைநினைவதா யிருந்ததும்
கையில் நின்ற மெய்நினைவாய்க்
கருணைமுலத்துட் பொருளாய்க்
காட்டினுரதின் தோட்டம்யாவுநீ
சூட்டினேன்ஹம்சா நாட்டமுனை நினைத் தெப்

———

50-வது பதம்-இராகம்-முகாரி-ஆதிதாளம்

பல்லவி

யாசித்து செய்யிதினு அங்கங்கமழுமவுலானு
அருள்கௌதுமு கியித்தீன்-அடிமைதனக்
கருள்புரிவீர் முகியித்தீன்

அநுபல்லவி

யாசெய்யிதீஸனதி யாகௌதுகாதிரி
ஆதம்நாதம் கீதம்போதம்
இலங்குப்றசூல்பேரரே இலங்கும்றசூல்பேரரே யா

சரணங்கள்

1. வாருமிங்கங்குமுங்கள் சங்கைப்பதத்தைத்தங்கவெனகுத்
துங்கமலர்ப்பொற் பாதரே
பாரும்பவமுதுந் திருமென்றன்னைக்காரும்



பந்தம்வகரும் அந்தப்மொளிரும்
செய்கே யாமுகியித்தீனே யா

2 சத்தம்குன்குன் குல்குன்ஸமதி-நாறுன்னூறுன்மவுதுபுன்
ஹே ஹவாவான அஞுஸிரே
சுத்தம் ஜென் ஜென் ஜென் ஜென் ஜென்ன ஜென்னதியரன
சர்வரே கிரீட சங்கை தங்கிய நாதரே நீதரே
கூசும் குன்கு தாத்தினில் வீசும்ஜெம்கூத்தில் நேசம்
ஆசு லாகூ ஹாஹூ அன் இன் எல்னென்ருேதியரீதரே

3. வாசிலா ஹாஹீ ஹூவென் ருேசைமுழங்கும்
நாசிநடுவில் தனினந்தரும் நல் ராஜரே
மாசிலாமணி மந்திரப் பாஷை தெரிந்துள் ளாசை
யுடனே பகரும் கலிமாவுல் லாசரே
தினமும் அன்லா இலாக மனமும் இல்லல்லாகூ வென்றே
நாடி யோடித் தேடி வாடி
நன்ரு யென்று யொன்ருய் நப்பினேன் யா

4 ஆரும் புகழ் பகுதா தண்ணலபு சாலிகீன்ற
அருமைச் சுதனேலே
காரும் கௌதுல் அகுலம் கண்ணின்மணியே
காஜா வொலியே கருணை குதுபு மாரே
தாரும் தாசன் ஹம்சபவைப்
பாருமென் கலிதீரும்
தாதா நிதா மூதா செய்யிதஸ் ஸாதாத்
தெனும்தஸ்த கீறப்துல் காதிறே யா

———

51-வது-பதம்-இராகம்-தன்னியா-ஆதிதாளம்

பல்லவி

அங்க முழுதுமே அவ்வல்க் கலிமாவென்
றறியாயோ நெஞ்சமே

அநுபல்லவி

சங்கை லாஇலாக இல்லல்லா கூவெனப்
பொங்கு முகம்மதுற்ற சூலுல்லா கியுடன் அ

சரணங்கள்

1. தங்கும் லாவதே காலாய்த் தரித்துப்பின்
தயங்கும் இலாஹ மூலமாய்
எங்கும் இல்லாவுடல் அல்லா இஸ்மேமுகம்
இலங்கிடுங் கலிமாவே
துங்க ராஜர்நபி துய்யகலி மாவினில்
முங்கு மோட்சநிலைச் சூட்சமோர் ஹறுபினில் அ

2 பாரு முகம்மதியாய் வொளியினில் நின்றிறையவன்
படைத்தான் முழுநுந் தானே
ஆருமிப்பொருள்தெரிந் தன்புடன் றவஞ்செய்த
அனுதினக் கடன் ருனே
சேரும் அஷ்ஹது அன்லா இலாவென்று
செப்புங் கலிமாமொழி மெய்ப்பொரு ளறிந்துகொள் அ

3. அஞ்சோ டாறினை யறிந்துளந் தெடந்தே நம்
ஆதியைத் தொழு வாயே
வஞ்ச னிபுலீசின் வலையதிற் சிக்கியே
வழிமோசம் போகாதே-பொல்லாப்
பஞ்சமா தகங்களான பவமுமுதும்
தெஞ்சி லோடும்படி யஞ்கி சுஜூதுசெய்வாய் அ

4 என்னை யொருநுக்கத்தி லொழுநான் கச் சரத்தைக்கெண்
டிசைத்தவன் பெரியோனே
தன்னையுருப்படுத்தித் தன்கோல மென் அக்குட்
டந்திடு மிறைவோனே
அன்னை பிதாவிலுநீ யன்பாய் வணங்குதற்குப்
பின்னே யொருவர்சொல்ல வேணுமோ வுன்றனுக்கு அ

5. கலியுறுங் மலிமாக் கருவெழுத் தானது
கல்பினி லிருமாளுல்-அங்கே
மெலிவுறு முழுக்கை மெய்யினி லகற்றிடு
மேன்மையை யறி வாயோ
கலிமாப் பொருளறியார் காபிரென்றிறை சொன்னுன்
அலியின் மாதுலகு மறைந்தார் ஹம்சா சொன்னேன் அ

———



52-வது பதம் - இராகம் - உசேனி - சாப்புதாளம்

பல்லவி

ஏனோ வென்மீ திரக்கம் தையாததின்னம்
இறசூல் நந்நபி நாயகம்
என்னமோ யானறியேன்

அநுபல்லவி

வானோர் புகழு மக்கா வரிசைமுகம்மதுவே
தீனோர்க் கரசே யாறசூல் முகம்மதே ஏனோ

சரணங்கள்.

1. வல்லோ னறுஷிற் சென்றீர்
வாகாய் மொழிகள் விண்டீர்
அல்லாவின் தூதரே யாறசூல்யா முகம்மதே ஏனோ

2 கானில் நதியழைத்தீர்
மானின் பயிர் விளைத்தீர்
தேனின் மொழியே யாறசூல் யாமு கம்மதே ஏனோ

3. கொஞ்சத் தசையை முன்னொரு
வஞ்சிப்பெண்ணையழைத்தீர்
தஞ்ச மெனக்கே யாறசூல் யாமுகம்மதே ஏனோ

4. கந்தங் கமழுஞ் சுந்தரக் காத்திமுல் லன்பியா வானோரே
சந்திர னொளியே யாறசூல் யாமு கம்மதே ஏனோ

5. ஆதம் நுத லமைந்தீர் - அப்துல்லா புத்திர ரானீர்
வேதந் தெளிந்த யாறசூல் யாமு கம்மதே ஏனோ

6. தேசம்வைத் தாளுமென்மேல் நேசினர் முகம்மதுவே
நாதன் ஹாம் சாக்கெ யாறசூல் யாமு கம்மதே ஏனோ

———

53-வது பதம் - இராகம் - முஹாரி - ஆதிதாளம்.

பல்லவி

அதிநிலை காட்டுமெங்க ளருமதுமு கம்மதுவே
சோதிமகு மூதேயுயர் சுந்தாவிற சூல்நபியே

அநுபல்லவி

நீதிதருங்குறைஷிவழி நெபினுர்மு கம்மதுவே
வேதியர்க ளடிபணியும் வேந்தேயிற சூல்நபியே ஆ

சரணங்கள்.

1. அஞ்செழுத்தால் நவைவகுத்தான் அலிபுலாம் ஹேமீம்நாலிம்
நெஞ்சில்வந்த பஞ்சபூதம் நீரறிவீர் மானுடரே ஆ

2 ஒன்ரும் நபுசதைக்கே ளுன்னுடலில் இம்மாரு
நன்ரு மதன்கொப்புவாய் நமபிக்கொள்வீர் மானுடரே ஆ

3. ரண்டாம் நபுசதைக்கேள் ஒலவாமத் துன்னுடலில்
விண்டேனதன்கொப்புகண் விளங்கக்கொள்வீர் மானுடரே

4. மூன்ரும் நபுசதைக்கேள் முல்கிமாவா முன்னுடலிற்
ரேன்றுமதன் கொப்புமூக்குத் தொடுத்தறிவீர் மானுடரே

5. நாலாம் நபுசதைக்கேள் நவின்ற முதுமஇன்ன
பாலா மதன்கொம்புகாது பார்த்தறிவீர் மானுடரே ஆ

6. ஐர்தாம் நபுசதைக் கேளு ளாகாயந் தாமரைக்காய்
விந்தா மதன்கொப்புநீர் விளங்கிக்கொள்வீர் மானுடரே ஆ

7. சொன்னதெல்லாம் விபரங்கண்டு சூட்சமதைத் தானறிந்து
முன்னவனே வணங்கிடுங்காண் முகலிமென்னுமானுடரே ஆ

8. ஹாஷீம் கிளையுதித்த அகுமதரின் சொற்படிக்குத்
தாசனித்த ஹம்சாசொன்னேன் ருரணியில் மானுடரே ஆ

———

54-வது பதம் - இராகம் - சாவேரி - ஆதிதாளம்

பல்லவி

மனமிரங்குவீர் யாறசூல் மகாராஜரே மன

அநுபல்லவி

தினமென் னிருகண் ணுமைந் தேடுத யாமுகம்மதே
திங்க ளொளியோ யாறசூல் மகாராஜரே மன



சரணங்கள்

1. துணை மத டிறி லோர்ளை தாங்கும் யாமு கம்மதே
பிணையெணைக்காகும் யாறசூல் மகாராஜரே மன

2. அருணன்வந் தடிதொழு மதிஜய முகம்மதே
சரணந் தந்தாளும் யாறசூல் மகாராஜரே மன

3. சரணம் வருமுன்கலி மாமகிழ்ச்சி யுடனுவின் அந்தத்
தருணந் தந்தாளும் யாறசூல் மகாராஜரே மன

4. ஆருர்புகழுமக்கத் தாசமுகம்மதே
காருஹம்சாவை யாறசூல்மகாராஜரே மன

———

55-வது பதம்-இராகம்-ஹிந்துஸ்தானி-தோடி-ஆதிதாளம்

பல்லவி

சோபனமேதாரீர் பார்த்தென்முகம்சாகிபிறசூலே சோ

அநுபல்லவி

சோபனந்தாரீரோ செம்மல்முகம்மதே
சுந்தரமேதங்கிய ராஜா ஐந்தருவே மதினு நேசா
கந்தரமேகுடையிடும் வர்சா சோபன

சரணங்கள்

1. சாதி ஹாஷீ மாஞேரே சர்வரே சர்வரே ஆலம்றசூலே-யுயர்
சிங்கார மணிமுடி மோர ஜெக
மெங்குங்கு பிரசங்காரா புகழ்
தங்குமெங்குமலங் காரா சோபன

2. வானின்மதியழைத்தோரே கானினதியையழைத்தோரே
தீனோர்களுக்கெல்லாம் சிரசே
கோரன்புவிக்கெல்லா மரசே
தேன்மொழியான நபிர்குறைஷே சோபன

3. ஆதியானோென்றாதரே அப்துல்லாகுமாரரே
வேதியன்ஹப்சா முகம்பாரும்
வெளியானமகுஷர் தனிலெனேக்காரும்
வினே நீக்கித் தாபங்கள் திரும் சோபன

— — —

56-வது பதம்-இராகம்-ஹித்துஸ்தானி-தோடி-ஆதிதாளம்

பல்லவி

சுகனேர்புகழ்நாத காத்திமுல்லன்பியா சுகனேர்

அநுபல்லவி

அகமானதேஆதப் அறிந்தாலல்லோபோதம்
முகமானதில்நாதப் இலங்கும்நபியே சுகனேர்

சரணங்கள்

1. ஷரீ அத்திறசூல்சொல்லதால்-தரீக்கத்றசூல் லாசெயல்
ஹகீக்கத்தவர்கள்ஹலாம் காட்டினார்பாதைநாலாம்
மஹரிபாநபியின்சிற்ரும் மாந்தர்களறிலீரே சுகானேர்

2 எக்காலமும்போற்றிடும் ஏகறெப்பில்-ஆலமீன்
மக்காபுரம்வந்த மங்கைஆமீனர் தந்த
ஹக்கானவன்சொந்தக் கனிநந்நபியே சுகனேர்

3. குமரயாமுகம்மதே குதாயின்றிகுத்-தூதரே
அமரர்புகழ்ந்தேத்தும் ஹாஷிம்கிளேயிற்ரேற்றும்
அப்துல்லா நிதப்போற்றும் அகுமதுமுகப்மதே சுகானேர்

4. ஆர்க்குமுபகாரரே அண்ணல்யாமுகம்மதே-எனேக்
காருமுகம்பாரும்ஹம்சா லெப்பைதுயர்நீரும்
வாருமருள் தாருமெங்கள் வள்ளல்நந்நபியே சுகனேர்

— — —



57-வது பதம்-இராகம்-நாதநாமக்கிரியை-சாப்புதாளம்.

பல்லவி

தினமைய லாகுதென்றன் கேனே சங்கை மானே
திங்கள் யாறசூலே தின

அநுபல்லவி

கனவிலும் நினேவே காமில்நந் நபியே
மனமதி லுமையினி நான்மறவேனே
மதினமு கம்மதே தின

சரணங்கள்

1. கஜாத துரகப தாதியுனரசர்
வஜிகா நபிகள் நாயக முஸ்த பாவே
வரிசைமு கம்மதே

2. கொப்புவித் தெதிலுவெனேக் குடியாய்முன் னிருத்தி
பிப்புவிற் யிறககச்செய்த விறையோ னருள் நூதே
யெங்கள் யாமு கம்மதே

3. ஆசைகொண்டு மையான் அஞ்சினேனபியே
தாசன் ஹம்சாக் குங்களின் தயைதந் தருள் நபியே
தாஹா முகம்மதே

— — —

58-வது பதம்-இராகம்-கமாஸ் ஆதிதாளம்

பல்லவி

சாகிபே வருவீ ரெளியேனும் சரணஞ் சரணம் நித்தியம்
சரணம் நபிமு கம்மதே சாகிபே

சரணேங்கள்

கருவேயென் குருவே காடில் நந்நபியே
காத்திமுல் அன்பியா ஹாமீமே
ஹக்கன் மக்கா செர்க்கநறை கமழுமுல் லாசரெ நபி
காருண்யக் கடலே சாகிபே

சரணங்கள்

1. சுயஜய நபிகள் சிகாமணியே-யுயர்
செபமல்மு கப்மதென்கண் மணியே
சிங்கமே துங்கமே யெங்குப்ப்ர சங்கமே
திங்கள்மு ழங்கும் செய்யிது நபியே சாகிபே

2. மூலமென் றெழுத்தில் முக்கிய கலிமா
மோட்ச சுழி முனையிற்-காட்சியாய்வந்த
முத்துப் பச்சை ரத்நமொன்ரு யிலங்கும் ஹபீபே யுயர்
முறுசல்க் கரசரே சாகிபே

3. மாசில்லா மணியே மவுனமுச் சுடரே
மகாராஜர் போற்றிடு மணி முடியே-எங்கள்
காசீம் தாசீம் வாசனைப்பொற் பாதமலர்
ஹம்சாக் கருளும் சாகிபே

———

59-வது பதம்-இராகம்-கமாஸ்-ரூபகதாளம்

பல்லவி

காதிறோன்னைக் காத்திரட் சித்தருளும்-உயர்
கனமாகிய வனநகையில் முன்னமேசெய்யத் தினமாய்வரும்

அநுபல்லவி

ஆதியை யேதின மோதிப் பணிந்துயர்
ஆகந்தனி லேகன்றுதி யோகந்தளிர் நாகைவளர் காதி

சரணங்கள்

1. அங்கமே நறைபொங்கு மெங்குஞ்சிங்கமே
அலங்கார்ர சிங்கார வொய்யாரா நபிபேரா காதி

2. வாசரே தாகன் ஆசைமிஞ்சித் தேடுதே-நித்தம்
வருவீரருள் பிரிவீரடி தருவீரிருள் கடிவீருயர் காதி

3. இச்சையோ டென்பேற் பச்சர்வைத் தாள்குதுபே-நல
வேதுந் தெரி யாதும்பயல் நாதா ஹமீத்த யுயர் காதி

4. பரநமே கதி நாதன் ஹமீதொலியே எனைப்
பாரும்நிதம் காரும்துயர் தீரும்ஹப்சாக்கும்தருள் காதி

———



60-வது பதம் இராகம்-தோடி-ஏகதாளம்

பல்லவி

மரணம்வருவதென் னேரமே-மவுனக் கலிமா வோது
சரணந் தந்தாளும் செய்யிதுசா தாத்திற குலைத்தேடு மா

அநுபல்லவி

குறைபா மதிதனைமுன் கூரிருளி லேயழைத்தோர்
துரைராஜர் யாமுகம்மதே துணைதந்தருள் புரிவார்தேடு மா

சரணங்கள்

I செந்தா மரைக்குள்விளைந் தோர் செம்மல்யா முகம்மத்
கந்தரமே குடையிடுங் காத்திமுல் லன்பியாவைத்தேடு மா

2. மலக்கல் மௌத்துவந்துநம் முயிரைப் பிடிக்கும்போது
கலக்கம் வராதபடி ஹக்கனிற குலைத்தேடு மா

3. என்றைக்கிருந் தாலுமிறை யோனிச்சமுகஞ் சேர்வதுதான்
தொண்டன் ஹம்சா சொல்கவிக் கின்றுநபியைத் தேடிமாடு

———

61-வது-பதம்-இராகப்-தன்னியாசி-ஆதிதாளம்

பல்லவி

ஆத்துமந் தன்னிலொரு மூச்சு யாதுதப்பி
யசதியுடன் போனு லழுந்தே ஆத்

அநுபல்லவி

மாற்றிப் பிடிக்கும் வகைமன தேயுனக்குச் சொல்வேன்
சூத்திரமான ஷஹாதத்திற் றெளிந்துபார்நீ ஆத்

சரணங்கள்

1. அஞ்சு புலன்பொறி யாருநரம்-முடன்
ஆனதொண் ணூற்ரூறு தத்துவம்
பிஞ்சி யழியுமுன்னே பிர்சொன்ன சொற்படி
செஞ்சில் தியானஞ்செய் வாய்நிதம்
வஞ்ச நமன்வந்து வதைத்துயிர் வாங்குமுன்
அஞ்சிப் பயந்தே ஆதிதனைத் தொழுமனமே ஆத்

2. மார்க்க முறையறியா மாந்தரோ-டென்ன
தீர்க்க முடன் றிரியச் சொல்லுகிறாய்
மூர்க்கந் தனைநான் விடே னென்கிரு-எங்கள்
முஸ்தபா நபிசொல் லை மறக்கிறாய்
பார்க்கப் பலகோலங்களாய் படைத்துயிர்களைக்
காக்கும் றெப்பை நினைத்த ஹக்காய்த் துதிமனமே ஆத்

3. மவுத்தை ஹயாத்துக்குரண் டாயிரம்-வரு
டத்தின்முன்னே வகுத்தா னைதால்
மவுத்தைத் தட்டவல்லப மார்க்குமே யில்லை
மவுத்தே யுண்மையென் றறிகுவாய்
கவுத்துவப் புவிதனில் ஹாஸா வுனக்குவிண்ட
காட்சி தனையறிந்து மூச்சிற் றெளிமனமே ஷித்

---

62-வது-பதம்-இராகம்-காம்போதி ஆதிதாளம்

பல்லவி

எப்படி மறப்பேன்-என் ஷெய்கைநான்
எப்படி மறப்பேன்

அநுபல்லவி

இப்படுக் கென்மே லென்ன தாமதமோ-இப்படி
யேதோ குரு நாதாசரி-வாராததின்னம் எப்

சரணங்கள்

1. நம்பும் பேர்களைத் துன்பஞ்செய் குவதோ-நம்பும்
நானேன் மறப் பேனோ விழி மானே யுமைத்தானேனி எப்

2. ஆவிபோய்விடின் ஆர்தான் தேடுவாரே-ஆவி
அஞ்சாமலே யெண்சா ணுடம்புஞ் சாகுமுன்னேசாகநான்

3. தன்னுக்குட் டாளுய்த் தயங்குவான் பொருளே
தாதா இறை தூதா மறை வேதா மகுமூதாவுமை எப்

4. தாகம் மகுஷநிற் நீர்க்கும் நாதரே-தாகத்
தாளைத்தா ஏழைக்கிது வேளையன் ஞானை நான் எப்



2. தாச னிந்தஹப்சாக் கென்செய் வீரோ-தாசன்
தாளுய்த்தனி யோளுயுலக காளேனரு ளாளேருமை

---

63-வது-பதம்-இராகம்-கல்யாணி-ஆதிதாளம்

பல்லவி

யாஷைகே குதுபே கௌதே யாசுல்தானுல் லாரிபீன்

அநுபல்லவி

தேசம்புகழும் ஜெயிலான் றிருநகர்க் கரசே
தெளிவே முகியித்தீன் யாஷைகே

சரணங்கள்

1. கருவா னவரேவெண் ணுகத்தே
கற்பக தருவே முகியித்தீன் யாஷைகே

2. மூச்சுடரதில் முங்கி யெழுந்த சிகாமணி
முத்தகீன் முகியித்தீன் யாஷைகே

3. மகுபூபே ரகசியக் கடலே
மன்னவன் மணியே முகியித்தீன் யாஷைகே

4. கல்கல் மகுபியா வெனுமடை யாளங் காட்டிடும்
காஜா முகியத்தீன் யாஷைகே

5. சற்குரு வாம் ஹம் சர்க்கிரு பதியிலும் யா
சாகிப் முகியித்தீன்

---

64-வது-பதம்-இராகம்-முகாரி-ரூமகதாளம்.

பல்லவி

குறைஷியர்கள் குலக் கொழுந்தே தோவே ஹாஷீமே-யுயர்
கோமானருள் ஈமானொளிர் சீமாந் நபியே.

அநுபல்லவி

நறைகமழும் நானிலத்தோர் நபியாய்வந் தோரே-அருள்
நாதா நீதா வேதாமகு மூதேநந் நபியே குறை

சரணங்கள்

1. ஒருமணியா யுலகில்வந்த வுண்மைற சூலே-எங்கள்
கருவாய்க் குருவாய் உருவாய்வந்ததுரையேதந்நபியே குறை

2. காதவழி கமழும் காத்தீம் றசூலே-என்னைக்
காரும் முகம் பாருந் துயர் தீரப் நந்-நபியே குறை

3. வேஷமயி லாயெகீன் மரமீ திருந்தோரே-இந்தத்
தாசன் ஹறப்சா லெப்பைக்குமது நேசம் தந்நபியே குறை

---

## 65-வது பதம்-இராகம்-முஹாரி-சாப்புதாளம்

பல்லவி

ஆதிபராபரனே ஆலமெல்லாம் நிறைந்தோனே-அவ்வல்
அஹதா யுஹதாய் வாஹிதாய் நிறைந்த நிராமயமே

அநுபல்லவி

அடிமுடி யில்லா அவ்வ லாகிருய் நின்றோனே-ஏழை
அடியேன் கொடியேன் படிமீதினிற்செய்
பிழைபொறுத்தாள்பவனே. ஆதி

சரணங்கள்

1. முச்சுகிரானேனே முந்தமுச்சி லுறைந்தோனே-எங்கள்
முறுசல்க் கரசர் குறைஷி நபியை முன்னே யமைத்தோனே

2. எண்ணத்தி லடங்கானே யேசனே றெப்பில் ஆலமீனே-பாவி
ஏழை முனை நானை யுருகா தவ் வேளை காத்தருள் வாய் ஆதி

3. ஒரெழுத் தானேனே-யுலகாளும் றகுமானே யுன்னை
யோதா வுணராப் பாதகர்க் கென்னீ செய்வா யெம்மிறையே

4. ஆசைக் குன்னொளி யானே அச்சரத்தி லடங்கானே இந்தத்
தாச னீசன் ஹறம்சாக் குனது நேசமென்னுண்டவனே ஆதி

---

மெய்ஞ்ஞான ரத்தினலங்காரக் கீர்த்தனம்

---

முற்றிற்று.

---

பிஸ்மில்லாஹி

# குப்பற்சிந்து

பல்லவி

தொழுகையின்பே ரகுமதுவாம்-இல்லல்லா
தொழுதுவந்தோர் முஹம்மதுவாம்

அநுபல்லவி

பழுதில்லா நிலை அலிபாம்-இல்லல்லா
பகரும் றுக்கூஃ ஹேயதுவாம்
முழுதும் சுஜூதுத் மீமதுவாம்-இல்லல்லா
முடிவிருத்தித் தால்தாலம்-இல்லல்லா

உகப்பான அலிபது மரங்களின் வணக்கம்
ஒதுஹே யதுமிருக ஜாதியின் வணக்கம்
சிஹறத்தான மீமுதா லூர்வன வணக்கம்
செப்பினார் தால்தே பறவையின் வணக்கம்
மிகுத்தபொரு ளாமிவையின் சிறறுகளறிந்து
மேலவன் ஞெருவனென வஞ்சிப் பயந்து
தகிக்கிலா தீமானை முன்னே நிறுத்தித்
தனியவனை யொன்ருக்கித் தக்பீர் கட்டுந் தொழு

சரணங்கள்

1. அச்சரத்தி லடங்கானை-இல்லல்லா
ஆர்க்குங்கரு வானவனை
முச்சுடரி லொவ்வானை - இல்லல்லா
முடிவொன்றிலா முதலவனை-இல்லல்லா

ஆதிறப்பில் ஆலமீ னென்றோ தொருவன்
அஹது நிலை யாய்ச்சம தாகவு நிறைந்தோன்
அடிமுடியிலாததோ ரதிசய நலத்தோன்
ஆவென்ற சொல்லா லினைத்தையு மமைத்தோன்

அருளார் குவல்லாகுல் லதீலாஇலாகா
இல்லா குவற்றகு மானிற்ற கீமாம்
அல்மலிக்கும் குத்தூசு வென்றபெரி யோனும்
ஆருப்புக முஸ்ஸ லாமுமினுனோன்
அல்மு ஹைமினுல் அஜீஸ்ஜப்பா ருனோன்
அழகுதரும் அல்முத்த கப்பீ ரு மானோன்
அல்காலிக் குல்பாரி வுலமுஸவ்வி ருனோன்
அல்கப்பா றுல் கஹ்ஹா றுல்வஹ்ஹா பானோன்
அற்றஸ்லாக் குல்பத்தா ஹுல் அலீ மானோன்
அல்காபி லுல்பாஸி துல்காபி லானோன்
அற்ருபி குல்முகிஸ்ஸுல் முதில் லென்போன்
அஸ்ஸமீ குல்பாஸீ றுல்ஹக்க மென்போன்
அல்அத லுல்லதீ புக்கபி றென்போன்
அல்ஹலீ மென்பதொடு அல் அலீ மென்போன்
அல்கபூறென்பதொடு அஷ்ஷுக்குறு மானோன்
அல் அலீ யானதொடு அல்கபீ ருனோன்
அல்ஹபீலானோன் அல்முகீத் தானோன்
அல் ஹஸி பானோன் சொல்லரியமேலோன்
அல்ஜலீ லுல்கரீ முற்றகீபானோன்
அல்முஜீ புல்வாஸி குல் ஹதீ மானோன்
அல்வதூ துல்மஜீ துல்பாகிதென்போன்
அஷ்ஷஹீ துல்ஹக்கு அல்வகீலென்போன்
அல்கவியுய்யல் மதீ னுல்வலிய் யென்போன்
அல்ஹமீ துல்முஃஸில் முப்தியுவென்போன்
அல்முஹீ துல்முஃ லய்முமீத் தானோன்
அல்ஹையு அல்கையு முல்வாஜீ தானோன்
அல்மாஜி துல்வாஹீ துல்லஹதானோன்
அஸ்ஸமதுல் காதிறுல் முக்ததிருனோன்
அல்முகத்தமு அல்மு அஃறு வென்போன்
அல் அவ்வ லுல் ஆகீ லுல்பாத்தி னென்போன்
அல்லாஹி ருனோன் அல்வாலியானோன்
அல்முத்த ஆலியு வானோன் சிறந்த.
அல்பற்று தவ்வாபுல் முந்தகீ மானோன்
அல்கபூ ருனோன் அற்றவூபானோன்
அல்மாலிக் கென்போன் அருளரிய வல்லோன்



அல்முகில் துல்ஜலாலி வல்இக்குரு மென்போன்
அல்முக்ஸீ துல்ஜாமி குல்கனிப் யானோன்
அல்முக்னீ அல்முக்தி அல்மானி கென்போன்
அல்லாறு அன்னாபி குன்னூறு வென்போன்
அல்ஹாதி அல்பாதி குல்பாகு யென்போன்
அல்வாரி தானோன் அற்றஷீ தானோன்
அஷ்ஷுக்கூ ருனோன் அஸ்ஸபூருன பெரியோனைவணங்கும்

2. கலீபாவே யோர்மரபகம்-இல்லக்லா
காய்கனிகள் பூவதுவாம்
வலீயோனருள தெளிவதுமாம்-இல்லல்லா
வந்தஹேறமீம் ஸிற்றதுவாம்-இல்லல்லா

ஒலிகுதுபு நபிகட்குயர்ந் தோரா முகம்ம
தொன்றுன அருமதுன் ஹாமிதுன் மதுமூ
தொளிவான காஸிமுன் ஆசியுன் பாத்திஃ
வுவப்பான காத்திமுன் ஹாஹிறுன் மாஹின்
மெலிவில்லா தாகினி ஸிருஜுன் றஷீதுன
முனீறுள் பஷீறுன் னதீறினெடுஹாதின்
மூஃதின்ற குதுன் னபிய் யுன் தாஹா யாஸீன
மூஸ்ய மிலுன் முகத்திறுன் ஷபீகுன் கலீலுன்
வேதியர்கள் போற்றும் கலீமுன் ஹபீபுன்
வெற்றிதரும் மூஸ்தபன் முர்த்தலா வானோர்
வீரான முஜ்தபன் முக்தாறுன் னாசிர்
வேதமா மன்ஸூறுன் காயிமுன் ஹாபில்
நீதிஷஹீதுன் ஆதிலுன் ஹகீமுன்னூர்
நெறிஹுஜ்ஜத் துன்புர் ஹானுன் அப்தஹிய்யுன்
நினைவான மூமினுன் முதீகுன் முதக்கிறுன்
நின்றதொரு வாகிலுன் அமீனுன் ஸாதிகுன்
அறுலா மூசத்திகுன் னாதிகுன் ஸாஹிப்
அருமைதரு மாம்தல் மகிய்யுன் மதனிய்யுன்
அலிமாதூலர் அறபிய்யுன் ஹாஷி மிய்யுன்
அங்கமெங்கும் கமழுந் திஹா மிய்யுன்
பொருளாக வந்தெங்கும் பொங்குப் ஹி ஜாஸிய்யுன்
போற்றினேன் நல்தரு ஹிய்யு குறைஷிய்யுன்
புதினம் மூலற்றியுன் உம்மியுன் அஸீஸுன்

புகழும் ஹாஸூன் றவூபுற்ற கீமும்
சிங்கார ராய்வூந் திடும்யதீமுன் கனிய்யுன்
சேர்ந்திடும் நற்புகழ் ஜவாதுன் பத்தாஹூன்
ஜெகமெங்கு ஆலிமுன் தையிபுன் தாகிர்
சிறந்ததோர் முதஃஹறுன் கதீபுன் மஸீஹூன்
செய்யிதுன முன்கிய்யுன் இமாமிஞேடு பாறுன்
ஷாபின்முத வஸ்ஸிதுன் லாபிகுன் முக்தஸிதுன்
சங்கைமஃ தியுன் ஹக்குன்மு பீனுன்
சந்வரவ் வல்லாகி னுல்லாகிர் பாத்தின்
எங்கள் நகுமத்துன் முகல்லிலுன் முஹற்றமுன்
ஏகனின் ஆறுமின் ஞஹீன் ஷக்கூனுன்
இலங்கிய கரீபுன் முனீபுன் முல்லிகுன்
இருந்திடும் தாஸீன் ஹாமீம் ஹஸீபுன்
இசைத்தேன்காண் அல்லா வசல்லா நபியை
யென்ஞளுந் தீஞேர்க ளேந்தியே வணங்கும் தொ(மு

3. ஆகுமிதை யறிவலே-இல்லல்லா
அறிந்து வால குருமேலே
கூறுங்கலி மாவாலே-இல்லல்லா
ஹூவுக்கப்பாற் றெளிவாலே-இல்லல்லா

பாரும் படைத்தோன ஸிபாத்துக ளனைத்தும்
பாரப்பெரிதான வுஜூதுடன் கிதமாம்
பகரும் பகாமுகால பத்துவில் ஹவாதித்
பலனும் கியர்முகு பிநபுஸிகி யென்றும்
பணிந்திடும் வஹ்தாநிய் யத்தஃ துடனே
பாாம் ஹயாத்தோ டில்மும்இரு தத்தும்
விசும்குத றற் ஸமகுபஸ றுன்கலாமுன்
நேசம் ஹையுன் ஆலிமுன் முரீதுடன்
வாசமாம் காதிறுன் ஸமீகுன் பஸீறுன்
வடிவான முத்தக்கல்வி முன்னிவை களுடனே
அவ்வல் ஷரீ அத்தும் அதன்பின் தரீக்கத்தும்
செவ்வை ஹகீக்கத்தும் சேர்மஹரி பத்தாம்
எவ்வும்புகழ் நாசூத்து மலக்கூத்துபறாத்
திலங்கும் லாகூத்து ஆகூத்துடன் யாகூத்
திவ்விய ஜெம்கூத்தும் திறமாம்தம் கூத்தும்



திசையெங்கும் வந்தஅம் மாருலவ் வாமா
திங்களொளி வாமுல்ஹி மாமுத்ம இன்ஞ
தீனுக் குயர்ந்தநல கமிலாத் தெரிந்து
தீர்க்கமுடன் தையியு ஷஹாதத் துவந்து
தம்ஜது தௌஹீது முஸ்தகீ லுடனே
பறுலுமுதல் வாஜிபு ஜாபிஜூ
வாஜிபு லுஜூதும் மும்கினி லுஜூதும்
தாத்து ஸிபத் தொன்றுன கலிமா வுடனே
தருதரும் ஜல்லிகல்பி ஸித்றியொடு
கூறினேன் ஹபியுடன் துகுஸிவழி தேர்ந்து
ஆலமறு வாஹோடு ஆலம்மி தாலும்
ஆலமஜி ஸாமுடன் ஆலமின் ஸானும்
ஆலம்கபீ ருன்பல கோலங்கள் யாவும்
அஞ்செழுத் தோடறிவுர் பிஞ்செழுத் ததுவும்
ஆனமுக் கோணமெனும் சூட்சியப் பொருளும்
அருள்தரும் சற்குருதம் மட்சரத் துடனே
அழகுதரும் அற்றபீக்குல் அகுலாவைப் போற்றி
யொருமைதரும் லாஅன் இல் லாகூவை மாற்றி
யோதிலா மவுஜூத இல்லல்லா வேற்றி
யுடைறவன் குன்தாத் தானவெளி தன்னில்
உள்ளமைக் குன்பயக் கூனென்ற சொல்லைக்
கொண்டருளைக் கொளுத்தெனை நூனஃது வாக்க
அஞ்சுவீர் காபக்கௌ சைனியின் கருவை
அகண்டதொரு கல்தானன் னஸீருவி ஞெளியைக்
கந்தமெங்கும் வீசிடுங் காரணப் பொருளைக்
குன்னுக்கு ளானன குதறத்தி னதுவைக்
குத்திருகத் திட்டகுரு வட்டத்தின் வடிவைக்
கொலமாம் ஹம்சுறம சுடன்மத்து ஷத்தைக்
குதறத் மகாமன்மமி மூதெனுந் தலத்தைக்
கூறினேன் சகரதகால் வேகாத் தலையைக்
கல்பென்ற ததுவைகல் பென்றிடும் மிதுவைக்
காரணக் கடற்நற் கலிமாப் பொருளைத்
துதிவ லாமஹ்பூ பலாமக் பூதத்
துணைசேருப் லாமௌஜூதவ லாமஷ் கூத
இல்லல்லா கூகூ ஹாஹூ ஹூவல் ஹையு

ஆஹ்றிவுடன் லாஹறிவும் யாஹறி
யாமன் கூகூ கூஇில்முல் எக்கீனும்
ஐனும் எக்கீனும்ஹக்குல் எக்கீனும்
காமலுல் எக்கீனும் கல்பென்ற வாசனம்
மீதிற் றெளிந்து ஷறகுநெறி தவிரா
வலப்புரிங் சங்கில்சற் குருவினுப தேசம்
சகலதையு மசட்டியே வருகின்ற வொருமை
மெய்ஞ்ஞான ஹக்கனே வணங்கிடவே நித்தம்
வாயால் ஹம் ஸசலெப்பை சொன்னபடி யெவரும்
வாசியென்ற சுக்காணே வசமே படுத்த
வகைகேளும் பிரீடம் வாழ்த்தினேன் போற்றி தொழு

முற்றிற்று

---

இதின்கீ ழச்சுடுவித் திருக்கும் சுரதானத்தை இந்த நேரமே வருவீரையா என்னும் 45-வது பதத்திற் சேர்த்துப் படித்துக் கொள்ள அவர்களை யாம் விரும்புகின்றனம்.

ஜான்ஜனுத்தஜனு சத்திமுத்தி கித்திஜெனு
ஜனுத்த ஜனுத்த ஜெனு சத்தி முத்தி சித்திஜெனு
ஜெனன ஜெனன தியான வேதாம்பர் தாதர்நீர்
சர்தம கிரகி சாதாத் செய்மித் சர்வரே கிரீட
மௌலான சுந்தர இந்த நேரமே வருவீரையா.



# பத அட்டவணை


| பக்கலக்கம். | | பதலக்கம். |
|---|---|---|
| 5 | அகூதுபில்லாகி | 1 |
| 7 | பிசுமில்லா கிற்றகுமான் | 2 |
| 8 | பூண்டமட் டின்பம் | 3 |
| 9 | சேர்க்குநாளைச் சென்னப் | 4 |
| 10 | சாதாத் சாதாத் சாதாத் | 5 |
| 11 | ஹறிவென்றோதிய வலம்புரி | 6 |
| 12 | யா முர்ஷிதத் தாலிபீன் | 7 |
| 13 | பஞ்சபூதங்க ளஞ்சதின் | 8 |
| ,, | அந்தஞ்சிந் துங்கலிமா | 9 |
| 15 | ஈமரஹெளி தாராய் | 10 |
| 16 | குன்னென்றசொற் குணமறிந்து | 11 |
| ,, | தன்னை யறிவது பறுலடி | 12 |
| 17 | ஹறிவதற்கப்பால் என்னெடி | 13 |
| 19 | எழுந்தோடு முக்கோணச் | 14 |
| 20 | மோன மௌன ஞான | 15 |
| ,, | சுழிமுனை யறிந்தே சுகம் | 16 |
| 21 | அஞ்செழுத்தானதிற் | 17 |
| 22 | அஹறதானவன் வேத மதன் | 18 |
| 23 | கலியுடன்மா வானதென்ன | 19 |
| 24 | வாவாவாடி கூவுக்கப்பா | 20 |
| ,, | ஹறிவற்கப்பாற் | 21 |
| 25 | அறிந்துகொள்ளுங்காள் | 22 |
| 27 | ஷறகதைப் பேணும் | 23 |
| 28 | சுந்தங்கா தங்கமழ்வீசும் | 24 |
| 29 | அஞ்சினி லொன்றையருள் | 25 |
| 31 | அறிவீர்முகமதுநபீக்குப் | 26 |
| ,, | தூக்கந்தெளிந்திடுவாய் | 27 |
| 32 | பாருமெந்தன் கோலந் | 28 |
| 33 | ஐம்பத்தோ ரட்சரத்தி | 29 |
| 34 | தன்னையறிவதில் முன்னே | 30 |
| ,, | மார்க்கப்பட்டி யைந்தொகுத்துந் | 31 |
| 35 | வந்தவழியறிவாய் | 32 |
| 36 | தந்தன் ஜடலமதிற் | 33 |
| 37 | பாருந் தொழுகையின் | 34 |

| | | |
|---|---|---|
| 38 | சொன்ஞ னிறையவன் | 35 |
| ,, | தொழுகையின்போகுமது | 36 |
| 39 | அன்னமே யெம்முகமதை | 37 |
| 40 | அன்னமே அஷ-ஹதுவடி | 38 |
| 41 | சொல் லுநீ கலிமா | 39 |
| 42 | நந்தியானந்தத்தை | 40 |
| 43 | பாவிநபுசே பாவிநபுசே | 41 |
| ,, | குருவாமடி யனமே | 42 |
| 44 | காரணக்கடலானேர் | 43 |
| 45 | வான்தங்குமிகு ருஜிவே | 44 |
| 46 | இந்தநேரமே வருவீரையா | 45 |
| 48 | மையலாகினேன் மகுமுதரே | 46 |
| 49 | காதங்கமழ் றசூல் நீரே | 47 |
| 50 | ராஜராஜமக ராஜதுரை | 48 |
| 51 | எப்போதென்றன் றாக்கந்தான் | 49 |
| 52 | யாசித்தி செய்யிதிஞ | 50 |
| 53 | அங்கே முழுதுமே | 51 |
| 55 | ஏனோவென் மீதிரக்கம் | 52 |
| ,, | ஆதிநிலே காட்டுமெங்க | 53 |
| 56 | மனமிரங்குவீர்யாறசூல் | 54 |
| 57 | சோபனமே தாரீர் | 55 |
| 58 | ககனோர்புகழ்நாதா | 56 |
| 59 | தினமைய லாகுதென்றன் | 57 |
| ,, | சாகிபே வருன் ரொளியேன் | 58 |
| 60 | காதிறே யென்னேக் | 59 |
| 61 | மரணம் வருவதென் | 60 |
| ,, | ஆத்துமந்தன்னிலொரு | 61 |
| 62 | எப்படி மறவேன் | 62 |
| 63 | யாஷைகே குதுபே | 63 |
| ,, | குறைஷியர்கள் குலக் | 64 |
| 64 | ஆதிபராபரனே | 65 |


அட்டவணை - முற்றிற்று

---

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்றஹீம்.

இஃது

# பிஸ்மில்க்குறம்

தற்கலை மெய்ஞ்ஞான சொரூபராகிய
பீரு முஹம்மது சாகிபவர்கள்
திருவாய்மலர்ந்தருளியது

---


காயற்பட்டணம்
கண்ணகுமது மகுதூ முகம்மதுப்
புலவரவர்களால்
நன்குறச் சீர்திருத்தி


---


திருநெல்வேலி ஜங்ஷன்
மு. கோ. மு. கோஸ் கனி அவர்களது
மாடர்ன் பிரிண்டர்ஸில்
பதிப்பிக்கப்பட்டது.

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்

இஃது

# பிஸ்மில்க்குறம்

### காப்பு-வெண்பா.

அவ்வ லமைத்தபுவி யாகாச மேல்றஷு
செல்வி லிருத்தியபின்சீராக—எவ்வுயிர்க்கும்
நல்லறிவை யீந்தவனே நானுன் பிசுமில்க்குறம்
சொல்லிடவே காத்தருள்வாய் துணை

### விருத்தம்

நினைவுடன்பொருளு நிறைந்திடும்வகையும் நீதியும் பிசுமிலினோடே,
அனந்தமுந்தெரிய அருமதருரைக்க ஆதிதன்கிருபையினுலே
கனஜயமாரும் மவுலானுறூமி கழறினர் அஹதியத்ததிலே
மனமதுமகிழ அறிவையுமறிந்து வழுத்தினர் சதக்கத் துல்லாவே.

### கண்ணிகள்

ஆதிபெரியோனே றப்பில் ஆலமீனேயாதி
அகதுநிலேசமதாக ஆலநிறைந்தோனே 1
அஹதியத்திலுஹதியத்தும் வாகித்ததுமாகி
அருபவுருபத்துளே தானல்லவோதாத்து 2
தாத்தல்லவோபாத்தினது லாகிறுசிபாத்து
லாகிறுக்குள்பாத்திஞனன் ரகசியத்தின்பொருளே. 3
பாத்தல்லாவோதோத்திரமாய் தேத்திரத்தின் கலிமோ
ஆத்துமத்திற்கதுதானே ஐனென்றகலிமா 4
ஐனென்றகலிமாவை அறிந்துளத்திற்பொதிந்து
ஆசைநடுயிருபுறமும் தாபக்கபுசைனி 5
காபக்கபுசைனியுட கருவையறியாமல்
காலமெல்லாங்கருத்தறியாப் போகுதே அல்லாகு 6

கருவுக்குள்ளே கருவான கருவையறியாமல்
காலமெல்லாம் வீண்காலம் மாகுதே அல்லாகு 7

உருவுக்குள்ளேயுருவமில்லா வுருவையறியாமல்
உலகமெல்லாங்கருத்தறியாப் போகுதே அல்லாகு 8

கருவோடு நினைவுமொன்று யிருப்பதறியாமல்
ஹபீபு தலங்கலக்கத்துக்குள் ளாகுதே அல்லாகு 9

ஐனுக்குள்ளேபொருளான அஹதின்னொளிதுலங்கி
ஆலமெல்லாமுன் வாசம் வீசுதே அலலாகு 10

ஆதிமுஹம்மதுதந் தீன்குலமேதழைக்க
ஆண்டவனே யுதவிசெய்வா யாமீனுமீனுமீன் 11

ஆமீனிலை தவிராத மூமின் குலத்தோரே
ஆமினார்பெற்றெடுத்த ஆலநபிபொருட்டால் 12

மூமின் குலங்க ளனை வோருமொலியாக
முன்னவன் தான்கிருபையின்ற றன்மனமகிழ்ந்து 13

கத்தவனேபாற்கடலிற் கன்சில்மகுபிய்யா
உத்தமகுருசையிதிற சூலுவந்துசொன்னார் 14

எத்திசைக்கும்பொருள் விளங்கி யாவரும்வணங்கி
இசுலாங்குலத்திலனை வோருமொலியாக 15

பேர்பெருகும்பிசுதுல்க்குறம் பெறனுலனைவோர்க்கும்
பீருமுகம்மதென்போன் பிரியமனமுற்று 16

ஆதியருள்தூதரையும் யார்கள்குத்துபொலியும்
அனைவோரின் அடிபணிந்து அடியேன்றமிழுரைத்தேன் 17

வேதஇசுலாத்தின்குல மானவரேவிள்வேன்
வெற்றியுள்ளபிசுமில்க்குற மெத்தக்கடலறிவு 18

அறிவானபொருள் தேடி அலைந்தலைந்துசாவார்
அறிவிருக்கும்தலமறியா தாவிவீணேபோவார் 19

குறையாதபொருளைரெம்பக் கொள்ளையிடஆசை
கொள்ளையிடப்பொருளுமில்லைக் கொடுப்பாருமில்லை 20

கொள்ளையிடப்பொருள்தேடிக் குவலயத்திலலைந்து
கொள்ளைகிடையாமல் மனக்குறையாலேவாடி 21

விள்ளாமல் துயரமதி லிறந்து போகவேண்டாம்
வேண்டுமட்டும்கொள்ளையிட விட்டானந்தவீட்டை 22

அந்தவீட்டின் ரத்னமலை அனந்தங்கோடிகுவியல்
எந்தமட்டுங்கொள்ளையிட எவர்க்குமனப்பொருத்தம் 23



திருடமனமுள்ளவர்கள் திருக்கலிமாப்பார்த்து
திருடமட்டுந்திருடிக்கொள்ளத் திருவாக்குங்கொடுத்தான். 24

திருடவலுவில்லாரும் தெளிந்துஒலியாதார்
திருக்கலிமாத்தெளிவாகத் தீனவர்க்கேயுரைத்தான் 25

ஆராய்ந்துநினைவுடைய நிலையை அறிவீரே
அறிவுக்குள்ளே அறிவான யறிவையறிவீரே 26

பராபரந்தனிலே பஞ்சவன்னமாகி
வேருநாராய்முளைத்தஇதழ் வித்தையறிவீரே 27

தீனவரேபிசுமிலதின் செய்தியறிவீரேல்
திருக்கலிமா அறுநான்கு ஜெயஎழுத்தையறிவீர் 28

எழுத்தெழுத்தின்பொருளுமென்ன எழுத்தினிறமென்ன
எழுத்தெல்லாம்உடலுக்குள்ளே எங்கேயெங்கேநிற்கும் 29

எழுத்துச்செய்யுங்குணங்களென்ன எதற்குமுதலெழுத்து
எழுதாத அலிபெழுத்தி னிடத்தை அறிவீரே 30

தெழுகைமுரீ துஎன்ன தாலிபுநம்கூத்துமென்ன
துய்யவுருப்புடன்ஹறுபு உறுக்காபோடேழும் 31

எழுவகைப்பொருளறியார் ஜாகிலாகுமென்ன
இதையறிந்தால்சாகிதா முசாகிதாவுமென்ன 32

முசாகிதாமுருக்கபா முஜாஹாவுமென்ன
முக்காமிலாமுவாசிலா முபாக்கியாவுமென்ன 33

எழுவகைப்பொருளுமற்ற விதத்தையெல்லாமுரைப்பேன்
இறைநாமம்பிசுமிலதின் பெருமைசொல்லக்கேளும் 34

பிசுமிலுடன்கலிமாவும் அலிபுநிலைமூன்றும்
வேதக்கடலாதியருள் விபரநிலைதன்னை 35

நீதமுடனறியார்கள் நெடுநாளும்பாவி
நிசமாகபிசுமில்நிலை கலிமாமுரீதறிந்தால் 36

துசுமனென்னும்இபுலீசின் தோஷமணுகாது
துய்யவனினருள்பெற்றே சுகமாகவாழ்வீர் 37

நிசமாகஈமானும் நிலைக்கும்பிசகாது
நித்தனருள்பெற்றுச்சொர்க்க நெடுநாளும்வாழ்வீர். 38

உலகுதனிலேவருமவுத் தாகுமந்தநேரம்
உண்மையுடனேதியவர் உலகில்மவுத்தானால் 39

குலமிழந்துகுவலயத்தில் பாவிகளென்றாலும்
குலமான சகீதுடைய கோத்திரத்திலாவார் 40

பிசுமில்லாகிற்றகுமா னிற்றகீமெனப்பேசி
இயப்புவது இறைநாமம் பத்தொப்பதுஎழுத்தாம் 41
உயிர்வானவோரெழுத்துக் கோரறிவுமுண்டு
நிச்சயமாயறிந்திருந்து நிலத்தில்மவுத்தானல் 42
துட்சணமாய்கொடுநரகம் பத்தொன்பதுநாவும்
தூர்படவே நீக்கிவைக்கும் துய்யோனருளாலே 43
அறிவானபத்தொன்பது விபரமறிவதென்ருல்
அழகானஷரீ அத்துடன் அன்புதரீகத்தும் 44
அதுமேலே அகீகத்தென்று மஹரிபத்துமாகும்
ஆதியுடன்முஹப்பத்தென்ற முகுத்தியாத்துமாகும் 45
ஏறுகின்றபாதைநிலை யியம்புமிதுவாகும்
ஏதமாகவணக்கநிலை யெட்டுமக்காமுண்டும் 46
இலங்குகின்றநாசூத்து மியம்புமல்க்கூத்தும்
இதுமேலேஜபறூத்து லாகூத்துமாகும் 47
துலங்குகின்றஜெம்கூத்து பாகூத்துக்காட்சி
துலையாதஆகூத்து தம்கூத்துஎட்டு 48
அலங்காரம்எட்டுமக்காம் அறிய நன்ருய்ச்சொன்ன
ஐந்துவகைதிக்கிர்முறை யறிவும்வகைகேளும் 49
கலங்காததிக்றுஜல்லி கல்பியுடன்றாகி
காட்சிபெற்றசிற்றியுடன் கபீயுத்திக்கிர்ஐந்தும் 50
ஐந்துமிதுவணக்கநிலை ஆரும்சொன்னபாதை
அழகுமக்காம்சொன்னதெட்டும் பத்தொன்பது அறிவாம் 51
பத்தொன்பதைஅறிந்தாலும் பிரிவறியவேண்டும்
பாதைமக்காமுடவணக்கம் பங்குவகைகேளும் 52
பங்குகளுமதினுடைய பாங்கானயாதும்
பார்வைதனிற்ரேணுவது பலன்பெறுநாட்கெடுவும் 53
சிங்காரமாகவெல்லாஞ் சிறப்பாகவிரித்துச்
ஜெகமறியசெய்மிதிற சூலியப்பிஞரே 54

வசனம்

இனிமேல் பங்கு நாம் விபரஞ் சொல்கின்றது முந்தினபாதை ஷரீ அத்துக்கு முந்தின மக்காம் நாசூத்துக்கு முந்தின வணக்கம் திக்கிர்ஜல்லியென்றும் அதின் விபரத்தையும் யதையும் பிரித்துச் சொலுகிற விபரத்துதுக்கும் மறைபொருளரன (கவி) முந்தினவிபரம் இசுலாமான பேர்களுடைய அடையாளம் சொல்கின்றது.



விருத்தம்.

வித்தில்லா மாமரந்தான் மூனைத்தவாறும்
விருட்சத்தில் அறுநான்கு பணறின்வாறும்
கொத்தோடே பணர்தூரு கொண்டவாறும்
குவலயத்தில் தீன்குலம் தானவாறும்
எத்தனையோ கோடியிலே யிதழின்வாறும்
எண்ணுமலே யெழுதும் பொருளின்வாறும்
பத்தோடே இரண்டுபண நிலைத்தவாறும்
பழமொன்று திண்ணுமல் தின்றவாறும்
உற்றபணர் பனிரண்டி லேறுவாறும்
ஒத்தமலர் பூத்ததுவே நற்றுவாறும்
சத்தமாம் நத்தினதை நத்துவாறும்
சாவாமற் சாவுமுன் சாவுவாறும்
எத்திசையு மில்லாத ஊரின் வாறும்
எடுத்தாடும் பாதையின்மே லேறுவாறும்
இத்தனையுங் குறையாம லறிந்தபேரை
இசுலாந் தங்குலமென்று இயப்பலாமே.

கண்ணிகள்.

முந்தினதுஷரீ அத்தின் மொழிவிபரமென்ருல்
முதற்கலிமாச்சொல்லி ஈமான்கொண்டிசுலாமாகி. 1
ஆறிரண்டுபொருளறிந்து அதன்படியே நடந்து
அல்லாஒருவன் அழியாதவனேயென்று. 2
நின்னயமாய்வணக்கமென்று நினைவுகொண்டுநாடி
நீதிநாசூத்தென்றமக்காம் இடதுமார்பைநோக்கி. 3
வாயாலேயோதுகில் திக்கிறுமேல்நினைவாய்
வணக்கமுடனேதுவதும் வழமையுள்ளதெல்லாம். 4
மாயுமுன்னேமாய்கிறது மதிழ்ச்சிகுறலேசசை
மறைகளெல்லாப் ஒதுகிறது மார்க்கம்வழியாகும். 5
நார்புகழும் நபியிறசூல் நடந்தஷரீ அத்து
நாசூத்துமக்காம்திக்கிர்ஜல்லி நமக்கடையாளம். 6
அடையாளமுதல்வழமை யாகும்ஷரீ அத்து
அதைச்சேர்ந்தஐந்துதிக்கிர் ஐந்துயாதுமுண்டும். 7
இடதுமார்பைநோக்கி வலமாகத்தலைசுழற்றி
யேத்தயிலேஇருவிழியும் புருவத்திடைநோக்கி. 8

திடமாக இருநூறு யாதுமுடிவானுல்
திருக்கியேதாழவா யிட துதிமிர் திலேயிலேத்தி 9

மடக்கியிருபார்வைகுறை யாமலிடமார்பில்
மகிழ்ந்தூணிப்பார்க்க அதில் மலருமொன்றுதோன்றும் 10

தொடுக்குந்திக்கிறிதுநாமம் பிருக்காத்தியாகும்
தொனிபாகவுன்னியுன்னிப் புவிநோக்கிச்செய்தால் 11

ஒடுக்கமுறையிதுதானே ஓதுகிறதாகும்
உன்னியுன்னியெழும்புவது உயர்பாசானபாசமென்பார் 12

மடக்காமலிருந் துசெய்தால் மறுகூபியிதுதான்
மறுதோழிலடித்துச்சிரம் முயர்த்துவதுதமரீ 13

முடுக்காகஐந்துவகை யாதறியச்சொன்ன
முன்னெழுத்தையிருத்துமுச்சில் முடிவெழுத்தையுயர்த்த 14

உண்ணியுன்னிஓயாமல் ஓதும்யாதுஐந்து
ஓதுவதுலாஇலாகா இல்லல்லாகுஒன்று 15

அல்லாகுஎன்பதொன்று ஆதமென்பதொன்று
அப்புறமும்இல்லும் அகுமதுமுகம்மதைந்தாம் 16

அகுமதுமுகம்மதென்ருல் ஐந்துப்ஷரீஅத்தாம்
ஆறிரண்டுமாதப்தவஞ் செய்யமலர்காணும் 17

வகையானமலர்தெரியாதிருந்தாலுஞ்சரியே
வளமான யாதிலொன்றை வருந்தி லட்சமோதில் 18

ஓயாமலோதினவர் உம்மத்தவர் நிஜமாம்
ஒழுங்காகஇந்தமுறை தெளித்துவழமானுல் 19

மாயாமலமாயுமன துள்ளமதியோர்க்கு
மகத்வமானதரீக்கத்ததின் மகிமைசொல்லக்கேளும் 20

வசனம்

இரண்டாவது பாதை தரீக்கத்துக்கு இரண்டாவது மக்கம் மலக்கூத்துக்கு இரண்டாவது வணக்கம் திக்கீர் கலபியென்றும், அதின் விபரத்தையும் வணக்கத்தையும் யாதையும் பிரித்துச்சொல்கின்ற விபரத்துக்கு மறைபொருளான (கவி) இரண்டாவது ஆலிப்களுடைய அடையாளஞ் சொல்கின்றது

விருத்தம்

அறுநான்கு பணறுள்ள மரததின்வாறும்
அந்தமரப் வைத்தவனே உண்டவாறும்



ஒருபத்து ரண்டுபணர் பிரிந்தவாறும்
உள்ளஇதழ் துகையறிந்து ஓதுவாறும்
அறுபத்து நாலுகலே யோடும்வாறும்
அட்டதிசை பொருந்தியே நிற்கும்வாறும்
மரமாக அட்டதிசை யாடும்வாறும்
வட்டத்தில் உருவைந்து பிரிந்தவாறும்
இநவாலும் தலேயொன்று இருக்கும்வாரும்
இருசுழியும் ஒருசுழியா யிலங்கும்வாறும்
உறுவில்லா துருவையுறு வறிந்தவாறும்
ஓசையொன் ரேயாம லோதுவாறும்
வாருக வாசிவட்ட மிட்டவாறும்
வான்புவியும் காணமல் மறைந்தவாறும்
ஆருய்ந்து இப்பொருளேச் சொன்னபேரை
ஆலிமென் றுலகத்தில் அறியலாமே

கண்ணிகள்

திறமானதரீக்கத்தின் விபரமென்னவென்ருல்
தீனுனகலிமாவில் அறுநான்குஎழுத்து 1

பரவுடலிற்றரிக்கும் நிலே பறுலுபனிரண்டும்
பாங்குடையவிபரமுற்ற பரன்மறையின் பொருளும் 2

தன்னுக்குள்ளேதனேயறியத் தாய்தகப்பன்பங்கும்
தவமறியஇறையறியத் தலேமைநிலேயறிய 3

மன்னரானநபிபின் பங்கும் மலக்குகளின்பங்கும்
மற்றுமுள்ளபொருளேயெல்லாம் பிரித்துநன்ருயறிந்து 4

கற்றவனேவணக்கமென்று கருத்துக்கொண்டுநாடி
கபிதிக்கிர்வாயினுள்ளே காதுமட்டுங்கேட்க 5

அல்லும்பகலோயாமல் வாயினுள்ளேதிக்கீர்
அதற்கிரண்டாமானமக்காம் மலக்கூத்திருசாசி 6

இருநாசிநடுநிலேயி லிருபார்வையிருத்தி
யேத்தகுதறத்துமல ரிருதயத்திலேற்றி 7

பார்த்தல்லவோவணங்கின்றது கபிதிக்கிருமும்
பயமானதம்முநிலே பாதைவெளிகாண 8

ஜயங்கொண்டங்கேறுகின்ற ஏணிப்படியென்று
ஏத்தமுள்ளதர்க்கத்தென்றே இதுவுமறிவீரே 9

இதுதானேதரீக்கத்தின் வளமைநிலையாகும்
இவ்வணக்கம்செய்யுமுறை யாதுவகைஐந்தும் 10

இதாகஇல்லும் அல்லும் அல்லாவென்பதொன்று
இன்னமிதே அல்லாகூ ஹக்கல்லாகுமாகும் 11

ஏதசஹும்ஒருயாதை இருதயத்தில்பிடித்து
எப்போதுமிதைத்தானே யெடுத்தாடும்விபரம் 12

விபரமென்னவாயினுள்ளே விள்ளாமலோதும்
விளம்புவதிலவர் நினைவை விட்டும்பிசகாமல் 13

இருபார்வையிருமூக்கு நுனியிலதைப்பொருத்தி
எதிராகநடுமார்பின் குழியில்விழும்விதமாய் 14

தளம்பாமலிருபார்வைத் தலமும்ரண்டும்பொருந்தத்
தலைமடக்கிப்பிசகாமற் றவநிலையைப்பொருத்தி 15

இருந்துவிழிபிசகாமற் பொருந்திப்பார்த்துவருகில்
இருபார்வை நிலைதனிலே யிலங்கிமலராடும் 16

இருநூற்றிருபதுமே லேறச்செய்யும்யாது
இப்படியேயிருமூன்று மாதமிதின்கெடுவாம் 17
உருவானதோத்திரங்கள் தெரியாதபேர்கள்

ஓதினதைஒருநூறு யிரமுமதைஓத 18
குருவாமுகம்மதின் றங் குலத்திசுலாமாம்
குதா இறையேசொன்னபடி யுயர்ந்தகுலமாகும் 19

இதுதான் தரீக்கத்தென்றே யெடுத்துநன்றாய்ச்சொன்னேன்
இதமாகஹக்கீகத்தினி யெடுத்துறைக்கக்கேளும் 20

வசனம்

மூன்றாவதுபாதை ஹக்கீக்கத்துக்கு மூன்றாவதுமக்காம் ஜபறூத்துக்கு மூன்றாவதுவணக்கம் திக்கீர்றூஹியென்றும் அதின் விபரத்தையும் வணக்கத்தையும் யாதையும் பிரித்துசொல்லுகின்ற விபரத்துக்கு மறைபொருளானகவி

இனி ஆபிதகளுடைய அடையாளந் தெரியச் சொல்லுகின்றது.

விருத்தம்

குடியில்லாவீட்டில் குடிகொண்டவாறும்
கொடியஇருளகல வொளிவிலங்குவாறும்
அடியோடேகலையெல்லா மகன்றவாறும்
ஐந்தெழுத்துமூன்றெழுத்தா யமைத்தவாறும்



குடியானபேர் நிலைமை யற்றவாறும்
கொற்றவனும்குடியொன்று தனித்தவாறும்
வடிவொன்றுநிறமூன்று கிளையின்வாறும்
வருந்தியொன்றையொன்றுதான் வணங்கும்வாறும்
முடியாதகலையோதத் தொடர்ந்தவாறும்
முனைதப்பித்தாழ்ந்தகுல மானவாறும்
அடியோடேசாய்ந்தமர மெழுந்தவாறும்
அத்தனையுங்கனியாகச் சொரிந்தவாறும்
படியாதவேதகலை பாடுவாறும்
பார்க்காமல்பார்த்ததொரு கூற்றின்வாறும்
அடியோடேயிப்பொருளைச் சொன்னபேரை
ஆபிதென்றே யுலகத்திலறியலாமே

கண்ணிகள்

வாகுடனே அக்கீக்கத்தென் றெவருஞ்சொல்வாரறியார்
வகைவிபரந்தெரிய நன்றாய் வகுத்துச்சொல்லக்கேளும் 1

துகையான உடலுயிரு முழுதுமுள்ளதெல்லாம்
துய்யவன்றன்பாங்குஅல்லா தோழர்நபிபங்காம் 2

நகையாதநாயன்பங்கு நமக்குப்பறுலாகும்
நாயன்றன்வணக்கமெல்லாம் நபிக்குச்சுன்னத்தாகும் 3

பகையாதநபியிறசூல் பங்குசுன்னத்தாகும்
படைத்தவனைவணங்குமது பறுலுநிலையாகும் 4

வகையானகலிமாவில் வரிசைரண்டுளழுத்து
வல்லவனும்நபியுமொன்றாய் வரைந்தவுயிரெழுத்தே 5

ஜெகத்திலுள்ள நன்மைதின்மை சேரத்துகையெழுதும்
சிங்காரமலக்குகளும் செய்தியறியாமல் 6

சுகமாகஅவரவர்கள் செவியிலும்கேளாமல்
சொல்லாதேவாய்திறநது சுழன்றுவருமூச்சில் 7

எள்ளளவும்பிசகாமல் இருதயத்தில்நினைவில்
எத்துவதுஇறைபறுலாம் இறக்கச்சுன்னத்திரசூல் 8

ஆந்துமத்தில் ஒருமூச்சங் கசதியுடன்போனால்
அந்தமூச்சு அச்சணமே யழிந்துமவுத்தாகும் 9

பாத்திரமாயொருமூச்சு யாதுதப்பிப்போனால்
படைத்தவன்கிருபையுட பரமதுகிட்டாதே 10

பாத்திரமாமுச்சியது தப்பாமலிருந்தால்
பக்தியுடன் புக்தியுள்ள பாங்குதீக்கீறாகு 11

முத்தொளிவுஜபறாத்து மூன்றுமக்காமாகும்
மூகத்துநடுப்புருவத்திடை மூறுக்கிவிழிநோக்கி 12

ஒத்தநிலையாம் அலிபை யுவந்துமுச்சுடரை
ஒதுங்காமல் நினைவுக்குள்ளே யோர்மைநிலைநிருத்தி 13

எத்தேயகாலமுமே யுறக்கமில்லாநினைவு
இலங்குதுபார்முச்சுடரும் இறைநபியும் ஆதம் 14

கத்தநினையறியும்ஹக்கீக் கத்துஜபறாத்து
காட்சிதிக்கிர்றாகியுட கணக்குஇதுதானே 15

இதைச்சேர்ந்தயாதுவகை ஐந்துவிறமுண்டும்
ஏற்றிறக்கம்யாக்கரீமு யாறகீமுமாகும் 16

மாற்றுந்தவம் திறலகீமும் மகுபூபுமாகும்
மனமகிழ்ந்துஹக்கில் மவுஜூதோடேஐந்தே 17

இதுயாதுஐந்திலொன்றை வெளியிலும்விள்ளாமல்
விடுமூச்சில்விசைவிசையா யேற்றிறக்கம்செய்ய 18

இதமாகமுக்கோண மாயிருந்துகொண்டு
இருமுழங்கால்மீதிலவர் இருமுழங்கையிருத்தி 19

விதமென்னவிற்போலே வளைந்துதலைகுனிந்து
விழித்துஇருபார்வைநடு புருவத்திடைநிறுத்தி 20

அதுநிலையில்அலிபான முச்சுடரைநினைந்து
ஆடிவரும்மூச்சிலவர் யாதுநிலைதொடுத்து 21

இதமாகஇருநூற்றி ஐம்பதுயாதாகும்
இப்படியேமாதமொன்று ஏற்றிறக்கச்செய்தால் 22

அதியமுள்ளமுச்சுடராய் அலிபுமப்போதோணும்
அந்தநிலைதெரியாம லிருந்தாலும்சரியே 23

இந்தவிதமாயிருந்து எடுத்தோதுப்யாதை
இருபத்தையாயிரந்தா ஞேதிமுடிவானல் 24

முந்தமுகம்மதுதம் சுன்னத்துஜமாவாம்
முகம்மதர்தங்குலமாகு மோசமில்லையென்றும் 25

இதுதானே ஹக்கீத்தென்றேயெடுத்துநன்ருய்ச்சொன்னேன்
இதமாகமகரிபத்தை யினியுரைப்பதாவே 16



### வசனம்

நான்காவதுபாதைமஹறிபத்துக்கு நாலாவதுமக்காம் லாகூத்துக்கு நாலாவதுவணக்கம் திக்கீர்சிற்றியென்றும் அதன் விபரத்தையும், வணக்கத்தையும் யாதையும் பிரித்துச்சொல்லுகின்ற விபரத்துக்கு மறைபொருளான கவி இனி காமிலானபேர்களுடைய அடையாளஞ்சொல்லுகின்றது.

### விருத்தம்

ஆறுநாருயிரமொன் ருனவாறும்
ஆறுகலைநாறு மூன்ளுடும் வாறும்
நேரெதிரேநின்றவர்கள் ஒளித்தவாறும்
நின்றவர்கள் புவிநோக்கிப் படுத்தவாறும்
பாராமற்பார்த்தபூ மலர்ந்தவாறும்
பத்துநா றெட்டுமலர் மலர்ந்தவாறும்
வீருனஇதழைந்து விரிந்தவாறும்
வெண்டாளக் கோட்டைகுடி கொண்டவாறும்
பூரணத்தை காணுமல் கண்டவாறும்
புதுமையென்றபேர்கூடப் புகன்றவாறும்
மாருதமதுவெறியைக் குடித்தவாறும்
மந்திரகலை யெந்திரத்தை மறந்தவாறும்
ஏருதகொலுமீதி லேறும்வாறும்
இருபேரும்ஒருகுதிரை யேறும்வாறும்
காரணமாயிருப்பொருளைச் சொன்னபேரைக்
காமிலென்றெதிர்கொண்டு காணலாமே

### கண்ணிகள்

எத்தமுள்ளமஹறிபத்து எந்தவிதங்கேளும்
இலங்குதுபார்லாகூத்து இருபார்வைமூடி 1

பார்த்தாலோவிழிசுழட்டிப் பாதாளநிலையில்
பயகாம்பர்நுபுவ்வத்திலே பதினுவிலொன்றும் 2

தோற்றுதுபார்காட்சியெல்லாம் தொகைகளெல்லாமறிந்து
துலங்கும்இசுலாத்தினடுத் தெளிவொளிவையறிந்து 3

கலங்காதநினைவுஅல்லா காட்சிநபியிறசூல்
ஹக்கும் அதுநபியும்அது கருத்துட்பிசகாமல் 4

மலங்காமல்மறக்காமல் மறுபேச்சில்லாமல்
மாநிலத்தில் ஊனுறக்க மானதொக்கமறந்து 5

இலங்கும்நிலைலாகூத்து மகரிபத்துவெளியில்
ஏகமெல்லாமறக்கும்திக்கீர் சிற்றியிதுதானே 6

இதுதானேமஹரிபத்து இதற்குஐந்துயாது
இருத்தியேகூ அல்லாகூ அல்லாவும் இன்னப்கூவும்ஹக்கும் 7

அந்தகூவைமாற்றுவது அழுத்திக்குன்கூவுதும்
தினதினமும்குன்னென்பதை அணுப்பிசகாதிதுவும் 8

இந்தயாதுஐந்திலொன்றை யிருதயத்திற்பிடித்து
இருபார்வை நுனிமூக்கு மார்குழியிற்றரித்து 9

பந்துமலர்விருசுழற்றிப் பார்வையுள்ள இடத்திற்
பார்த்துவிழிமுழிப்பதிலு மூடுவது இதமாய் 10

இந்தவகைஇருநூற்றி யிருபத்தைந்துயாது
இடையிசகாதொருமாதம் இந்தவமேசெய்தால் 11

இந்துகதிரொளிபோலே யிலங்கிவட்டந்துலங்க
ஈரேழுநுபுவ்வத்திலொன் றெதிராகத்தோன்றும் 12

இந்தவகைதெரியாம விருந்தாலுஞ்சரியே
இந்தயாதைஈரேழும் ஆயிரமிப்படியே 13

சிந்தாமற்செயப்படுத்தும் பேர்கள்மதிமரப்பார்
ஜெகமறிய செய்யிதிர சூலுறைத்ததாலே 14

இந்தவகைமஹரிபத்தென் றிதையறியச்சொன்னேன்
இதற்கதிகம்முகப்பத்தின் விதமுமறிவீரே 15

வசனம்

ஐந்தாவதுபாதை முஹப்பத்துக்கு ஐந்தாவது மக்காம் ஜெம் கூத்துக்கு ஐந்தாவதுவணக்கம் திக்கீர்கபியுடைய முதலாவது வகையும் அதின்வணக்கமும் யாதையும் பிரித்துச்சொல்லுகின்ற விபரத்துக்கு மறைபொருளான கவி

இனி குருமார்களுடைய அடையாளஞ் சொல்லுகின்றது.

விருத்தம்

நாட்டமிரண்டு மொன்றுனவாறும்
நடுவிலொருகலைமானைத் கேடும்வாறும்



ஓட்டமாயிரு வேடன் வந்தவாறும்
ஒருமானும்ஒருகிணற்றி லொளித்தவாறும்
தேட்டமாயோடினவர் திகைத்தவாறும்
திருமானைத்தீண்டாமற் பிடித்தவாறும்
ஆட்டமாயறுக்கமா லறுத்தவாறும்
ஆருகவைத்தொன்றைச் சமைத்தவாறும்
கூட்டமாய்க்கூடியபே ருண்டவாறும்
கூட்டமொன்றில்லாமற் றணித்தவாறும்
போட்டபங்காறுமொன் றுனவாறும்
பெண்மானைக்கலைசேர்ந்து புணர்ந்தவாறும்
காட்டினிடம்புலியைமான் றேடும்வாறும்
கானகத்துக்குப்புலியைமா றுண்டவாறும்
நாட்டிலேஇப்புதுமை தன்னைச்சொன்னால்
நாமவரைக்குருவென்று நாடலாமே,

கண்ணிகள்

அலங்காரப்பொருள்தெரியு மறிவுநிலைதெரியும்
ஆதியின்றன்முஹப்பத்தென்ற ஐந்தாமக்காம்விபரம் 1
இலங்குதுபார்ஐனுல்எக்கீன் ஏகனிலைசுழட்டி
இடைமூடிஜெம்கூத்து ஹக்கும்என்னிலையில் 2
வலமிடமும்நடுநிலையில் வைத்துப்பிசகாமல்
வருமூச்சை அடக்கியேயுள் ளிருத்திமனம்பார்க்க 3
துலங்குதுபார்குதறத்தது ஆயிரத்தெண்மலராம்
சுல்தான்நசீருவென்ற துய்யநுகத்தொளிவு 4
நிலையாகவே அலிபு நீண்டுநடுநிலையில்
நிற்கிதுபார்நூரின்வட்டம் நுக்த்துக்கருதாதம் 5
தலைமேலேகூவுமது தரித்தின்கீழ்மீமாம்
தவநிலையிற்பெரிதான முருஜிதாத்துமாகும் 6
கமலமென்றமீம்தலையிற் காணும்விண்ணுலகில்
காணும்ஐந்துறாகில்நடுக்குத் தூசிகுதுபுதையம் 7
இதுதானேமதிவிருத்த முச்சுடரைந்தெழுத்தும்
இன்னங்கலிமாவுயிரும் காவும் கூவும் கீயும் 8
அதுதான் அல்லாகுவென்று அழகானகூட்டில்
அங்கமுருத்தெரியிதுகண் ணுடிக்கலிமாவில் 9

அதுதானேயவனொளியி லன்றுபிரிவான
அதுதான்குத்தூசிமுன்னே நாமிருந்தருபம் 10

அதுதானேபால்கொடுக்க ஆச்சரியமாகும்
அதுதானேயறிவுசொல்லும் அறுதியினுள்சொல்லும் 11

அதையறிந்தால்ஆகிறத்தில் அதிதீதாறுண்டும்
அறியார்க்குதீதாரங் கணுவுங்கிடையாது. 12

இதைத்தான்குத்தூசியென்று இருதயமாய்ச்சொன்னேன்
இன்னம்வகைசொல்லுவதை யெல்லோருங்கேளும் 13

எல்லோர்க்குமுபகார மாகச்சொல்லும்விசனம்
இதிலும்ஐந்துயாதுண்டதில் இதற்குமுன்றுயாது 14

சொல்லாமல்ஹாஹியென்று சுழித்துஹாஹுவென்று
சுழித்தமுச்சையாகூ அல்லா வென்றுசொல்வதொன்று 15

இந்தயாதைக்குருவுரைத்தே தம்மாகத்தொடுத்து
இருசுடருமேத்தியுள்ளே நடுச்சுடரைத்தோற்றி 16

ஒத்துவரும்வாசியுடன் உள்ளெழுத்தைப்பூட்டி
உறுதிநினைவலையாமல் உள்நிலையில்மாட்டி 17

பத்திபுத்திபார்வைவளம் பலதுமொன்ருய்த்தொடுத்து
பத்துப்பத்தாப்பத்துஉரு பத்துதிரமானுல் 18

மெத்தப்பெரிதானவகை மேலவன்ருனறிவான்
மேலானபாதையிது மேலதிகம்மெத்த 19

ஆலமதிலுள்ளகுலம் ஆர்குலமென்ருலும்
அச்சணமேதீன்குலத்தி லானவொலியாகும் 20

நால்மறையிலிறையுரைத்த உட்பொருளுமிதுதான்
நாயன்றன்னைவணங்கச்சொன்ன நடப்புமிதுவாகும் 24

உத்தசெய்தியாகஇதை ஒளியாமற்சொன்னேன்
உலகவரேயிதைச்சேர்ந்த பாகூத்தைக்கேளீர் 25

வசனம்

ஐந்தாவதுபாதை முஹப்பத்தைச்சேர்ந்த ஆருவதுமக்காம் பாகூத்துக்கு ஐந்தாவதுவணக்கம் திக்கீர்கபியைச்சேர்ந்த இரண்டாவது பிரிவையும் அதின்வணக்கத்தையும் யாதையும்பிரித்துச்சொல்லுகின்ற விபரத்திற்கு மறைபொருளான கவி



இனி குருமார்களுடைய அடையாளஞ் சொல்லுகின்றது

விருத்தம்

வீட்டிலே யொருவன்குடி யிருக்கும்வாறும்
வெளியிலிருபேர்காவ லிருக்கும்வாறும்
கூட்டியேமூவரையும் சேர்க்கும்வாறும்
கூடாமல்மூவரையும் பிரிக்கும்வாறும்
ஆட்டியேயிருவரையும் அமர்த்துவாறும்
ஆறிரண்டுபேரொருவ ரானவாறும்
ஏட்டிலேயெழுதாத கலையின்வாறும்
எழிரண்டுரேகையொன் ருனவாறும்
நாட்டாமனுட்டுமொரு வாசல்வாறும்
நான்குபத்துமூன்றுவீ டானவாறும்
வெட்டாதகுளத்தில்மான் குடிக்கும்வாறும்
வீதியைந்துகோட்டையை மான்சுமக்கும்வாறும்
கட்டாத கொலுமேடை காணும்வாறும்
கன்னிகொலுவிருந்து கதைபாடுவாறும்
பாட்டிலுள்ள பொருளறிந்து சொன்னபேரைப்
பாருலகில் குருவென்று பணியலாமே

கண்ணிகள்

இதைச்சேர்ந்ததின்னம்ஒன்று யாகூத்துநிலைமை
இதுவுந்திக்கீர்கபியாகும் முஹப்பத்துவெளியில் 1
மதிபோலேஐனுஎக்கின் நிலைநிறுத்திமூடி
மனதுக்குள்ளேநினைவுதன்னை மகிழ்ச்சிகொண்டுபார்க்க 2
விதமாகப்பதினன்கு நுபுவ்வத்தப்போதெரியும்
வெற்றியுள்ளகல்புக்கடல் புத்திஈமான்வட்டம் 3
அதுதானேவெள்ளைவட்டம் ஒங்காரஈமான்
ஆதமல்லோபச்சைவட்டம் அதிற்பவளம்நபியும் 4
மதிபோலேமுச்சுடரு மானநிறம்மூன்றில்
மக்காமின்மகுமூதா நடுநிலையின்நீலம் 5
பதியெல்லாம்புகழுமகு மூதுதிருவடிவிற்
பளிங்கிலுந்தெளிவான பரன்பொருளினொளிவே 6
இதுதானேநூகுநிலை இயாதுநினைவாகும்
இரவுபகலாகுமிது இருநாகிவாய்வு 7

நினைவுமது நினைவுதன்னை நினைவுகொண்டுபார்க்க
நினைவுக்குள்ளேநிலவுபோல நிற்குமேகண்ணாடி 8

கண்ணாடிக்குள்ளொளிவு காணும் வன்ரூபம்
முன்னாலேநாமிருந்த மவுனமகுத்தூசு 9

அறியும்வகைபாகூத்து அதற்கிரண்டுயாது
அலங்காமல் யாகூவென்று அழுத்திஉயரேத்த 10

குலுங்காமல்யாகூவுடன் கோர்த்துஒருமீமைக்
குலுக்கியாவென்றிருத்தஅந்த கும்மைநிலையேத்த 11

சேர்மானமூன்றெழுத்தின் சேதிசொல்லக்கேளும்
செப்பியதுமூன்றெழுத்து முப்பொருளுமிதுவாம் 12

முப்பொருளுமிதுவானால் முறையாகச்சொல்லும்
முகம்மதென்றுசொல்வது முடிவில்வருமீமாம் 13

மீமுகம்மதுற்றசூலும் விளம்புகின்றதாயாம்
முன்னுரைத்தகூவும்முன்னே னுகும்நம்மதந்தை 14

நாமாகும்யாவென்பது நமதுபிதாஆதம்
நாடுந்தவமுப்பொருளி நவிலெழுத்துமூன்றும் 15

எழுத்துமூன்றும்துகையான இலக்கம்ஐப்பத்தைந்தும்
அந்தலக்கமுலகவருக் கைம்பதைந்துபறுலாம் 16

ஐம்பத்தைந்துஅறுஷேணி யைம்பத்தைத்துபடியாம்
அரியோன்மிகுருஜிலிறை அறுசில்நபியானார் 17

அந்தமிகுருஜிவளப் ஆலத்துள்ளோரறிந்து
அப்படியேசெய்தவமும் அப்படியாமெனவே 18

எந்தஇடம்உலகுமக்கம் ஏணிஅறுஷெதுவால்
ஏறியதார்இறையாரங் கெதுவசனமினவே 19

உந்தியடிஉலகுமக்கம் உயர்ந்தநெஞ்சுகஃபா
எழுந்தேறுள்ஏணிமூன்றில் எழுந்தறுஷுசிரசாம் 20

நல்லமதிசெயலான நாட்டம்நம்மநபியாம்
நடுச்சுடர்நின்றுடுவது நமக்குஇறையதுவாம் 21

நாமந்தநடுச்சுடரை நாடுக்கூடியறிந்தால்
நபியிறைசெய்வசனமிகு ருசுநமக்கிதுவே 22

இந்தமிகுருசுநா மிப்பச்செய்வதிதான்
இதமாகச்சொன்னபடி யெடுத்துச்செய்வதென்று 23

சிந்தாதமதியோர்க்குத் தெரியும்படியுரைத்தேன்
செப்பாதஆகூத்துச் செய்திசொல்லக்கேளீர் 24



வசனம்

ஆறுவதுபாதை முகப்பத்தைச் சேர்ந்த இரண்டாவது பிரிவு ஏழாவதுமக்காம் ஆகூத்துக்கு ஐந்தாவது வணக்கம் திக்கீர் கபியைச் சேர்ந்த மூன்றுவது பிரிவையும் அதின் வணக்கத்தையும் யாதையும் பிரித்துச்சொல்கின்ற விபரத்துக்கு மறைபொருளான கவி.

இனி குருமார்களுடைய அடையாளஞ் சொல்லுகின்றது.

விருத்தம்

வித்திலேவந்திருந்த பொறியின்வாறும்
வீதிவரும்வாசியுடன் சூலத்தின்வாறும்
ஒத்துவருப்ஐந்துமுனளே யிறுத்தும்வாறும்
ஒன்றுவிட்டு நான்குமொன்றுன வாறும்
பத்தெழுத்தும்ஒரெழுத்தாய்ப் பூண்டவாறும்
பள்ளிகொண்டுமேலிருக்கும் பாவைவாறும்
பத்துநாள்ரேகையதி லிருக்கும் வாறும்
பருவமுள்ளஉருவமதில் தரிக்கும்வாறும்
பற்றுநீயேபண்டாரம் ஆடுவாறும்
பரத்தினருள்பாடிவரும் பதத்தின்வாறும்
முத்துப்பச்சைரத்நமணி கோத்தவாறும்
முன்னழகுப்பின்னழகும் பூண்டவாறும்
இத்தனையுக்கண்டதையும் காணுமாறும்
இறந்தபேரெல்லோரும் பிறந்தவாறும்
எத்திசையுப்பொருள்விளங்கச் சொன்னபேரை
யெல்லோருங்குருவென்று இயம்பலாமே.

கண்ணிகள்

இனிக்கேளுப்திக்கீர்கபி முகுதியாய்த்துவெளியில்
ஏழாம்மக்காமான ஆகூத்துவிபரம். 1

தனியவனே அருமதுமாய் ஆதமுமாயான
தந்தைவிந்துதாயுடலிற் றுறுருவாயமைந்த. 2

கருவுக்குள்ளேதரிக்கப்பட்ட நினைவொளிவையறிந்து
கருநிலையிலெழுந்தபுகை கழறுஞ்சுழர்மூச்சில். 3

வருகிறதிற்சேர்ந்துஒன்றாய் மவுலுமைந்துஎழுத்தை
வாசலெல்லாம்நன்றாக வருந்திக்கட்டிப்பார்க்க. 4

தெரியிதுபார்கமலத்துள்ளே சேர்ந்தபத்துஎழுத்து
திரமானகுதறத்துமே விருபத்திஞலெழுத்தும். 5

ஷறத்துமொன்ருய்ச்சமைந்திருக்குந் தவிசகொலுமேலே
சகலகலேயும்பொருந்தி தாத்துசிபத்தொன்ருய். 6

நிறத்திலொளிசுடர்நீதி ஆசிக்குமசசூக்கு
நிற்கிதுபார்கூவும்மீமும் நினேவுங்கருவுமிதுதான். 7

யாருமறியாரேகமாலுல் எனக்கீன்காட்சி
அறிந்தவர்கள் ஆலந்தன்னே அசதியிலும்பாரார் 8

தெரிந்துநன்ருய்ப்பகுந்துசொன்னேன் தீனவர்களறிய
திக்கீர்கபிதிடத்தஆ கூத்திதாமே. 9

இதற்கும்உயிரெழுந்தான யாதுவகைமூன்றில்
இதைச்சேர்ந்தயாதிரண்டு எடுத்துரைக்கக்கேளும். 10

எதற்கும்பெரிதானதவம் இறைநபியுமொன்ருய்
இருப்பதென்னகூவும்மீமும் இணேத்துகும்மென்பதுவ. 11

கதித்தகொருஹாவும்மீமும் கடுகிப்பிடிக்ககும்மாம்
கசகாமற்பிடிக்குமந்தக் கருமஞ்சொல்லக்கேளும். 12

இதுயாதிரண்டிலொன்றை இருதயத்திற்ருெடுத்து
எவ்வளவும்பிசகாமல் இதுமேலேநினேவாய். 13

அதினுடையவளமறிந்து அதைக்கருத்தில்தரித்து
ஆடிவருமூச்சையுள்ளே யடுக்கியதைப்பிடித்து. 14

ஒடுக்கியுள்ளேஉன்னுடலில் ஒன்பதுவழியும்
ஒழுங்காகக்குருவுரைத்த வுரைப்படியேபிடித்து. 15

மடக்கியுடலொடுக்கி சுஜூதிட்டுமனப்பார்க்க
மற்றுமுள்ளபொருள்நிலேயும் மற்றதெல்லாப்தெரியும். 16

உற்றசெய்தியாயுரைத்தேன் ஆகூத்துஇதுதான்
உரைக்காததப்கூத்தை யுலகவரேகேளும். 17

வசனம்

ஆருவது, முக்தியாத்தைச்சேர்ந்த எட்டாவது மக்காம் தம் கூத் துக்கு ஐந்தாவது வணக்கந் திக்கீர்கபியைச் சேர்ந்த நான்காவது பிரிவும் அதின் வணக்கமும் யாதும் பிரித்து சொல்லுகின்ற விபரத் துக்கு மறைபொருளான கவ்



இனிமேல் குருமார்களி னடையாளஞ் சொல்லுகின்றது.

விருத்தம்

ஆதியே அநாதியா யிருந்தவாறும்
அருபமேவுருவமா யெழுந்தவாறும்
தாதுபழம்மாதளேயிற் பழுத்தவாறும்
தான்படர்ந்தகோவையுட கனியின்வாறும்
வாதமுண்டுதாதுபழம் வளர்ந்தவாறும்
வன்னிமரப்கனி தனிலே முளேத்தவாறும்
சோதிமரம்நாலுபண ரானவாறும்
சுருபமுருஐந்துமொன் ருனவாறும்
நீதமென்னும்இலேரண்டு இதழின்வாறும்
நிலேபாதம்நான்குவே ரொன்ருனவாறும்
ஆதிமரமூன்றுநிற மானவாறும்
அந்தமரம்அட்டதிசை படர்ந்தவாறும்
வேதமென்னுப்கனிநடுவிற் பழுத்தவாறும்
வெகுபேர்களுண்டுகுல மானவாறும்
இப்புதுமைஉலகத்திற் சொன்னபேரை
எல்லவருங்குருவென்று பணியலாமே

கண்ணிகள்

அறிந்தகொள்ளச்சொல்லுகின்றேன் மூக்தியாத்துவெளியில்
ஐந்தாம்வணக்கம்திக்கீர் கபியின்முடிவாகும் 1
பொருந்துமெட்டாம்புகழும்மக்காம் தப்கூத்துவிபரம்
போதமுந்தனுதநிலேபுகல் யாகுப்நுக்தொன்று 2
அந்தக்கருநாதமணி சூடுநினேவொளிவு
அதுதானேயுதிரமெல்லாம் அணிந்துடலாய்த்திரண்டு 3
விந்தையுள்ளகருவுக்குள்ளே விளேத்தசூடுநினேவு
வேகமுடலெங்குமியிர் வெதுவெதுத்தேநிற்கும் 4
அங்கமெல்லாப்நபியாகும் அவனினேவேறாகு
அதுதானேகருநினேவு ஆசையுடனறிவு 5
கருநாதம்நுதல்நடுவே காபக்கபுசைனி
கண்ணுனபார்வையொளி ஹக்கென்றறிவீரே 6
இன்னங்கருநாதமினிப் பேச்சுமூச்சுப்பார்வை
இரக்கமுடன்கோபப்கேள்வி எதுவுமதுவாகும் 7

தன்னையறிந்தல்லவோ தனதுபொருளறிந்தால்
தானேதான்தானேதான் தம்பிரானுமாகும் 8

கருநிலையிற்கருநினைவைக் கருவதினலறிந்தால்
கடிதானபாவமெல்லாங் காற்றிறபஞ்சாய்பறக்கும் 9

அறப்வைத்தங்கப்போலே அங்கமுடலாவி
அனியாயமடுத்தாலும் அழுக்கைக்கழுகப்போமே 10

கருநிலையையறியாரே கழுப்புபித்தனைசெம்பு
காய்ச்சிநூறுபுடமிட்டாலும் கழும்புபோகாதுவமை 11

ஒருபத்துஒன்பதிந்த உயர்ந்தறிவுநிலையை
உலகமேல்லாமறியவென்று உவத்துரைத்ததாமே 12

உவந்துரைத்தவிதத்துக்கெல்லா முற்றசெய்தியாக
உலகமெல்லாமொலியாக வுவந்துரைக்கும்விசளம் 13

உரைத்தவிதம்இருபத்தெட்டு யாதுயிர்நிலையின்திகம்
ஒன்றதிகமென்றுரைத்த யாதுமிதுவாகும். 14

ஊமையெழுத்தோரெழுத்து ஒருமூன்றுஐந்தாம்
ஓரெழுத்தேயெட்டெழுத்தா யொன்ருனவூமை 15

ஊமையதுஒன்றுமது ஒருமூன்றேயைந்து
ஒருமூன்றேயொன்பதாகி யொன்ருனபொருளாம் 16

மறையானபலகலையு மற்றுமுள்ளமொழியும்
மாநிலத்திற்பாஷையெல்லா மடக்கியொருவெழுத்தாய் 17

எங்குமதுதானாக நிறைந்திருக்கும்பொருளாம்
எங்குமதுபலப்பாஷை யெவர்மொழியும்சரியாம் 18

முறையானவொருபொருளின் முப்பொருளுங்கூடி
முப்பொருளும்ஒன்பதாகி முடிந்தவூமையெழுத்தாம் 19

இதுதானேயாதாகு மிதில்வணக்கம்சொல்வேன்
இதமாகவணக்கமைந்தி லேத்தமுள்ளதொன்று 20

விதமதியவணக்கமது வெளியிலும்வராது
வேதமல்லா மடக்கியுள்ளே விட்டுப்பிரியாது 21

அதியமுள்ளவணக்கம்திக்கீர் கபியதுவுமேதால்
அணுவும்பிசகாமல்மன துட்கருதிற்பொருந்தல் 22

அதையறிந்தபெரியோரை யடிபணிந்துதொழுது
அவர்போலேயதையறிந்து அறிவுக்குள்ளேதரித்து 23

அதைத்தானே அங்கத்துக்கு ளாட்டியோட்டியேற்றி
அதைமாற்றிமன் கூசை மலைகூசாய்த்திருப்பி 24



இருப்பதல்லோகபியின்திக்கீர் யாதுமுடிவாகும்
இந்தமுறையெந்தறிவு மென்றறிவதனல். 25

தறிப்பதுதான்முகத்தியாத்து பாதைமுடிவாகும்
தவஞ்செய்யும்விதத்தையினித் தானறியச்சொல்வேன். 26

இதமாகச்சுகூதுவள மிதையறிந்துதனைமறந்து
இருக்கையிலேஎட்டிதழும் இடையிற்பதினறும். 27

இருபத்திநாலுமீழும் இதில்நடுமிமொன்றும்
இருபதுஐந்துமீழும் இலங்குமுள்ளேநிலையில் 28

உருவமில்லாதொருமீழும் உள்நிலையின்பொருளாம்
ஒரெட்டுரேகையதி லோடிவளர்ந்திருக்கும். 29

சுருபத்தைவளைந்தவட்டம் சுகசோட்டைஈமான்
சுழிகொண்டவட்டத்துமே லிருபத்திஞல்மீழும் 30

அறிவாக அத்தனையு மழகாகத்தெரியும்
ஆயிரத்தெட்டிதழா யிலங்குமலர்மேலே. 31

ககநடுவாய்நினைவுதனிற் கருத்ததனையிருந்த
கலங்கியதுநடுநுக்கதிற் கலந்தேயதுபிரிந்து. 32

தெரியுமந்தவிண்ணுலகிற்றெரியுமந்தப்படியே
தெரியுமதேதிருப்பார்வை திரமாகப்பொருத்த. 33

ஓரேழுவிண்ணுமுயர் படிதிரந்தேயேற
உடையவன்றன்குறுசறுஷும் தறுகாவும்தெரியும் 34

அரியதிரைவிலகும்படி யந்திரக்கூட்டடியில்
ஐந்திதழின்மலரினடு அலிபுமப்போதெரியும். 35

பெரியவனும்பிருதிவையு முற்றதுநாமென்றே
பேதகமில்லாமல்மதி பெற்றிருப்பதென்றே. 36

அறியவர்கள்உலகதனில் மிகுருஜென்றுரைப்பார்
அறியார்கள்ஆலம்வேறே அறுஷுவேறேயென்பார். 37

சரியானமிகுராஜு வுலகவருக்கிதுதான்
சையிதுமுகம்மதுற்ற சூலுரைத்ததாலே. 38

தெரியவென்று தீனவர்க்குத் திறமானவகையைத்
தேடக்கிடையாதரத்ன திரவியமாமலையை. 39

பிரியமுடனேசொன்னேன் பீர்முகம்மதென்போன்
பெரியோன்றன்பிசுமில்குறம் பேசினதென்றறிவீர். 40

இதைத்தானேவுலகினுள்ளே குருவெடுத்துரைத்தார்
இதமானபிசுமில்முத லெந்தவிதங்கேளும். 41

### வசனம்

பிசுமில்க்குறக்காவியத்தில் பிசுமிலெழுத்து (19) க்கு அறிவு (19) உண்டு. அதன்விபரமாகிறது பாதை (6) மக்காம் (8) வணக்கம் (5) ஆக (19) க்கு செய்பாகம் முசாகிதா (28) க்கு தள்ளுபிடி முஷாகிதா (14) போக முஷாகிதா (14) க்கு பலனில்லாமுஷாகிதா (6) போக பலனுகும் முஷாகிதா (8) க்கு யாது (208) க்கு முடிவான யாது (1) ஷாகூது (3) இனி பிசுமிலின் விபரம்.

### இனி பிசுமிலின் விபரம்.

### கண்ணிகள்.

விந்தைபெறும்பிசுமிலதின் எழுத்துமுதற்கடையும்
விளம்பியதுஒருபத்து ஒன்பதுமேசரியாய். 1

அந்தெழுத்துக்கோரெழுத்துக் கோரறிவுமாக
ஆலமெல்லாமறியவென்று அழகாகச்சொன்னேன். 2

எந்தவையெதற்கதிகப்பிசுமிலுடவளமை
யெல்லவருமிருதயத்தி லறியக்கடனெனவும். 3

முந்தமுதல்கடைமுடிவு முறையாகவுரைப்பேன்
மூமின்களனைவோரு முவந்தறியத்தானே. 4

அறிவானஅறிவுகளி லதினமுள்ளஅறிவு
ஆதிதிருநாமமது தானுமதுவதால். 5

சரியானபிசுமில்முதல் நாமமிறையறிவாம்
சகலகலைமறையுமது பிசுமிலதின்பொருளாம். 6

அருவுருவுச்சுருபமில்லா னமைந்தவிதமெல்லாம்
அருஉருவும்சுருபமுமா யமைந்துமுடிந்ததுவாம். 7

பெரியவன்றனமைத்ததெல்லாம் பேருஞ்சொல்லத்தெரியேன்
பெரியவனேதவிரவொரு பிரிவும்வேறேயில்லை 8

அறியவகையித்தனையென் றறியவகையில்லை
அத்தனையுமவனுரைத்த அருள்மறையிலடக்கம். 9

எத்தனையோகோடிமறை யிறையுரைத்ததெல்லாம்
எடுத்தொடுக்கிக்குறுஆனை யிறையறியக்கொடுத்தான். 10

முத்தானகுறுஆனுக் குயர்ந்தமறையில்லை
முன்னுரைத்தவேதமெல்லா முடிவில்லையென்றே. 11

அத்தனையுங்குறுஆனுக் குள்ளடக்கிவைத்து
அடங்காதகுறுஆனை அணுப்போலேசுருக்கி. 12



கொத்தானஆயத்தொரு ஐந்துக்குள்ளேயொடுக்கி
குல்குவல்லாவென்றுசொல்லிக் குவலயத்திலிறக்கி 13

அத்தையுமேசுருக்கியொரு ஐந்தெழுத்தாற்பிடித்து
அல்ஹம்தென்றஐந்தெழுத்தால் அனைத்துமதில்முடித்தான் 14

சுத்தவன்றன்றிருவாக்கா லுறைத்தது அல்ஹம்து
கடன்மலையுங்கடுகுக்குள்ளே காணும்விதப்போலே 15

மற்றவகையனைத்துமிறை மனதுகொண்டுமுடித்து
மதிப்படங்காதொருநூற்றிப் பதினான்குஎழுத்தாய் 16

அத்தையுமேஅடக்கியே அல்ஹம்துதனையொடுக்கி
அவனுமப்பிசுமிலென்று அதிகமாகச் சொன்னான் 17

எத்தனைக்கும்பெரியதவ மிறைநாமம்பிசுமில்
இதற்குள்ளேயடங்கும்பொரு ளெடுத்துரைப்பதரிதே 18

அந்தபிசுமில்முத லானவிதமேதால்
அணுப்போலேகொண்டபுள்ளி அலிபாகநீண்டே. 19

அந்தப்புள்ளி அலிபு மமைந்ததொருபேயாம்
அந்தரத்திலானதினு லதுநினைவுசிற்றும் 20

இந்தசிற்றெமீமா இதுநாலுபிசுமாம்
இதுநாலுமவனும் மிதுவிதம்வேறில்லை 21

அந்தரத்திலானசிற்ற லமைந்தமீமுக்குள்ளே
அமைந்தவெளிதூருன பேருமகுமூதாம் 22

பேருனதிறைநாமல் அல்லாகூவென்று
பிசாமலெட்டும் பிசுமில்லாகியாகும் 23

இந்தவகையெட்டெழுதும் எண்கோணமாகி
எல்லாமுருப்படவே யானவிதமேதால் 24

வந்தவகைநூறுநாலா யதுநான்குபிரிவும்
வல்லமைகொண்டதுதானே அற்றகுமானுகும் 25

வந்தவிந்தையானவகை யெந்தவகையென்றால்
வகைந்துமுடிவான வளமனைத்தும்நிற்றகீமாம் 26

இந்தபிசுமிலுக்குள் ளுயிரெழுத்துமூன்று
எல்லா மறைகளுக்குமெத்த முள்ளதவமாமே 27

அந்தெழுத்தையின்னதென்று அதினுடையவளமும்
ஆருஞ்சொல்லார்சொன்னாலும் ஆருமறியாரே 28

அந்தெழுத்துமூன்றிலொன்று அதுதானே தாத்து
அஹதியத்துமதுதானே யதிலுமதைப்போலே 29

வந்ததுதான்உஹறதத்தென்று அமைந்ததுசிபாத்து
வதிலுமதைப்போலமைந்த வாஹிதியத்தாமே 30

வாஹிதியாவானதென்ன வனைத்துமுடிந்ததுவாம்
வரமானதவநிலையின் வாழ்த்துக்குயர்மணியாம் 31

இந்தவகையறியார்கள் முந்தவகையறியார்
அந்தவகையறியார்க ளந்தரத்திலாவார் 32

இந்தவகையறிந்தவர்க ளெந்தனக்குங்குருவாம்
இவையறிந்தபேர்களெல்லாம் யாவுமறிந்தவராம் 33

யாவுமறிந்தவர்களென்று இருதயத்திற்சிறந்து
இவையறியவேண்டுமென்று எவருமடிதொழுதால் 34

அந்தவகையறிந்தவரை யடிபணிந்துதொழுதால்
அவர்மனதிலிரக்கம்வந்தா லனுப்போலேவுரைப்பார் 35

எந்தமட்டோஇறையருள்தா னெடுக்கமட்டும்போதும்
இதற்கதிகமானதவ மில்லையில்லையில்லை 36

வந்தவரேமனமறிந்து வருடமொன்றுதெரிந்து
வளமுளபேராயிருந்தால் வரிசைவளமிருத்தி 37

வளமாகஅறுநான்கு பிரிவுசொல்லித்திருத்தி
வரைந்தெழுத்துமூன்றுஞ்சொல்லி வகைபிரித்துக்கொடுத்து 38

அந்தமூன்றில்கடையெழுத்தை யாதாரமாக்கி
அதற்குமுதலதற்கடியு மதற்கடியுமதுவாம் 39

இதமாகரண்டுமது ஒன்றானபொருளை
இதற்கடியிலிதமாக இருதயத்தைமாற்றி 40

முந்தச்சொன்னஎட்டெழுத்தில் முடிவெழுத்தென்றியப்பி
முன்னேசொன்ன முடிவெழுத்தை கடையெழுத்தாற்றொழுகி 41

வந்தமுதல்வகையெழுத்தை வடிவானஎழுத்தாய்
வருமூன்றெழுத்தின்வள மொன்பதையுமறிந்து 42

முந்தமுந்தமுதலான முதலெழுத்தையுன்னி
மூன்றெழுத்தும்பிசகாமல் முடிந்துபின்னியுன்னி 43

அந்தரத்தில்மந்திரத்தை யுருபடுத்தும்வித்தை
அடிபணிந்தார்க்கீந்தவித மருள்வோனேஆசான் 44

இந்தவகையறியாத குருமாருக்குபிராம்
இரசூல்முகம்மத ருரைத்திறற்சொன்னேன் 45

அந்தவகையறியாரைப் பணிந்தவருங்குபிராம்
அகும்மதிறசூல் நபியும் அருளியதாற்செ[illegible]ன் 46



வந்தடிபணிந்துவகை கேட்குமவர்மனதை
வருடமொன்றுபரிசோதித்து வளமுளபேரானால். 47

சிந்தாமற்செயப்படுத்தும் பேர்க்குரைப்பதல்லால்
சிதறவிடுஞ்சிறியோர்க்குச் ஜெகத்திலுரைசெய்தால். 48

வந்திடுமேகொடும்பாவம் வன்னரகிலழிவான்
வல்லோன்முகம்மதரும் வழுத்தியதாற்சொன்னேன். 49

இந்தவிதமுற்றமொழி யுற்றவருக்குரைப்பேன்
இதமாகஇசுலாத்திற் காதாரஞ்சொல்வேன். 50

ஆதாரமானவகை யாருஞ்சொன்னாறிய
ஆலமெல்லாந்தீனிசுலாம் மதிகமென்று அறிய. 51

ஆலத்துக்குள்தீன்குலமே யதிகமென்றுதெரிய
அறிவானமறைநெறியை யாளுவதைக்கேளும். 52

என்னவென்றாற் காபிரிசுலாமுப் ரண்டுவிசளம்
எதுகாபிர்எதுஇசுலா மினியோதக்கேளும். 53

நாமளிருபேர்க்கிடையி லிபுலீசுமென்ன
நாயனுக்குப்பகையான கருமமதுரண்டு 54

நானென்றஆண்மைஅநா நிய்யத்தினியென்று
நான்வேறுநீவேறென்பது நாயனுக்குப்பகையாம். 55

நின்னயமேஈமானும் நிலைத்தசொல்லேஇசுலாம்
நினைவுவேறேஇறைவேறென்றால் நிச்சயமாய்க்குபிராம். 56

ஆனதினாலறிந்திறைதா னினைவாகநினைத்து
அனுதினமுமனுப்பிசகா ததுவணக்கமிதுவாம். 57

ஐயமறஆதியென்று ஆருமிணையன்றி
அவரவர்கள்தனையறிந்து தான்வணங்கவென்றே. 58

நாயனிறைநானிலத்தில் நால்மறையும்வகுத்தான்
நல்லசுகுபொருநூற்றி முப்பதையும்விடுத்தான். 59

செய்யுமுறைபலஞானஞ் சிதருமற்கோத்து
ஜெகத்திலிறையிருக்கும்வேதம் சுருபுமுழுதெல்லாம் 60

ஐயமென்றுமாற்றிதவு ருத்துமுதல்வேதம்
அதைமாற்றிமறுதாமு மழதுசபூர்வேதம். 61

வையகத்திலிறக்கியதை மாற்றிமறுதாமும்
வரிசைபெறும்இஞ்சீல்மறை வந்ததுமூன்றாமே. 62

இஞ்சிலசபூர்தவுருத்து ஏகன்மறைமூன்றும்
இதற்குமுதலொருநூற்றி முப்பதுசுஹ்பும். 63

மிச்சமுள்ளபலஞான மெய்வகையுமுண்டும்
மேலானதவநிலைகள் மெத்தவதிலுண்டும், 64

லட்சாதிலட்சம்வகை ஞானமுள்ளதெவையும்
லக்கமடங்காதகுலம் வணக்கம்பலவகையும். 65

உச்சிதமாயுடற்கூறு முலகிலுள்ளதவமும்
உள்ளதெல்லாமூன்றுமறை சுஃபிலுள்ளபொருளாம். 66

அத்தனை செய்தாலுமவ ரறியாதவரென்றும்
ஆதியருளனுப்பலனு மவர்கட்கில்லையென்றும். 67

அத்தனைக்குமிறைதீதா றவர்கட்கில்லையென்றும்
அந்தமூன்றுவேதம்சுஃ புள்ளதையுமாற்றி. 68

அத்தனையிலுள்ளபொரு ளனைத்துமொன்றுயொடுக்கி
அணுவுக்குள்ளேகடல்மலையு மடைத்தவதிசயமாம். 69

முத்துமுஹம்மதுற்ற சூல்நபிக்குவேண்டி
முன்னவன் தன்கிருபையினால் விண்ணுமண்ணுப்புகழ 70

வெற்றியுள்ளபுருக்கானல் மேலானமறையாய்
வசனத்துக்குள்ளடங்காத வெகுகோடிதவமாம். 71

இத்தலத்திலிருக்கும்புருக் கான்மறைமேலாகும்
இம்மறைக்குமூன்மறைக்கு மதியமென்னவென்றால். 72

வெற்றியுள்ள அவூதும் மேலானபிசுமிலும்
வெகுபிழையுந்தீர்த்துவைக்கும் இஸ்திஃபாரோடு. 73

அற்றகுபிர்க்குலங்களெல்லாந் தீன்குலத்திலாக்கும்
அடங்காதபொருளான அவ்வல்க்கலிமாவும். 74

உத்தபொருளானசஹா தத்துக்கலிமாவும்
ஒழுங்கானதஸ்பீகு தவ்கீதுக்கலிமாவாம். 75

மெத்தப்பெரிதீமானி லேழிசுலாமைந்தும்
மேலானவுலுவும்முழுக் கானபலவகையும். 76

வெற்றியுள்ளபாங்குடைய காமத்திமாம்தொழுகை
வேதத்திற்குஉறுதியுள்ள பறுலுஹலால்ஹறும். 77

இத்தனைக்கும்பெரிதானம் ஆமீன்சலவாத்து
இசுலாத்திற்கடையாள முள்ளதுசலாமும். 78

அற்றிருந்தபேர்க்கோதும் பாத்திஹாவும்பலனும்
அடங்காததறஜாவு மதற்குமுனஜாத்தும். 79

இத்தனையுமெண்ணான்கு மின்னம்வெகுவிதமும்
எப்போதும்தவிராம லொப்பாகப்பொருந்தி. 80



ஒத்துவரும்பேரிசுலா முள்ளகுலமாகும்
மற்றவகையுற்றதவம் சுத்தக்குபிரென்றே. 81

எரிட்டபேரிசுலா மூள்ளகுலமாகும்
எல்லாத்தவத்துக்கிது தானேஇமாமென்றும் 82

முன்னவன்தானிறக்கும் நாலா மறையிலிது அதிகம்
முன்னுரைத்தமும்மறையி லில்லையில்லையில்லை. 83

இன்னவகைகநமத்துள்ளோ ரித்தவமேநிறைய
இதைத்தவிர்ந்தாலிதற்குமுத லெழுந்தமறைக்கிணையாம் 84

மன்னனிரைதிருமொழியை மறையாகச்சமைத்து
மாநிலத்தில்மகுமூது நபிக்கிறையோன்சொன்னன். 85

என்றுமழியாதஇறை தூதுநபியுரைத்தார்
இந்தத்தவமற்றஉல முந்தக்குபிரென்றும். 86

அந்திபகலொருகோடி ஆண்டுதவஞ்செய்தும்
அணுப்பலனுமில்லையென்று அருமதிறசூலும். 87

இந்துலகிலுள்ளவருக் கிருதயமாய்ச்சொன்னர்
எல்லவருமறியவென்று இன்பமதாய்ச்சொன்னேன். 88

இருதயத்திலித்தனையு மறிந்தபெரியோர்கள்
இதமாகஇன்னம்வகை சொல்வார்தெளிவாக. 89

தெளிவானதீன்குலத்தி லுள்ளவரேகேளும்
தெவிட்டாமல்தொழுதுகொண்டு வணக்கஞ்செய்யவேணும். 90

சொழுகையில்லாதெவராலுந் தோஷிப்பெருப்பாவி
தொட்டாலுமுழுகவேணும் துடக்கதிகக்கொடுமை. 91

தொழுதுவந்தாற்வணக்கமவர் தொடுத்துவந்தாரில்லை
தோகையர்கள்வாழ்ந்துமல டிருப்பதுபோலுவமை, 92

தொடூகாமற்செய்யுமவர் வணக்கமுளதெல்லாம்
தோகையர்கள் ஆளனில்லா தீன்றெடுத்தபாலன். 93

தொழுதுவந்தார்வணக்கமவர் செய்துவந்தாரில்லை
தோப்பில்லாக்கனியருந்தித் தீர்ந்தபசியாகும். 94

தொழுதுவந்தார்வணக்கமவர் தொடுக்காதாரின்னம்
தோப்புக்குள்ளேகனிகளில்லாத் தூருமரப்போலே. 95

அன்பில்லார்வணக்கமெல்லாம் ஆற்றிற்ஜலமில்லா
அழுதுவணங்கார்தவமும் அந்தாநீராட்டம். 96

உள்ள ் பில்லாதுற்ற கள்ளர்செய்யும்வணக்கம்
வெள்ளெலும்பைநாய்க [illegible] தித்திலையுமதிகம். 97

வழியானகுருவில்லாத வணக்கமுழுதெல்லாம்
வையகத்திற்புருடனில்லான் வாழ்ந்தசுகமொக்கும். 98

தெரியாதகுருமாரின் றிருமொழிகேட்பதுதான்
தெரிவையர்கள்குசருவைச் சேந்திருந்ததுவமை. 99

சரியானகுருவில்லாத வணக்கமுளதெல்லாம்
சாவலில்லாக்கோழிமுட்டை யிட்டதுபோலுவமை 100

சொர்ப்பனத்தில்வந்தகுரு சொன்னவுபதேசம்
சொர்ப்பனத்திற்சேர்ந்தபெண்ணு மதலையின்றதுவமை. 101

இப்படியேயறிந்ததல்லவோ தொழுதுசெய்வார்வணக்கம்
இதமறியக்குருமாரை யெங்குந்தேடிப்பாரும். 102

தெருவீதியெங்குமலைவார்கள் குருமார்கள்
திருவருள்நிறைந்தபேரைத் தேடக்கிடையாதே. 103

அறியகுருபாகு மற்றஅசடரையுமறிய
அறிவுபுத்தியுள்ளவர்க்கு அறிவுவரச்சொல்வேன். 104

பெரியவர்கள்ஷறகுடைய பிசகாதவணக்கம்
பிரியாவகைநிறுத்திவைப்பார் தீன்குலத்தின்வளமை. 105

குருவாமுகம்மதர்தங் கோலந்தவிராமல்
குதாவருளேயிருபதிக்கும் கோடிகோடியாகும். 106

பெரியவுபதேசம்பேசுங் குருமார்களென்று
பெரிதானகாரணங்கள் பேசுவாரனேகம், 107

அரியவுபதேசஞ்செய்யு மருள்குருமார்தன்னில்
அதிலும்ரண்டுவிதமுமுண்டு மறியவகைசொல்வேன். 108

பீரானபீர்பெரிய பீருஜாதாவுண்டும்
பீருசாதாவேஷம்பூண்ட ஹரும்ஜாதாவுண்டும். 109

ஹரும்ஜாதாதன்செயலை கருமத்தினலறியக்
காசினியிலுள்ளவர்க்குக் கருத்தில்வரச்சொல்வேன். 110

காரணங்களொருகோடிக் கதைகளெல்லாமுறைப்பார்
கைப்பிடித்துக்காட்சிசெய்வார் காணுமந்தப்படியே. 111

மெய்யாகஆதியிறை வேறில்லைநாமென்பார்
எந்தெந்தக்கருமமவர் நல்லதில்லையென்பார். 112

செய்யும்வகைநன்மைதீமை யவன்செயல்தானென்பார்
ஜெயமானதொழுகைஷற கேதுநமக்கென்பார். 113

வையகத்தில்ஷரீ அத்ததின் வளமையெதுஎன்பார்
வரமதிகமஹரிபத்தி லாகிப்போனேமென்[illegible] 114



ஐயமில்லையாசைபாச மவன்செயல்தானென்பால்
ஆசைதீருமிடத்திலாதி யருள்நிலைதானென்பார் 115

செய்யுமிருபேரிணங்கி யாசைதீர்ந்ததென்றால்
எப்போதுமிருபேர்க்கு மிறையருள்தானென்பார் 116

பையப்பையக்கொழுகியாசை கொடுத்து அச்சந்தீர்ந்து
பத்தினியைய றுதலியைப் பழக்கிஹரும்செய்வான் 117

எத்தனைசெய்தாலுமுழுக் கேதுநமக்கென்பான்
இனிமேலும்ஆகிலத்தி லென்பிணைநீயென்பான் 118

சுத்தமுட்டாட்பாவிக்குபி ராம்ஹருமுசாதா
சொன்னது பொய்யாகுமிரு பேருங்குபிராகும் 119

மெய்போலேவெகுவிசளம் பேசுகின்றதவனே
மேலானவிசளமெல்லாங் கேட்கவகைசொல்வேன் 120

ஐயமறவுலகுதனி லிருக்குமனுகுலத்தில்
ஆர்நரகவாதிசொர்க்க வாதிநீரேசொல்லும் 121

மெய்யாகமவுத்துடைய ஹாலெந்தநாவி
லியம்பும்கலிமாவருமோ வராதோசொல்லும் 122

வையகத்தில்நானிறந்தால் கேள்விமறுமொழிக்கு
வகைசொல்வனோ சொல்லேனு எந்தனக்குச்சொல்லும் 123

இவ்வுலகிற்பிறக்குமுன்னே இவ்வுயிர்கள்முற்றும்
எந்தவிதம் ஆணோபெண்ணோ எடுத்துநன்றாய்ச்சொல்லும் 124

பிந்தபிமேயுறுவழிந்தா லிந்தவுயிர்பலதும்
பெண்ணுருவோ ஆணுருவோ பிரித்துநன்றாய்சொல்லும் 125

இந்தவகைவிசளமாரு மெடுத்துரைக்கமாட்டார்
இத்தனையுமின்னம்வெகு கருமமிறைபாங்காம் 126

அத்துடலிலாணும்பெண்ணு முறுச்சமையும்வாறும்
ஆலத்திலேபிறந்தபின்பு அவர்கள்செயலாலே 127

வெற்றிநன்மைதீமைரண்டும் விதந்தரிக்கும்வாறும்
வெகுசீமானெளியவனாய் விதந்தரிக்கும்வாறும் 128

அந்தச்சீமானெளியவனு யவனேமைசீமான்
அரும்பாவியருளாளி யவன்பாவியாதல் 129

இந்தவகைவிபரமிறை யறிந்தரகசியமாம்
எடுத்துரைக்காரிறைநாம மெப்படித்தானுரைப்பார் 130

எள்ளளவுமேலான கருமமறியாதார்
உள்ளதெல்லாமறிந்திருக்கும் குருமார்கள்போலே 131

வள்ளலிறசூலுடைய வளமைபெருமார்க்கம்
வையகத்தில்தீன் குலத்தின் வளமையென்றேசொல்வார் 132

எள்ளளவுமொருபலனு மில்லையதிலென்பார்
எப்போதுமிருதயத்தி லென்வணக்கமென்பார் 133

உள்ளுக்குள்ளேவணக்கஞ்செய்வே னென்றுரைப்பார்வெகுபேர்
உள்வணக்கமென்றேதுங் கள்ளர்களேகேளும் 134

உள்ளுக்குள்ளே நினைவாலே யுன்மனைவியோடே
யொன்றுபடச்சேர்ந்ததனா லுனக்குப்பிள்ளையுண்டோ 135

அள்ளியள்ளிக்கையாலே யசனமுண்டாப்போலே
அனுதினமுநினைத்துப்பசி யடங்குவதுமுண்டோ 136

வெள்ளாமைசெய்வதுபோல் நினைத்துமுடியாது
வெகுதூரநடவால் நினைத்து முடியாது 137

கொள்கையுங்கொடுவகையுங் கொடுக்கல்வாங்கலில்லை
உள்ளுக்குள்ளே நினைத்ததனா லொன்றுமுடியாது 138

கள்ளத்தனம்போக்கியருள் பெற்றுமதியுற்றுக்
கருமமெல்லாஞ்சிறந்துகருத் துள்வணக்கஞ்செய்தால் 139

கத்தனிறசூல்ஷறகைச் சேர்ந்தவளமாகும்
காட்சிதவிராஷறகு தன்வணக்கமெல்லாம் 140

கத்ததிறசூலுடைய கனமானஷறகு
கருமமெல்லாமகற்றிக்கருத் துள்வணக்கமென்றால் 141

சுத்தக்குபிர்க்குலம்இலாகி யுடவணக்கமாகும்
சுஜூதுசெய்யார்சுன்னத்து ஜமாஅத்தக்குலவல்ல 142

புத்தியில்லார்ஷறகேது வணக்கமேதுஎன்பார்
பொய்யாகுமவர்விசளம் பொருந்தாமலுதறி 143

அஸ்தஃபிறுல்லாகில் அலிமெனவேசொல்லி
அனுதினமும்ஆதம்பாத மறிந்துதொழவேணும் 144

எத்தனையோவெகுகோடி யாவர்செய்யுந்தவமும்
இபுலீசுமுன்னாலே செய்ததவமாகும் 145

அத்தனையுமிபுலீசங் கறிந்துசெய்தானில்லை
அவன்வணங்காவணக்கமல்லோ நாம்வணங்கவேணும் 146

சுத்தக்குபிர்இபுலீசு சுஜூதுசெய்யா திடந்தான்
சொல்லவென்றாலோரிடமு மில்லையில்லை யில்லை 147

வல்லஇறைதனையும்நபி தனையுமவனடி
வையமெல்லாம்வெகுகோடி காலம்சுஜூதுதிட்டான 148



நல்லநசிபில்லாதால் நாட்டமதுதவறி
நமதுபிதாஆதத்துக்கு சுஜூதுசெய்தானில்லை. 149

அல்லாவுக்குஉவந்ததென்ன அகுமதுதம்மார்க்கம்
அகுமதுக்கு உவந்ததென்ன வனைவருந்தீனாகை. 150

அல்லாமுகம்மதிரு பேர்மனத்துக்கொன்றாய்
அதியதவம்ஆதத்துட பதமறிந்துபணிய 151

அல்லாமுகம்மதிரு பேரைமனதுற்று
ஆதத்துடபாதந்தன்னை யறிந்துதொழவேணும். 152

வல்லமையாய்ஆதத்துட பதர்வணங்காதாலே
வன்னரகுக்கெதியானான் வம்பனிபுலீசு. 153

நல்லபுகழ்ஆதத்துட பாதந்தனையறிந்து
நாடிசுஜூதிட்டகுலம் நபிகுலம்தீனாகும். 154

ஆதமென்ன அவருடைய பாதமென்னவென்றால்
அறியாதபேர்களெல்லா மறியச்சொல்வேன்கேளும். 155

வேதமென்றும்ஆதமென்றும் விளம்புவதுமதுதான்
வெகுபலதாய்ச்சமையுமுன்னே அஹதியத்தாயிருந்து. 156

அதுதானேஉஹதத்தென்று அனைத்தையுமுள்ளொடுக்கி
அப்புறமும்வாகிதியா வானதிலோஆதம். 157

வாகிதியாவானதென்ன ஆதமுருவாச்சு
வகைவகையாய்த்தலைமுறையாய் வந்ததந்தவிந்து. 158

அந்தவிந்துஆதமுத றணியணிவந்ததனால்
அதுதானேஆதத்துட பாதமது நிஜமாம். 159

விந்தைபெறும்ஆதத்துட விந்துநிறம்வெள்ளை
வெடித்தபுகையதுகாற்றாய் வெளியில்வருமூச்சாம். 160

மூச்சாகும் தம்மாகு முயிருஹயாத்தாகும்
முடியாததம்மல்லவோ ஆதமென்றுபேரு. 161

ஆச்சரியம்மூச்சுக்கொரு ஆதாரம்அலிபு
அந்தலிபும்மூச்சுமல்லை ஆதத்துடபாதம். 162

அந்தலிபுநிலையறிந்து அதற்குசுஜூதிட்டால்
அதிகதவம்ஆதத்துட பாதமது நிஜமாம். 163

அந்தலிபுநிலையறிந்து அறியதவஞ்செய்ய
அதிகமுள்ளபெரியோரை யடிபணிந்தாற்சொல்வார். 164

எந்தனக்குத்தெரியி[illegible]ன்று எண்ணிமகிழ்ந்திருப்பார்
எவ்வளவுந்தெரியாது[illegible]வருஞ்சொன்னாலொளிய. 165

அந்தவகையணுப்போலே தெரியும்படியுரைப்பேன்
அறிவுள்ளபேரறிவதல்லால் ஆர்க்குந்தெரியாது. 166

வந்தவழியந்தரத்தே யுந்தன்விழியுற்று
வாசல்வழியற்றுப்பாச மற்று நிலையுற்று. 167

முந்திமுனையிரிதழு மூடித்துஒன்ருய்ப்பிடித்து
உந்திவரும்ரண்டாலே யொருமூன்றேதொடுத்து. 168

உந்தன்மதியந்தரங்கம் அந்தநிலைபிடித்து
உறுதிகொண்டுஉவந்துசுஜூ திட்டகுலத்தீனும். 169

இந்தவகையறிந்துஇபு லீசுசெய்தானில்லை
இருதயத்திலிதையறிந்து எவரும்சுஜூதிடுவீர். 170

அந்தஇபுலீசு வணங்காத இடமிதுதான்
ஆலமெல்லாந்தீன்குலத்தோ ரறியநன்ருய்ச்சொன்னேன். 171

இந்தமட்டுமுறைத்ததல்ல இனிவுரைக்குஞ்செய்தி
இசுலாத்திலுள்ள இனி முழுக்குவகைகேளும். 172

முந்தஇசுலாத்திற்குல மானவரேகேளும்
முழுக்கறிந்து முழுகும்வித முறையாகச்சொல்வேன். 173

முழுக்குவிதியாகுமுன்னே முழுக்கறுக்கவேணும்
முழுக்குவிதியாகிடிலோ முழுக்கறுக்கமுடியா. 174

அமுக்கறுக்கமுறையறியார் முழுக்குமவராறுக்கார்
அமுக்கல்லவோமுழுக்காகும் அறியவகைசொல்வேன். 175

உட்கருத்தில்முதலான ஆுணுதலையுன்னி
ஒன்பதுமேயொன்ருன வொருபொருளேயாணி. 176

அமுக்கற்றியாணிமதி ஆதியென்றேயூணி
அணுப்பிசகாதொருமுன்றை யனுதினமும்பேணி. 177

ஒளியாமலோசையுள்ள துயர்ந்ததவமாகும்
ஒருமுழுக்குமணுகாதே யுறையறியார்க்கெல்லாம். 178

வமுக்காய்ப்புரந்துலகில் வந்தநாள்கள்முதலாய்
வமுவாசிமருங்கோடும் பாவமுழுக்காகும். 179

அமுக்காகுமுழுக்கைமவுத் தாகுமுன்னேயறுக்கார்
ஆகிறிலுமிழுக்காகு முழுக்கதிகநாற்றம். 180

தெளிவாகக்கமலத்தமுக் கறிக்கும்வகையிதுதான்
தீனவர்களறியவின்னந் தெளிவாகச்சொல்வேன். 181

வழியானதீன்குலத்தி லுள்ளவரேகேளும்
வாயில்வரும்பொய்யுரையும் வலுமைஹறுப்பகீ[illegible]ம். 182



பழிகோபம்பெருமைமற்றக் கொடுமையுமேயகற்றிப்
பட்சமனதோர்மையுற்றுப் பான்பொருளைவணங்க 183

தெளிவாகக்கமலத்தமுக் கறுக்கும்வகையிதுதான்
தீனவர்கள்கலிமாவெண்பா ரதின்பொருளைக்கேளும் 184

கலிமாவுரைத்தகுல முள்ள பெரியாரே
னமாவுமென்ன கருப்பொருளுமென்னகலியென்று 185

கலியென்றபொருளுடைய கருமம்சொல்லக்கேளும்
கலியாகும்ஆசையது கருப்பொருளுமாகும் 186

அலியாருக்காலநபி தானுரைத்தவிசளம்
ஆசையின்பேர்கலியாகும் கலியுமிறைபங்காம் 187

சலியாதஇறைகலிமா ஈராறுஎழுத்தும்
சாற்றுவதுலா இலாக இல்லல்லாகுஇதுவாம் 188

அல்லாகுவென்றுசொன்ன அவ்வல்கலிமாவில்
ஆறிரண்டுஎழுத்துக்குமே லானதொருகூவாம் 189

கூவாகும்ஆசையது கலியுமிதுவாகும்
குலமானகலிமாவி லின்னமொருபாதி 190

பாதிமுகம்மதுற்ற லுசூல்லாகியாகும்
பாருலகில்நடக்கும்பரி மாவுமிதுதானே 191

மாவும்முகம்மதென்ற முதலில்வரும்மீமாம்
மாவுமிது கலியு மது கலிமாவுமிதுதான் 192

கலியென்றகூவுடனே மாவென்றமீமதனைக்
கூசகாமலோரெழுத்தாய்க் குன்னென்றதைக்கோத்து 193

இமையாதெழுந்துவரும் வாசியுடன்சேர்த்து
ஏற்றிறக்கஞ்செய்பவரே யெப்போதுமூமின் 194

மூமின்கள்செய்யுந்தவ மாங்கலிமாரண்டு
முந்தனுடவுடலுக்குள்ளே யெங்கேநிற்குதென்ருல் 195

இந்தவகைகூவுமீமும் இணைத்துஒருவெழுத்தா
யிருந்தயத்திலநிற்குமந்த இடத்தைச்சொல்லக்கேளும் 196

இந்தவகைஆதியந்தம் அடிமுடிவுமுடையா
திருக்குமந்த ஆச்சரியம் எல்லவருமறியார் 197

அந்தெழுத்தையெல்லவரும் அரியப்பெருங்கடனும்
அறிந்தவரையடிபணிந்தா லதிஜயத்தைச்சொல்வார் 198

இந்தக்கலியுடன்மா மிருக்கும் நிலையறிந்து
இதைத்தானேகம[illegible] ஞருப்படுத்தவேணும் 199

உருவாகரண்டெழுத்து முன்சிரசிலுண்டும்
ஒருமிக்கலேரண்டெழுத்து முந்தியின்கீழுண்டும் 200

உந்தியின்கீழ்மலசத்துக் குயர்ந்தநிலையாகும்
உருத்தரிக்குங்கருநிலைக்கு மொக்கவேகீழாகும் 201

உருவமில்லாக்கருவையுரு வாகச்செய்யுமந்தச்
சுருபமில்லாச்சுடரொளிவு சோதியருள்நிற்கும் 202

நிற்குமந்தாண்டெழுத்தும் நிலையொன்றுவால்ரண்டாம்
நிலையாமல்நின்ருடும் அந்தரமற்றஇடத்தில் 203

அந்திடத்திறகுலென்ற அட்சரமுன்றெழுத்தும்
அந்தவட்டம்கோட்டையுள்ளே ஆடிரண்டும்நிற்கும் 204

அந்திரமாய்நின்ருடும் ஆசைகொண்டுரண்டும்
அந்தகூவும்மீமுமது தானேகலிமாவாம் 205

கலியுடனேமாவுரண்டும் கமலத்துக்குள்ளேற்றிக்
கசகாமல்கமலத்துள்ளே கருத்திலுநவானல் 206

வலியஸனுக்கொடும்பிழையு முழுக்குமப்போதீரும்
வாய்முகமுமுடற்கழுவி யுலுச்செய்முழுக்கிறங்கும் 207

பலிதமுள்ளமுழுக்கிறக்கப் பரிசுத்தத்தண்ணீரில்
பற்றியுலுச்செய்தவுடன் சுத்திபெற்ருேராவீர் 208

உற்றவர்களொருநேரம் தொழுநூறுவருஷம்
ஓயாததொழுகையுள்ள வுயர்ந்தபலனுதம் 209

அத்தலத்திலொருநேர மவருடையவணக்கம்
ஆயிரம்வருஷம்திக்கீர் செய்தபலனுகும் 210

இத்தலத்தில் ரண்டெழுத்து மாற்றியேபிடிக்க
இதமறியாரெப்போது மெரிநரகிற்ருழ்வார் 211

அத்தலத்தில்கலிமாவை அங்கத்துக்குள்ளறியார்
ஆர்குலமுதீனறியார் அழனரகில்வீழ்வார் 212

கத்தவன்தன்கலிகாரண்டும் கருத்துறவேயறிந்து
காசினியில்வணங்காத கள்ளத்தனமெல்லாம் 213

எத்தேசகாலமவ ரெறிநரகிற்ருழ்வார்
எத்தவம்கடலோடே கவிந்தவகையாகும் 214

உற்றசெய்தியாயுரைத்தே னுலகமெல்லாமறிய
உலமாமுகம்மதவ ருரைத்தபடியாலே 215

உத்தபொருளீதென றுயர்த்தியாயுரைத்தேன்
உயர்ந்தமன்கிருபையினு ளுளமதியில்தரித்தேன் 216



எத்திசக்குங்குருவான ஏகன்மகுமுதர்
எல்லவர்க்குங்குருவாகும் எளியனுக்குங்குருவாம். 217

உற்றுமுதலுற்றதன மத்தனையுஞ்சிதற
ஒட்டிவெளிப்படுத்துமுய ராதிபெரியோனே. 218

எத்தலமுமித்தலந்தா னின்றுலகமறிய
அத்தலத்தையித்தலமென்ருரு நிலையாக. 219

புத்திமதிபொருமையுட னருமையுமில்லாதான்
புல்லறிவனனதினு லெல்லோருமறிய. 220

உற்றசெய்தியாகஇதை யுலகவருக்குறைத்தேன்
உலமாமுகம்மதரு முறைத்தபடியாலே. 221

கத்தபெரியோனேறப்பில் ஆலமீனேஹாதி
கடல்மலையில்திகபிழை பொருத்தெனக்கிறங்கி. 222

உத்தவனேயடியேனுக் கனுப்போலேயிறங்கி
உன்கிருபையெந்தனுக் குதவியருளாக. 223

ஒன்றுபத்துநூறனந்த முதவிசெய்யவேண்டும்
உவந்தமனதோர்மையுற வுதவிசெய்வாயாதி. 224

மண்டலம்புகழுமகு மூதுபொருட்டாலே
மகிழ்ச்சிதரவேண்டுமிரு பதிக்குமிறையாமீன். 225

முந்தமுந்தமுதலான கலிமாவின்பொருளை
மூமின்களனைவோரு முவந்தறியச்சொல்வேன். 226

இனி கலிமாவுடைய விபரஞ்சொல்லுகின்றது.

விருத்தம்.

கலிமாவில் நான்குகுலமா யெழுந்து பேரைக்
காபிரியென்னுங் குயிர்க்குலத்தில் யிழந்தபேரைக்
கலிமாவு ளுலுறவா யமைந்த பேரைக்
கலிமா வுரைத்ததையு மறியாப் பேரை
கலிமாவே கெதியென் றிருக்கும் பேரைக்
கலிமாவை வகுத்துச்சொல் லு முலகத் தோரை
கலிமாவை யறிந்துகருத் தினி விருத்திக்
காரணத்தைச் சொல்பவரை குருவென்று கருதலாமே.

கண்ணிகள்.

எத்திசையிலுள்ளமுவு வானவெகுபேர்கள்
இறையோனுக்கீமா [illegible]றைகுலுக்கிசுலாமாப், 1

உத்தகுலப் தீனை இருக்குப் பெரியோரே
உங்கள்குலகலி மாலை யுடலீலறிவீரே 2

மெத்தப்பெரிதானதவம் அவ்வக்கலிமாலை
மேஎரியிக்குள்ளறியாத பேர்கள்மனங்கழும்பாம். 3

கழும்பானகமலத்துள்ள அழுக்கையெல்லாம்நீக்கும்
காசினியில் தீன்குலமாங் கலிமாவைக்கேளும். 4

கலிமா அறிந்தகுலம் கடந்தகுலமென் பார்
கானகத்துப்பட்சிகளுங் காபிர்களுஞ்சொல்வார். 5

அலிமாமஹர்க்கிறையோ னருளுங்கலிமாவில்
அறுநான்கு அட்சரமும் அங்கத்துக்குள்ளறியார். 6

அங்கத்துக்குட்கலிமாவை யறியாதகுருவை
ஆதரித்தபேர்குபிராம் அழல்நரகில்வீழ்வார். 7

அழியாதகலிமாவை அன்பாகவுரைப்பேன்
ஆர்குலமுந்தீனை ஆதியருளாலே. 8

அருள்கலிமா லாஇலாகஇல்லல்லாகுவென்றும்
அதுமேல்முஹம்மதுற்ற சூலுல்லாகியாகும். 9

ஆனபுகழ்கலிமாவுக் கருநான்குளஎழுத்து
அதின்பொருளை ஆலமெல்லா மறியச்சொல்வேன்கேளும். 10

தீனவரேலாஇலாக இல்லல்லாகுவென்று
திருநாமமிசைச்சேர்ந்த ஈராறுஎழுத்தும். 11

எழுத்திலைந்துபிரிவுமுண்டு எழுத்துநிறங்கேளும்
இதற்குமுதல்லாவென்று இருக்கும்ரண்டெழுத்து. 12

எழுத்திரண்டுமண்ணாகும் இருக்கும்வெள்ளையாக
இலாகவென்றால்மூன்றுந்தண்ணீ ரிலங்குஞ்செவப்பாக. 13

இல்லாவென்றால்மூன்றும்பச்சை இதுதானேகாற்று
இதுமேலும் அல்லாவென்ற அட்சரமூன்றெழுத்தும். 14

அட்சரமே அக்கினியாம் அதுநிறமேகறுப்பு
ஆகாயம்றூகுநிலை கூவும்நினைவாகும். 15

கூவாகுமோரெழுத்துக் குலமுயர்ந்ததங்கம்
குலமாகலிமாவில் எழுத்தீராறுதானே. 16

ஆனபுகழ்மகரிபத்தின் அர்த்தஞ்சொல்லக்கேளும்
அறிந்தவுடன் ஆலத்துள்ளோ ரன்றிகுலாமாச்சே. 17

கூவாகும்றூகுநிலை கூவும்நினைவாகும்
கூவதுவுமூச்சதுவும் கூவேகுத்தூசு. 18



கூவேகுத்தூசியது கூவுமது அல்லா
கூவுக்குள்ளேகுடிகொண்டு நாமிருப்பதாமே. 19

இருக்கும்பொருள்கூவுடைய இடத்தைஇனிச்சொல்வேன்
இதனடியிலல்லாவென்ற அட்சரமூன்றெழுத்தும். 20

அல்லாவென்றாலென்ன அது அதின்பொருளைக்கேளும்
ஆலமெல்லாம்நிறைந்த அழி யாதுபழுதில்லை. 21

பழுதணுகாதுய்யபொருள் பரமனைத்தும்பாய்ந்து
பாங்கபெறும்கூவுடைய பேருமதுதானே. 22

இந்தஇறைநாமம்ரண்டு லாமஒருஅலிபு
இருலாமும்நடுமூலத் திருபுறத்தில்நிற்கும். 23

நிற்குமிருலாமும் அடி மூலத்திருபுறமும்
நிஜமாகஆதப் ஹவ்வா வாகுமிருலாமே. 24

ஒக்கச்சொன்ன அலிபுநடு மூச்சுடாண்டெழுத்தும்
ஒன்றுபட்டுவரும்விதத்தை யுவந்திங்ஙனஞ்சொல்வேன். 25

இன்னங்கலிமாவிலில்லா மூன்றெழுத்தின்பொருள்தான்
இருதயங்கொண்டெங்குமுள்ள தொருபொருளென்றறிவீர் 26

உறைத்ததொருஇல்லாவில் முதல்அலிபுல்லாமும்
உயிர்நிலைமிற்பதினாலு எழுத்துக்குமேலெழுத்தாம் 27

எழுத்தாகலாம்வயிற்றி லிருக்கும்அலீபொன்று
எல்லாத்துக்கடிலாமில் இருக்கும்அலீபொன்று. 28

ஒன்றுபோலேரண்டலிபும் லாம்வயிற்றில்நிற்கும்
ஊணிநடுப்பார்வைதுக்கத் தாகுப்ரண்டலிபும். 29

நன்றாயிலாமூன்றெழுத்தின் பொருளதனைக்கேளும்
நமதுபொருளெங்குமிறை யதற்குமிணையில்லை. 30

இணையில்லாதெங்குமது இருதயத்திற்சிறந்து
இலாஹவென்ற அலிபு எழுந்தகுரற்பேச்சு. 31

துணையாக அல்லாவென்ற அலிபுநடுஹேயும்
தொகுத்தல்லவோ ஆகூவென்று துலங்கிவருமூச்சு. 32

ஆகூவென்றுமூச்சுவரும் அலிபோடுஹேயும்
அகாரஉகாரமிலோ அட்சரத்திரட்டம். 33

அகாரமென்றால்ஐந்துமூன்றும் அதுதானேஎட்டு
அட்டஅட்சரமான அநாதிமந்த்ரமதுதான். 34

உகாரமென்றால்ரண்டுமகற் குயிர்நிலையுமாச்சு
உரையறியாரெட்டு ன்றால் ரண்டறியாதேழை. 35

அறியுங்கலிமாவில்முதல் லாவென்றுருலாமும்
அட்சரத்தின்பொருளைநன்ருல் அவிழ்த்துரைக்கக்கேளும். 36

அறியவகைபலதுமவ ஞகும்வறயில்லை
அடிமுடியுமில்லையது அருளப்பட்டதல்ல. 37

உருவுக்குள்ளே தரிக்கப்பட்ட ஒளிவுகருநாதம்
உருவழியும் ஒளிகுறையாதுண்மையுண்மையுண்மை. 38

உண்மையுள்ளகலிமாவி லுரைத்தேன்முதற்பாதி
ஓதுகிறேன்முஹம்மதுற்ற சூலுல்லாகிபொருளை. 39

முகம்மதுற்றசூலுல்லாகி யென்றபொருள்கேளும்
முகம்மதென்ருலுண்மைகொண்டுஉண்மைகொண்டேனெனச்சொல் 40

உண்மைகொள்வதேதுவானல் உருவம்முகம்மதுவாம்
உயிருமவனேவல்லவ ஞகும்பொருளென்று. 41

பொருளாகுங்கலிமாமுன் பிரித்துரைத்ததெல்லாம்
பொருளவனுப் தாத்துவசை பிரிந்தவிதமாகும். 42

அருளானதாத்தில்நின்று ஆனதேசிபாத்து
அகுமதென்றஅட்சர முகம்மதுருவாச்சு 43

முகம்மதென்ற அட்சரந்தான் முழங்கியுடலாகி
முன்னெளிகொண்டொருவட்ட முண்மையுண்மையுண்மை. 44

உண்மைமுகம்மதென்றே யுறைக்குநான்கெழுத்தும்
உடல்முழுதுமுருவாச்சு ஓங்குஞ்சிறந்தவிர. 45

வண்மைபெறுப் துற்றென்று வறைந்தறேயின்பொருள்தான்
வடிவானபொருள்துலங்கி வந்ததுவென்றறிவீர். 46

தனிமையில்லாறேஜயஇரு பிளப்பாகப்பிளந்து
தரித்ததுபார்உடலுக்குள்ளே இருமாங்காயாக. 47

உண்மைமுகம்மதுற்ற சூலுமூன்றெழுத்தும்
ஒருபொருளிலுத்தரவா லுலகாட்டமென்றும். 48

வண்மைபெரும்மூன்றெழுத்தும் அடிமூலக்கோட்டை
வாசலும்நாலுண்டதற்கு வளர்ந்தெரியுந்தியும். 49

நம்மிறசூலுல்லாவென்ற அட்சரமூன்றெழுத்தும்
நாடும்பொருளுடலுயிரும் நபியுமிறையென்று. 50

பாடிச்சொன்னமூன்றெழுத்தால் சிரசுடறுக்காச்சுப்
பாங்காககடைசிதன்னில் வருமேயொருஹேயும். 51

வருமேலாகஇல்லை அல்லாகுஹேயும்
வடிவுமுகம்மதுற்ற சூலுல்லாகிஹேயும். 52



இருஹேயும்மீமுமூலத் திருக்குங்குடியாக
ஈராறுஉள்ளெழுத்தில் இல்லென்னும்அலிபு 53

அலிபுநிலைகமலத்துள்ளே ஆடுமுயிராகும்
அதிநிலையிற்பதினுன்கு அட்சரமீரேழே 54

செம்பவளமூன்றங்குலம் சிறந்ததடிநிலையிற்
சிறந்தபச்சைநடுநிலையிற் பத்தங்குலமாமே 55

பொங்குமவானிளெளிகொடி புகழ்ந்துமுத்தினுட்டம்
பொற்பாசனத்திலுய ரங்குலமொன்ருமே 56

பக்கமில்லாக்கலிமாவிற் நித்தநடுநிலையிற்
பாரமுள்ளரண்டெழுத்தும் பதித்துதலைமாறி 57

சிங்கார அலிபோடு லாமுங்கீழேமீமும்
சிறந்ததொருகாபும்நூனு மிருக்குப்ஐந்துமேலே 58

அங்கத்தின்கீழ்பேயோடு ஏயும்காபுவாவும்
அதின்கீழேநூனுகி அமைந்ததைந்துஎழுத்தும் 59

எழுபத்துப்பத்துஒன்பதுதான் இருக்குப்பச்சைநிறத்தில்
இதற்குமுதலை அலிபு இலங்கும்ஒளிமேலாய் 60

ஆனமுத்துப்பச்சையுமாய் அமைந்தெழுத்துமுறைத்தேன்
அகுமதென்றநான்கெழுத்தும் அவியில்செவத்துருவில் 61

எழுத்துப்பதினுன்குடைய இடமுநன்ருய்ச்சொன்னேன்
இதுகலிமாமஹரிபத்தென் றெவருமறிவீரே 62

முழுத்தமுள்ள அலிபு முதலெழுத்தைக்கேளும்
முன்னனிஐநூக்கத்துமுத்தாய்முளைத்தஅலிபொன்று 63

அந்தலிபுஆதிபங்காம் அதிற்பிறந்தபவளம்
அகுமதென்ற அலிபதுதான் அதிற்பிரந்தபச்சை 64

பச்சைநிறம்ஆதமல்லோ முச்சுடருமாச்சுப்
பார்வைஜபறூத்துமக்காம் நடுநிலையிறரேன்றும் 65

தோன்றுமிதேசுல்தான் சீருவில்நிலையாம்
துலங்கும்வட்டம்ம[illegible]ரமன் மகுமூதாநிலையில் 66

உருச்செவப்புஉடல்பச்சை றாகுவெள்ளையொளிவாம்
வுத்தநிலை அலிபதனை யுறுதிகொண்டேநினைந்து 67

உயர்த்தநிலையுவநிலையில் வணக்கமென்றேயுவந்து
உண்மையுள்ள நினைவுதன்னை யொதுங்காமல் நிறுத்தி 68

இந்தநிலை அலிபுநிலை தொழுகைநிலையெழுத்து
இனிச்சேளும்றுகூவின் தொழுகைநிலையெழுத்தை 69

அஹதல்லவோஉஹதாதி அகுமதுஹாமீதாய்
அதுநான்குஹேயெழுத்து மறியவிண்ணோர்வணக்கம் 70

நாமுமந்தவணக்கமென்றே நாட்டங்கொண்டேநிறுத்த
நலமாம்றுக்கூவுடைய நடப்புமிதுவாமே 71

அஹதல்லவோ அகுமது முஹம்மதுஹாமீதாம்
மகுமுதாமகிழ்ச்சியுள்ள நாலுமீமைநாடி 72

நாட்டமுள்ளகதிர்மதிமீன் வணக்கமிணையாக
நாம்வணங்கும்வணக்கமென்று நாடிசஜிதாஜ்செய்ய 73

ஆனவரேஇருப்புடைய எழுத்தையினிக்கேளும்
அன்னைகுதாஅஹதுடனே அகுமதுமேஆதம் 74

ஆதமுடனிதுநாலும் நாலெழுத்தாயினிக்கேளும்
அறுஷுடையவணக்கம்அனைவோருடையவணக்கம் 75

இந்தவகைநாலெழுத்து எண்ணியேதான்தொழுக
இரவில்தொழும்ரகசியத்தின் தொழுகையெழுத்தாகும் 76

உலகுதன்னிலொருநாளிற் ஒருமும்விபரங்கேளீர்
ஒரிரவிலேழுதரம் தொழுகஅருள்பெறுவார் 77

நிலையானதொழுகையுட நிசமறியச்சொன்னேன்
நிச்சயமாயுறுபுடைய நேர்மைசொல்லக்கேளும் 78

உறுபென்றுசொல்லுவது உலகிலிசுலாமாம்
ஒழுங்கோடேநடப்பதுதான் உறுபென்றறிவீரே 79

உறுக்காபுநிலையுடைய அருத்தஞ்சொல்லக்கேளு
உள்ளபலகலையுடைய வுட்பொருளையறிந்து 80



அறிவதுதான்கலைநெறியை ஹறுபுநிலையாகும்
அதிகமுள்ளஉறுக்காபு அறிந்துகொள்ளச்சொல்வேன். 81

சொல்லுகிறேன்உறுபான தீன்குலத்திலிருந்து
சுருதிநிலைமறையான ஹறபுநிலையறிந்து. 82

எள்ளளவும்பிசகாமல் நேர்மைகொண்டுவருக
இதைத்தானேஉறுக்காபு நிலையென்றுரைசெய்த. 83

நிலையாகமுரீதுடைய நிலைமைசொல்லக்கேளும்
நிலத்திலுள்ளபொருளையெல்லாம் நினைத்துமனமலைந்து. 84

நிலைதவறிநினைவுகெட்டு நிச்சயமேகுலைந்து
நின்றலையும்போதுகுருக் கண்டடிபணிந்து. 85

என்றுமுள்ளபெரியவரே யென்னினைவுஆடி
யெங்குமலையாமல்நிலை நிறுத்திவையுமென்ன. 86

சங்கைபெறுங்குருபதத்தின் சரணமதுசெய்தால்
சந்தோஷமானபின்பு தன்பதத்திலிருத்தி. 87

எந்தமட்டோபொருட்சுமக்க வலுமையுள்ளானென்று
எழுநான்குயாதிலொன்றும் எட்டுமக்காமுண்டும். 88

வழியாறுபாதையுண்டும் வணக்கமைந்திலொன்றும்
வருத்திவைப்பாரதுதானே முரீதுநிலையாகும். 89

முரீதுநிலையிதுவாகு முன்னலைந்தநினைவை
மோசமென்றுமாற்றியொன்றை யுருதிகொண்டேபிடித்து, 90

கருத்திற்பிசகாமலந்தப் படிவணக்கஞ்செய்வார்
காட்சியொன்றுங்காணமற் கருமனங்கலங்கி. 91

இருளறைபிற்குருடர்சென்றே யிலங்குரத்னந்தேடி
எப்படியோதடுமாறு மப்படியேவுளறி. 92

பொருளானபூரணத்தைக் காணமலலைந்து
புலம்பினதைம்புலம்பியல்லோ போகுமவர்காலம். 93

மருளாமற்பலநினைவை மாற்றியொருநினைவாய்
மனதுதன்னைநில [illegible]வுத்தி மாளாமல் மாண்டு 94

இன்னதொருவணக்கநிலை யிணையுமில்லையென்று
இருதயங்கொண்டிருக்கும்விதந் தானேமுரீதாகும். 95

நறைகமழும்தாலிபுட நன்மைசொல்லக்கேளும்
நானிலத்திற்குருதேடி நாளுமடிதொழுது. 96

பெரியவரேயென்குருநதான் சொன்னவுபதேசம்
பேரானஇறைநாமம் இன்னதென்றெடுத்து. 97

அறியவகைதெரியும்படி பிரிவெடுத்துத்தாரும்
அந்தந்த அட்சரத்தின் நிலையெடுத்துத்தாரும். 98

குருபதத்திற்பணிந்துஉப தேசமதுகேட்கில்
குருநாதன்றிறமாளுற் கூறுவதைக்கேளும். 99

அறியகுருமுன்னுரைத்த அட்சரத்தைக்கேட்டு
அணுவும்பிசகாமலதை அங்கத்திற்குட்காட்டி. 100

பிரிவுசொல்லியதினுடய பொருளெடுத்துக்காட்டிப்
போதமுள்ளதெரிசனையின் பிரிவுகளுஞ்சொல்லி. 101

ஒருபடிக்குஒருபடிதா னுயர்ந்தநிலையேற்றி
ஓர்மையுள்ளவணக்கமதில் நிலைநிறுத்திவைப்பார். 102

நிலைநிறுத்தும்வணக்கமதி னென்றுனவெழுத்தும்
நிலையானவெழுத்தனைத்தும் நிற்கின்றதலமும். 103

கலகலெனத்தனியே பிரித்துமுதலுரைத்தேன்
கருத்துறவேயறிந்தவர்க்குக் காட்சிநிலையாகும். 104

திருநிலையையறியாத திருடர்செய்யுங்கோலம்
திறமாகமுன்வணங்கும் யாதுநிலைமாற்றி. 105

பின்னையொருஅட்சரத்தைப் பெரிதென்றுசொல்லிப்
பேய்தனத்தில்வருத்திவைப்பார் பேய்மனுடர்கேளும். 106

அன்றுறைத்தவுபதேச மல்லவென்றுபோனால்
அருப்பாடுபட்டதெல்லா மந்தரமாய்ப்போச்சே. 107

இன்றுறைத்தவுபதேசம் இருதயமேகொண்டால்
இதற்குமுதலுபதேச மல்லவென்றதருத்தம். 108



அல்லவென்றபொருளென்று அணுவும்நினைவானால்
அத்தனையுங்கொடும்பாவஞ் சுத்தக்குபிராகும் 109

முத்தானயாது நிலை முன்வணக்கப்போனால்
முறையாகபின்வணக்க மோசமதுவாச்சு 110

அத்தாட்சிசொல்லவென்னு லாகுதில்லைசடக்கை
அறிவுடையபேர்கட்கிந்த அத்தாட்சிபோதும் 111

முறையாகமுன்வணங்கும் யாதையும்விடாமல்
முறைமுறையாய்படியேறி முதறிவிற்கூடி 112

என்னென்ன இதற்குமுன்னே யெடுத்துரைத்தேன்கவியில்
எவ்வகையுந்தானறிந்து எழுத்துநிலையறிந்து 113

இலங்கும்பொருளெங்கேயென்று இருதயத்தில்நாடி
எப்போதுந்தேடுவது தாலிபென்றுசொன்னேன் 114

தாலிபென்றுதேட்டங்கொண்டு தானலையும்விசளம்
தமஹறுத்தென்றுரைக்குமந்தத் தவப்பொருளைக்கேளும் 115

தவதில்வர்தேடியுற் றலங்களெல்லாமலைந்து
தனதுபொருளிதுவெனவே தானறிந்துமகிழ்ந்து 116

நிலைத்தசொல்லைமனதிருத்தி நெடுவாசியேற்றி
நித்தனுடனுற்றிருப்பார் நிலத்திலறிவாளர் 117

உற்றசெய்தியாகவிதை ஒளியாமலுரைத்தேன்
உண்மையுள்ளதம்கூத்து உலகவரேயிதுதான் 118

இத்தலத்திலிசுலாத்தி லுள்ளவரேயெல்லாம்
இருபாதமெப்போது மென்சிரத்திலேற்றி 119

குற்றமெல்லாம்வி[illegible]திேனோர் குலங்கலொளியாகக்
குவலயத்தி[illegible]ள் கொஞ்சத்தமிழாக 120

ஒருபத்துஒன்மதிந்த வுயர்ந்ததறிவுநிலையும்
வுழுங்கானகலிமாவும் ஒரெழுத்துநிலையும் 121

தொழுகைமுரீ துடைய வெழுத்துவகைநிலையுந்
தொடுகுறிபோலுலகமெல்லா ந் தோற்றும்படியாக 122

பாடிப்பாடியறிவையெல்லாம் பங்குபங்காய்ச்சொன்னோன்
பையல்பீர்முகம்மதென்போன் பகர்பிசுமில்க்குறமே 123

மெய்யான அறிவுதனை மேதினிற்படிப்போர்
மெத்தமனங்கொண்டுபுத்தி மேவியிதைக்கேட்போர் 124

வையகத்தில்மவுத்துவரும் போதறிவைக்கேட்டு
வழுந்தயிலேமதிமறந்தே யிறந்தவருங்கூட 125

துய்யவன்றன்றூதரிற சூல்பொருட்டினாலே
சுன்னத்துச்சமாத்துடனே சூழ்ந்தகுழுவாக 126

மெய்யாகச்சொர்க்ககதி மேன்மையுள்ளபதவி
மெத்தவெற்றிபெற்றநபி யுற்றகொலுச்சார்பில் 127

ஐயமறசொர்க்ககதி யரசுகொலுவாக
அல்லாகொடுத்தருள்வானே ஆமீனுமீன் ஆமீன் 128

வெண்பா-க-விருத்தம்-10

கண்ணிகள்-590-ஆக கூடிய கவிகள்-601

பிசுமில்க்குறம் முற்றிற்று.

———

ஹாமீம்.

பிஸ்மில்லாஹி.

# ஞானப்புகழ்ச்சி.

### வெண்பா.

ஆருறுக் கப்பால் அணுவணுவாய் வந்துலகில்
வேருரு மொப்பில்லா மேலோனே—வீருன
புகழ்ச்சிது ஆவடியேன் புகலுதற்கு நீமனதுள்
மகிழ்ச்சி தருவாயே மகிழ்ந்து. (1)

அஞ்சு மறியாமல் ஐபேருங் காணுமல்
நெஞ்சுதனி லேயிருக்கும் நித்தனே—உன்செயல்கொண்
டோதும் புகழ்ச்சியைநா னுரைப்பதற்கு நீயெனக்குள்
போதந் தருவாயே புரிந்து. (2)

அற்பஜல மக்கினியால் அழியாமற் காவல்செய்து
கெற்பமதில் வைத்துருவாய்க் கிளர்ந்ததற்பின்—மெய்ப்புடனே
தாரணயி லாக்கியென்னைத் தான்வளர்த்துக் காத்தவொரு
காரணனே நீயிதற்குக் காப்பு. (3)

### அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்

முத்தொடு பவளம் பச்சை முதலொலி புவனுங் கூட்டிச்
சக்தியாய்ச் சிவனு யிந்தத் தாரணி தன்னி லாக்கிப்
பக்தியா யெனைவ ளர்த்த பரமனே யுனையான் பாட
இத்திசை யனைத்தும் போற்று மிறைவனே துணைச்செய் வாயே (4)

உதிரமோ டென்புந் தோலும் ரோமமும் தசைநரம்பும்
திதிவரி தாகி நின்ற சீவனுஞ் சிவனுங் கூட்டி
மதுரமோ டுருவா யென்னை வகுத்தவா வுனையான் பாட
விதுரமோ டெவரும் போற்றும் வேந்தனே துணைசெய் வாயே

### கலிவிருத்தம்.

ஆலம்பதி னெண்ணுயிர முனனுகம கிழ்ந்தே
மூலமறு நாண்கொன் றினில் மோகந்தரு முதல்வா
காலன்வரு நேரம்கலி மாவென்றன் நாவில்
பாலன் தலை மேல்நின்றுயர் பாடந்தரு வாயே. (6)

ஆருமின பேரென்றுனை யறியாமலே நெஞ்சுள்
சேரும்புகழ் தேடும்படி தெரியுமிறை யேநீ
ஒருமுப தேசமொரு நாளுமென துள்ளம்
பாரில்மற வாமலுயர் பாடந்தரு வாயே (7)

### கலித்துறை.

செய்காலும் வன்னியுந் தானுமொன் றய்நம்மைச் செய்திடுநாள்
மெய்யாக வேதுங் கொடுவந்த தில்லை வினை துலைந்தால்
பொய்யாம லேதுங் கொடுபோவ தில்லையென் றெண்ணிகைறு
ஈயாத லுத்தரை யும்படைத் தாயெம் மிறையவனே. (8)

ஐயா வெழுந்திடு முன்னு ருதித்ததென் றய்ந்துளத்தில்
மெய்யாக நோக்கி வணங்காத பாவிகள் வெந்நரகில்
பொய்யாம லேகுவ ரென்றே புவிக்குள் பசித்தவர்க்கொன்
றீயாத லுத்தரை யுப்படைத் தாயெம் மிறையவனே. (9)

கணங்காத தந்தைக்கு முன்பிறந் துந்திக் கமலமதில்
புணங்காம லந்தித்த தேதென்று நோக்கிப் புகழ்ந்துதொழ
இணங்கா நரகுக் கிரையாவ ரென்றுள்ளத் தெண்ணியுன்னை
வணங்காத லுத்தரை யும்படைத் தாயெம் மிறையவனே. (10)

ந்தக் கிருபை பெருகிமுத் தான முஹம்மதைநீ
த்தக் கிருபைசெய் திங்களமைத் தாயிறை நீயெனவும்



வந்தக் குருவிடஞ் சேராம லுன்னை வணங்குவதற்கோ
இந்த வுலுத்தரை யும்படைத் தாயெம் மிறையவனே, (11)

பொல்லா தவனுண்மை சொல்லா தவனையும் புலன்கள் தம்மை
வெல்லா தவன்றவம் வேண்டா தவன்மெய் யடியவர்பின்
செல்லா தவன்சிந்தை செய்யா தவனின் றிருவடிக்கன்
பில்லானை யேதுக்கும் நீபடைத் தாயெம் மிறையவனே, (12)

கல்லாப் பிழையுங் கருதாப் பிழையுங் கசிந்துநினை
நில்லாப் பிழையும் நினையாப் பிழையும் நேர்ந் தஞ்சிலொன்றைச்
சொல்லாப் பிழையுந் துதியாப் பிழையுந் தொழாப்பிழையும்
எல்லாப் பிழையும்நீ தான்பொறுப் பாயெம் மிறையவனே. (13)

ஆண்பிள்ளைச் சிங்கம் முஹம்மது வாம்அவ ரன்றிமற்றோர்
வீண்பிள்ளை யாரும் வெறும்பிள்ளை யாம்வெற்றி மேற்பிள்ளையாம்
ஓம்பிள்ளை யென்றதுக் குள்ளேயு லாவுமுல் லாசப்பிள்ளை.
தேர்ந்துன்னை நோக்கிக் கமலத்துள் ளேதெரி சிப்பவர்க்கே. (14)

ஆண்பிள்ளை ஆல நபிபிள்ளை ஆதி யருள்பெருகும்
தேன்பிள்ளை யூறுஞ் சிவப்பிள்ளை யாதி தெரிசித்திடும்
வான்பிள்ளை முத்து மிகுராஜுப் பிள்ளை மனதுக்குள்ளே
கோன்பிள்ளை யார்க்குங் குருப்பிள்ளை யான முஹம்மதுவே

### வெண்பா.

ஆதியும ஞதியாய் அஹ்மதுமு ஹம்மதுவாய்ச்
சோதியா யேக சுபசொருபாய்—நீதியாய்
இப்புவியில் வந்துயிர்க ளெல்லார்க்குந் தாபரமாய்
நிர்பவரை நெஞ்சே நினை.

### எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அவ்வ லஹறதாக நின்றமரம்
ஆகி றஹறுமதாய்ப் பூத்துப்பூத்து
வவ்வற் கொடியாகப் படர்ந்து காய்த்துப்
பகுது அஹறதாகக் காலியாமே
சொல்லத் தகுமல்ல இப்பொருளைச்
சுருட்டி மறைக்கிறேன் ஷறகுக்காக
எல்லை யறிந்துன்னை வணங்கவல்லார்க்
கிரங்கி யிருப்போனே துணைசெய்வாயே.

### எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

மதுமஸ் தருந்தினவர் மனமொத் திசைந்துபல
மருள்பெற்று வந்த வர்கள்போல்
அதமத்தி லுற்றவர்க ளதைவிட்டு நற்பதவி
யறிவுற்று நம்பி வரவே
உருவற்ற தைக்கமல மதிலுற்ற வர்க்குமன
தருளுற் றெடுத்துறை செய்யக்
குருபுத் திரர்க்கரிய குணமுற் றெனக்கருளுங்
குறையற்று நின்ற பொருளே. (18)

### எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

பேச்சைச் சிறந்துள்ளான் றிருத்தூதனுர்
பிரிய முறுந்தோழர் நால்வரையும்
ஆச்சாச் செனுமென்றன் மனதுள்வைத்து
அசனே டுசைனையன் பாலுகந்து
பூச்சைச் சிறந்ததோர் சொற்பனுவற்
புன்சொல் தொடுப்பேனே கேட்டுநல்லோர்



சிச்சீ யெனத்துப்பிச் சினக்கவென்றும்
சிறியே னம்மாதியைப் புகழ்ச்சிசெய்தேன்
சூழ்ச்சி யறிந்தோர்க ளடியோன் சொன்ன
சொல்லிற் பிழைதீர்த்துக் கொள்வாரென்றே. (19)

சொரியு மிறையவன் கிருபைகளுந்
துதியும் பெறுஞ்சிறு மலுக்கர்பாலன்
தெரிய திருகண்ணு மிழந்தபீர்மு
ஹம்ம தெனப்பேராய்த் தெளிந்தோன் ருனும்
பெரியோன் றனைப்பாடிப் புகழ்ச்சிசெய்தேன்
பிழையுண் டெனவுந்தா னறிந்தவர்கள்
உரியோன் றனக்காகப் பிழைகள்தீர்த்தே
உலகிற் றிறமாக்கிக் கொள்வாரென்றே, (20)

### விருத்தம்

இறைவா நினே டடியேன்புகழ்ந் திரந்தேத்திட இதனைத்
தறைமீதினி லெவராகிலுந் தர்க்கம் பறை யாமற்
குறைகாணிலும் பிழைதீர்த்திதைக் கொண்டாடுவர்க் கென்றும்
அறமேவிய கிருபைசொரிந் தருள்தாளன திறையே. (21)

முதல்வா நினே டடியேன்முடு கியநாளிரந் தேத்தி
மதமேபெறும் புகழ்ச்சிதனை மகிழ்ந்தேன்புவி மீதே
இதமோடிறை நின்னேடெவ ரிரந்தோரவ ரெனக்கும்
விதநாலில்வந் துறுநன்மைகள் தருவாயுயர் வேந்தே. (22)

### வெண்பா.

தென்காசி நாடு சிறுமலுக்க ரென்னுமவர்
தன்பால னிக்கதையைச் சாற்றினுன்—வெங்காயம்

பாரிலெனைப்படைத்தெனக்குப்
பழுதுவினைவராமற்பாதுகாத்துக்
காரநினைவுதிருநாமமிறைஹபீபெனது
கமலமதிற்கனவுகாட்டில்
வீறுமுபதேசமெனக்குரைத்ததினால்
உளமகிழ்ந்துயர்மெய்ஞ்ஞானப்
பீருமுஹம்மதெனுமரியபேருடைய
பைதலிறையைப்புகலக்கேண்மோ.

### கலித்துறை.

ஆதம்தமைப்படைத் தெம்மையாள் கின்றஅல் லாவினிடம்
மாதம் வணங்கப் பணிநெஞ்ச மேபர மாநந்தமாய்
நாத னொளியோ டொளிவா யிலங்கிடு நாயகனே
நீதந் தரும்பொரு ளென்றோசை நித்தம் நிறைநெஞ்சமே. (28)

ஆதம் பெறுமக்க ளெல்லா ரிலுநம்மை யன்புகொண்டே
வேத நபியிற சூலுமத் தாக்கும் வெகுநன் றிக்குப்
பாதங்கள் மேலுஞ் சிரங்கீழு மாய்ப்பத்து நூறுயிரமாண்
டோதித் தவஞ்செய்தா லும்போதா தாமன் றுகந்ததர்க்கே.(29)

நல்லார் புகழும் நயினார் முஹம்மதை நம்பிநித்தம்
சொல்லா லுவந்து துதிமன மேதுனி யாவிலுள்ள
எல்லா முடம்புக் கிதமாம் விழிக்கிருட் டாமிறந்தால்
அல்லா றுணையொழிந் தல்லாம லின்றென் றறிநெஞ்சமே. (30)





சுக்கோ சிவனிருப்பன் சோணிதமோ வல்லவிஞ்சி
ஹக்கோவென் றுள்ளறிந்தக் கால். (23)

### எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஆதி யொருவனை மறந்துலகில்
அனேகம் பிழைகள்செய் திறந்தாலங்கண்
நீதி பெறுமுயிர் தனையோவிண்ணோர்
நெறிசே ருடலையோ கேட்பார்பின்னே
சோதி யருட்படி நரகிலிட்டுச்
சுடும்போ படுந்துய ரவனோநாமோ
ஓதி யுணர்ந்தோர்களடியேன்சொன்ன
வுண்மை யறிந்துரை சாற்றுவீரே. (24)

### விருத்தம்.

சிறுமலுக்கர்சிகரமெய்த்தருள் செல்வனிருகண்ணற்றவன்
பிறகுநட்பொடுகுருவெனக்கிடுபேர்பீர்முஹம்மதன்
ஷறகில்மிக்குளநிலைமைகற்றுயர்சகலசற்குருபுததிரன்
மறகவைத்தன மனதிலுற்றுயர்வளநினைந்துரைபாடுவான். (25)

### வேறு

பாரிலுயிரனைத்துமிறைக்கடிமை
பயகாம்பரெங்கும்படைத்த
ஆதிக்காருலகில் திருத்தூதரல்வால்
இறைதோழனோ சொல்லடிமைதானோ
ஏதுமிலிதிருவுளமதின்னதெனத்
தெரியாதென்றிரங்கிநாளும்
பீருமுஹம்மதெனுமுரைபேருடைய
பைதலிறையைப்புகல்வன்கேண்மோ. (27)

## ஞானப்புகழ்ச்சி.

### வெண்பா.

ஆதார மாகவெங்கும் மானவனே யானுமுன் றன்
பாதார விந்தம் பணியாமல்—ஏராத
வன்பிழைகள் செய்தடியேன் வந்தேமன் னன்றிருமுன்
என்பிழையை நீ பொறுப்பா யே. (31)

### விருத்தம்,

வன்னமின்னபடி யென்றுகண்டொருவ
 ராலுநின்வடி வறிந்திலார்
மின்னுமென்னுளிரு கண்ணிலுன்னொளி
 விளங்கநின்றருளும் வேந்தனே
பின்னுமென்னுளிருந் துன்னுமுன்னுணருப்
 பிறவிபேதகமி லானேயான்
முன்னுமுன்னைமறந் தென்னவன் பிழைசெய்
 தாலும்பொறுவல்ல வாதியே (32)

### வெண்பா.

அல்லா வொருவனென்று முஹம்மதவன் றூதரென்றும்
சொல்லா லுவந்து தொழுதிரந்தால்—நல்லாரு
மண்ணிலழி யாதே மறுமைக்கிறை தாரபலன்
எண்ணிமுடி யாதே யிவர்க்கு. (33)

அல்லா திருநோக்கரியபல வாழ்வுகளும்
வல்லான் பொருட்டாலே வந்தணுகும்—எல்லாம்
நலங்கா திலங்குமொரு நாயகனை நம்முட்
கலங்காம லேநினைத்தக் கால், (34)



### விருத்தம்.

அந்தமேதுமனு காதெழுந் துனடி
 யார்க்கிரங்குதவியன்பனே
வந்துயான்மனதுநொந்து றேடுபல
 வரிசைகேட்டிரந்து போற்றுவேன்
எந்தவாக்கிலுமே மென்து வாவதனை
 யிரங்கி நீகபூல்செய் தேத்தியே
சிந்திடாதபொலி வும்மெனக்குன்தற
 ஜாத்துந் தந்தருளென் செல்வனே. (35)

அன்னைகெற்பமதி லென்னை யற்பஜல
 மாக வைத்துருவ தாக்கியே
என்னைமெய்ப்பொடுயிர் தன்னை விட்டுணவ
 தீந்து புவியினில்வ ருத்திநீ
முன்னைநட் பொடெனையே வளர்த்துதவு
 முதல்வாவெனது வறுமையால்
உன்னைநித்தலுமேயுன்னிக் கேட்பனதுக்
 குதவி தவெங்க ளொருவனே. (36)

### வேறு.

வஞ்சகமற்ற மறைப்பொருளே மனுவார்க்கு மருந்துணையே
நெஞ்சினகத்துள் இருந்துலகெங்கும் நிறைந்தொளி வானவனே
தஞ்சமதற்றடி யேன்மனம்நொந்து தயங்கிநின் றேடிரப்பேன்
பஞ்சமகற்றநின் வானவரோடு பகர்ந்திடென் பார்த்திபனே. (37)
ஆதியுனக்கிணை அற்றவனே யழிவற்றுல காள்பவனே
நீதிகொடெத்திசையும் படைத்தஞ்சில் நிறைந்திடு முட்பொருளே
வேதியர்நட்பி லிருப்பவனே வெளியோடுய ருத்தமனே
சோதியேநின்றே டிரப்பேனதற்குத் துணைச்செய்யெனுத் தமனே (38)

### வேறு.

சுகமுறும் பேயோ டலிபுசென்றொரு சுழியெறிந்துயர் துளிகொடே
அகமுறும் கடலதில் வலம்புரி தனிலடைந்தெருதரளமாய்
அஹ்மதின்னிரு பதமெனன்புற மனமகிழ்ந்துன்றே டிரந்தனன்
முலகமலர்ந்தெனை முடுகிவந்துயர் முறை மைந்தருள் முதல்வனே.
எனையுவந்தருள் கமலமென்றதி னிஙசயநின்றிடு மிறைவனே
வினைகள்வந்தென திருதயந்தனில் வினவிவம்புசெய் யாமலே

புனைவிசுந்தரன் நினைவிலுந்துயர் புகுதவென்றுன தடிமையான்
உனையுவந்துனே டிரந்ததற்கு னுதவிதந்தரு ளொருவனே.

வேறு

இறைவாஉனக்கு நிகராரெவர்க்கு மினிதாயெழுந்த முதல்வா
மறையாதனைத்து மனமீதிலுற்ற வடிவேசலித்து னடியேன்
அறவேமெலிந்து முனையான்மறந்து மலைந்தேனுவந்து னருளால்
குறையாதசெல்வந்தருவாய்நீயென் றுங்குறையேதுமற்றபொருளே
மறைநாலமைத்து வருநாள்மனித்தர் மனமீதெழுந்த பொருளே
முறையோடெவர்க்கு முயர்வாழ்வளித்தமுதல்வாபுவிக்குளடியேன்
சிறைமீதிடைந்து தெளியாதிகழ்ந்து திரிந்தேனெனக்கு னருளால்
தறைமீதுசெல்வந் தவருதவாழ்வுந் தருவாய்நிறைந்த பொருளே.

அடைக்கலம் :

கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தொழுதுபலமி டையிலடி யேனின்னே டிரந்தேன்
துக்கமத கற்றியருள் துய்யபெரி யோனே
எழுதரிய வடிவுடைய சொருபமதுள் ளோனே
எங்களுடைச் சங்கடமு றிந்தபெரி யோனே
முழுதுமன துனை நினைவு தருநல்லிறை யேயான்
முடுகிநின்னே டிரந்ததற்கு னுதவியருள் வாயே
பழுதுபல வினைகளொரு நாளும்வா ராமல்
படைத்தோனே யானுன் னடைக்கலம் தானேன். (43)

ஆதமுத லானதுமுன் னுதமெழுந் தீனே
யண்டருல கெண்டிசையுந் தொண்டர்புகழ் வோனே
வேதமொரு நாலுமுரை பேசுமிறை யோனே
மிக்கமனி தர்க்குரிய நட்புடைய கோனே
போதமறி யாதசிறி யேனின்னே டிரந்தேன்
புண்ணியனே நின்னுதவி நண்ணியருள் வாயே
தோதகம தானகவரென் னேடுபகையாமல்
துய்யோனே யானுன் அடைக்கலம் தானேன் (44)

ஆதமுத லாமுயிர மைத்தபெரி யோனே
அம்புவி யடங்கலும் வணங்கவுரி யோனே
நீதமடி யார்புகழி லாசைகொளுந் தீனே
நின்பேர்முத லாருமறியாதபெரி யோனே



பேதமதி லாதுறவு தானுதவு கோனே
பெருத்தகிரு பைப்பொருளெ னக்கருளு வாயே
நாதமெழு புவியோரென் னேடுபகை யாமல்
நாயனே யானுன் னடைக்கலம தானேன் (45)

மாறாய மானமஃறு மூதையொளிக் கடலில்
வலம்புரியி லமைத்தொரு முத் தாகவளர்த் தோனே
ஆராய மிலங்குமுல கெங்குமுனை யல்லால்
ஆதிவே றில்லாத பெரியோனே யடியேன்
சீதேவி யானபலன் கேட்டுன்னே டிரப்பேன்
சீமானே நீயதற்கு னுதவியருள் வாயே
மூதேவி யாருமெனை முடுகாம லடியேன்
முதலோனே யுன்ற னடைக்கலம தானேன். (46)

அல்லாகு லில்லாஹு யாதியா னவனே
ஆராரு மணுகாத தீதாறுள் ளோனே
வல்லானே யெல்லாம் வணங்கவுரி யோனே
மாருத சோதிவடி வானபெரி யோனே
லில்லாஹு யென்றன்பி ரானேவல் லோனே
இறையோனே நீயெனக்கு னுதவியருள் வாயே
பொல்லாத குமனைவெல்லாம லடியேன்
புண்ணியனேயுன்ற னடைக்கலம தானேன். (47)

ஆதிமுத லாஷிகெழுந் தலைபுகழுங் கோனே
ஆழியதில் நீளலிபோ டாசைகொளு வோனே
சாதிபல பேதகம தாகவருந் தீனே
தாமரையு ளாடுமொளி தாக்குமிறை யோனே
வேதியர்க ளாருமறி யாதபொருளேயான்
விரும்பி நின்னே டிரந்ததற்கு னுதவியருள் வாயே
நீதியறி யாதவரென் னேடுபகை யாமல்
நித்தனே யானுன் னடைக்கலம் தானேன், (48)

நபியாத மக்களுனை நவில்வசவர்க் கரிய
நல்வுகதி வாழ்வுலகில் நல்குமிறை யோனே
சபியாத முல்லாஹீதம் மோடரிய ஹவ்வா
தழுவுமனதை விலகிமறு சுகமருளு மதுபோல்

புவியோர்க ணெஞ்சுதினம் வெருவித்திடுக் கிடவே
　　புண்ணியனே யுன்னுதவி நண்ணியருள் வாயே
விவிதா யெழுந்துவினை பகராம லடியேன்
　　வேந்தனே யானுன் னடைக்கலம தானேன் (49)

ஞானமதுள் ளோர்பலரும் நாடுமிறை நீயே
　　நாட்டமறிந் தேநலவு கூட்டுவது நீயே
வானவரெல் லாரும்புகழ்ந் தேத்துமிறை நீயே
　　வையக மடங்கலு நிறைந்தவனு நீயே
தீனவர்கள் நாவில்நட மாடுமிறை யோனே
　　தேடியுன்னே டிரந்ததற்கு னுதவியருள் வாயே
ஈனர்சில ரென்னைமிக விடுசெய் யாமல்
　　ஏகனே யானுன் னடைக்கலம தானேன். (50)

மூடியுல கெங்குமொளி முங்குமிறை நீயே
　　முண்டக மலர்ந்ததி லெழுந்தபொருள் நீயே
வாடியொரு சங்குமுத லெங்குமிறை நீயே
　　வந்துநிலை கொண்டுனது தம்பமொடு நெஞ்சில்
நாடினது நாளுநழு வாமல்வந் திடவே
　　நாயனே நீயுதவி நல்கியருள் வாயே
தேடினதெப் பொழுதுமோர் தீங்குவா ராமல்
　　சீமானே யானுன் னடைக்கலம தானேன். (51)

அஞ்சிலொரு பஞ்சமிய மைத்தவனு நீயே
　　அங்கமொரு பங்கிலொளி தங்குமிறை நீயே
நெஞ்சிலுறு வஞ்சகம் நிருத்தினவ னீயே
　　நின்பதமெ னன்புற நினைப்பவனு நீயே
உன்செயல் கொடுந்தியி லுதித்துவளர் கோவே
　　உண்மைகொ டெனக்குதவி நண்ணியருள் வாயே
தஞ்சமறி யாதவரென் னேடுபகை யாயல்
　　தானவனே யானுன் னடைக்கலம தானேன். (52)

அஞ்சுமுயர் தஞ்சமொடு நெஞ்சறிவு நீயே
　　அகரமுத லுயிரெவையும் வணங்குமிறை நீயே
நஞ்சிலழ தஞ்சியுயிர் நப்புமிறை நீயே
　　நகரமதி லுருகவருப் நாயகனும் நீயே



என்செயல்கோட ஞ்சுடரை மிஞ்சுமிறை நீயே
　　யிரங்கியுன்னே டிரந்ததற்கு னுதவியருள் வாயே
வஞ்சகரென் னேடுபல மாறுபே சாமல்
　　வல்லோனே யானுன் னடைக்கலம தானேன். (53)

புவியிலுயி ரனைத்தும்புகழ்ந் திடுமிறைவ னீயே
　　பூதங்களைந் துறையவரு புண்ணியனு நீயே
செவியொடெழுந் துரைபலது கேட்பவனு நீயே
　　சிவனருணன் றெழுகைக் குரியவனு நீயே
நபிகள்பல ரிறைஞ்சவரு நாயகனு நீயே
　　நாட்டமறிந் தெனக்குதவி நல்கியருள்வாயே
ஹபீபையறி யாதவரென் னேடுபகை யாமல்
　　ஹக்கனே யானுன் னடைக்கலம தானேன். (54)

அந்தாரநி றைந்தெனது சிந்தையிலு நீயே
　　அன்புகொடெ வர்க்குமொரு தஞ்சமுறு நீயே
மந்திரமொ டந்தநிலை தந்தவனு நீயே
　　வந்துதவி தந்தெனைவ ளர்ப்பவனு நீயே
தந்திரமோ டெங்கள்பல முந்திறமு நீயே
　　தம்பமொடெ னக்குதவி தந்தருளு வாயே
சுந்தரபு விக்குளொரு தீங்குவா ராமல்
　　துய்யோனே யானுன் னடைக்கலம தானேன். (55)

தந்தையிலி தாரமிலி தானவனு நீயே
　　தன்மைகொட வர்க்குமொரு தாபரமுநீயே
மைந்தரிலி யன்னையிலி மன்னவனு நீயே
　　பண்ணிலடி யார்க்கிரணம் வழங்குவது நீயே
சிந்தைதனி லிடறுதனைத் தீர்த்தருள்வை நீயே
　　தேட்டமறிந் தெனக்குதவி செய்பவனு நீயே
அந்தமிலி நீயெனக்கோ ரிழிவுவா ராமல்
　　ஆதியே யானுன் னடைக்கலம தானேன். (56)

தன்னையன்றித் தனக்குநிகர் தானிலியு நீயே
　　தண்மைகொடெ னக்குணவு தருபவனு நீயே
உன்னையறிந் துணருமவர்க் குறும்பொருளு நீயே
　　உந்தியிலெ ழுந்தெனது புந்தியிலு நீயே

பின்னையெனை வெறுக்குமவர் பேதலித் திடவே
பெரியோனே நீயெனக்கு னுதவியருள் வாயே
யென்னையடுத் தோர்க்கோ ரிழிவுவா ராமல்
ஏகனே யானுன் னடைக்கலம தானேன். (57)

என்னைமனு வென்றுலகில் விண்டவனு நீயே
யென்னினைவ டங்கலும றிந்தவனு நீயே
பின்னைமிடை தந்துதவி னிப்பவனு நீயே
பேசுமிடி நாசமத றுப்பவனு நீயே
மன்னையுனை யன்றியிறை மற்றொருவ ரற்ற
வல்லோனே யெனக்கு னுதவியருள் வாயே
உன்னைநினை வற்றவரென் னோடுபகை யாமல்
உத்தமனே யானுன் னடைக்கலம தானேன். (58)

அடியருடல் நின்றடிமை கொள்பவனு நீயே
அனுதினமு முனைநினைவு தருபவனு நீயே
கடியவர்கள் குடிகள்பொடி படவருள்வை நீயே
கலக்கமறுத் தெனக்குதவி செய்தருளு வாயே
படியிலடி யேன்வினைப்பற் றறுப்பவனு நீயே
பாவங்கள் பலவிடறு தீர்ப்பவனு நீயே
கொடியவர்கள் முடுகிவினை செய்யாம லடியேன்
கோமானே யுன்ற னடைக்கலம தானேன். (59)

ஜின்னும்வெகு சீவனுறு தேவுகளு நீயே
செங்கமல மங்கொளிது லங்குவது நீயே
சொன்னமதி லுன்னிறமி லங்குவது நீயே
துல்லிபமோ டெங்குமொரு துய்யவனு நீயே
வன்னநிற மொன்றுமனு காதவடி வேயான்
வருந்திநின்னெ டிரந்ததற்கு னுதவியருள் வாயே
பின்னுமுன தடியவரென் னோடுபகை யாமல்
பெரியோனே யுன்ற னடைக்கலம தானேன். (60)

மனித்தர்தவ மனைத்திலும்வந் திருப்பவனு நீயே
மனத்திலிருந் தனைத்துமறிந் துணர்பவனு நீயே
தனித்தவர்கள் நினைந்தபலன் தனக்குதவு நீயே
தவக்கலென்றன் மனக்கவலை தவிர்ப்பவனும் நீயே



அனைத்துமறிந் தெனக்கிரண மருளுமிறை நீயே
அடியனின்னோ டிரந்ததற்கு னுதவியருள் வாயே
இனத்திலுள்ளோ ரனைத்துமோ ரிழிவும்வா ராமல்
ஏகனே யானுன் அடைக்கலம தானேன். (61)

மற்றுநிக றற்றுலகி லெத்திசையு நீயே
மார்க்கமதை யார்க்கும்பறு லாக்கினவ னீயே
பத்திகொடு முப்பதிலி ருப்பவனு நீயே
பக்கம்பதி னலில்லரு முட்பொருளு நீயே
சற்றுங்கெதி யற்றவர்க்கு முற்றதுணை நீயே
தயங்கிநின்னோ டிரந்ததற்கு னுதவியருள்வாயே
முற்றுநினை வற்றவரென் னோடுபகை யாமல்
முதலோனே யுன்ற னடைக்கலம தானேன். (62)

எனைத்திரும னத்தினில் நினைப்பனு நீயே
யெனக்குளம னத்திறம தத்தனையு நீயே
அனைத்திலும் மைப்புறவி ருப்பவனு நீயே
அமைத்ததைநி மைக்குமுன ழிப்பவனு நீயே
உனைத்தினநி னைத்துன்னோ டிரப்பனிறை யோனே
உள்ளமறிந் தெனக்குதவி யுற்றருளு வாயே
சினத்தெனையி கழ்ந்திட வுளக்கழக தல்ல
சீமானே யுன்ற னடைக்கலம தானேன். (63)

அருணனுடு பலவுமமை செய்தவனு நீயே
அளவுநிலை நிறைந்தவொரு பெரியவனு நீயே
வருணனுடல் பதறியுயிர் வரவருள்வை நீயே
மறதிமதி மயக்கமொரு வடிவிலியு நீயே
சரணனிலை யெவருமறி யாதபொரு ளேயான்
தயங்கிநினோ டிரந்ததற்கு னுதவியருள் வாயே
இரணப்பொலி வுறகுமத் திகலாம லடியேன்
இறையோனே யுன்ற னடைக்கலம தானேன். (64)

உலகிலுயிர்க் கிரணமளித் துதவுதுணை நீயே
உவகைபல வூணுறக்க மேதுமிலி நீயே
இலவ்ஹிலொரு வெழுத்துண்ட தற்கிரங்கு இறை நீயே
இருதயத்தி லெழுதியதி லிருப்பவனு நீயே

பல்னுமிந்தப் பதவிதந் தருளுமிறை யோனே
பரதவித்தங் கிரந்ததற்கு னுதவியருள் வாயே
விலகும்பல வினைகளினை யணுகாம லடியேன்
மேலோனே யுன்ற னடைக்கலம தானேன். (65)

அருபசொரு பத்தெவையு மாள்பவனு நீயே
அடியவர்க் குதவிபல னருள்பவனு நீயே
உருவவுல கெண்டிசையு முடைவனு நீயே
உருதிநிலை குறையாத பெரியவனு நீயே
இரவுபக லற்றிடத் தியங்குமிறை யோனே
யெளிமையறிந் தெனக்குதவி யீந்தருளு வாயே
மருவுமொரு பத்தியழிந் தகலாமலடி யேன்
வல்லோனே யுன்ற னடைக்கலம தானேன். (65)

அன்னையிலி யத்தனிலி யாருமிலி நீயே
அழிவுபல காலமணு காதவனு நீயே
முன்னையுரு வற்றெருளிமு ழங்குமிறை நீயே
முச்சுடரி லச்சமற நிற்பவனு நீயே
மன்னையொரு முத்தினில்வ குத்தபெரி யோனே
வருத்தமறிந் தெனக்குதவி செய்தருளு வாயே
உன்னையென்ம னத்தினிலு தித்ததக லாமல்
உடையோனே யானுன் னடைக்கலம தானேன். (67)

அரியவர்கள் மனதில்வந் துறைபவனு நீயே
ஆரிருள திலினதென வுணர்பவனு நீயே
திரைபலதுண் டதிலொரொளி தெரிபவனு நீயே
ஜின்னிறம் பதனைத்திரித் தறிபவனு நீயே
உருவினதென் றெவருமுனை யறிவிலியே யடியேன்
உன்னெடிரங்கி யிரந்ததற்கு னுதவியருள் வாயே
ஒருவர்வந்தெ னக்கிழிவு பகராம லடியேன்
உடை யோனே யுன்ற னடைக்கலம தானேன். (68)

துவக்கமுடி வற்றவொரு துய்யவனு நீயே
தூதுபல துக்கமொரு துணையிலியும் நீயே
உவர்க்கடல தற்குளோரொ ளிக்குளொளி நீயே
ஒடுக்கநல் லுயிர்ப்புடனி ருப்பவனு நீயே



எவர்க்குமு னிருக்குமோ ரெழுத்தறியு நீயே
யெனக்குறகு மத்துதவி செய்பவனு நீயே
தவக்கலி லிருப்பவர் தமக்குதவு கோவே
தவக்கமத கற்றுன் னடைக்கலம தானேன். (69)

கானுமெழு காடுமுயர் கானகமு நீயே
காசினியும் வானுலகுங் கடல்மலையு நீயே
தானமொரு சொர்க்கமெரி நரகமொடு நீயே
தக்கவுல குக்குநல் லுயிர்க்குமிறை நீயே
பானுவெயில் பகல்நிலவு அறுஷாகுறு செவையும்
படைத்தோனே யுன்ற னுதவியருள் வாயே
ஈனமொரு நாளுமணு காமலடி யேனும்
இறையோனே யுன்ற னடைக்கலம தானேன். (70)

அலைகடலு மம்புவியு மழகுசெறி வானும்
அனிலமொடு கனலுடுவ மைத்தவனு நீயே
இலௌஹுகல மறுஷுதுறு செரிநரகு சொர்க்கம்
இரவிகதி ரெழுமதிய மைத்தவனு நீயே
மலைகளொடு நவமணியு மற்றமுள யாவும்
வகுத்தோனே நீயெனக் குதவியருள் வாயே
உலகில்வரும் வினைகடெனை யணுகாம லடியேன்
உடையோனே யுன்ற னடைக்கலம தானேன். (71)

செற்பமதி லற்பஜல மிற்றெருழுகு நீரைக்
கீர்த்திகொடு சீர்த்துவம தாக்கினவனீயே
ஒப்பரவோ டிந்தவுல கிற்பிறக வைத்தே
உண்மைகொடெ னெக்குதவி தருபவனு நீயே
செப்பமுட னெத்திசையு மேவசம தாகச்
சீமானே நீயெனக் குதவியருள்வாயே
எப்பொழுது மிக்கமிடை சற்றுமணு காமல்
ஏகனே யானுன் னடைக்கலம தானேன். (72)

அல்லுமெழு பகலுமுரை சொல்லுமிறை நீயே
அம்பரமு மம்புவியு நம்புமிறை நீயே
வல்லபமொ டெங்குமொளி தங்குமிறை நீயே
வன்பிழைபொ றுத்துலகில் வந்துதவு நீயே

கல்புதனில் வாழும்ஹறு பேழதனில் நீயே
கலக்கமறிந் தெனக்குதவி செய்தருளு வாயே
தொல்லுலகில் வல்வினைகள் தொடராம லடியேன்
துய்யோனே யுன்ற னடைக்கலம தானேன். (73)

அப்பிலுறு மற்பஜல மத்துளிகொ டென்னை
அன்னையுத ரத்திலுரு வாக்கினவ னீயே
தப்பறவெ னைப்புவியில் வைத்தறிவ ளித்துத்
தர்க்கமற மிக்கமிடை தீர்ப்பவனு நீயே
ஒப்புவமை யற்றவொரு பெரியோனே யடிய
னுற்றுன்னோ டிரந்ததற்கு னுதவியருள் வாயே
எப்பொழுது மிக்கமிடை சற்றுமணு காமல்
இறையோனே யுன்ற னடைக்கலம தானேன். (74)

புகழும்பல புகழ்ச்சியதற் குரியவனு நீயே
புவியில்வரு முயர்களதி லொளிபரவு நீயே
குவளையுறு கமலமதி லுறைபவனு நீயே
குறைகளொரு பழுதுபல குற்றமிலி நீயே
இகளிபுன லனலுமதி லுயர்பவனு நீயே
யென்றினினை வின்படி தருபவனு நீயே
அகிழில்விழும் வினைகளெனை யணுகாம லடியேன்
அல்லாவே யுன்ற னடைக்கலம தானேன். (75)

அல்லா வுனக்கருமை யுண்டோவெனக் கிதனை
அருள்வாய் நினைத்திடில னைத்துமிறை யோனே
வல்லா னெவர்க்குமறு வில்லாவா தியுனை
மகிழ்வார் மனங்களிலெ ழுந்தருளு வோனே
பொல்லா னுனைக்கருதி வந்தேனெவர்க்குமொரு
புண்ணியனே யுன்னுதவி நண்ணியருள் வாயே
கல்லாத கயவரெனை வெல்லாம லடியேன்
கத்தனே யுன்ற னடைக்கலம தானேன். (76)

அறுசீர்க்கழி நெடிலடியாசிரியவிருத்தம்.

ஆரும்புகழு மிறையோனே யடியேன்மனதிற் பெருஞ்சலிப்பால்
ஓ துமறைக்கு ளுனை த்தேடி யுவந்தேன்றினமுற் றுவந்ததினால்
ஏதும்பொருந்தியிருந்திலையோவிறைவாவெனக்குமெழுத்திதுவோ
பாரிலெனை முகம்பார்க்கிலையோயோபராக்கோவுனக்கென்பார்திபனே.



ஒளிசேரிறைவனொருவனென்று முடையோன்றா தரஹ்மதென்றும்
வளிசேருலகி லுனையடியேன் வணங்குமதுகண் டிணங்கயோ
வெளிசேருனது திருவுளமோ வேந்தாவெனக்கும் விதியிதுவோ
எளியேனெனது வன்பிழையோ விரங்காதிருந்தா யிறையோனே.(78)

முன்னுமெனது தீவினையால் முதல்வாமுதல்வா வென்று நித்தம்
உன்னுப்பொழுதெல் லாமுறையிட் டோயாதடியே னழுதசத்தம்
பன்னுமுயர்காதேருதோ பரனே யெனக்குப் பயனிதுவோ
இன்னமடியே னளவுசற்று மிரங்காமனமோ விறையோனே. (79)

செல்லென்றுலகி லெனைப்படைத்த தீனேயெனது தீவினையால்
அல்லும்பகலு முனை த்தேடி யடியேன்முறையிட் டழுதசத்தப்
வெல்லுமுயர்கா தேருதோ வேந்தாவெனக்கும் விதியிதுவோ
இல்லென்றடியேன் புகழ்ந்ததுனக் கேற்றதிலையோ விறையோனே.80

விண்டாற்றெரியாத் தீவினையால் வேந்தாவேந்தா வென்றுநித்தம்
தொண்டாற்றுதித்துன் னோடிரந்த துயரமுனது திருக்கண்ணினாற்
கண்டாலுனக்கு மிரங்காதோ கருமவிதியோ ஹக் கானவனே
என்றாலடியேன் புகழ்ந்ததுனக் கேற்றதிலையோ விறையோனே. (81)

கருடனினை விட் டெனைப்படைத்த ஹக்கேயெனது தீவினையால்
குருடன்வனத்திற் கோலிழந்த குறிபோல்முறையிட்டுனையடியேன்
வருடிப்புகழ்ந்துன் னோடிரப்பேன் வடிவேயுனது வல்லபத்தால்
திருடனளவுற் றிரங்கியின்ன ஞ் செய்வாய்றகுமத்தென சீமானே (82)

என்னாலறியப் பதப்விளைத்தா யானுமறியத் தேடுகின்றேன்
உன்னாலொன்றுங்குறைவிலையென் னுடையோனே நின்னருட்கென்றே
பன்னாளுன்னைத் தொழுதேத்தும் பழையவடியா ருடன்கூட
என்னாயகனே நீபுறப்பட்டிருந்தாயானு மிருந்தேனே. (83)

முன்னாளெனக்கென்றெழுதிவைத்த முறையேயெனதினெழுத்ததனை
என்னாலறியப் பேறுபெற்றா லிறைவாவுனையா னுணரேனோ
அந்நாளுன்னை யறிந்துதொழு மடியார்க்கென்று முதவறியேன்
என்னாயகனென் னளவுசற்று மிரங்காய்மிகவு மிரங்குகவே. (84)

அன்னைவயிற்றி லற்பஜல மழியாதெனைவைத் துருவாக்கிப்
பின்னையுலகிற் பிறப்பித்துப் பேணிவளர்த்த பெரியோனே
உன்னைமனதில் நினைத்தடியேனுவந்தேன்தினமுற்றிரந்துகொண்டே
னென்னைரட்சித் திடேத்தி யிரங்காயெவர்க்கு மிறையோனே, (85)

முன்னெறு நநாலு ஹறுபாணை முதல்வானது திருவாணை
மன்னுயிர்ஞானப் பொருளாணை வரிசைஅறுஷ்ஷு குறுசாணை
உன்னுரைநாலு மறையாணை யொளிசேரிறசூல் திருவாணை
என்னுயிர்காமத் துயரறிந்தே யிரங்காயெவர்க்கு மிறையோனே. (86)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

தனதுனக்குப் பொருந்தினவர் தயக்கமற்றங்
கிருப்பதுகண் டடியேன் மண்ணில்
மனதுபொருந் திருப்பனென்றன் வறுமையறக்
கண்டுன்னை வருந்தி யானும்
உனதுமுகத் திருத்தியெனக் குள்ளசலிப்
படங்கலுமுற் றுரைப்பே னீயும்
எனதுமுகத் திரக்கம்பார்த் தெளியன்வினை
யகற்றியரு ளிணையற் றோனே. (87)

விருத்தம்.

அருண்டபூவினி லிருந்ததாலெனை யமைத்தவாவுனை நினைத்திலேன்
திரண்டபோதெனேடிரங்கித்தேவனைத்தேடினேன் பரிதாபமாய்
மருண்டநெஞ்சினி லிருண்டவன்குபிரகன்றுமைஞ்சுடர்காணநாள்
உருண்டதாமரைமலர்ந்துகாணநல்லுதவிதாவெங்களொருவனே.(88)

அறுசீர்க்கழிநெடிலடியாரிசிய விருத்தம்.

அந்தமு முடிவுந் தாழ்வு மனைத்தும்வந் தணுகி லானே
முந்திய நபியுல் லாதம் முதல்வனே யடியார் மெய்யில்
விந்தி னுக் குயிராய் மேலே வெளிக்குனின் ருடும் வேந்தே
என்றனக் கிரண போக மிரக்கமுற் றருள்செய் வாயே. (89)

கரும்பென வினிக்கும் பாவம் கசக்கும்வேம் பெனவே தன்மை
இருப்பென விருக்கும் நெஞ்ச மேழையென் மனப்பொ ருமற்
றநம்பல விழிநீர் சிந்தத் தயங்கிநின் றடியே னின்னோ
டரும்பல னழுது கேட்பே னுதியே துணைச்செய் வாயே, (90)

கனைத்துவந் தெழுப்பும் பாவங் கடிதில்வந் தணுகாத் தன்மை
வினைத்தொழில் தனக்கா ளான வெளியனின் றீவி னையால்
அனைத்துமென் றுயர மாரு தழுதுநொந் தடியேன் மண்ணில்
உனைத்தொழு திரந்து கேட்பே னுள்ளவா துணைச்செய் வாயே. (91)

வினவிவந் தழைக்கும் பாவம் விரையவந் தணுகாத் தன்மை
தனையுவந் திடுமென் னெஞ்சில் தரித்தமுக் கோணில் வட்ட



மனையில்வந் தசைவு காட்டும் வடிவுநின் னருளும் வேண்டி
உனைத்தொழு திரந்து கேட்பே னுள்ளவா துணைச்செய் வாயே. (92)

மூமினோர் தங்க ளுக்கு முறையிகென் றவர்க்கு மண்ணிற்
ருமதி யாமல் றஹ்மத் தருளுமென் றம்பி ரானே
பூமியி லுனைத்தொ ழாத புல்லனுன் புகழ்ந்துன் னோடு
ஆமினென் றிரந்து கேட்பே னுதியே துணைச்செய் வாயே. (93)

ஆதியே கடவுளான யன்பனே யடியார்க் கென்று
நீதிசே ரொளியி னுக்கு நெஞ்சமு நினைவும் பொங்கச்
சோதியின் னுதவி தந்தென் றுக்கம தகற்று வாயென்
றோதிநின் னோடி ரப்பே னுள்ளவா துணைசெய் வாயே. (94)

கலிவிருத்தம்

அந்தமு முடிவுமனு காதவனே நீயென்
சிந்தனை யறிந்துமென்றன் றீங்குகள் பொறுப்பாய்
உன்றனை மிகவுநம்பி யுன்றிருமுன் வந்தேன்
என்றனிமை கண்டெனையீ டேற்றுறகு மானே. (95)

அந்தமிலி யேயடியர்க் காதரவுள் ளோனே
என்றனைமண் ணோர்வெறுத் தெனக்கிழிவு பேசும்
நிந்தனை யறிந்திருக்க நீயருள் செய் தென்முன்
வந்தெனையீ டேற்றியருள் வல்லபெரி யோனே. (96)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரிவிருத்தம்.

ஆதி முதலோனே தம்பிரானே
அடியார் புகழ்ச்சியைக் கைக்கொள்வோனே
நீதி யுடையோனே நீயுரைத்த
நெறிசேர் மறைநான்கு முனைத்தேடியே
ஓதிப் புகதனுங் காண்கிலானே
யுள்ள மதிலுன்னை யுவந்தார்நெஞ்சுட்
சோதி விளக்காய்நின் றிலங்குவோனே
துய்யோ னேயானுன் னடைக்கலமே. (97)

தேசப் புவியின்மே லெனைப்படைத்த
சீமா னேயுன்னை ஸூஜூதிடாமல்
நேச முடனேதான் நினைத்திடாமல்
நெடியோ னேயுன்னை மறந்துலகில்

ஏசும் பெரும்பிழை பெருகச்செய்தே
இறந்தா லெனைமண்ணி லடக்கும்போது
ஓசை யுடனிரு பேரிறங்கி
உன்று யனுரென் றெனைக்கேட்குநாள்
கூசி யுடல்மெத்தப் பயப்படுவேன்
கொடியே னவர்களோ டுரைக்கமாட்டேன்.
பாச முடனென்னைப் படைத்தகோவே
பதரு தவர்களோ டுனுமஞ்சொல்லப்
பேசு மிறையோனே கிருபைசெய்வாய்
பெருங்கை யாளர்வந் தடித்திடாமல்
ஆசை யுடனப் போதைக்கிப் போதுசொன்னேன்
அல்லா வேயானுன் னடைக்கலமே. (98)

கூட்டுங் கருமத்தைக் குறைப்பவனே
குறையுங் கருமத்தைக் கூட்டுவோனே
நாட்டு முயிர்க்காசை நல்லிரணம்
நல்கு மிறையேயன் பாலடியார்
நாட்ட மறிவோனே நானிலத்தில்
நன்மை விளைத்திடு நல்லோர்கள்மேல்
தேட்ட முளபெரும் பொருளேயெட்டுத்
திக்கிற் றரியானே செகதலத்தில்
கேட்டோ ரவரவர் நினைவின்படி
கிருபை மிகச்செய்யும் பொருளேமண்ணில்
ஈட்டு மொழிதினங் கேட்டடியே
னிரட்பே னதைநீகூட் டுதவிசெய்வாய்
ஏட்டி லடங்கானே யெல்லவர்க்கு
மேக பெரியோனே யெங்கள்கோவே
ஆட்டுங் குபிரென்னை யணுகாமலே
அல்லா வேயுன்ற னடைக்கலமே. (99)

சொல்லாற் புகழினுற் றெலைக்கொண்ணுத
துய்ய பெரியோனே பழுதற்றோனே
நல்லோர்க் கும்நல்ல பதியில்வாழ்வு
நல்கு மிறையோனே நலந்தீங்குள்ளார்
எல்லார்க்குங்கபூல் மாறுமலே
இரண வரணங்க ளீயுங்கோவே



பொல்லா ஞனுனை யறிந்துகேட்பேன்
பொருளே யதைநீகூட் டுதவிசெய்வாய்
ஒல்லாப் புவியின்மேல் பகைத்தோரென்னை
யுவந்து பிரியமுற் றநுளவெற்றி
அல்லா நீயெனக் கருள்வாயென்று
மடியே னமானமுன் னடைக்கலமே. (100)

தருண வொளிபல வெளியிருளாய்ச்
சமைத்த பெரியோனே தலைநாளதில்
இரண மெழுதின படிதப்பாம
லெல்லா வுயிர்க்குநீ வகைவகையாய்க்
கருணை யுடனல்கும் ஹக்கேயென்தன்
கமலப் பொருளேமண் புவியோர்க்கெல்லாம்
வருண னுயிர்கொள்ளுந் துரங்கந்தன்னை
வகுத்த பெரியோனே மாசற்றோனே
அருண னொடுபதி யடங்கலையும்
அமைத்த பெரியோனே யடியேற்குன்றன்
சரண நிலையன்றி வேறுமொரு
தஞ்ச மிலையெனக் கின்பமாகப்
புரண பலவாழ்வுங் கேட்டுனையான்
புகழ்வே னதைநீகூட் டுதவிசெய்வாய்
தரணி மனுவென்னைப் பகைசெய்யாமற்
ருள வனேயுன்ற னடைக்கலமே. (101)

வேறு

பொல்லாக் குபிர்களும் வருங்குற்றமும்
பொருந்தாப் பிணிதுன்பம் பலவாபத்தும்
நில்லா வறுமையு மனச்சலிப்பும்
நினைப்பு மறப்பும்வந் தெய்திடாமல்
எல்லா வினைகளு முசீபத்தும்வந்
தென்னை யணுகாமல் காத்தருள்வாய்
அல்லா வுனைப்புகழ்ந்துன் னேடிரப்பேன்
அடியேன் துஆப்பேறீ டேற்றுவாயே. (102)

வேறு.

ஆத நபிக்கர சானதீனே
அடியேன் பயந்துன்னே டிரக்குகிறேன்
கீத மொழி தாவூத் நபிக்கிரும்பைக்
கீலாக் குவிதம்நீ கொடுத்தபேறும்

நாதர் சுலைமான் நபிக்களித்த
நலவும் பெருவாழ்வும் ராஜதமும்
ஏது மனுகாயூஸ் புநபிக்களித்த
எல்லையினிலுற்ற கெதியும் வாழ்வும்
வேத நபிமிகு ருஜிலுன்னை
விளங்கத் தெரிசித்தங் கிருந்தபேறும்
நாதன் முகியித்தீன் திருவுளமும்
நல்ல ஒலிமார்கள் பெறுங்கீர்த்தியும்
நீத முடனெனக் கருள்வாயுன்னை
நினைப்போர்க் கெலாமரு ளிகரற்றோனே
ஆதி யுனக்கிணையில் லாதகோவே
அடியேன் துஆப்பேறு டேற்றுவாயே. (103)

கலித்துறை.

கள்ள நினைவு தருமிக் காயங் கலந்ததொன்றை
எள்ளள வாயினுங் காண்கில னேயென்னை யாள்பவனே
வள்ளல் நபியிற சூல்திரு வாணையுன் வல்லபத்தால்
உள்ளொளி காட்டி யுணர்த்திட வேண்டுமெ னுத்தமனே. (104)

குறைபடுங் காயந் தனக்கர சாய்நின்ற கொற்றவனே
நிறைவிடந் தேடி மயங்குதை யோவென்று நிச்சயமாய்
இறைவனு நீயெனக் கல்லாது வேறில்லை யென்னிதயசித்தல்
மறையொளி காட்டியுணர்த்திட வேண்டுமென் வல்லவனே (105)

பதினெ லெழுத்தோ டுருவா யெழுந்திடும் பஞ்சறைக்குள்
மதுவார வாசலறிந்தில னேயென்றுன் வல்லபத்தால்
திருநாமத் தானைநின் தீதாறு கண்டு தெளிந்திடவே
குருவாழும் பெட்டகம் திறக்கவும் வேண்டுமென் கெற்றவனே. (106)

சினத்தால் மனித ருனைத்தான் மறந்தெழு தீங்குசெய்து
பினைத்தான் பயந்தங் குனைத்தேடி வன் பிழைபொறுப்பாய்
மனத்தா லெழுங்குபிர் வாராமல் காத்துயர் வாழ்வுதந்தே
உனைத்தான் வணங்க வுதவிசெய் வாயெங்க ளுத்தமனே. (107)

அறத்தான் குபிரை வெறுத்தாலு மானிட ரஞ்சியுன்னை
உறத்தான் வணங்கிப் புகழ்ந்தாலும் நெஞ்சினி லோரெழுத்தை
குறித்தா லொழிந்து குணமில்லை யென்றுனைக் கூடுதற்கு
வெறுத்தாரை யூடுவந் தாண்டுகொள் வாயெங்கள் மேலவனே, (108)



விருத்தம்.

அரியென் றுபனிசொ ரியவ லையெழுந்து
அலற வலம்புரி திரளவே
மரியென் றெழுமொலி யவனு மகரமு
மருவ வேயொரு தாளமாய்
விரிவொ டெழுநபி சரண மதெனதுள்
விரும்பி மகிழ்ந்துன்னோ டிரந்தனு
னுரியென் றடியெனுக் குலக மதிலுன
துதவி யுவந்தரு ளொருவனே. (109)

அவனிக் ககன்மலை கடலுங் கதிரொளி
யனலு மனிலமோ டிருள்களும்
சுவன தலமுநல் லுயிருந் திரளுமுன்
சொரியும் பெரும்பனிக் கிறைவனே
புவனி லடியனின் னளவி லிரந்தனன்
பிழைகள் பொறுந்துன துதவியாற்
றவன மறிந்துயர் தலீலிங் கெனக்கருள்
சமைய புலனுறுந் தமியனே. (110)

கடலு மதிலடி படுநற் றடிகளுங்
கடுகி விடுநெடு மிடியும்வந்
தடருங் கொடுமைகண் டடியன் முடிகிநின்
றடைவ தெவிடமென் றலறுநாள்
துடரு மடலெடுத் துடலில் நடமிடும்
சுடரி லுடையவந் திடுமென்றே
யிடறும் படிகண்டென் னிடைவை முடுகிவந்
தெவிட மெனவரு ளொருவனே. (111)

பஃறொடைவெண்பா.

ஆதியந்த மற்றுநின்ற அல்லாவே யெங்களையும்
நீதியற்ற பாவியென்றே நீபடைத்தாய் ஓதிமெத்த
எண்ணாத தெண்ணுவிக்கு மிப்லீசா லெங்கள்மனம்
புண்ணாக வென்றோ பொருத்தினாய் மண்ணுவார்
செய்யும்பல மாய்கையினால் சேரவுன்னைத் தேடாம
லுய்யும் வழிமறந்தா ருத்தமனே மெய்யினின்ற

வீணனிபு லீசை வெருட்டிவிட வெங்கள்மனம்
பூணவில்லை யென்றே பொருத்திருந்தாய் ஊணுறக்க
மில்லானே யெங்களை நீ யேதுமற்ற பாவியென்று
சொல்லாதே யெங்கள்மேல் தோஷமில்லை வல்லானே
என் னிடத்தி லுன்னை யெழுந்தருளு விப்பனது
தன்னையறிந் திப்லீசால் தட்டுவித்தாய் மின்னுலகும்
பாருலகும் வானுலகும் பாரஅறு ஷுங் குறுசும்
தாருலகு மொன்றாய்ச் சமைத்தநாள் பீர்முஹம்ம
தென் றழைத்துப் பேசி. இருதயத்தி லுன்னொளிவைக்
கண்டுவரச் சொன்னாயென் காவலனே நன்றியது
சற்றுமறி யாமலிந்தத் தாரணியி லாசைகொளும்
பற்றலர்க ளோடிணங்கும் பாதகனென் முற்றுமுனை
எண்ணாத பாவிகளை யேன்படைத்தா யுன்னினைவை
யொண்ணாதென் றாலிங்குதிப்பார்களோ மண்ணோர்
அவப்பதியி லாக்கிலுநீ யல்லவெங்கள் தம்மை
தவப்பதியி லாக்கிலுநீ தான். (112)

கலித்துறை.

தானாக நின்றிபுலீசான மாயன் றனைப்படைத்துப்
பேனாக நின்றங் கரித்திடு வாசகம் பேசுமதால்
மானாரு மக்களு மாந்தரு மற்றுள ஜின்களெல்லாம்
போனார் நரகில் விழுந்தார்கள் நீதரும் பொற்பதியே. (113)

பென்னால கெட்டும் பொறியேழு முன்னைப் புகழவைத்த
மண்ணுலக கெங்குநீ தானல வோவதை மறந்தென்றன்
மின்னறி போக்கி விழலறி வாக்கியே வெண்ணரகிற்
புன்னெறி கொண்டெனைப் போகச்சொன் னாயுன் பெருமையென்றே

ஆனாலு நீபொ றடியார் பிழைசெய் தழற்பதியிற்
போனாலு மெங்களுக் காதாரம் யாவர் பொருத்திறையே
மானார் முஹம்மதென் றோதா ரழல்சுட்டு மாயுமுன்னே
தீனான பேர்க்குன் னிமானை நீகொடு சிந்தைகொண்டே. (115)

நீயே ஜலத்தை யழியாது காத்து நெருப்பறைக்குள்
நீயே வளர்த்தங் குருவாக்கி வைத்தவன் நீளுலகில்



நீயே பிறபித் திரணமிட் டாயின்னம் நேர்வழிக்கும்
நீயே துணையெனக் கல்லாது வேறில்லை நிச்சயமே. (116)

நீயே தனித்தங் கிருக்குநா ளெங்கள்நினைவையெல்லாம்
நீயே தனித்தங் கினிமையுற் றாயிந்த நீளுலகை
நீயே படைத்துயி ரெல்லார்க்கு மீந்து நிலைபெற்றதால்
நீயே துணையெனக் கல்லாது வேறில்லை நிச்சயமே. (117)

நீயே யுனைப்புகழ்ந் துற்றவந் நாளுன்னை நீயுணர்ந்து
நீயேயுனக்கு ஸுஜூதுசெய் தாய்பின் நினைந்துருவாய்
நீயே புவிக்குள் றசூலாக வந்தவன் நேர்வழிக்கும்,
நீயே துணையெனக் கல்லாது வேறில்லை நிச்சயமே. (118)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தொழுதுவந்து புகழ்வனெங்கள் துயரறிந்த துய்யவா
பழுதகன்றுன் னுதவிதேடிப் பரதவித்துன் னடியனா
னழுதுநொந்துன் னளவிரந்தே னதையறிந்து னருள்கொடே
முழுதுமுன்ற னுதவிதந்தென் மிடிமை தீர்த்தி டிறைவனே. (119)

எனையுவந்தென் னெளிமைகண்டென் னளவிரங்கு மிறைவனே
பனையிரந்து வயிரமூன்று படுகுதென்று பதறியான்
மனைப்புகுந்து பகலிதென்று மருவிவாழும் வரிசைகேட்
டுனை நினையுவந்துன் னளவிரந்த வுதவிதந்தி டிறைவனே. (120)

ஹபிகைபநாடித் துடருமெங்கள் கல்பில்நின்ற ஹக்கனே
புவியில்நானின் னோடிரந்து புகழ்வனுன்ற னருள்கொடே
பகிலர்நாளும் பகைமடிந்து வரமொழிந்துன் னுதவியால்
சகிலனோடு தழுவநீதி தரநினைத்தி டிறைவனே. (121)

வேறு.

எனைப் படைத்தெனக் கிரணமளித்தெனதிட றுதவிர்ப்பவனே
மனதுசலித்துனோ டழுதுபுகழ்ந்துய்ய வடிவையுவந்துடலில்
பனைநீரெடுத்துயர் பருவமதற்குள பதவியெனக்கருளென்
றுனைநானினைத்துனோடிரந்தனதற்குனுதவிசெய்யுத்தமனே, (122)

பகலிரவற்றுள பதியிலுதித்தனர் பகையற் றலிப்பவனே.
உகமிலெனக்குள தலிலுனையன்றிவே றொருவரு மற்றபடியேன்
புகலிட வெட்கிநின் றிரந்தனதற்குநீ புதுமைகொ டிப்புவியில்
இக்கொடெக்குறு முதவிசெய்தீந்தரு ளெளிமையறிந்தவனே.

### எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பகுத்தோ டனைத்தும் படைத்தோனே பஞ்சமா
    பாதகம் செய்துன் னடியேன்
மிகுத்தே மிடைபட் டுனைத்தேடி வந்துநொடு
    வின்வேனென் றுயரை நீகேள்
மவுத்தோடி வந்தெனை வதைத்திடு முன்னியென்
    மனப்பீடை தீர்த்துன் னருளால்
சவுத்தோ டெனக்குதவி தந்தருள வர்க்குமொரு
    தஞ்சமென நின்ற பொருளே. (124)

உனத்தான மென்றதில் நிறைத்தாசை தந்தெனை
    யுணர்த்தியர சாளு மிறையே
மனத்தாப மாயெனை நினைப்பாரு மில்லையுயர்
    வல்லோனே நீயேயொளிந்
தெனக்காரு மில்லை யிறையே யறிந்திடென்
    றெளியே னிரந்த னுலகில்
சினத்தாரெ ணேடரிய தெளிவுபெற நீயுதவி
    செய்த ருளுவந்த பொருளே. (125)

மலைமேடு சிறிதெங்கள் மனமேடு பெரிதுன்னை
    வணங்காத பெரும் பாவியென்
றலையூடு விளையாடும் பொருளேவந் துனதாசை
    தருவாயென் றுனை நாடியே
கலையூடு வெகுநாளெனக் காசைபே சியருளென்
    கவலைக னறிந்துன் னருளால்
சிலையோடி வருமுனுயிர் சிதருமல் நல்லுதவி
    செய்வாய் நிறைந்த பொருளே, (126)

ஆவென்றும் ஈயென்றும் ஊவென்றும் நின்றவனே
    யாரென்று நிறைஞ்ச வடியேன்
பாவென்று நூலென்றும் பகராமல் வேதியர்கள்
    பகர்வார்க்க ளேனோ வறியேன்
நானென்று நீயென்று நடுவே யிருந்தெனது
    நாட்ட மதறிந்த வனுநீ
தாயென்றும் வாவென்றும் தவருமல் நல்லுதவி
    தருவாய் நிறைந்த பொருளே. (127)



வாயொன்று விழிரண்டு வளர் நாசி செவிரண்டு
    மனமேதென் றறிவ னடியேன்
காயென்ற கனியென்று கருதாமல் வேதியர்கள்
    கவல்வார் களேனோ வறியேன்
நாய்கண்டு சீயென்ற நடுவே யிருந்தெனது
    நாட்டம தறிந்த வனுநீ
தாயென்றும் வாவென்றுந் தவருமல் நல்லுதவி
    தருவாய் நிறைந்த பொருளே. (128)

### வெண்பா.

ஆராருங் காணும லைம்புலத்துக் கின்பவினை
ஓராத மந்திரத்தி னோசையறிந்—தாராயும்
சொல்லுறுதி மாருத துய்யவனே நீயெனக்குன்
நல்லுதவி தாராய் நயந்து, (139)

### எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பொய்க்கெட் டாமல்நின் றடியவர்கள்
    புகழும் புகழ்ச்சியைக் கைக்கொள்வோனே
மெய்க்கெட் டாருமை நான்கில்நோக்கி
    விளிப்போ ரிதயத்தி லுறைகின்றோனே
மைக்கெட் டாவிழி திறந்ததுமேல்
    வடிவைத் தெரிசிப்போர்க் குறும்பொருளே
நெய்க்கெட் டாத்தேனில் புகையெட்டாமல்
    நினைத்தங் கெனக்கரு ளிகரற்றோனே
வைக்கொட் டாமனம் பகைக்கொட்டாமல்
    வருத்தும் பொருளேயுன் னடைக்கலமே. (130)

### வேறு.

அல்லா நீயென்னைப் படைத்துலகில்
    அன்னை யிலுமன்பா யுவந்தகோவே
ஒல்லா நீயெங்கள் மனதகத்துள்
    உதிப்பு நினைவையு மறிகின்றோனே
பொல்லா னுன்னை மறந்துலகில்
    பேசத் துலையாத பிழைகள் செய்துன்
நல்லா தரவுகேட் டிரந்துநானும்
    நாய்போ லொதுங்கிநின் வாயல்வந்தேன்

எல்லா மறித்தோனே யெளிமையறிந்
    தேழைக் கிரங்குவா யிணையற்றோனே
வல்லா னேயெங்கள் பிழைகள்போக்கி
    வறுமை மூஸீபத்து மனப் பீடையும்
நில்லாதகற்றிநின் கிருபைசெய்வாய்
    நினைத்த துஆவையும் கபூல்செய்தேற்றிச்
சொல்லால் வரிசையும் றகுமத்துடன்
    தொலையாப் பெருவாழ்வுங் கனசெல்வமும்
எல்லாப் பறக்கத்தும் சலாமத்துமிங்
    கிரணப் பொலிவுநல் லாபியத்தும்
செல்லா நிகுமத்து மீடேற்றமும்
    சேரும் நலவுகண் டருள்வாயென்றுங்
கல்லா ரெனைமண் ணிற் பகைசெய்யாமல்
    ஹக்க னேயானுன் னடைக்கலமே. (131)

வெண்பா.

அல்லா வுனையொழிந்திங் காதர வாரடியா
ரெல்லாருந் தானா யிருப்பவனே—பொல்லானை
நின்புகழ்ந் தேயென் னினைவையறிந் திவ்வுலகில்
என்றம்பி ரானுதவி யீ- (132)

கலிநிலைத்துறை.

திரண்டு மேலவர் சிந்தையுள் திடமுறுந் தீனே
மருண்டு பொன்மயின் மயக்கத்தா லுனைமறந்தடியேன்
கரண்டு போயுன்னே டிரந்தனன் வறுமைகள் கரைந்தே
உருண்டு போகநல் லுதவிசெய் யென்றனுத் தமனே. (133)

கண்ணில் லாமலுன் கற்பனை கடந்தன னடியேன்
விண்ணி லாசையை வெறுத்துமண் ணாசையில் வீழ்ந்தேன்
பெண்ணி னாயகன் பிரளயத் துனதருள் புகட்டி
யெண்ணே ணப்பல வரிசைதந் தருளென திறையே

எழுசீர்க்கழிநெடிலடியாசியவிருத்தம்.

மரமில் லாதநிழல் செடியில் லாதவனம்
    மனுவில் லாதகுடி வளரும்நாள்
உரமில்லாதபயி ருழவில் லாதவினை
    வுணவில் லாவெருது பசிகொடே



பரமில் லாமல் நடந் தசையி டாமலது
    பருகு நேர்மையறி யாமல்நான்
சிரமில் லாசுஜூதுசெய் துவந்து கேட்பனென்
    றீங்க கற்றியருள் செல்வனே. (135)

தவமில் லாதசெயல் தரவி டாதசுகந்
    தணிவில் லாதகிணை றுருகியே
நவமில் லாதொருவ னதியில் லாதபுனல்
    நனைவில் லாமலதில் நிலைகொடே
முகமில் லாதவிழி கனவில் லாமதில்
    முழுகி யேறுமெங்கள் முதல்வனே
அகமில் லாமலுன்னே டிரந்தே னானதற்குன்
    னுதவி தந்தருளென் னன்பவனே. (136)

விருத்தம்.

பொங்கும்புக ழிறையோன்புவி யனைத்தும்பொருந் திடவே
செங்கண்கருதுமதாற்சுடர் சிதறத்திரு வுளமால்
அங்கொன்றருளி யுருவாய்ப்பல வடியார்க்குறுந் துணையாய்த்
தங்கும்நபி யருளால்புகழ் தருவாயுரு விலியே. (137)

நபியாறகு லெனும்பேருள நயினார் முஹம் மதனார்
புவிவானுல கறுஷானதில் புகழ்ராசிய முடையோரர்
ஹபிபென்றருளி யதில்முங்கிய கமலப்பதம் பணியப்
பகலனின்னே டிரந்தேன்புகழ் தருவாய்வரு மிறையே (138)

கட்டளைக் கலிப்பா.

என்னை மண்ணில்வைத் தாள்கின்ற மேலவா
    வெங்கள் பாவந் தொலைத்திடு வாயென்றே
யுன்னை மெத்தவும் நம்பி யிருந்தனா
    னுள்ள வாநீ யுவந்திட வில்லையோ
முன்னை யெத்தனை சொன்னாலும் போகட்டென்
    முதல்வா வென்றனிய் யத்தை முருதுசெய்
பின்னை யென்பதும் பேச்சல விப்போநீ
    பெருக நன்றி விளைத்தரு ளன்பனே. (139)

அண்டர் வான மடங்கலு மாண்டிடு
    மாதி சோதிநீ யாகுமென் றுன்னையே

தொண்டர் போதங்கொண் டாடுவருன் றன்பேர்
சொல்லி யாரும் சுஜூதிடக் காண்கிலேன்
வண்டர் தான்மண்ணி லென்றுனைக் காண்பரோ
வல்ல வாபகல் ராவற்ற நாட்டினிற்
கண்டு நானுனைத் தொண்டுசெய் தேத்தவே
கடுக வந்தருள் வாயுயர் ஹக்கனே (140)

வன்ன மெத்தனை வடிவுக ளென்றுன்னை
மனிதர் வான ரறியாம லென்னுள்ளத்
துன்னு முன்னறிந் துலக மதிலெனக்
குதவி வாழ்வு தருமெங்க ளேகனே
அன்ன மெத்தனை தருகிலு மெங்களா
லாதி யேயமை யாதது வென்றறிந்
தின்ன முன்னுடன் கேட்ப னதையறிந்
திரக்க முற்றெனக் கீந்தரு ளேகனே. (141)

சன்ன மிருக்குங் குகையில்வைத் துருங்கிடச்
சமைந்த மூலியைந் திருக்கு ததிலொன்றென்
கண்ணில் நிற்குது காணுத நேரமென்
கருத்தில் நிற்குது கவலிடங் காண்கிலேன்
எண்ணு மனிதர் நினைவுக்கெட் டாமல்நீ
ஏழை பங்கி லிருக்குமென் னேகனே
திண்ண முற்றெனக் குதவிசெய் தென்பிழை
சேரப் போக்கித் துணைசெய்யென் னித்தனே. (142)

எழுசீர்க்கழிநெடிலடியாசிறியவிருத்தம்

நாலாறு புத்திகொடென் னுவா லழைத்தருணன்
நானுன்கி லுற்றென் னுடலில்
பாலாற திற்பெரிய தீதாறை நோக்கியென்
பசியால் தொடர்ந்துன் னடியேன்
காலாலெ மூப்பிவிழி நீராற்சொரிந்து நெடு
கரமேந்திக் கேட்ப னதைநீ
கோலாக லக்கிருபை யாலிங்கெ னக்கருளென்
கோவே குணத்தில் வரவே. (143)

வாரா திருக்கில்மனம் வேருய் நினைந்துனை
வணங்கார் மனப்பி டையால்



பாரா திருக்கிலது பழுதாமென் றுன்னோடு
பகர்வேன் பழம்பொ ருளைநீ
தாரா திருக்கிலது கூடா தெனக்குமுயர்
தலிலாக தந்துன் னருளாற்
சீரா யெனக்குதவி செய்வா யெவர்க்குமுயர்
தீனே நிறைந்த பொருளே. (144)

கொச்சகக்கலிப்பா.

முன்னே யெனைப்படைத்த முதல்வா முஹம்மதரை
இன்னேர மென்னுளத்தி லெழுந்தருளச் சொல்லாயோ
மன்னே நான் காணேனே வருமோசை கேளேனே
பொன்னேற நீயுதவி செய்வாயென் புண்ணியனே. (145)

இல்லென் றுனையடியே னேத்துதல்கண் டாலுனக்குங்
கல்புமுரு காதோவின் கனருரை பேசாரோ
செல்லுமெங்கள் பிழைபொறுத்துன் றிருவுளத்தா லிரங்கியொரு
சொல்லும் பிறவாதோ துயரறவே துய்யவனே. (146)

அந்தமில்லா னேயடியே னழுந்துயர்கண் டாலுனது
சிந்தையிள காதோவெஞ் செய்திகண்டா லுருகாதோ
என்றன் னளவுசற்று மிரங்காத் திருமனமோ
எந்துதவிதாராயோ வளக்கோவென் வல்லவனே. (147)

வாகா யெனைப்படைத்த வல்லோனே யென்னுளத்திற்
வேகாக் கனல்மூட்டி மேலிருந்த நாண்முதலாய்
நோவுவருத் தாமலென்னை நொந்தகண்ணுற் பாராமற்
ருவிவளர்ப் போனே பலன்றருவாய் மகிழந்திடவே. (148)

பெருக்கமுள்ள தடங்கலுக்கும் பெரியவனே நீயனைத்தும்
ஒருக்கநினைந் தாலுலகி லுனைவணங்கக் காரியமேன்
பருக்குங் கசடறுத்தென் பகையொழித்துன் பதவிதந்தாய்
இரக்கமுள்ள நாயனுனக்கெல்லாப் புகழ்ச்சியுமே. (149)

அறுதிகபூல் செய்யுமெங்க ளல்லாவே நீயுலகிற்
சுருதிதருஞ் செயலுடைய துணையருள்வாய் துய்யவனே
உறுதிகுறை யாமலுய ருத்தமனே யடியவர்கள்
இருதயத்தி லுதிப்பறிவா யுனக்கெல்லாப் புகழ்ச்சியுமே (150)

அண்டருல கெண்டிசையு மனுவனுவாய்த் தானிறைந்து
நின்றவனே நீயுமெங்கள் நினைவையறிந் திப்புவியி
லன்றுதவு நன்றியெனக் கழியாதுன் பதவிதந்தாய்
என்றுமுள்ள நாயனுனக் கெல்லாப் புகழ்ச்சியுமே. (151)

வெண்பா.

ஆதார மாகவெங்கு மானவனே யானுமுன்றன்
பாதார விந்தம் பணியாமல்—ஏராத
வன்பிழைகள் செய்தடியேன் வந்தேன்மன் னன்றிருமுன்
என்பிழையை நீபொறுப்பா யே. (152)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தந்தை யுடலில்நின் றெங்கள்தாயார்
சடத்துக் கரசனுய்த் தலைமைசெய்து
வந்து மோகத்தின் மகிழ்ச்சிகொண்டு
மதன ராசையிற் சிலைவளர்த்துத்
கந்தை யுடுத்துக்கல் பகத்தேநின்று
கருது மவர்கரு வுருவாயெங்கள்
சிந்தை தனிலுறைந் தெளிமை கொண்டென்
தீங்கை யகற்றியுன் னுதவிசெய்வாய்
இந்த வுலகில்வி ணனுகாமலே
யேக னேயுன்ற னடைக்கலமே. (153)

சருதி யெவருங்கண் டுணராமலே
காய மதில்மாயப் பொருளாயெங்கும்
சொருகி யுயிர்களோ டிணங்கிமண்ணில்
சுணங்கித் திரிகின்ற பொருளையார்க்கும்
உருகிக் கிடக்குநல் லுள்ளன்பினே
டொழித்தங் கிருக்கின்ற வுறும்பொருளே
வெருவிப் பயந்துன்னே டிரந்துகேட்பேன்
விதன மறிந்தெனக் குதவிசெய்வாய்
மருவிப் பெரும்பிழை வாராமலே
வல்லோ னேயுன்ற னடைக்கலமே. (154)

அந்த மனுகாம லடங்கலையு
மாளு மிறையோ னே யடியாருன்றன்
சந்த மறியாம லுனைத்தேடியே
தரையில் சஜுதிட்டுத் தளர்வதேனே



இந்த நிலைகண்டென் னளரவிரங்கி
யிட றும் வறுமையு மீடுபாடும்
வந்திங் ககற்றியே கிருபைசெய்து
மலக்க மறிந்தெனக் குதவுந்தீனே
என்ற னிய்யத்தை முருதாக்குவா
யெனக்குன் தலீலல்லா லில்லையென்றே
உன்றன் கிருபையென் முகத்தைநோக்கி
யுவந்துன் னுதவிதந் தருள்செய்வாயே
தொந்தம் பலதும்வந் தணுகாமலே
துய்யோ னேயுன்ற னடைக்கலமே (155)

ஏழாம் வாசலின் கீழாய்ந்துவந்
தெதிர்த்த தலத்திற்கு மேலேதசை
மூளை யெலும்புக்கும் நடுவேநெற்றி
முகமுக கிடையில்முண் டகப்பார்வையில்
நாளாம் ரதினுறி லுலாவிநின்ற
நாய கனேநானுன் னேடுகேட்பேன்
கேளாச் செவிக்குமீ ளாநெருப்பாய்க்
கிருபை விளைத்தெனக் குதவிசெய்வாய்
பாழாங் குபிறென்னை யணுகாமலே
படைத்தோ னேயுன்ற னடைக்கலமே. (156)

தக்க ஷரீ அத்தும் தரீகத் ததும்
தழும்பொன் றணுகாத ஹகீகத்ததும்
மிக்க முஹப்பத்தும் மகுரிபத்தும்
வேந்த னுனைக்காட்டித் தருமதனை
ஹக்கென் றறியாமல் திருமறையோர்
கவலு முரைகேட்டுன் றனைவணங்கத்
தொக்கு மதற்குள்ள பாத்திஹாவுந்
துலங்கு ஷஹாதத்து மத்தஹியாத்தும்
மிக்கோர் புகழ்நபி சலவாத்ததும்
விளங்கப் படித்துனைத் தொழுதுணர்ந்து
நிற்குஞ் சரணங்கண் டிறைஞ்சாமல்யா
னினைத்த படிதொழு திரந்துகேட்பேன்
சக்கொன் றணுகாமற் கிருபைசெய்து
தனியேற் குதவுவாய் தானவனே

பொய்க்கும் குபிறென்னை யணுகாமலே
    புண்ணி யனேயுன்ற னடைக்கலமே. (157)

வெண்பா.

ஆதார மாறு மறியாமல் யானுமுன்றன்
பாதார விந்தம் பணிகின்றேன்-ஏராதென்
றென்னை யிகழா திறையேநின் ஞேடிரப்பே
னுன்னுதவி நீதருவா யுற்று. (158)

எழுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

அடைக்கல மெனப்புகழ்ந் திரப்பனிறை யோனெயதை
    யன்பொடு கபூல்செய் துலகில்
மிடைப்படுச் சடைப்புள வருத்தமு மகற்றியுயர்
    வெற்றிநல வுற்ற கெதியும்
கிடைக்குமது தப்பிலையெ னப்பயல்நி னைத்துனெடு
    கேட்பனதை நீகி ருபைசெய்
திடைப்படு மெனக்குமுட லுக்குள்ளு யிர்க்குமதை
    யீந்தரு ளெவர்க்கு மிறையே. (159)

மனித்தரை வகுத்துலகில் வைத்திரண மீந்தெமை
    வளர்த்தெம்மை யாளு மிறையே
சினத்தெனை வெருட்டிடுவ தோவலது யாங்கள் செய்யுந்
    தீவினை யகற்று மதுவோ
இனிப்பெறுவ தெப்படியெ னத்தெரிவ துற்றுன்ஞே
    டிரப்பனிறை யோனே யதைநீ
பனித்துளிய திற்சிறு பதத்துளதெ னக்குமொரு
    பத்தியரு ளுற்ற பொருளே. (160)

காவுகொடென் ஞவிதரு வாயெனது காயமதில்
    காணவரி தான பொருளே
தாவுபுல னைந்துயிர்கள் வானவர்கள் பூதமுநீ
    தானுமென்னுள் ளாடு மதனல்
நாவிலுறும் நாமமொரு நாளுமற வாமலுனை
    நாடிநின்ஞே டோதி யிரப்பேன்
பாவியடி யேன்பிழை பொறுத்துநல வீந்தருள்
    பராபரம தான பொருளே. (161)



கலிநிலைத்துறை.

முந்த நாளென்னை முத்தில்வைத் தெடுத்துயர் முதுகிற்
சிந்தி டாமலி யன்னைதன் னுதரத்திற் செலுத்தி
வெந்தி டாமல்வைத் தெனைப்படைத் துயிர்தரும் வேந்தே
அந்த மாய்நின்ஞே டிரப்பனின் னுதவிதந் தருளே. (162)

சந்த மாயென்ஞே டணைந்திடுந் தலைவனுக் குருகிப்
பந்த மாயொளி பரவிய பதுமத்தா லுழுது
வந்து நானின்ஞே டிரந்தனன் வறுமைக ளகல
எந்த வாக்கிலு முதவிதந் தருளெம திறையே. (163)

அன்னை தேடின தையர்கண் டெடுத்தெனக் களிப்பப்
பின்னை யேனிப்போ பேசிவி டுனக்கெனப் பெரிதோ
என்னை நாடின ரிணைபிரிந் தெவருமெட்டாமல்
உன்னை நாடின னுதவிந் தருளெனுத் தமனே. (164)

கழிநெலடியாசிரியவிருத்தம்.

அம்மைமாத ரடர்ந்த நாட்டினிலறிந்தென்னுவி யமைத்தவா
செம்மெநீதி மறந்துநான்வெகு தீங்குசெய்துனைத் தேடியே
உண்மையான தகன்றிடாம லுவந்துன்ஞேடு மிரந்தனுன்
எம்மைநாடி யெமக்கிரங்கியுன் னுதவியீந்தரு ளேகனே. (165)

அந்தநாளி லமைத்ததேவுக ளைந்துமென்னுள்வந்த தாகையால்
இந்தநாளி லெழுந்தசூரிய னேகியோடி மறைந்தநாள்
சிந்தைமீதி லெழுந்ததிங்களென் ஞேடிசைந்து திருந்தவே
உன்றன்ஞேடு மிரந்தனியதற் குதவியீந்தரு ளொருவனே. (166)

வேறு.

ஈனரென்ஞேடுற வாய்வாநெஞ்ச மிரங்கவ ருத்தவனே
போனதைமீள வருத்தியென்னுடு பொருத்திவி டென்றடியேன்
வானரமானது போலுனைக்கெஞ்சி வருந்திநின் ஞேடிரப்பேன்
ஆனதெல்லாமறி வாயிறையேயெனக் காதர வீந்தருளே. (167)

மாதவமானதென் ஞேடுநின்னுமம் வழங்கவ ருத்தவனே
பாதகனுனறி யாமலுன்னேவலின் பத்திம றந்துலகிற்
பேதகமாக நடந்துபிழைசெய்த பேயனின் ஞேடிரப்பேன்
தாதகமேது மிலானுக்குநீதலில் தந்தரு ளுத்தமனே. (168)

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தலையூறித் தேன்வடியத் தருவனமக் கென்றுசிலர் தரையிற் றேடச்
சிலைமீதிற் சிலர்தேடத் தீயிற்சில போதேடத் தெரியா வண்ணம்
கலையூறித் தரும்பொருளாய்க்கருதுமவர்க் கெங்குமொனருய்க்கலந்த
[கோவே]
அலையாதுன் னேடிரப்பே னடியேனுக் குதவிதந்திங் கருள்செய்வாயே

ஆதாருங் காணும லறிந்தவர்க்குந் தெரியாம லனைத்துந் தானாய்ப்
பேரார்க்கு மாயாமற் போறிந்தும் பேசரி தாய்ப் பெலவா னாகி
ஓதாத மந்திரத்தி னுட்கலந்து முறுபொருளா யுலகாண்டெங்கும்
ஆதார மானவனே யடியேனுக் குதவிதந்திங் கருள்செய்வாயே (170)

### வேறு

அத்தனே யருளே யெங்க ளாதியே யடியேற் கென்றும்
நித்தனே யொளியண் ணைக்கும் நெஞ்சமு நினைவும் பொங்கச்
சுத்தனின் னுதவி தந்தென் றுக்கம தகற்று வாயென்
றுற்றுன் னே டிரப்பே னென்று முள்ளவா துணைச் செய் வாயே (171)

அகந்தெரிந் துணர்வோர்க் கென்று மருபமோ டுருப மாகி
முகந்திறந் தருளைக் காட்டு முத்தனே முடிவில் லானே
செகந்தனி லடியேன் செய்யுந் தீவினை யகற்று வாயென்
றுகந்துன்னே டிரந்து கேட்ப னுள்ளவா துணைச்செய் வாயே. (172)

### கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தருணமுத் தொளி யதனின் யதனின்மிக்கது சமயநட்புறுந் தனியனே
கெருணனெப்படிப் புவியில்மெய்ப்பொடு கிளருமடிப்படிப் போலவே
அருணனுக்கருள் கமலமிஸ்திரி யதைநினைத்துனே டிரப்பனீ
இரணநற்பொலி றஹூமத்துன்னரு ளெளியனுக்கரு ளிறைவனே.
பலபடைப்புகள் வரநினைத்துயர் பனியணைத்திடும் பரமனே
இலௌஹிலெப்படி கலமெடுத்தெனையெழுதிவைத்ததென் றறிகிலேன்
விலகல்மிக்கது கவலைதத்துளம் விரும்பிவந்துனே டிரப்பனுன்
உலகிலப்படி யுனைநினைத்தன னுதவிதந்தரு ளொருவனே. (174)

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தக்காரிருவி லனைத்துமன் றித் தனியேயின்பத் தரளமதில்
தொக்காயெழுந்து துயர்வினைத்துத் துனியாவெளிக்கு ளொளியாய் நீ
முக்கால்நகைத்தங் கொழுகுபனி மூங்கிக்கமலத் துருவான
ஹக்காநபிதம் மாணையென்றன கவலைதவிர்ஹக் கானவனே. (175)

முத்தாலனைத்தும் படைப்பதற்கு முன்னங்கருப சொருபமன்றிக்
கத்தாவுனக்கு நிகரில்லாக் கருணைக்கமலத் திருவொளிக்குள்



சித்தாற்சொரியும் பனித்துளியால் திரண்டேகஜூதிட்டுங்கிருபை
வத்தாநபிதம் மாணையென்றன் வறுமைதவிர்ப்பாய் வல்லவனே.(176)

### கலித்துறை.

தனைத்தேறுங் காயஞ் சுழலுமெண் ணுவினை தான்தொலைந்தால்
தினைப்போது மிங்கிருக் காதுகண் டாய்சிரந் தாள்பணிந்தே
நினைப்போரை மேவி நினையாரை நீங்கி நிரம்பிநின்றாய்
உனைப்போ லொருவருண் டோவிறை வாவெனக் குற்றவனே. (177)

உற்றுரு மில்லை யுறவாரு மில்லையிங் குன்னையன்றி
மற்றுரு மென்னை வளர்ப்பதுண் டோமறை தன்னைமிகக்
கற்றுலும் பாவங் கசந்தாலுங் கேடுன்னைக் காண்பதற்கு
வித்தார வாழ்வு தருவா யெமக்கென்றும் பேலவனே. (178)

ஹலிமா முலைதனிற் பாலமு துண்ட அஹமதெனும்
புலிமான் றனக்குப் பிணையாக நின்றவர் தம்பொருட்டால்
நிலையா முடம்பை யிளந்தே யுயிர்செல்லும் நேரத்திலுன்
கலிமாவை நெஞ்சுட் கலங்காமல் தாவென் ஹக் கானவனே. (179)

ஹக்கா நபிதங் கலிமாக் கமலக் கருத்தினுள்ளே
சிக்காமல் மாயந் திருடிக்கொள் ளாமற் றிருவுளத்தால்
எக்காலங் கூடியுந் தேக மிழந்துயி ரேகிவிட்டால்
மக்கா நபிதம் ஷபாஅத்துடன் கூட்டெங்கள் வல்லவனே. (180)

வல்லவ னீமறை சொல்லுவ னீமறை நாலுக்கெட்டாத
துல்லிப னீயணை யானவ னீயென்றுந் துய்யவனீ
கல்பிலும் நீயென் கருத்திலும் நீயிரு கண்ணிலுநீ
இல்லிலும் நீயிணை யற்றவ நீயென் னிறையவனே. (181)

தானவ னீதல மேழிலு முங்கிச் சடலமதிற்
கோனவ னாகக் குடியிருந் தாயிந்தக் கூடிழந்து
போனபின் யாங்கள் பொறியிற்செல் லாமலுன் பொற்பதியி
லீனமி லாமற் புகுதவைப் பாயென்றுந் துய்யவனே, (182)

துய்யவ னேதுணை யற்றவ னேதுனி யாவிலுன்னை
மெய்வினை யாலு மறந்துவிட் டேன்வெறி யேன்றனையுஞ்
செய்வினை யாலே யெரிநர கேழிற்செல் லாமற்சொர்க்கம்
பய்யலு மேகப் பதவிதந் தான்பர மானவனே. (183)

பரமா நபியைப் படைத்திலை யாகிற் படைப்பிலையென்
றுரமாய் மொழிந்தவென் னுத்தம னேயிவ் வுலகினில்யான்

மரமாகி லேன்மண்ணுங் கல்லாகி லேன்மனு வாக்கிறென்னைத்
தரமாய் வரமருள் தந்தா ளெவர்க்கென் றுந் தானவனே. (184)

உன்றனை யானென் கமலத்துள் ளேகண் டுணர்ந்திருந்தா
லென்றனை யோபசித் தேங்கவைத் தாயான் றெரிசித்திடச்
சிந்தனை யோவல்ல நிந்தனை யோவெனைத் தேடியென்முன்
வந்தனை யோவரம் தந்தனை யோசொல்லென் வல்லவனே. (185)

ஆளவல் லானுனை யானம்பி னேனுன் னடிமையென்றுற்
றுளில்லை யோதனை கட்டிவைத் தாய்தனைக் கட்டறுக்க
வாளில்லை யோவரி வேலில்லை யோமகிழ்ந் தோடிவா
நாளில்லை யோநினை ந் தாயில்லை யோசொல்லென் னாயகனே. (186)

அழிவில்லை யென்றுல காள்பவ னேயுன் னடிமையென்றுல்
எளியனை யோசிறை செய்துவைத் தாயான் றெரிசித்திட
விழியில்லை யோநெஞ் சிரங்கிலை யோவிரைந் தோடிவர
வழியில்லை யோநற் பதமில்லை யோசொல்லென் வல்லவனே (187)

அனைத்தும் படைத்துயி ரீபவ னேயுன் னடிமையென்றுல்
மனத்துக் கவலையை மாற்றிலை யோவென் வறுமைகண்டால்
நினைத்தென் னளவுமி ரங்கிலை யோவுன் நிரம்பியெனைச்
சினத்தங் கிருக்கவும் நீதியுண்டோதெளி வானவனே. (188)

தெளிவாய் வெளிக்கு ளொளியாய் நிரம்பியென் சிந்தையுணின்
றழியா தனைத்தையு மாள்பவ னேயுன் னடிமையென்று
லெளியார்செய் தீவினை யெல்லா மகற்றியி டேற்றியெனக்
கொழியாத வாழ்வும் பதவியுந் தாவெங் ளுத்தமனே. (189)

ஆவென் றனைத்தும் படைத்துரு வாகுமுன் னவ்விருளில்
ஊவென் றலரி சொரியும் பனிக்கு ளுருண்டுருண்டு
மாவென் றொருமணி முத்தாய் வலம்புரிக் குள்ளிருந்த
காவல் நபிதம் பொருட்டா லிரங்கிடென் காவலனே. (190)

கௌவென்ற சத்தங் கதறுமல் நின்றெழுங் காரிருளில்
அவ்வென்ற கார முதலாகி நின றபின் னைந்தெழுத்தாய்
வெளவென் றெழுந்துநல் மௌவாய் வலம்புரிச் சங்கினின்று
நௌவென் றெழுநபி தம்மா லிரங்கிடென் னாயகனே. (191)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பலநிலத் தெவரு முன்றன் பதம்பணிந் தருளும் வேந்தே
நலவலம் புரிச்சங் கீன்ற நபிஷபாஅத் தடியேன் பெற்று



மூலரு யி ரனைத்துந் தானு யொளிக்குணின் றெறிக்கு மந்த
நிலவினுக் கெதிரே சென்று நிற்குநா ளெந்த நாளோ. (192

அனகமுற் றமர் பேய்க ளரக்கர்ஜின் முனிவர் மாந்தர்
மனமகற் றுமல் நின்றுன் மகிழ்ச்சிதந் தருளுங் கோவே
சினகமுற் றடியே னுன்றன் திருவடிக் கடிமை யாகக்
கனகமுற் றடியேன் கண்ணிற் காணுநா ளெந்த நாளோ. (193)

மறைமொழி நூலுக் கெட்டா வடிவேவான் பொருளே மண்ணில்
இறைவனீ யல்லா தில்லென் றிறைஞ்சிடா தெளியே னுன்றன்
முறைவழி தெரிய வுன்றன் முண்டகத் தருளை நோக்கிக
குறையிலி யுனையான் கண்டு கூடுந' ளெந்த நாளோ. (194)

வெளியினி லொளிய தான வேதநன் னூலுக் கெட்டா
வொளியினி லுருவ தான வுத்தம நபிக்கா ளாக
எளியனுன் மறந்து செய்யு மிடறும் வன் பிழையும் போக்கி
அழிவிலி யுனை நான் காண வருகுநா ளெந்த நாளோ. (105)

துணையிலி தருமா னந்தத் துளிதிரண் டுநவா யுள்ளக்
கனைதொடுத் தருள்பே ரின்பக் கருவினைந் தொளிகுன் றுமல்
மனைபடும் பருத்தி போலே வன்பிழை யனைத்தும் போக்கி
இணையிலி யுனையான் கண்டு மெதிர்க்குநா ளெந்த நாளோ. (196)

ஆங்கிலென் றனைத்தும் பாரி லமைத்தழித் தெழுப்புங் கோவே
பாங்கின வாறென் றெண்ணிப் பதந்தொழா தடியே னுள்ளத்
தோங்கிய கமலத் தூடே புலாவுநின் பதத்திற் காளாய்த்
தீங்கிலி யுனையான் கண்டு தெளியுநா ளெந்த நாளோ (197)

வள்ளலா னவனே நீதி வரிசைநின் வடிவுருபம்
விண்ணொணு துலகி லுன்றன் மெய்யிரு பதத்திற் காளாய்க்
கள்ளனுன் துணிந்து செய்த கடும்பிழை யனைத்தும் போக்கி
உள்ளவா றுனையான் கண்டு முணருநா ளெந்த நாளோ. (198)

அத்தனே யருளே யெங்க ளாதியே யழிவில் லானே
நித்தனே நிகரொன் றில்லா நெடியனே யடியேன் செய்யுங்
குற்றங்க ளனைத்தும் போக்கிக் குதாயுன் றன் பதத்திற் காளாய்
முத்தனே யுனையான் கண்டு முயலுநா ளெந்த நாளோ. (199)

படியினி லுயிர்கள் யாவும் படைத்தழிப் பவனே யுன்றன்
அடியினை பணிந்து போற்று மஹாமது நபிக்கா ளாக

வடிவிலி யுனையான் மண்ணில் மறந்தவன் பிழைகள் போக்கி
முடிவிலி யுனையான் கண்டு முடுகுநா ளெந்த நாளோ. (200)

இல்லல்லா குவேநீ யெங்க ளிருதயத் தெழுந்து வாழும்
அல்லிராப் பகலு மன்றி யாருறுக் கப்பால் நின்றேனே
சொல்லொணுப் பிழைகள் செய்த தோசிநின் பதத்திற் காளாய்
வல்லவா வுனையான் கண்டு வருகுநா ளெந்த நாளோ. (201)

அள்ளிமண் ணெடுத்துச் சென்று மாதிமுன் னமரர் வைக்க
ஒள்ளிய ஆத மென்றே யுயிர்விடுத் தொழுப்புங் கோவே
தெள்ளிய கியாமத் துண்ணின் றிருவொளி கண்டு தேற
வெள்ளியி லிருண்ட கங்குல் விடியுநா ளெந்த நாளோ. (202)

மயிலொளித் தரவு தோன்ற வளருமக் கோபத் தால்முன்
பயில்சனிக் கிழமை நாளிற் பாழ்நர கமைத்த கோவே
துயிலொழித் திருக்கு முன்றன் சுடரொளி கண்டு தேற
வெயிலொழித் திருண்ட கங்குல் விடியுநா ளெந்த நாளோ. (203)

அதினமுற் றெழுந்த கோப மமர்ந்தபின் ஞாயி றென்னும்
பதனமுற் றெழுந்த நாளிர் பாருல கமைத்த கோவே
வதனமுற் றிருக்கு முன்றன் வடிவகண் டடியேன் றேற
விதனமுற் றிருண்ட கங்குல் விடியுநா ளெந்த நாளோ. (204)

மண்புவி திரளு நாளில் வன்னியின் புகையா லேநீ
நண்பியல் வானந் தன்னை நலந்தருந் திங்கள் நாளிற்
றும்பிகோ டமைத்து வாழுந் துய்யவா வுனையான் காண
வெப்பிவந் திருண்ட கங்குல் விடியுநா ளெந்த நாளோ. (205)

ஆகமுற் றுதப் தம்மை யமரர்வந் திறைஞ்ச வங்கண்
சோகமுற் றகன்று போன சுமனைச் செவ்வாய் நாளிர்
போகமுற் றமைத்து வாழும் பொருளேநின் னருளைக் காண
வேகமுற் றிருண்ட கங்குல விடியுநா ளெந்த நாளே. (206)

இடமுறுந் திசைக ளெட்டி லிலங்குமெட் டொளிகள் தம்மை
நடமிடு புதனு மந்த நாளினி லமைத்த கோவே
திடமுற விருக்கு முன்றன் றிருவொளி கண்டு தேற
விடமென விருண்ட கங்குல் விடியுநா ளெந்த நாளோ. (207)

பதிதனி லூர்வை நாற்கால் மிருகமும் பறவை தானும்
விதிதிரு வருளா லென்றும் வியாழநா ளமைத்த கோவே



திதியுறுங் கமலக் கண்ணுற் றிருவொளி கண்டு தேற
விதியென விருண்ட கங்குல் விடியுநா ளெந்த நாளோ. (208)

கங்குலங் குழலி சூழுங் கருமுகிற் கடலி லேழு
பங்கில்நின் றனைத்தும் பாரிற் படைத்தளித் தெழுப்புங் கோவே
சங்குறுங் கமலக் கண்ணுற் சரணங்கண் டடியேன் றேற
வெங்கணு மிருண்ட கங்குல் விடியுநா ளெந்த நாளோ. (209)

கன்னலுற் றினித்த வாசங் கமழுங்கஸ் தூரி மேனிப்
பொன்னிறத் தழகு போன்ற புகழநபி பொருட்டா லென்றும்
இந்நிலத் தடியே னுள்ளத் தெழுஞ்சுட ரொளியைக் காண
மின்னிவந் திருண்ட கங்குல் விடியுநா ளெந்த நாளோ. (210)

வேறு.

எந்தமாத மெந்தநாளி லெந்தநேர மென்றினி
வந்தெனை நி ரைப்பதற்கு மேவழக்குண் டோவென
உன்றனேர்மை யின்னதென் றுரைக்கொணு துளத்துளே
சிந்திடாமல் நின்னருள் செலுத்திடெங்கள் செல்வனே. (211)

முந்தநாளி லந்திநேர முண்டகத்து ளச்சரம்
தந்தெனை டு ரைப்பதென்ன தப்பிலொப்பி லாதவ
அந்தவாச கத்தையான லைசத்திடாம லுன்னுடன்
வந்திரந்து கேட்பனீ வழங்கிடெங்கள் வல்லவா. (212)

கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

இரவே முதையோர் பகலாய் நிலைசெய்
திறகு லொடுரா சியப்பே சினவா
திரைசூ ழுலகில் நரர்தா முனது
திருவா சகங்கேட் டுருகா ரகதுண்
டுதவா ரிவரென் றெளிசே ருனதன்
புறுவா சலில்வந் திரந்தேன் மிகவு
மதமோ டெழுமா லடியேன் றனைவந்
தணுகும் படியே யருள்வா யிறையே. (213)

கனமாக் கமலத் தெழுதல் லொளிதந்
தடியற் கருள்செய் துதவு மிறையே
சொனமா மணிகேட் டெவரு முலகிற்
றெழுவா ரவர்நெஞ் சுருகா ரழுவார்

கனமா மறைநூ லருளு மிறையுன்
ஹறதீதின் படிகண் டுணரா தடியேன்
தினமா ன முன்வா சலில்வந்திரந்தேன்
திருவா யமுதந் தருவா யிறையே. (214)

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

சாதக மெழுதன் ஞேசைத் தலைவர்ஹா றூத்து மாறூத்
தோதகம் வெறுத்தே கள்ளுண் டுழன் றுனக் கபைய மென்னப்
பேதக மில்லா னந்தப் பெருமைக ளறிந்தே யங்கண்
மாதுயர் தீர்த்த வுன்னை மறப்பரோ மறப்பி லாதார். (215)

அரம்பையர் பதிவிட்டாதம் ஹௌவாவா யிரக்காள் மண்ணிற்
பெருஞ்சிறைப் படாம லெங்கள் பெரியவா பிழைபொ றென்றே
விரும்பிநின றறைக் கண்டு மெய்ப்பொருள் வெளிநின் றங்கண்
வருந்துயர் தீர்த்த வுன்னை மறப்பரோ மறப்பி லாதார். (216)

சுழி தரும் புனவில் நூஹா சூமருக் காற்றெ ஞமல்
அழிவிலா னீயே யானுன னமானமென் றழைத்த வந்நாள்
வழிதரும் பொருளாய மெய்யில் விரையவந் திலங்கி யங்கண்
எளியவர்க் குதவு முன்னை யிகழ்வரோ விகழ்ந்தி லாதார். (217)

மிடுக்குற்ற பிறுவூன் செய்யும் விதனத்தால் மூசா தாமும்
தடிக்குற்ற பொருளே யானுன் சரணமென் றழைக்க மந்நாள்
வடிக்குற்ற றூஹா யந்த வன்குபிர் தன்னை மாய்த்தங்
கிடுக்கத்துக் குதவு முன்னை யிகழ்வரோ விகழ்ந்தி லாதார் (218)

சீறுவாய் நப்றூத் செய்யுந் தீவினை பொரும லன்றிப்
ருகிம்நா னேழை நீசற் றுரங்கிடென் றிசைத்த வந்நாள்
நாறுவாய் குளிர்ந்து வீசு நறுமலர்த் தென்ற லாய்நின்
றுறுவாய்க் குதவு முன்னை யசப்பரோ வசப்பி லாதார். (219)

பெருந்திரைக் கயல்யூ நூசைப் பிடித்தது விழுங்கு நேரம்
வருந்தியென் பொருளே மீனின் வயிற்றிலுன் காவ லென்றே
இருந்தவக் கமலத் தூடே யெருந்துமைஞ் சுடரா யங்கண்
அருந்துயர் தீர்த்த வுன்னை யசப்பரோ வசப்பி லாதார். (220)

தாழைமுன் னொடித்து வீசித் தமையரன் றடித்துக் கேணிக்
கீழிற்றன் ளிடயூ சுபுன்கிருபையென் றலறு மந்நாள்
ஏழையென் றிரங்கி மூலத்தெழுந்துமைஞ் சுடரா யங்கண்
வேளைகண் டுதவு முன்னை வெறுப்பரோ வெறுப்பி லாதார். (221)



வலிநினைத் தஹாம தீன்ற மதலைபீ பாத்திமாவை
அலிதனக் குதவ வேண்டி யடியிணை பரவு மந்நாள்
ஒலிநகைத் தமர ரோடன் றேசையாய் முழங்கி யந்த
மெலிகுறை தீர்த்த வுன்னை வெறுப்பரோ வெறுப்பி லாதார். (222)

இப்படிப் போல்நின் பாதத் தொழுந்தவெவ் வுயிர்கட் கென்றும்
மெய்ப்படிப் பொலிவு நன்மை விளங்குமா தரவு மீந்தாய்
அப்படிப் போல்நீ யெங்க ளருந்துய ரனைத்தும் போக்கித்
தப்படி யார்க்கி ரங்கித் தலீலருள் தப்பி ரானே. (223)

தன்பிரா னேற ஹீமே தனியனே சரியில் லானே
என்பிரா னேநீ யார்க்கு மெளிமைகண் டிரங்குந் தீனே
முன்பிரா னேநீ யெங்கள் மிடிமைக ளனைத்தும் போக்கி
அன்பினு லடியேற் கின்ப மருள்செய்வா யழிவற் றோனே (224)

அத்தனே வித்தாய் மூலத் தஞ்சிலொன் றாகி யெங்கும்
நித்தனே பத்தி பாயுநெடியனே நிகரில் லானே
சுத்தனே முற்று மெங்கள் துன்பங்க ளனைத்தும் போக்கிக்
கத்தனே முற்று மண்ணிற் கவலைபோக் குறகு மானே. (225)

எழுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

திரங்கொடி தயங்களி லிருந்தவனே யானினோ
டிரந்திடும் புகழ்ச்சி யதைநீ
வரப்பெறு வனென் றுனோடு டிரந்திடு மவர்க்கும்பின்
நமக்குமன மென்று மகிழ
அரம்பையர் சுகங்களு மஹாமதர்ச பாஅத்துமுன
தன்புறுதீ தாறு மூலகில்
உரங்கொடு தரும்படி நினைத்தின முவந்திடு
மிகுந்துறை விளங்கு மிறையே. (226)

சொர்க்கமதி லுட்படு சுகங்களு மதற்குள
சுகப்பினோ டரம்பை மாரும்
மக்கநபி செய்திடுஷபா அத்துமுயர் காக்ஷியு
மகிழ்ந்தெவரும் வாழ்வு பெறவே
சக்கர வொடுக்கமி லெனக்குற விரங்கிநீ
தரும்படி நினைத்துள தெல்லாம்
இக்கணமெ னக்குலகி லீந்துத்வி செய்தரு
ளெவர்க்குமு னிரங்கு மிறையே. (227)

வேறு.

அண்டருலோகம தோடனைத்தும்படைத்
தாளுமளுதியே நீதிசேர்
தொண்டருளத்தில் நினைத்துனைத்தான்றெழு
தேத்தும் துவாவைநீகைக்கொள்வாய்
வண்டர்களுண்டது கண்டிடயானும்
வருந்திநின்ஞேடிரந்தேத்தியே
கண்டதுகேட்பனறிந்துடனிகம
லத்தொளி தந்தருள்ஹக்கனே. (228)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அந்தர மாமுனி வோர்பசா சோடும ரக்கர்ஜின் மாந்த ரதிர்சிலர்
சந்திர சூரியனைப்பணிந் தேதலை கொண்டுமி ரந்த தறிந்தவா
மந்திர வாவியிற் முண்டகப் பூமலர்ந் திட்டது கண்டறிந் துன்னுடன்
சுந்தர மேலடி யேனிரந் திட்டது ஆப்பேறீ டேற்றிடுடென் சுத்தனே.

கலிவிருத்தம்.

அத்த னேயடி யார்க்குறு மன்பனே
மெத்த நாளுனை வேண்டுத லன்றியான்
குற்ற முங்குறை செய்துவந் துன்னுடன்
உற்றி ரந்தனு வந்திடென் னுத்தமனே. (230)

பழுதி லாத பழம்பொரு ளேபயல்
அழுத யாவுமறிந்துன் னருள்கொடே
எளிதி ஞேடுவந் தேழைக் கிரங்கிநீ
தொழுதற் கேற்கத் துணைசெய்யெ னித்தனே. (231)

ஆரு மாருமி லாதவ னத்திடைச்
சேருஞ் சேருமெ னப்பயல் தேடிவந்
தோது நாதமென் றுன் னுடன் கேட்பதுக்
கேது நீதலீ லீந்தருளேகனே. (232)

கண்ணி லாமலுன் கற்பனை காணிலான்
எண்ணெ ணுப்பிழை செய்திடைந் தேங்கினுன்
விண்ணி லுன்னருள் வேண்டுதல் கண்டுநீ
மண்ணில் வந்துவ ழங்கிடென் வல்லனே. (233)

பலப டைப்பும் பரந்தொளி முங்கிய
நிலைகள் கற்று நிறைந்தவ னேபயல்



விலகல் செய்துனை வேண்டி யிரந்ததுக்
குலகில் வந்துப காரஞ்செய் யுண்மையே. (234)

மூல மந்திர முட்பொரு ளாய்நிறைந்
தால மொக்கநின் ருள்பவ னேயருள்
மேல கத்தருள் வேண்டுதல் கண்டுநீ
யேல முன்தலி லீந்தரு ளேகனே. (235)

எழுசீர்க்கழிநெடிலடியாரியவிருத்தம்.

மதங்க ஞுறுபதி யனலும் புனல்வெளி
அறுசுங் குறுசுட னகண்டவான்
பதங்க னுடுமதி பரந்த முகிலிடி
பதுங்கு மருளிலெள குடன்கலம்
விதங்கொ டலைபுவி வெகுண்ட பரிமலை
மிகுந்த வொளிபல சமைத்தவா
இதங்கோ டுனதள விரந்த னெளியனுக்
கிரங்கி டெமதுளந் தரங்கனே. (236)

விலங்கு பறவைகள் மிகுந்த வுயிர்பல
விதங்கொ டமைசெய்து நிறைந்தவா
பெலங்கொ டடியவர் மனங்கள் வகைவகை
பிரிந்த படியுனை மறந்துபோய்
இலங்கு முனதொளி சிறந்த திருவடி
யிறைஞ்ச விலையுஞே டிரந்தன்யான்
பலங்கள் மிகுதிதந் திரங்கெவ் வுயிர்களும்
பணிந்து கதிபெறும் பரமனே. (237)

வேறு.

அவ்வென் றெழுந்தபுக ழாராய்ந் தடங்கலையு
மாவென் றமைத்த பொருளே
யெளவென் றெழுந்தமஹா பூபென் றிசைந்தவிற
சூலைப் புகந்ழ்து னடியேன்
உவ்வென் றிசைந்துஞெடு கூப்பிட் டிரந்தனனுன்
கோபந் தணிந்து னருளால்
தௌவென் றெழுந்துதவி தருவாயனைத்திலுநீ
தானய் நிறைந்த பொருளே. (238)

அத்தனிலி யேகுறைகள் சற்றுமிலி யேபழுதொன்
றற்றபெரி யோனே யடியேன்
நித்தலுமுன் னேடழுது செப்புமது கேட்பது
நெகிழ்ந்ததென் றீநெ டியவா
சித்தமடி யேனள விரங்கவிலை யோவினஞ்
சினத்திடுவ தோதெ ரிகிலேன்
உத்தமனே யானின்னே டிரந்திடுவ தந்தனையு
முற்றுலகி லீந்த ருள்கவே. (239)

அளவடி விருத்தம்.

பருதி நடுங்குந் துனிகோ டனைத்தும் படைத்தோனே
மருவி யுனைக்கேட் டிரந்தது கையில் வரக்காணேன்
பெருகி யுனைத்தான் தொழுகி லனந்தப் பிழைதானே
கருதிய நெஞ்சத் தருளிய கஃப துல்லாவே. (240)

அருண னடங்குந் துனிகொடென் ஞவி யமைத்தோனே
கெருண மனங்கொண் டடிய னழுக்குரல் கேளாயோ
கருணைகொ டுன்ற னடியவர் நெஞ்சு கலங்காமற்
தருண மறிந்துன் தலீல்செய் வாய்ச மதுல்லாவே. (241)

உருவமோ டந்த மிலியே யென்னுள்ள முனைத்தேடி
வருகுது கஞ்ச மலரடி கண்டு வணங்காமல்
வெருவிட நின்றுன் திருமன மென்னை வெருட்டாமல்
அருபமோ டுன்றன் றுணையருள் நீஅஹ துல்லாவே. (242)

முடிவு துவக்க மிலியே யுனைத்தான் முயலாமற்
படியில் மிடைப்பட் டடியேன் படுந்துயர் பாராயோ
அடிய னுத்தான் தொழுதில னென்றுநீ யகலாமற்
கொடிய னிரந்துள படிதரு வாய்குறை யில்லானே.

கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

உருவந்த மிலியுன்ற னொளிதங்கு முலகெங்கு முறைகின்றவா
கருவிந்தை மதனைந்து கனைதந்த படியுன்னைக் கருதாமல்யான்
மருவுந்து வகைகண்ட நிலையெங்க ளுயிர்பொங்கி வருவாழ்வுதான்
திருவந்து புகலென்ற னுளநின்று தினமன்பு தருமன்பனே. (244)

அலைசுற்று முலகத்தி லருள்பெற்ற நரர்சித்த மறிகின்றவா
கலைசுற்று மதிலுற்ற கமலத்து ளுனைமுற்றுங் கருதாமல்யான்
விலைபெற்ற தெனமெத்த மிடையுற்ற படிகண்டு வெகுவாழ்வுதான்
நிலைபெற்ற தெனநித்தந் தரமெய்த்த திடையுற்ற நெறிநித்தனே.



வேறு.

மேலவெளிக்குள் விளைத்துநல்மாமறை விண்டெமை யாள்பவனே
கோலவிழிக்கடை யாலுனை நோக்கிக் குறித்து வணங்கறியாப்
பாலனறிந்தந் யாமலுஞ்செய்துள பாவம் பொருத்தடியேற்
கேலமனத்தி லிரங்கிச்சிறப்பெடுத் தீந்தரு ளுத்தமனே. (246)

தேனொடுபாலுமொவ் வாவுபதேசநீ செப்பி யுயிர்க்குயிராய்
வானகமீதுள தானதெலாமெனுள் வைத்தெமை யாள்பவனே
கானகமானதி லேபணியாக்கலை மானை யழைத்தருளும்
தீனபிதம்முடைப் பேறெமக்கீந்தருள் தீங்கிணை யற்றவனே. (247)

வேறு.

பனிதரு முயிரது பலவுநீ யமைசெய்து பார்மீதில்
மனிதர்கள் தவமதி லினிதுற வருமுயர் வல்லோனே
தனியனை நினைப்பவ ரெவருனை யலதுத யங்காமற்
கனியினி லினிமைதந் தருளென தெள்மைநீ காண்பவனே (248)

நெறிநடு முறைமைகொ டடியவர் புகழில் நிறைந்தோனே
மறிவிட றகலநின் னடிதொழு மெனையுநீ மறந்தாயோ
அறிவுகேட்டிமைசெய்தி டினுமென தெளிமைய றிந்தேநீ
நெறிநொடிக் கெதிர்நிலை தரவரு ளெனதுணி றைந்தோனே (248)

அறுசீர்க்கழிநெடிலடியாசியவிருத்தம்.

இரவைப் பொழுதுன துயிர்கட் குனதொளி யியல்வுற் றருள்பவனே
திரையுற் றுனதொளி தெரியப் பயலைநீ தெளிவுற் றுரையருளெ
றரவைச் சமர்செய்த நபியைத் தொழுதுனே டழுதுற் றிடுமதைநீ
புரையுற் றுலகினி லெளியர்க் குதவிசெய் புகழுக் குரியவனே. (250)

அறுசைச் சுமைகொளு மவர்நெற் றியிலுய ரலிபுற் றெழுதியவா
இரசக் கனியென திதயத் துறைவதி னியல்வுற் றறிகிலனுன்
பரிசுப் படியுள பயலைக் கருதிய பகையைத் துலைவுசெய்தே
வரிசைப் பதவிகள் தருமெய்த் தருள்பல வடிவுக் குரியவனே. (251)

கலிவிருத்தம்.

நாயனே நானுனை நல்கி யிரக்கிறேன்
பேயனுன் செய்யும் பிழைபொறுத் தருள்கவே
காயநெஞ் சுருகிக்கண் கலங்கிப் புகழுவேன்
தாயிலு மன்பனே நீதா னிரங்குகவே. (252)

அருவமோ டுருவமு மனைத்துமாய் நின்றெனை
வெருவவே மருவுநல் வேந்தனே யடியனெஞ்

சுருகினும் பெருகநொந் துளறினு முனேயொளிந்
தருளெமக் கீவதா ரிறைவநின் சரணமே. (253)

கண்ணிகள்.

முதலவனேயென்று முயல்பவர்மனங்கள்
முழுதொளி துலங்க
முடுகுவைநீயெங்கள் மிடிமைகளகன்றிட
வந்தருள்க நின்சரணமே (254)

இரவினி லுயர்ந்த பதவிகள்முயன்ற
வர்கள்பெறுவ ரென்றே
இசைவுறநீயெங்க ளிடறகல முடுகி
நின்றருள்க நின்சரணமே. (255)

உருகுமென துள்ள மிகழுமெனதுடப்பி
லுயிர்பதறிநொந்து
மிகவுனெடிரந்தே னொருவனேயடியே
னேவகற்று நின்சரணமே. (256)

அரவுடல்நடுங்க வதினுயிர்பிடுங்கு
மஹாமதை நினைத்துன்
னடியிணைப்பணிந்தே னரியபெரியோனே
கதிதருக நின்சரணமே. (257

அகரமுதனின்ற ஹறுபதனைவிண்ட
நிலேயடிய னைந்துன்
னளவிரந்தேனென்ற னிறைவனேயெளிய
னுக்கிரங்கு நின்சரணமே. (258)

அருவசொருவந்த மிலியெனவெழுந்த
விருளதி லுறைநதோ
ரணுவுமியங்காத வாதியேயடிய
வர்க்கிரங்கு நின்சரணமே. (259)

அலிபுமுதலென்று வருவனிலம்விண்ட
படியிரு ளகன்றுன்
னருள்பெருகநின்ற வன்பனனேதம்ப
மீந்தருள்க நின்சரணமே. (260)

திமிரகமகன்று திகழொளிபசந்து
திகிர்த்தியென நின்ற



திகளொளியேயெங்கள் தீங்குபழுதகல
நின்றருள்க நின்சரணமே (261)

வடிவுருவோடந்த மிலியுனதுசந்த
மெவரறிவரென்றுன்
மகிழ்பவனேயெங்க ளிரணப்பொலிவுறகு
மத்தருள்க நின்சரணமே. (262)

சுடரொளிபேரின்பத் தொளி அஹாமதன்புத்
துணேயென மகிழ்ந்து
துனியெழநிறைந்த துய்யபெரியோனே
துணேயருள்க நின்சரணமே (263)

அடலொளிவுகண்டு வருநபிகலன்றுற்
றமரரொடு பிண்டத்
துயிர்பலவுமின்றருளுபவனேயெளிய
னுக்கிரங்கு நின்சரணமே. (264)

உடலொளிசிறந்த ஹபீபையலதொன்று
மமைசெய்தில னென்றுன்
மகிழ்பவனேயெங்கட் குரியநபிஷபா
அத்தருள்க நின்சரணமே. (265)

படரொளிதிரண்டு பலவடிவகன்ற
வடிவிறைவனென்றுன்
னடிதொழமகிழ்ந்த வல்லோனேயுதவி
தருகநின் சரணமே. (266)

கடலொளிபரந்து வருமொளிதிரண்ட
ஹபீபைநீமகிழ்ந்து
கனமறைதெரிந்து கவல்பவனேபுகழ்கண்
டடேற்று நின்சரணமே. (267)

சசிரவிதங்குந் தாளமிலுறைந்தெவ்
வுலகுயிர் சமைந்து
சமையமெனநின்ற தனியனேயுயர்பதவி
தந்தருள்க நின்சரணமே. (268)

கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

ஊனேடென்புதிரங்களைம்புல னேடுவந்தெனை யாண்டவா
ஞானமென்றொளி காணவேண்டி நவின்றுனேன்டு மிரப்பன்யான்

தேனேடன்பு பொருந்துமாவைத் திரட்டியெங்களுக் கின்றற்ற
தீனம்வன்பிழை போக்கினின்றெளி யேற்கிரங்கிட னித்தனே (269)

மூலமந்திர மைந்தி லொன்றை மொழிந்தவர்க்கிறை யோனேநீ
மேலுமந்த வெளிக்குள் நின்று விளம்புமோசைகே ளாமை யான்
நாலோடைந்தொரு நான்குமூடுள நாடியாலுமுன் றேவெகு
காலமென்றடி யேற்கு நின்றிரு காக்ஷிதந்தருள் ஹக்கனே. (270)

வேறு.

ஆரும்புகழு முயர்பதமு மகரமுதலென் றதிவிதமும்
ஆரமணிசே ரொளிமுகமு மவையுந் திருமுன் வருநலரும்
ஓதுமறைவின் டருள்வதுவுமொருவர்க்கறியா வடிவுருவும்
ஓமென்றதையன் புறுமதுமுன் ஹெளிவுமடியே னுணராமல்

பாரில்மிகவும் புகழ்வதும் பயமுற்றெவரும் பணிவதுவும்
பாவமகலு முயர்தவமும் பலவுபமுதென் றுளமதுதான்
ஏதென்றிறையுன் னுயர்காதி லேறும்படிகேட் டென்னளவில்
ஏன்வந்தவனென் றுயர்கதிதந் தெனையாண்டருளெனிறையோனே.

இரவும்பகலு மிறைநின்னே டிருகையேந்தி யிரந்ததுவும்
எனதுள்ளிதய முருகியெழுந் திருகண்ணதிற்பாய்ந்தொழுகுவதும்
உரவம்மொழிசே ருயிரற்றவுடல்போல் மயங்குணர்வதுவும்
உலகிலடியேன் மிகநொந்து முணருமதுவு முணராயோ

மரவின்சடியைம் புலத்தைவென்று மௌனமணிமந் திரத்தையுன்னி
வளரும்பிரானென் றுனைத்தேடி வணங்காரெனவு மறந்தாயோ
அரவின்கவிகை ஹபீபாய்நூ ருனபெருப்ப வலுப்பமதை
அடியேனுணர வலனுநின் னருள்தந்தெனையா ளிறைவனே. ()

கலிவிருத்தம்.

மால்பெற்றுயர் ஞானத்திரு மறையுச்சி பழுத்தே
மூலப்பொரு ளெனவுற்றெரு மொழிபெற்றிடு மிறைவா
காலுற்றெழு கமலத்தொளி காணப்பயல் துணிவேன்
மேலத்திரு வாசற்படி வெளிகாட்டென் னிறையே. (273)

தூமத்திரை யதில்மொய்த்துள் சுரர்கட்கறி வரிதாய்க்
காமத்திரை யதிலுற்றவர் காணத்தெரி பனே
ஏமப்பதி புகழ்மெய்த்துஜெ டிரப்போனெளி யற்குன்
னேமனத்தொளி தரநித்தலும் நினைவாய்நெடி யோனே. (274)



வெண்பா.

நெட்டை நெடியபல நிஃமத்துறு மேலவனே
வெட்ட வெளிக்குள் விளைந்தோனே—யெட்டுந்
தருவா யெவர்க்குமொரு தாழ்வருத்தா தென்முன்
வருவாய்நீ யென்று மகிழ்ந்து. (275)

கண்ணிகள்.

மகிழ்ந்துனது தீ தாறும் வரிசைநபி தருஞ்சிறப்பும்
உகந்துபயல் காண்பதற்குன் னுதவிசெய்வா யுத்தமனே. (276)

உற்றுலகி லுனையாரு முழன்றழன்று தேடுகினும்
எத்தலத்தி லிருப்பவனென் றெவர்க்குந்தெரி யாதவனே. (277)

தெரிவரிதாய் நின்றவுன்னைத் தேடுவர்க்கன் பாகியுள்ளத்
தரியவிழி தெரியநிறைந் தடங்கலுமொன் ருனவனே (278)

ஒன்ருகி ரண்டாகி யுருவாகி நின்றபயல்
அன்றுடஞ் செய்பிழைக ளனைத்தும்பொறுத் தாள்வாயே. (279)

ஆளுமிறை யோனேயுன் னன்பரிற சூலும்மத்தோர்க்
கேழுமனு காமலெட்டு மீந்தருள்வா யெல்கோவே (280)

கலித்துறை.

கோவென்றுன் பாதந் தெரிசித்தி டாத குமந்திரிகள்
சாவென்ற காலம் நரகாள்வ ரென்றுநீ தான்மொழிந்தாய்
ஆவென் றருளுளத் தேனுறைந் தாயடி யேற்குமுன்றன்
நாவென்று பேசும் நலந்தரு வாயெங்க ளையகனே. (281)

நாயக னேநமு வாதவ னேநன்மை தீமையுறுங்
காயநல் லாவியி னூடுறைந் தோயுன்னைக் காண்பதற்கு
மாயவன் வன்பிணி வாராமற் காத்துயா வசிழ்வுதந்து
பேயனை நீவவந் தாண்டுகொள் வாயெம் பெரியவனே. (282)

பெரியவ னேபிழை போக்குவ னேபேர ண்டரண்டத்
தரியவ னேயெம்மை யாள்பவ னேபுக ழாமெவைக்கும்
உரியவ னேயொளி வானவ னேயுணர் வோர்க்குமுன்னைத்
தெரிபவ னேதரு வாய்கதி நான்குமுன் சிந்தைகொண்டே. (283)

வெண்பா.

கொண்டற் குடையுடைய கோமானம் மாலநபி
விண்டபுல னைந்துமென்னை மேவாமல்—தொண்ட னுயி
ரீமானையேதெரிசித் தின்ருள் பணிவதற்கென்
சீமானே நல்லுதவி செய். (284)

கலித்துறை.

செய்யும் பலகுறி யெல்லாநின் கற்பனைச் செய்கையென்றே
மெய்யி லுறக்கண் டிறைஞ்சாத பாவிகள் வெண்ணரகில்
எய்யும் பொழுதவர்க் கீடேற்றங் கேட்நின் னேடிறகூ
லுய்யும் ஷபாஅத்தெனக் கீந்தருள் வாயெங்க ளுத்தமனே. (285)

உற்றல கிற்படைப் புண்டா முயிர்க்குநல் லும்பருக்கும்
மற்று மரக்கர் முனிபேய்கள் ஜின்னுக்கு மாமறைக்கும்
சற்று மிவையொன் றுக் கெட்டாம லெங்குநீ யாகநின்ற
கத்தனே நீவந் தடிமைகொள் வாயுன்னைக் காண்பதற்கே (286)

காணுமிதயக் கமலகண்ணாலுனைக் காண்பதன்றிச்
சேணி லெவரு முகக்கண்ணி னால்தெரி சிக்கவொண்ணா
வாணிலி பெண்ணுமல்லானே யடியற்கு முன்றனருள்
வேணும் பிறுதெள செனும்பெரி தாகிய வித்திடமே. (287)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வித்து மற்றுல கழுற்ற கத்துரி
மிகுந்து நித்தலு மணத்தநல்
வத்து மிக்குள வரம்பை யர்க்கெமை
வகுத்து ரைத்தபெரி யோனேயான்
கத்தி பட்டுனே டிரந்து கேட்பனீ
கபூல்செய் தீந்தரு ளெவர்க்குநின்
அத்த மெத்தனை யெனத்தெ ரிந்தள
விடற்கொ ணுதெம துறப்பனே. (288)

றப்பி லாலமி னெனத்தொ ழாதெழு
பிறப்பி லுற்றழிவ திற்பல
பிறப்பி லென்னையு மழித்தி டாதொரு
பிறப்பி லாக்கிவைத் தோனேயான்
உறப்பி லாமலு முனைத்தி னந்தொழு
துணர்ந்தி லேன்மிக வாகிலு
மறப்பொல் லானெனை வெறுத்தி டாதடி
யற்கி றங்குநீ யன்பனே. (289)

எண்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

அன்பனே நின்பத மென்றுனை நம்புநல்
லடியவர்க் கன்புமா தரவுமாய்நின்றெமக்



கின்பம்நீ தருகினுந் துன்பமே வருகினு
மிகழினு மடியனெஞ் சுனைமறந் தொழிவனோ
வன்பனோ டைம்புலன் பஞ்சபூ தங்களும்
வந்ததின் மாய்கையால் சிந்தைவே றுகமுன்
தன்பமே யன்றிவே றிலையெளி யற்குநின்
தலீல்தந் தருள்கயான் தனியனின் சரணமே. (290)

சரணமென் றுனதருள் பெறுமடி யவர்கள்தாந்
தவமதில் நடமிடும் பொருளேவந் தடியனுக்
கிரணநீ தருகினு மிடறுவந் தணுகினு
மிகழினு மடியனெஞ் சுனைமறந் தொழிவனோ
வருணனன் புறவரும் பனிநனைந் திலையுளம்
வறுமைகொ டரவுநொந் திகழுமுன் பாதமன்
றருணன்வந் தடிபணிந் தருள்பெரும் வாசலி
லடியன்வந் திரந்தனன் பிழைபொறென் னிறைவனே. ()

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

என்று மென்றுமெழு சூரி யன்கதி ரிலங்கு திங்களவ் வினைகளு
மண்ட பிண்டமதி லுந்து காயமுள ளடைந்த சீவன தடங்கலும்
விண்டு கண்டுனை யுணர்த்தி டாதவெளி யேவெ ளிக்குமுதலானவா
தொண்டன் வந்துன்னேடிரந்தனெங்கள்பல துக்க நீக்கிவிடென் னித்
[தனே.]
நித்த னேயுனை நினைப்ப னைவரு நினைக்கொ ணுதெனை நெருக்கியே
மற்ற நேர்வழி வருத்த வென்னுள மயங்கி யுன்னையு நினைந்துபின்
மெத்த நானின் னேடிரந்த ழுங்குரல் மிகுந்தநின்செவிகே ளாவெனக்
கத்த னேயெனது கண்க லக்கமது கண்டிரங் கிலேயோ பாவியே (293)

வெண்பா.

பாலிக் கெனபலனும் பான்மையு முண் டோபயலைத்
தாவிவெறுத் தாயெங்கள் தானவனே—கூவித்
திருப்பதங்கண் டோபவர்க்குந் தியருக்கு மெல்லா
மிரப்பவர்க்கு நீகொடுப்பா யே. (294)

கலித்துறை.

ஏனெந்த நாளு மளவிரங் காமனி யெங்குநிறைந்
தானந்த மாயிருந் தாயுவுந் தெந்தமை யாள்பவனே
நானெந்த நாளுமுன் னுமமற் றெரன்றை நவின்றனனே
தானெழிந் தாலிங்கா ருண்டுநல் வாழ்வு தருபவனே. (295)

தார பலனும் பதவி தலி லுந் தலைமைகளும்
வீறுங் கதியுநல் மேலான வீரமும் வெல்வெற்றியும்
பேறும் நலவும்நல் லீடேற்ற முப்பெரு வாழ்வுமனந்
தேறும் படிதரு வாயடி யேற்கொரு தீங்கிலியே. (296)

தீங்கு பழுதினை யில்லானே யுன்றன் திருவடிக்குள்
ஓங்கி வளர்ந்துரு வாய்நிறைந் துள்ளத் தொளியிருகண்
தூங்கும் பொழுது தருவாய் தொடர்ந்திரு நாசியினின்
றேங்குஞ் சரத்தோ டெழுந்தோனே யென்று மெளியவர்க்கே. (297)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

எளியவர்க் குதவுநற் பொருளேயுற் றிருவருக்
கிடையிலுட் டுளிநெறிந் திருளாகத் தொழுகிய
அளிவதற் குயிர்விடுத் தடியனுக் கருள்வினைத்
தஹுமதுக் கிவனுமத் தெனவகுத் தோனேயான்
ஒளியுனக் குயர் தவக் குறைவருத் திடுமதா
லுலகிலிப் பொழுதுனத் துணையுருத் தெரிகிலேன்
வெளிநிறைத் துயர்மனத் துறநினைத் தெனதுதீ
வினையறுத் துதவியுற் றருளெமக் கொருவனே. (298)

ஒருவனெப் படியுநற் பதவியுற் றருள்வதற்
குவமையொப் பிலையெனப் பயல்நினைத் துருதுமுன்
வருவனித் தலுவனப் பகையொழித் திறைபல
வகைவகைப் படிசிறப் படியனுக் குலகினிற்
றருவனெப் பொழுதெனப் பெருகுமெய்த் துளருமென்
றனிமையுற் றிறகுமத் தருளுமெய்ப் பொருளேயான்
இருமனப் படுமுளத் திருளறுத் தியல்வினைத்
திடறுதீர்த் தெமையுமீ டேற்றிட னிறைவனே. (299)

கலிநிலைத்துறை.

இறைய வாவிடை பின்கலைச் சுழிமுனைக் கிடையில்
மறையின் வாழ்வதை வருத்துவித் துனதுவல் லபத்தால்
நிறையும் வானொளி தெரியுதற் கெமைநினைத் தெமக்கோர்
குறைவ ராமலீ டேற்றுக வெமக்கும்றஹ் மானே. (300)

மானே மான்றொடர்ந் தியங்குமெண் கலைமகிழ்ந் தினித்த
தேனே யேனொளித் தாய்வருத் தாமலென் தீனே
பூனே யானையோ டெதிர்பொரா தகலுமென் றுணரா
ஈனன் யானென்றைக் காண்பனோ வுனையலா திசைந்தே, (301)



இசைந்த முத்துநற் பவளமும் பசையோ டிணங்கி
வசந்த மண்டபத் துட்புகுந் ததைவகுத் துருவாய்ப்
பசிந்த நல்லுயிர் விடுத்துண வீந்தநா பதவி
உசந்தெமைப்படைத் தோனேநின் னுதவிதந் தருளே. (302)

அருள்வ தற்கரி தாகிய முதலெழுத் தலிபென்
றருள தற்குமுன் னறிபவ ரெவரெமக் கிறைவா
வெருள கற்றிநல் லெழுத்தினை யறிந்துனை விருப்ப
அருளெ னக்கக மீந்தரு ளெவர்கரும்வல் லவனே. (303)

வல்ல பங்கொடு மறையுச்சி பழுத்துமண் ணுலகில்
நல்ல றந்தரும் ஞானத்தின் நடுவுச்சி பழுத்தங்
கில்லெ னும்பொரு ளுடைவதெவ் விடத்திலென் றிறைஞ்சப்
புல்ல னையுவந் தடிமைகொள் ளெவர்க்குநற் பொருளே. (304)

வஞ்சிவிருத்தம்.

பொருளன்பு பொருந்திய மெய்ஞ்ஞானத்
தருளென்ற தகத்து ளுறைந்தடியேன்
வெருளன்றி விரும்புவ தற்கெனதுள்
ளிருளென்ற தகற்றிவி டெம்மிறையே. (305)

இறையென்றலி புக்குமுன் னெப்பொழுது
முறைகின்ற வெழுத்தினை யுற்றுணராக்
குறையன்றி யெமக்கொரு குற்றமும்யான்
அறைகின்றிலே னிபொறெ னுத்தமனே. (306)

மன்னென்றும் வளைந்திடு மவ்விருளில்
என்னென்றுந் தெரிந்திலே னெவ்வகையும்
குன்னென்றல கத்தெமை யாள்பவனே
பொன்னன்பு பொருந்த விரங்குகவே. (307)

இரங்கென்றெளி யேனிறை வாயுனது
பரங்கண்டு பணிந்து பலம்பெறயான்
சிரங்கொண்டு புகழ்ந்ததை நீதெரிசித்
தறங்கொண்ட வடிமைகொ ளாள்பவனே. (308)

ஆண்டாய்புக ழான தடங்கலையுந்
பூண்டாய்திரு மேனி பொலிந்தமுத
மீன்றுயெவை யும்முன தாலெமதுள்
தீண்டாய்நினை வாயெமை யாள்பவனே. (309)

மேலான பதங்கள் விளம்பியசொல்
நாலாறு மெனு வி லெழுந்துபசுங்
காலோடு கலந்துள காக்ஷியதை
மேல்வாக யெழுதெமக் கீந்தருளே. (31 0

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஆதிபெரும் பொருளே யழிவில் லானே
அன்னையிலுமன் பானபெரி யோனே
சோதியிறை யோனே துவக்கமில் லானே
துய்யவனே யெல்லாம் படைத்தழிப் போனே
நீதிபெற வெங்கு நிரம்பிநின் றோனே
நிச்சயப் பொருளே நிகரில்லா ஞானமே
ஓதியுணர் வல்லார்க்கு முத்தமப் பொருளே
உண்மையா யென்மனத் தழுக்கறுப் பாயே. (311)

உண்மைப் பொருளே யுவந்துதொழ வல்லார்க்கு
னூனயற நின் றிலங்கு முள்ளொளியே
நன்மைப் பொருளே துலங்கிய மேலவா
ஞானவிளக் காகநின்ற நாயகனே
கன்மப் புவிவா னுலகுங் கடலேழுங்
கதிரவனுங் காணமற் காணநின்ற காவலனே
தன்மைக் குரியவா தீங்கில்லா நித்தனே
தானவனே யென்மனத் தழுக்கறுப் பாயே. (312)

எழுசீர்ச்சந்தவிருத்தம்.

காலக்கினி மாரிதரும்புனல் காணக்கிடை யாதவனத்தருள்
கமலத்துறு வாவியனப் பெடையென்
கோலத்திரு மேனிபொலிந்தறு கோணத்தொரு பாகிலிருந்தினி
கூவிக்குறை யாதெமை யாள்பவனே

பாலாப்பிலே ஞானப்பசுங்கிளி மேயப்பய லாவிபதைத்துறு
பாசத்தை யழித்துமு கந்தருளென்
றேலத்திரு வாசலில்வந்துன் றேடியல்வுற்றது கேட்பனறிந்து நீ
யேழைக்கிரங் கிணைபழு தற்றவனே. (313)

ஆருமறி யாதொருமாமணி யாகுமுத லானமுஹம்மதரென்
றருளுந் தொனி யால்நீ யடங்கலேயும்
பேரின்பம தாகியவெப் பனி பெருகுந்துளி யாலமைசெய்துரை
பேசினறு நீ பேணிவ குத்தவனே.



ஏதுமறி யாதெளியேனுன தேவல்செய்திலேன் வெகுமாலொரு
கூறென்ற திரங்கி யெமக்கருளென்
றேதுப்பயல் கேட்பனறிந்தொரு நாளுங்குறை யாமலுவந்துநீ
யுதவுப்படி தந்தரு ளுத்தமனே. (314)

கலித்துறை.

உவதேச நற்குரு வைப்பய லுள்ளத் டிணர்ந்திறசூல்
அவரோசைக் குட்படக் காண்கில னேயெம்மை யாள்பவனே
வவரோசைக் குள்ளுனக் காளாக வேண்டி வருவதென்றன்
சிவயோகக் கண்ணிற் படலத்தை நீக்குனைத் தேர்வதற்கே. (315)

அன்றெமை யாளுங் குருபாத முள்ளத் தறிந்தடியேன்
தொண்டது செய்யத் துணிந்தில னேயென் றுந் துய்யவனே
வண்டர்நின் பாதத்துக் காளாக வேண்டி வருந் துயரங்
கண்டிரு பார்வைப் படலத்தை நீக்குன்னைக் காண்பதற்கே. (316)

விண்ணவ ரெண்ணத் தடங்காநின் பாதத்தை வேண்டிக்கையாய்
மண்ணவரு ள்ளந் தழும்பாமற் காண வகுத்தவனே
நண் ணுவ ருண்ணத் தரும்பா லமுதத்தை நாடுதென்றன்
கண்ணிரு பார்வைப்படலத்தை நீக்குன்னைக் காண்பதற்கே. (817)

செகுரு நாதனைச் சிந்தையுள் ளேதெரி சித்திடுவோர்
வகையறி யாமற் மயங்குகி றேனின்றன் வல்லபத்தால்
மிகவுமெய்ஞ் ஞானத் துருக்காண வேண்டி விரும்புதென்றன்
அகவிழிப் பார்வைப் படலத்தை நிக்கிவி டாண்டவனே. (318)

தேடும் பொருளையென் சிந்தையுட் காட்டநற் றேசிகனை
ஏடு மெழுத்து மறியாது காணெழுத் தாணிக்குள்ளோர்
விடும் விளக்குநல் வேந்தனு முண்டதைக் காண்பதற்குள்
ஆடுங்கண் ணுடிப் படலத்தை நீக்கிவி டாண்டவனே. (319)

உடலுற்ற தாயாய்நம் முள்ளுயி ராயுள் ளுயிர்க்குட்சிறந்
தடலுற்ற தாயான நல்லஹ் மதுவா மவர்க்கன்புறுங்
கடலுற்ற தாயுன்னைக் காண்பதற் கெம்மிரு கண்ணிலுற்ற
படலத்தை நீக்கிவி டல்லாவுன் சித்தமென் பாக்கியமே. (320)

கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பலவும்பல விபரமொ டுனதடி பரவ ந்திரு வுளமுறு முயரொளி
பழகுப்மிரு தயமதி லுறுதிதரும்

நலவுங்கதி நெறிமுறைநீதியு நடுவும்மருள் பெருகுமீ மாநெரு
நாளும்நழு வாதெமை யாள்பவனே
இலௌஹின்பல கையிலுன துதவிகொ டெழுதுங்கல முணருமுற்
றெழுத்திலோ ரெழுத்தென்னள விரங்கநீ விடையருளொன்
றுலகில்லுழன் றடியனின னேடிரந் தோதும்புகழ்ச் சியைநீ ஈடேற்று
காலந்துயி லாதவ னேகனியே. (321)

விருத்தம்.

கனியேகனி வுறுமேலவர் காணத்தெரி வதன்முன்
பனியேபனி யொலிதேடிய பயலுக்கிட றணுகாத்
தனியேபய லுனைநாடிய தலீ லீந்தருள் பவனே
இனிவேறணு காமல்விரைந் தீடேற்றெம திறையே. (322)

இறைவோரிறை வனைமண்ணினி லெளியேன்வெகு துயரால்
முறையோமுறை யெனநொந்தழு மொழிகேட்டிரங் கிலையோ
தறையோரிரு தயம்நாடிய தலீலீந்தருள் பவனே
குறையோர்குறை விலையான்செய்த குற்றம்பொறுப் பாயே. (323)

கலி விருத்தம்.

உன்னையு மொருவனென் றுரைத்த வாயினாற்
பின்னையு மொவரைப் பின்செல வோவுவந்
தன்னையு மறிவிலுற் றறிவி லும்விரைந்
தென்னையு மிருதயத் திரங்கென் னேகனே. (324)

உனக்கு நல்லவ னல்லயா னுண்மையென்
றனக்கு நல்லவ னாகத் தலீ லுந்தந்
தெனக்கு நல்லறிவு வீந்திடர் போக்கியென்
மனக்க ளங்மதை மாற்றிவி டேகனே. (325)

கலிநிலைத்துறை.

ஏக நாயக னேயுனைப் போற்றியெந்நாளும்
தாக மாய்ப்பயல் கேட்பதைத் தந்தெனக் கருள்வாய்
வாயி னாலென் றும் வசையுனக் கல்லவோ வரிசை
நாயி னல்நவின் றிடுகநீ யெவர்க்கு நல் லவனே. (326)

நல்ல நாயக னேயுனைப் புகழ்ந்திடு நாவாற்
புல்ல ரானவ ரையும்நான் புகழ்வனோ புவியில்
அல்ல லானதை யகற்றிநற் பதவிதந் தருள்வாய்
சொல்லும் வாய்மைகண் டிரங்குநீ யெவர்க்குநற் துணையே.



ஏனோ வித்தனை சொல்லியு மிரங்கிலா யெளியேன்
தானோ புல்லனைப் போலாரு மில்லையோ தரையில்
யானோ விப்படி யலைவது னயிப்பொருட் டாலே
தீனை யென்பிழை தான் பொறுத் திரங்குவாய் தெளிந்தே. (328)

தெளிவே யுன்னையான் தேடுதல் கண்டுநீ செகத்தில்
எளியே னெனக் கிரங்கிடல் லாதுநீ யிசைத்த
மொழிபொல் லாதெனும் வசையுனக் கதைநீமுன் னறிந்தே
அழியொ ணக்கதி தந்தெனை யடிமைகொள் ளரசே. (329)

அரச ருக்கருள் பெருகவைத் தடியவ ருடலும்
புருஷ ருக்கடி பணிவது போலவைம் புலனும்
பரிசி னிறைந்திடு வரைப்பணி வித்தனை பழையோர்க்
கருசி னிற்றதை யெமக்கிசைந் தருளமைத் தோனே. (330)

அமைக்கு முன்னினைத் தஹூமது தமக்கரு ளுரியோன்
இமைக்கு முன்படைத் தவரவர்க் குறுமிசை வெழுதி
சுமைக்கு முன்கொடுத் தடியவர்க் குதவுநற் றுணையே
எமக்கு மிப்படித் தந்தருள் தருமத்தி சைந்தே. (331)

இசைந்த ஹூம்மது நபியைநின் றிருமனத் திரங்கி
வசந்தெ ழும்மனம் பொருந்திய பறக்கத்தால் வகுத்துப்
பசிந்தெ ழும்முயி ரனைத்தையு மிகப்படைத் தோனே
உசந்த கண்தெரி தரவரு ளெம்மையு முகந்தே. (332)

உகந்த நல்லலி பின்முத லெழுத்தினி லுறைந்தே
அகந்தெ ளிந்துநல் லஹூமதுக் கருஞ்சிறப் பளித்த
சுகந்தர நினைத் தடியவர்க் குறுந்துணை யாகிச்
செகந்த னில்வர விடுத்தவ ரிரங்கெமைத் தெரிந்தே. (333)

தெரியு மச்சுட ரொளியைநின் றிருக்கண்ணுற் றெரிசித்
தரிய நட்பஹூ மதுவெனத் திருமுனி லழைத்துத்
துரியு மச்சல வாத்தையுந் தொகுத்துரைத் தோனே
விரிவெ டுத்தநற் கிருபைசெய் யெமக்கினம் விரைந்தே. (334)

விரைந்த ஹூம்மது நபிமக்க ளனைத்தையும் விரும்பி
வரைந்து றும்மஹூ ரெனும்பல படைத்தவல் லவனே
கரைந்த ழும்மடி யேனின்னோ டிரைந்ததைக் கபூல்செய்
திரைந்து பூவில்வந் திரங்கெளி யவருளத் திசைந்தே. (335)

தேனு மாவுச்கு நடுவேநின் றினித்ததென் ளமுதே
தானும் நானுமல் லாதவ ரறிவரென் றனக்குள்
மானு மாஞெடு மருவிய கலைக்குவல் லோயே
னி மா னில்லிருந் தீடேற விங்குண்மை நவின்றே. (336)

கலிவிருத்தம்.

விண்டனன் மிடிமையு மெலிவு மகலப்போய
இன்றின முவந்திடு மண்ணிற் புகழ்ந்துனைக்
கண்டனன் கண்டதென் கையுள் வந்துநின்
தொண்டனுக் குதவிசெய் துய்ய நாயனே. (337)

நாயனென் றுனையறி வித்த நல்லோர்கள்
காயநற் கிருபை செய்தருளு மன்பனே
பேயஞெந் தழுதுனைப் பேசிக் கேட்பதைத்
தாயிலும் விரையவந் தருளி டேறவே. (338)

வேறு.

பேயோ அலி போமுதல் வெம்பனியென்
ரேயா மல் வருந்துளி யுள்ளுருவாய்
சீஞெநா ஞெதெரி யாதெமக்கும்
மாயாமுக நான்கும் வழங்கிறையே. (339)

முன்ஞன்கு முகந்தரு முச்சுடரை
மின்ஞக மணந்து மிகபபழையோ
ருன்ஞ மமளித்ததி ஞடுறவாய்
என்ஞலுனே யென்சொல்வ னம்மிறையே. (340)

இறைவாவுன தாலுமெ முஞ்சுடருக்
கறைவாய்மஹா முதென்ற னைத்திலும்வந்
துறைவாயொளி யாலுரு வானவுனைக்
குறைகாண்ப வருங்குரு டானவரே. (341)

வேதமுரு வாக விளம்பியசொல்
லேதென்றே வருமறி யாமலெழுந்
தாதமென விண்ட தெமக்கறியப்
போதந்தரு வாயுயர் மெய்ப்பொருளே. (342)

பொருளென்றது புத்தியி னுச்சிதரும்
வெருளென்ற தகற்றி மிகப்பயலுக்
கிருளென்ற தறுத்திரு பார்வைநிறைந்
தருள்தந்தடி மைகொளென் றண்டவனே. (334)



எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பேயிற சூலுல் லாவெனுந்திரு பேரழ காண ரூபமா
யாயநற் போத வேத நூலினோ டஞ்சிலொன் ருக நின்றவா
ஒய்வொரு நாளில் லாம லேபய லுன்ஞெடி ரந்து கேட்பதைத்
தாயிலு முண்மை யாக வேகதி தந்தரு ளென்று மாதியே. (344)

ஆதியோ டந்த மேவு நாளலி பானது மூன்று கோலமாய்
வேதியர் கண்டி டாம லேதிரு மேலவர் காண நின்றவா
நீதி யறிந்து தேடி யேபயல் நின்ஞெ டிரந்து கேட்டுள
சோதியென் கண்ணில் காண நீதுணைச் செய்தீடேற் றென்றனன்பனே

அன் புறு பஞ்ச பூத மும்புல னைந்துமா ருறு நாடியும்
மண்புனல் காலும் வன்னி யும்முயர் வானல்ல வானமு மானவா
தம்பமல் லாது யானும் வேஞெரு தம்பமுங் காணி லேன்மிகத்
துன்பமு டற்றுக் காண வேதுணைச் செய்தீடேற் றென்ற னன்பனே.

அம்பர மோடிங் கான வவ்வுயிர் யாவையு மலையாதவே
ரின்பம தேழு பங்கி லும்நிறைந் தெங்குமொன் ருகி நின்றவா
என்பொடு மூளை தோல்த சைக்குறுப் பேழு நிறைந்து ரூபமாய்
உன்பர மேவு தொண்டனுகநல் லுதவிசெய் யாங்கள் காணவே. ()

காணவுங் காண்கி லாம லும்முயர் காரண மான ரூபமாய்
ஆணிலி பெண்ணு மேய லாமனின் றனைத்தையு மாளு மன்பனே
சேணிலு மாகி றத்தி லும்மொரு தீங்குவ ராமற் காத்தெமக்
கூஞெடெந் நாளு மமுத மீந்துன துதவிசெய் யென்ற னித்தனே.

நித்தனே யேனிப் போது யானினைத் ததையு நீத ராமல்நின்
றத்தனென் றென்று மேதுக் காயுனக் காயிரம் நாமஞ் சாற்றினுய்
பித்தனே நீபொ லாத யானும்நின் பேர்சொலக் கேட்டி ரங்கிலாய்
கத்தனே யான்ப டுந்து யர்கண்டுன் கல்பிரங் காத பாவியோ. (349)

வேறு.

ஏஞெ நித்தனே நீயெ னக்கிரங் காம லெத்திசை யும்நிறைந்
தான மெய்ப்பொரு ளாய்ம னித்தாரோ டால மொக்கநின் ருடினுய்
யானு மிப்படி நோவ தற்கெழு மானி லத்திலுள் ளோர்நகைத்
தீன முற்றிகழ் வாரெனைத்தெரிந் தேழைக் குற்றிரங் கேகனே. (350)

ஏதுங் கண்டிகழ் வாரெ னப்பய வியம்பக் கேளென் னிறைவனே
ஆருங் கண்டறி யாரு னைத்தெரிந் தடிய னுள்ளத் துணர்ந்துபின்
ஓதி யுன்னெடி ரந்த ராசியத் துள்ளுண் மையு முணர்ந்திலாய்
ஈது கண்டுதொ ழாதெ னக்கிழி வென்ற தகற்றிடிங்கேகனே. (351)

எனக்கல் லாமலு னக்கு மேயிழி வில்லை யென்ற தறிந்துநீ
மனுக்க ளானவ ருக்கு வஞ்சம னத்தி லுண்மை வருத்தியே
எனக்கு மாதி விளைக்க வும்மறி வோடு னைத்தெரி சிக்கவும்
சினைக்கு நாளு னிணக்க முந்தெளி வும்மெ னக்கரு ளத்தனே. (352)

அத்த னேநீ யடக்க மாக வமைத்த ராசிய தேசிகா
சுத்த நேரஞ்செழுத்தொடஞ்சு சுழிக்கு ளொன்று திரண்டதோர்
பித்தஞ் சேற்பன வாத மஞ்சு புலங்கள் பூதமொன் றுனதோர்
எத்த யானின்ப தம்மென் றேத்தி யிறைஞ்ச சிவம்முளத் தாதியே.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஆதிகா மத்திருளி லலிபல்லா தப்புகழை
யாவர்தா னுற்ற றிவதென்
றோதிஆ ஷிக்கிறகு லைநீமெய்ப் போடுரு
வாயமைத் தாளு மிறையே
நீதிதா னிப்படிப் போலவன் னெஞ்சினில்
நிய்யத்தை நிறைவேற் றுலகில்
தீதிலா வுத்தமதீ தாறெமக் கீந்திடொரு
தீங்குதா னற்ற பொருளே. (354)

பொருளேயா வர்க்குமுயர் பதவிநே ரிட்டவர்கள்
புகழநீ கைக்கொண் டுலகில்
அருளளா ததற்கழகுன் னருளினல் வைத்திடவு
மடியே னேதுக்கு மெலிவேன்
வெருளினு லுற்றவினை விலகொணு மற்பயலு
மிகநோவத் தருதி யோநெஞ்
சிறுளொணு தெப்பொழுது மெளியனே வற்றிடநல்
லினிமைதா றப்பி ருகிமே. (355)

இறப்பிரு கிமேமிக விரங்குனையல் லாதெளியனுக்
கொருவர் தஞ்ச மிலையான்
அறப்பிழைசெய் தாலுநீ பொருத்திடும தாலுனை
யடக்கமுள நாய கனீயென்



றட்பினெடு பேசியென் னுளத்தில் மிகு நோவதையு
முவமிடத்திட வுன்ற னருளாற்
சிறப்பதிக வாழ்வுகதி தந்தெமைபீ டேற்றுபல
திகுமர சாளு மிறையே. (356)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

இறையோர் சிரசி லெந்தருளி
யிலங்கு மிறசூல் நபினுரை
மறையோ ரறியா மெய்ஞ்ஞான
வடிவா யொளிவில் வகுத்தவனே
தறைமீ தடியேன் மிடையாலுன்
றன்னை மறந்து தளர்வேனே
சிறைபோய்த் தெளிய மிகவிரங்காய்
தீனே தேவர் சிகாமணியே. (357)

தேவர்க் கரிய குலக்கொழுந்தே
தெளிவே புவியிற் றிருமறையோர்
தோவற் றரிய சுடரொளியே
துணையே யடியேன் வினையாலுன்
னேவற் கிசைந்து மொழுகாம
லெளியேன் மெலிவ தறிந்துனது
காவற் பெறநின் னருள்தருவாய்
ஹக்கே ககனர் சிகாமணியே. (358)

ககன மதினந் தரமேழுங்
கைலா சமுமர சான்பவனே
சிவனென் றியம்ப வரமளித்த
தெளிவே யடியேன் றீவினையாற்
புவனி லுனைத்தொ ழாக்கொடிய
பொல்லா னென்று பிழைபோக்கி
மவுனந் தரவந் தருள்புரிவாய்
வடிவே வானோர் சிகாமணியே. (359)

வானோ ரறியா வடிவுருவாய்
மறைநான் குச்சி பழுத்திறசூல்
தீனே விளங்கு மெய்ஞ்ஞானச்
சென்னி பழுத்தொ முகுங்கனியே

யானே யுனக்குப் பிழைசெய்தே
    னெனவும் நகையா துனதருளீ
மானி லானே ரவர்பொருட்டால்
    வழிசே ரமரர் சிகாமணியே. (360)

அமரர்க் கரிய கிருபைவிளைத்
    தருளா னந்தச் சுடரொளியாய்த்
திமிர்தத் திரைக்குள் ளொழிந்துநின்ற
    தெளிவே யடியேன் றீவினையாற்
குமுத பனிரண் டெழுத்திலொரு
    கோணி லுனைக்கண் டிலனென்றே
யமிர்தக் கலசத் தமுதடியேற்
    கருள்வா யண்டர் சிகாமணியே. (361)

அண்டர்க் குனது சேவடியை
    யளித்தா யெவர்க்கு மறிவிலதாய்த்
தொண்டர்க் கரிய பதம்விளைத்த
    துணையே யடியேன் றீவினையால்
வண்டர்க் கொல்கி யுனைமறந்து
    வணங்கா துலகில் மெலிவதறிந்
தென்று மெளியேற் கிரங்கியருள்
    தருவா யிமையோர் சிகாமணியே. (362)

இமையோ ருனது திருவுளத்துக்
    கிசையு மஹாம துக்காயிரங்கிச்
சமையா சமையம் வடிவாயென்
    றனக்குள் ளுறைந்த தானவனே
அமையா தேட்டி லெழுதிமுடி
    யாதென் றுயர மறிந்துலகி
லமைகா ணரிய பதவிவிளைந்
    தருள்வா யும்பர் சிகாமணியே, (363)

உம்ப ரினத்துக் கடங்கரிய
    வொளிவா னந்தச் சுடர்விரிந்தே
எம்ப ரிடத்தி லெழுந்தமணிக்
    கிறகு லெனும்பே ரீந்தோனே



வம்பர் தமக்குன் னருள்பரவ
    வழங்கு மதுகண் டடியனுளம்
வெம்பு தெனக்குன் னருள்தருவாய்
    வேந்தே விண்ணோர் சிகாமணியே. (364)

விண்ணோ ருளத்தி லடங்காத
    வெளியாய் வெளிக்குள் ளொளியுருவாய்
மண்ணோ ருளத்தில் நிறைந்திலங்கும்
    வடிவே யடியேன் றீவினையால்
உண்ணு ருளத்திற் படுமதனு
    லுலுத்தர் தமைப்பின் செல்லாம
லெண்ணு தெனக்குன் னருள்தருவா
    யிறைவா வெவர்க்குஞ் சிகாமணியே. (365)

எவர்க்கு மனத்தி லடங்காத
    வெழுத்தி னிரங்கா ரிருளுக்குமுன்
சிவக்குங் கறுக்கும் பசித்துனக்குட்
    சேர்ந்து வெளுத்து மஞ்சணித்து
மவணி லஹதென் றவ்வலில்நின்
    ருகி றஹாம தானவுன்னை
இவணி லறியக் கிருபைசெய்வாய்
    வேந்தே மேலோர் சிகாமணியே. (366)

மேலோ ரறிவா லறிந்துதொழு
    மெய்யா சனத்தி லெழுஞ்சுடரே
காலோ டெழுப்பிக் கனல்மூட்டிக்
    கருது மவர்க்கொன் ருனவனே
நாலா றெழுத்துக் குடலுயிரு
    நடுவுந் தெரியா தெமக்கமுதம்
பாலோ டரிய பலன்றருவாய்
    பரமே பரம சிகாமணியே. (367)

பரம விளக்கே பாத்திபனே
    பழையோர்க் குதவும் பழம்பொருளே
கரமத் துணையைக் காண்பவர்கள்
    கமல விளக்கே காவலனே

உரமப் பொருளே யுனைத்தொழுவோர்க்
குதவும் பொருளே யுலகிலுன்றன்
தரும வடிவேற் கிரங்கியருள்
தருவாய் சருவ சிகாமணியே. (368)

### கலிவிருத்தம்.

சருவகுரு வாய்ச்சருவ சமயவடி வாய்நின்
றுறுவருனைத் தெரிசிப்பவர்க் குறுத்துணைசெய் வேசனே
சிறுவன்மனப் பீடையுமென் றீவினையும் போக்கி
உறுகரும முறைசெய்தெனக் குண்மையருள் வாயே. (369)

உண்மைதரு மேலவெளிக் குள்ளோசை பரந்தே
செம்மையுறு முள்ளொளிதி ரண்டிடும தற்குள்
நன்மைதரு நான்மறைந வின்றமுக நான்கும்
என்னளவில் நின்றிடவு மிரங்குறகு மானே. (370)

### அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிவிருத்தம்.

மானுரு குங்கலை மாசுக ளன்றுனை வந்துதொ டர்ந்ததைநீ
தானறி யும்படி யாரறி வார்குறை சற்றுமி லாதவனே
தேனுரு குங்கனி பேசிய நான்மறை தேடிய தீனபியை
யானறி யும்படி நீதரு வாயிக மாதெனை யாள்பவனே. (371)

ஆளுவை யென்றுனை யாருப்வ ணங்கிட ஆலம டங்கலையும்
வாழுவை யென்றுயி ரானதெ லாம்நீவ குத்தெமை யாள்பவனே
மீளுவை யென்றுரை பேசிய நான்மறை விண்டமு கங்களையான்
கோரமையெ னககறி வீந்தருள் நீயொரு குற்றமி லாதவனே, (372)

### எண்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

குற்றமில்லா தலிபைமுன் றலிப தாக்கிக்
குதறத்தா லஹுமதுக்கன் பாக நீயும்
அற்றமில்லா தனித்தபெருஞ் சிறப்ப ளித்து
மாசறிவ ருளையொழிநதென் னருமை யோனே

பித்தனெல்லாம் பகர்வனென்று மறியேன் பாரிற்
பொரியோர்கள் பொருட்டாலென் பிழைகள் போக்கிச்
சித்தமுன னல் மகிழ்ந்துத்திரு வடியைக் காட்டென்
றீ வினைகண் டிரங்கியீடேற் றெவர்க்குந் தீனே. (373)



### அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

எவர்க்குந்தீ னென அலிபு மூன்றிலிலங் கோரெழுத்தி
லெவையு மாய்விண்
ணவர்க்குந்தா னறியாம லொளித்தஹமது தோடருளு
மருமை யேசனே
துவர்க்கந்தா னில்லையென வுற்றடியேன் மண்ணில்தொழு
துனைக்கேட் டிரப்பேன்
தவக்கந்தா னகற்றியுயர் பதவிதரு வாயெவர்க்குந்
தலீலுள் ளோனே. (374)

### கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

உள்ளநாயனே யென்னைநீயெனக் குள்ளவான்மை யளித்திலாய்
ஒளிக்கண்ணுல்நீ யெனைதெரிந்துமென்விழிகள்கொண்டிட நின்றிலாய்
வெள்ளமாரி விலக்கில்விட்டுமென் விழிக்கண் பார்வை விலக்கிலாய்
வெறியருக்குநீ பவுசளித்தவன் மிடியனுக்கருள் தருகிலாய்
வள்ளனீதி யெவர்க்குமீந்தவன் வரிசைநீதி வழங்கிலாய்
மாலெழுந்துயர் வானிறைந்தவன் மாலளித்தெனை யாள்கிலாய்
அள்ளுநாயகர்க் கமுதளித்தவ னடியனுக்கருள் தருகிலாய்
அன்பனேநீ நடத்துநீதி யநீதியாக விருந்ததே. (375)

இருந்தநாளி லுறைந்தமாய்கைமூ டென்னுங்காரிரு ளாகநின்
றெழுந்தராசத முள்ளதில்லையென் றியங்கிடாதுனை யாய்ந்துநீ
அருந்தகாலி லெழுந்தநின்றிரு வானதூக்கமென் னுள்ளகத்
தருவரூப சொருபமாதி யனுதிசோதியொன் ருகவே
வருந்துமாவிக் கெழுந்தகாம மனைக்கண்ணுடியி னூடுபோய்
மாவுந்தேனொடு பாலுங்கூட்டி வளர்த்ததீப முஹம்மதாய்
முருந்து ஞானந் தெளிந்துன் னுச்சியில் முங்கி வெய்பனி யானதை
மூடனுனைறெரி சித்திலேனெனை முழுதிரங்கிடென் னித்தனே. (376)

### எழுசீர்க்கழிநெடிலடியாசிரிவிருத்தம்.

நித்தனுன துட்டொளிவில் நிற்பவர்தம் மெய்ப்பத
நினைப்பவ ருனைத்தெ ரிவதென்
றெத்தனை மலக்குக ளெனக்குனக் கெனத்தருக
வென்றுனக்குள் மற்பொ ருதல்கண்
டுத்தம மனிதர்க ளுளத்தினி லிருப்பதலா
லுங்கட்குள் நிற்ப திலையென்
றத்தனேநீ செப்புமொழி தப்பிலைப காவுன்ற
னடியனுளத் தெழுந்த ருள்கவே. (377)

பேயலிபு சீனுக்குமுன் னேபிறகோ காபதில்
விளைந்ததெனை யாளு மிறையே
நாயடியே னிவ்வுரை நவின்றிடவல னேமுற்று
நாவெழுமோ நல்லோர் கன்முன்
பேயவர்கள் மெய்ப்பதம் பணிந்தவ ரெனக்குரைத்த
புத்திகொ டுனைத்தெ ரிந்துநல்
ஆயபுக ழாதியுந்தீ தாறடியேற் கீந்திடுன்
காவல்கொண் டேவல் செயவே. (378)

ஏவல்வில கல்குபிரீ டேற்றமிகு பாவமின
தென்றுன் னிதயத்தி னுறையும்
காவலவர் தாமுங்கம லத்துளிஷுக் கீன்றதுநீ
ஹக்கலிபு லாமீ மெனமுன்
ஆவலுறு மாதமுள் ளோவுயி ரடைந்ததுஹவ்
வாவினுக்குள் ளோவி ளைந்ததென்
நாவிலுரை போலுமனக் கண்குளிர நின்றருணல்
லோர்தொழும் நமக்கி றைவனே. (379)

வேறு.

இறைவ னிறையுன தடிதொழ வருமவ
ரிருதயம மிலுறை பவனே
மறையவ ருனதருள் தெரிவரென் றவரடி
வருடிய திருட னுள்ளத்
துறைவது மலுகரே மறையர்வந் துறுதிகொ
டுதவுமென் றுனையு முணராக்
குறையது பெறுசெவி குருபர னருள்பயல்
கொடுவர நினைவு ளருளே. (380)

அருளிறை வனேமறை தருமுக மறுவகை
யதிலொரு முகமஞ் சுடராய்
இருளொரு முகம்வெளி யொருமுக மிருதய
மெனுமொரு முகம தெனதுள்
வெருளற வருமலு கறைனயுணர்ந் துனதடி
விரும்பிடி லுறுந்து னையே
மருளற வருமுயர் மவுனமோ டெமக்குநல்
வரிசைதந் தருளுவாயே (381)



வேறு.

தருநல வுறுகதி தலீலுயர் பதவியுந்
தலைமையும் வெகுபலனுந்
திருமுக மெழுதிய கிருபைகொ டிருவிழி
தெரியுநல் மலுகறெனுங்
குருபர னிருதய கமலமுள் ளுறைவதென்
குணமதை நினைவிலுறக்
கருவிளைந் துனதடி தெரியநீ கிருபைசெய்
ககனர்கள் தொழுமிறையே. (382)

இறையுனை யலதுவே றிலையெனு மிலௌஹினி
லெழுதிய கலமெனதுள்
அறைதனி லுருகிநின் றருவமோ டுருவிளைத்
தரிஹரி சிவநமவென்
றுறைவினில் மலுகறங் கொருநொடி தனில்விரைந்
துனதருள் தெரிபவனே
தறையினி லெனதள விரங்குன தடிதலை
தருமன தொளிபெறவே. (383)

எழுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

பேயெனநூ ருயிரம்விண் ணோர்புகழ நின்றவுனை
மேல்வெளியங் கீன்ற தல்லால்
காயிலைகள் பூமரமில் லாதிருளி யங்கரிய
கானகமங் கீன்ற தல்லால்
சாகிபுவிலுன்னறைநீ தானுறையுஞ் சட்டையது
தானறியச் சற்குரு வென்னுள்
ஆவிதரும் நுனியில்விளக் காகவிரைந் தோடிநீவந்
தாளுவையெந் நாளு மரசே. (384)

வேறு.

அரசடிமை யாளுமதற் கழகுளநூ லடியவருக்
கணிந்ததிரு வாய முதமீந்
திரசமா லெனுந்துலகில்தந் திரணப்பொலி வுரஹ்மத்தோ
டெனைமுழுதும் மருவு மிறையே
பரிசறவெந் நாளும்வெகு பதவிதர வேணுமுயர்
பரிபூரண மாக வருநல்
துரிசஹறும தோடுபயல் துதிபெறவிண் ணோரளவுந்
துணைமலுக றீந்த ருள்கவே. (385